# தேவி ஸ்ரீதேவி

# Devi Sridevi

Author:

**இந்திரா சௌந்தர்ராஜன்**

**Indira Soundarajan**

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்


அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28

அத்தியாயம் 29

அத்தியாயம் 30

அத்தியாயம் 31

அத்தியாயம் 32

அத்தியாயம் 33

அத்தியாயம் 34

அத்தியாயம் 35

அத்தியாயம் 36

அத்தியாயம் 37

அத்தியாயம் 38

அத்தியாயம் 39

# தேவி ஸ்ரீதேவி

வாசக நெஞ்சங்களுக்கு... வணக்கங்கள்!

சுதேசி இதழின் முதல் இதழில் இருந்தே நான் எழுதி வருகிறேன். அந்த வகையில் முதலில் எழுதிய சிவரகசியமும் அடுத்த எழுதிய ஆனந்த தாண்டவமும் ஒரு நல்ல வரவேற்பைப் பெற்றன. இதில் சிவரகசியம் தொடர் தொலைக்காட்சித் தொடராகவும் வந்து எனக்கு நல்ல பெயர் பெற்றுத் தந்தது.

ஆனந்த தாண்டவம் வித்யாசமான கருப்பொருளுக்காகவே பாராட்டப்பட்டு வருகிறது. இந்த 'தேவி ஸ்ரீதேவி' என் மூன்றாவது தொடர். இது பூர்வஜென்மம் என்ற இந்து மதம், நம்புகிற ஒரு விஷயத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட உள்ள தொடராகும்!!

மற்ற மதங்களில் முன் ஜென்மம், மறுஜென்மம் குறித்த நம்பிக்கையோ, அது சார்ந்த சிந்தனைகளோ இல்லை. இந்து மதமோ ஒரு உயிரின் வழிப்பாதையில் அது பல பிறப்புகளை எடுக்கிறது என்கிறது! நாயன்மார்களில் ஒருவரான மாணிக்கவாசகர் தன் சிவ புராணப்பாடல் துதியில் 'புல்லாய், பறவையாய், பாம்பாய் என எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்' என்று குறிப்பிடுகிறார்.

'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனதே வழுவாதிருக்க, வரம் தர வேண்டும் என்கிறார் இன்னொரு, நாயன்மார்! நம சான்றோர்கள், மறுபிறப்பையும், பல பிறப்பையும், பற்றி நிறையவே குறிப்பிட்டுள்ளனர். அதற்கு சான்றாக பல கதைகளும் உள்ளன.

நாம் கடவுளாய் போற்றும் முருகப்பெருமான், முற்பிறப்பில் பிரம்மாவின் புத்திரரான சனத்குமார் எனும் பிரம்மஞானியாக இருந்தவரே என்கிறது அந்த புராணம். 'ஏன் திரும்பத் திரும்ப பிறக்கிறோம்?' என்கிற கேள்விக்கு ஞானிகள் அழகாய் விடையளித்துள்ளனர்.

நாம் செய்யும் பாவ புண்ணியங்களை அனுபவித்துத் தீர்க்கவே நாம் பிறக்கிறோம். எப்படி ஒருவரது நிழலை அவரை விட்டு பிரிக்க முடியாதோ, அப்படியே பாவ புண்ணியங்களை அவர் அனுபவிப்பதிலிருந்தும் பிரிக்க முடியாது.

வாழ்க்கை வாழக் கிடைத்த ஒரு சந்தர்ப்பம் மட்டுமல்ல! வசமாக மாயையிடம் சிக்கிக்கொண்டு விட்ட ஒரு கணமும் கூட..... இந்த வாழ்க்கையை சத்திய, தர்மப்படி அறத்தோடு, வாழ்ந்து விட்டு திரும்பப் பிறவாத ஒரு நிலையை அடையவேண்டும். அப்படி அடைந்தாலே அது முழு வெற்றி. அப்படி வெற்றி பெற முடியாமல் போகின்றவர்களே, திரும்பத் திரும்ப பிறவி எடுக்கின்றனர். ஒவ்வொரு முறையும் வாழ்வை வெல்ல சந்தர்ப்பம் தரப்படுகிறது. ஆனாலும் நூற்றுக்கு ஒருவரே வெற்றி பெறுகிறார். மற்றவர்கள் திரும்பத் திரும்ப பிறப்பவர்களாகவே உள்ளோம்.

அடுத்து ஒருவன் அவன் செய்த பாவங்களிடம் இருந்து தப்பிக்கவே முடியாது. அதற்கான தண்டனையையோ அல்லது விளைவையோ அனுபவித்தே தீரவேண்டும். இதுதான் மனித வாழ்வின் நியதி. இது மனிதர்கள் அல்லாத மற்ற உயிர்களுக்கு பொருந்தாது. ஏனென்றால் மற்ற உயிர்கள் ஆற்றல் கொண்டவை அல்ல. அவைகளுக்கு தங்களையே தெரியாது. ஒரு பாம்புக்கோ தேளுக்கோ தான் ஒரு பாம்பு என்றோ தேள் என்றோ கூட தெரியாது. அவைகள் உணர்வால் இயங்குபவை. பசியிருந்தால் உணவு தேடும், தாகம் ஏற்பட்டால் தண்ணீர் குடிக்கும்.

காமுறும் போது புணரும், வலிக்கும் போது துடிக்கும் அவ்வளவுதான். எல்லாமே இவைகள் வரையில் உணர்வு மட்டுமே. இவைகளின் அறிவுத்திறன் இந்த உணர்வுக்கு கட்டுப்பட்ட ஒன்றாகும்.

ஆனால் மனிதன் அப்படியல்ல! மனம் கொண்ட மனிதன் தான் மனிதன் என்றானான். இவனிடம் உடல் வலிவை விட அறிவுத்திறன் மிக வலிவானது. அதனால் தான் இவனால் ஒரு யானையைக் கூட ஆட்டிப்படைக்க முடிகிறது. எனவே இவனே மேலான உயிரினமாக சர்வத்தையும் புரிந்து கொள்ள முடிந்தவனாகவும் உள்ளான்.

பல படிகள் மேலே போய் சந்திரன், செவ்வாய் என்று மாற்று கிரகங்களிலும் இவன் தன் அறிவாற்றலால் காலடி பதித்து விட்டான். எனவே மேலான பலசாலியான இவனைக் கட்டுப்படுத்தவே, தர்மமும் அறமும் தோன்றின. இதிலிருந்து இவன் வழுவும் போது, இவன் பலவீனப்பட்டு உலகத்தளையில் இருந்து, மீள முடியாதவனாகிறான். இதெல்லாம் தான், நம் பிறப்பு குறித்த சிந்தனைகள் ஆகும். நம் மதம் மறுபிறப்பை மிக உறுதியாக நம்புவது மட்டுமல்ல அதற்கு அது ஏராளமான சான்றுகளையும் தன் வசம் கொண்டுள்ளது. மனித வாழ்வில் நிறையவே ஏற்ற தாழ்வுகள்! ஒரு தாய் தந்தை வயிற்றில் பிறந்த பிள்ளைகளின் வாழ்வே கூட ஒன்று போல இல்லை. ஒரு பிள்ளை கோடீஸ்வரனாகவும் ஒருவன் குமாரராகவும் ஒரு பிள்ளை நன்கு படிப்பவனாகவும், ஒருவன் முட்டாளாகவும் காணப்படுவதை பார்க்கிறோம்.

காரணம் ஒன்றே ஒன்று தான்! அது அவரவர் கரும் வினை என்பதைக் கடந்து அது குறித்து சிந்திக்க வேறு எதுவுமில்லை. இப்படிப்பட்ட ஏற்ற தாழ்வு மிகுந்த, கர்மவினை வயப்பட்ட மனித குலத்தின் மறுபிறப்பு சார்ந்த ஒரு ரசமான கற்பனையே இத்தொடர்!

இதை ஒரு சராசரி மர்மத்தொடராக விறுவிறுப்புக்கு மட்டும் முக்கியத்துவம் தந்து நான் எழுத போவதில்லை. இதில் ஏராளமான கேள்விகள் கேட்கப்படும், விடைகள் அலசப்படும்.... மறுபிறப்புக் கொள்கையை நம்பும் ஒருவன் விஞ்ஞானத்தை தாழ்வாக நினைக்கத் தேவையில்லை.

விஞ்ஞானத்திற்கும், இந்த வகைபட்ட விஷயங்களுக்கும் ஒரு நூலிழை தான் வித்யாசம். விஞ்ஞானம் விளக்க முடிந்த ஒன்று. இதை அப்படி எல்லாம் கன கச்சிதமாய் விளக்க முடியாது. அவ்வளவு தான் வித்யாசம்.

என் வரையில் இரண்டும் ஒன்றுதான் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இனி நீங்கள் தொடரைத் தொடங்குங்கள். காலம் நம்மைக தொடரட்டும்.

# 1

அன்று

அன்று என்ற உடன் வரலாற்றுக காலத்துககு போயவிட வேண்டாம். இன்றைக்கு இருபத்து நான்காண்டுகளுக்கு முந்தைய 1991 க்குள் நுழைவோம். குறிப்பாக மதுரைககு தெறகில திருமங்கலத்தை ஒட்டிய பாளையம்பட்டி ஜமீன குடும்பததுககுள் புகுவோம். இன்றைக்கு எங்கே இருககிறது ஜமீன் குடும்பம் என்று கேட்க வேண்டாம். ஜமீன் வம்ச நாட்டாமையை இந்தியாவுக்கு சுதந்திரம கிடைக்கவும், சர்தார வலலபபாய பட்டேல, அவர்களை ஒழித்து விட்டார.

இது 1947 ஆகஸ்ட் 15ம் தேதி முதல் ஜனநாயக நாடு! இந்த நாட்டுக்கு ஜனங்கள் அவ்வளவு பேருமே சொந்தக்காரர்கள். எனவே ஒரு தனி நபரோ அவர் சார்ந்த குடும்பமோ ஆட்சி செய்வது என்பது இல்லாத ஒன்றாக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும் அன்றைய அடையாளங்களை சொல்லிககொண்டும் பெருமைபட்டுக கொண்டும வாழவது தானே மனித சமூகம்?

அச்சுத வீர குடும்பம் அதிலொன்று.... பாளையம்பட்டி அச்சுத் வீர குடும்பம் என்றால அவ்வளவு பிரசித்தம், இன்றும் அவர்களுக்கு சொந்தமான நிலபுலன்கள் ஏராளம். அந்த நிலபுலன்களில் பாடுபடும் குடும்பங்களின் எண்ணிக்கையும் ஏராளம். இது போக, சினிமா தியேட்டர், ஸ்பின்னிங் மில், கொடைக்கானலில் எஸ்டேட் என்று அந்தக் குடும்பம் இன்றும் தடபுடலாகவே உள்ளது.

இந்தக் குடும்பத்தின் ஒரு அழகான பெண்தான் தேவி! இவள் கல்லூரிக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தாள். சுடிதார் துப்பட்டாவில் பார்க்க வெகு அழகாய் இருந்தவளை அவள் அப்பா ராஜரத்தினம் தினமும் காரில் தான் அனுப்பி வைப்பார்.

மதுரை திருப்பரங்குன்றத்தில் இருக்கிறது தியாகராஜர் பொறியியல் கல்லூரி, தமிழ்நாட்டில் தென்பகுதிக்கே ஒரு சிறந்த கல்விக்கான அடையாளம் என்றால் அது தியாகராஜர் தான்! தேவி அன்றும் காரில் புறப்பட்ட போது டிரைவிங் சீட்டில் டிரைவர் ராமலிங்கத்துக்கு பதிலாக அவர் மகன் அமுதன்!

ஒல்லியாய், உயரமாய் சுருட்டை முடியோடு! மாநிறத்தில் இருந்த அமுதன் முதல் பார்வையிலேயே தேவியை கவர்ந்து விட்டான் என்று தான் சொல்ல வேண்டும். வெறித்துப் பார்த்தாள். அவனோ '(போலாங்களா)' என்று கேட்டான்.

"நீ.... நீங்க..."

"என பேர அமுதன். அப்பாவுககு இன்னிக்கு உடம்பு சரியிலல. அதான நான வந்திருககேன...."

"ஐ.சீ.... இது அப்பாவுக்கு தெரியுமா? என்று கேட்கும் போதே'

"தேவி.... போய்ட்டு வாம்மா! நான் தான் உன்னை விட்டுவரச் சொனனேன்" என்றபடி வந்தார் ராஜரத்னம். அவரோடு அவரின் இரண்டாவது மனைவியான காளியம்மை! ஒரு நகைக்கடையே அவள் மேல் இருந்தது.

அவளும் அப்போதுதான அமுதனைப் பார்த்தாள. அவனை பார்ககவும் அவளிடம் ஒரு குறுகுறுப்பு

"ஏய நீ இரு" "என்று தடுத்தவள்" ஜீவா என்றாள் பலத்த குரலில். அடுத்த சில நொடிகளில் அக்கா என்றபடி ஒருவன் வந்தான் அவள் எதிரில். மீசை, கிருதா, தாடி என்று ஒரு மார்க்கமாக இருந்தான்.

"என்னடா பண்ணிகிட்டிருக்கே?"

"மேல ஜிம்முல எக்ஸைஸ் பணணிகிட்டிருந்தேன...."

"போடா... போய் தேவியை காலேஜல விட்டுட்டுவா."

ஏக்கா டிரைவர் இல்லை....?

"அந்தாள் ஏதோ உடம்பு முடியலைன்னு பையன அனுப்பி வெச்சி இருக்கான். நீயே போய் விட்டுட்டு வா...."

"பாதி எக்ஸைஸ்ல எப்படிக்கா....?"

"போடாண்ணா...." காளியம்மையின் அதட்டல் இறுதியில் வெற்றி பெற்றது "சரிககா' என்று அரைமனதாய் புறப்பட்டவன் அமுதன் கையில் இருநத சாவிக கொத்தைப் பிடுங்கிக கொண்டு காரைக் கிளம்பினான. தேவி சற்று பரிதாபமாக அமுதனை பார்த்தபடியே காரில் ஏறினாள! காரும் புறப்பட்டது!

இன்று

5.10.2015

"அண்ணே இன்னிக்கு தேதி என்ன தெரியுமா? என்று கேட்டபடியே வந்தான், ஸ்ரீதேவி....'

அவள் அண்ணை என்று அழைத்த மோகன் குமார் தன் லேப டாபபில் மிக மும்முரமாக இருந்தான். அவளை நிமிர்ந்து கூட பார்க்காமல் "காலண்டரைப் பார்..." என்றான்.

"நான் ஒண்ணும் தேதி தெரியாம கேக்கலை... இன்னிக்கு தேதிக்கு ஒரு சிறப்பிருககு. அது உனக்கு தெரியுமான்னு கேட்டேன்" என்றவளை மெல்ல நிமிர்ந்து பார்த்தான் மோகன்குமார். என்ன பார்க்கறே? தேதிய பார் தெரியும்."

அவனும் பார்த்தான். அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை.

"எதுவும் தெரியலையே... 5.10.2015ன்னு இன்னிக்கு தேதி மாசம் வருஷம் இருககு.... இதுல என்ன சிறபபு இருக்கு?"

"அப்படியா.... எதுவும் இல்லையா?"

"இருந்தா தான் சொல்லிடுவேனே.... உன்னோட பிறந்த நாளுமில்லை.... என் பிறந்த நாளோ, நம்ப அப்பா, அம்மா, பிறந்த நாளோ கூட இல்லை...."

"நான் அந்த சிறப்பை சொல்லலை. பின்புறமா இருந்து பார்... அப்பவும் மாறாம, அதே மாசம், தேதி, வருஷம் வரும்..."

அவள் கூறவும் பார்தது விட்டு ஒரு அசட்டு சிரிப்பு சிரித்தான்.

"என்னண்ணே சிரிககறே... எதையும் கூர்மையா பார்க்கணும். இப்படி இருந்தா நீ எபபடிண்ணே ஐ.பி.எஸ். பாஸ் பண்ணுவே?" என்றவளை முறைத்தவன்,

"இதெல்லாம் ஒரு விஷயமா ஸ்ரீதேவி..." என்றான்.

இல்லையா அப்பா?",

"அட போம்மா.... இபபடி எல்லாம் பாக்கலாம்னா நீ பிறந்த தேதியே கூட இந்த மாதிரி ஒரு தன்மை கொண்டதுதான். எழுதிப்பார் தெரியும்" என்றான். அவளும் உடனே யோசித்தாள்! செப்டம்பர் 19ம் தேதி 1991ல் பிறந்தாள் அவள். 19.9.1991 என்று எழுதிப்பார்த்த போது அவளிடம் ஒரு சின்ன பிரமிப்பு.

கண்கள் இரண்டும் அகன்டு விரிய ஐயோ அண்ணே..., என் பர்த்டேவே ஒரு ஸ்பெஷல்டேண்ணே... இதை நான் இவ்வளவு நாளா யோசிக்கவே இல்லையே என்றாள்.

"உன்னோட பிறப்பு மட்டுமாம்மா... நீயே எங்க வரை ரொம்ப ஸ்பெஷல்தான்..." என்று இருபொருள்பட பேசிய மோகன்குமாரை ஆச்சரியமாகப் பார்த்தாள் ஸ்ரீதேவி.

"நீ பிறக்கும் போதே இறந்துட்டதா சொல்லி உன் உடமபை துணியால மூடி, கைல கொடுத்துட்டாங்க அம்மாவுககோ உன்னை பெத்த மயககம் தெரியல. அப்பா உன்னை கைல பிடிச்சிகிட்டு கண்ணீர் விட்டார். அப்புறமா அரைமனசா சுடுகாட்டுக்கு போனோம்.

நானும் கூடவே இருந்தேன். அங்கு உன்னை புதைக்க குழிக்குள்ள போட்டப்பதான் அந்த அதிசயம் நடந்தது."

என்ற மோகன்குமாரை திகைப்போடு பார்த்தாள் ஸ்ரீதேவி!

# 2

அன்று

தேவியோடு புறப்பட்ட அந்த கார் சாலைகளில் சீறத் தொடங்கியது. ஜீவா எப்போதும் காரை வேகமாகவே ஓட்டுபவன்! தேவிக்கு அவன் டிரைவிங் என்றாலே அலர்ஜி. அப்போதும் அவன் வேகமாகத் தான் காரை ஓட்டினான். மாருதி 800 என்கிற புதிய ரக கார் அப்போது தான் மார்க்கெட்டுக்கு வந்திருந்தது. அதை உடனேயே வாங்கச் சொல்லி விட்டாள் காளியம்மை.

சிகப்பு நிற கார்.... தீப்பெட்டி போல தோற்றம்! ஆனாலும் காலம் காலமாக ஓடிக்கொண்டிருக்கும் அம்பாசடர் வகையறா முன் சீட்டாட்டம் தெரிந்தது. இப்போதோ ஜீவா வசம், அது புயலாக பாய்ந்தது.

உள்ளே தேவி நடுங்க ஆரம்பித்தாள். தேவிக்கு பிறப்பிலேயே மிக மென்மையான மனது. அவளை ஒருவர் மிகச்சுலபமாக ஏமாற்றிவிடலாம். அப்படிப்பட்டவள் பின் சீட்டில் இருந்தபடியே

"மாமா ஸ்லோவா போ.... எனக்கு பயமா இருக்கு...." என்றாள்.

"என்னடா இன்னும் எதுவும் சொல்லாம இருக்கியேன்னு பார்த்தேன்."

என்றபடியே அவனும் மேலும் வேகம் எடுத்தான்.

"மாமா ப்ளீஸ்...."

"ப்ளீஸாவது, க்ளீஸாவது.... எவ்வளவு இங்கிலீஷ் படம் பாக்கறே?" அப்பல்லாம் கை தட்டி ரசிக்கிறே.... இப்ப மட்டும் பயமா இருக்கா?"

பேச்சோடு பேச்சாக மதுரை நகர வீதிகளில் அவன் காட்டிய வேகத்திற்கு அன்று ஒரு பலி ஏற்படப் போவதை அவன் அறிந்திருக்கவில்லை.

வரப்போகிற பொங்கல் பண்டிகையை ஒட்டி, சாலை ஓரமாக கரும்புச் சல்லாளங்களோடு கடை போட்டிருந்தான் ஒருவன். பண்டிகை என்பதால் சாலையின் இரண்டு பக்கமும் ஆக்ரமிக்கப்பட்டு அங்கெல்லாமும் வரிசையாக கடைகள், பொங்கல் பானை கடைகள் ஒரு புறம், மஞ்சள் கிழங்கை கொத்தாக விற்கும் கடைகள் ஒரு புறம்.

மக்கள் நடமாட்டமும் அதிகமாகத்தான் இருந்தது. போலீசார் காட்டில் மாமூல் மழை! எனவே அவர்கள் போக்குவரத்து விஷயத்தில் பெரிய அக்கறையோடு இல்லாத நிலையில் தான் ஜீவாவின் கார் அந்த ஏரியாவில் துளியும் வேகம் குறையாதபடி நுழைந்திருந்தது. குறுக்கே ஒரு கிழவி சற்று தடுமாறியபடியே சாலையைக் கடந்து கொண்டிருந்தாள்! தேவி, அவளைப் பார்த்து விட்டு கத்தத் தொடங்கினாள்.

"மாமா.... ஒரு பாட்டி பார் எதிரில...."

என்று சொல்லி முடிக்கும் முன் பக்கவாட்டில் காரைச் செலுத்த முயன்றும் பயனின்றி பாட்டியை இடித்து சாலை ஓரமாக தூக்கி எறிந்து விட்டு கார் ஓடியபடியே இருந்தது. தேவி திரும்பிப் பார்த்தாள். அந்தப் பாட்டி ரத்தச் சகதியாகியிருந்தாள். ஜீவாவிடமோ எந்த நெருடலும் இல்லை! தேவிக்கு கண்களில் கண்ணீர் வந்துவிட்டது! மாமா நீ ரொம்ப மோசம்' என்று உடைந்தாள்.

"நான் மோசமா.... சரிதான் ரோட்டை ஆக்ரமிச்சு கடையை போட்டுட்டு குறுக்க நெடுக்க நடந்துகிட்டு இருந்தா காரை எங்க ஓட்றது?" அசால்டாக கேட்டுக்கொண்டு ஒரு சிரிப்பும் சிரித்தான். காரும் கல்லூரி வாசலை

அடைந்து விட்டது. அவளும் தளர்வோடு இறங்கினாள். அவனிடம் துளியும் குற்ற உணர்வே இல்லை. முன்புறம் ஹெட்லைட்டை ஒட்டி கார் அமுங்கியிருந்தது. அவன் அதை பார்த்தான். போகும் போதே ஒர்க் ஷாப்புக்கு போய் இதை சரி செய்துகிட்டு போகணும். நீ பாட்டும் அக்காகிட்ட போட்டு உட்றாதே. நான் உன்னை கட்டிக்கப் போறவன்! அதையும் மறந்துடாதே...'' என்றபடியே காரைத் திருப்பினான். அவன் இறுதியாகச் சொன்னது அவள் நெஞ்சைக் கரித்தது. அதைக் கேட்ட படியே வந்தாள் தேவியின் தோழி வினோதினி. தேவியோ கார் போவதையே பார்த்தபடி நின்றுவிட்டாள். வினோதினி அவள் அருகே வந்து தோளைத் தொட்டாள்.

"ஹாய் தேவி..."

"ஓ... வினோதினியா?"

"யாருடி அது புதுசா இருக்கு... பாத்தா டிரைவர் மாதிரியே தெரியலியே... நான் உன்னைக் கட்டிக்கப் போறவன்னு வேற சொலவிட்டு போறான்..."

"ஓ... அது உன் காதலையும் விழுந்திடிச்சா?"

"கேட்டுகிட்டே தானே வந்தேன்?"

"எல்லாம் என் தலை எழுத்துடி...."

"என்ன தேவி பயங்கரமா அலுத்துக்கறே.... முகம் கூட ஒரு மாதிரி இருக்கு."

வினோதினி போட்டு வாங்க தொடங்கினாள். தேவியும் வழியில ஜீவா கிழவி ஒருத்தியை தூக்கி எறிந்து விட்டதை கூறினாள். வினோதினிக்கு பகீர் என்றது.

"யாராவது கார் நம்பரை நோட் பண்ணியிருந்தா நிச்சயம் போலீஸ் தேடிகிட்டு வரும். அதுலையும் கார் ஆக்சிடெண்ட் விஷயத்துல போலீஸ்காரங்க ரொம்பவே கறுகறுப்பா இருப்பாங்க. ஏன்னா இதுலதான் இரண்டு பக்கமும் நல்லா சில்லரை பாக்கலாம்...." என்று வினோதினி யதார்த்தம் பேசினாள்.

அது தேவியை மேலும் கலக்கத் தொடங்கியது அப்படின்னா என்னை போலீஸ் பிடிச்சிடுமா? என்று பதைக்கத் தொடங்கினாள்.

"பைத்தியம்... நீ என்ன தப்பு பண்ணினேன்னு பயப்படறே? யார் டிரைவ் பண்ணாங்களோ அவங்களைத்தான் போலீஸ் பிடிக்கும்..."

"அப்ப ஜீவாவைப் பிடிக்குமா?"

ஏன் பிடிக்காம... ஆனா ஜீவா தான்னு போலீசுக்கு தெரியணுமே?"

"அப்ப தெரிஞ்சா பிடிச்சிடுவாங்களா?"

"நிச்சயம். ஒரு நாளாவது உள்ள வைப்பாங்க. அப்பதானே அவங்க கேக்கிற காசை கொடுத்துட்டு வெளிய கொண்டு வருவோம்?"

"நிஜமா?..."

"தேவி.... நீ ஜமீன் குடும்பத்து பொண்ணுங்கறதெல்லாம் சும்மா பேருக்கு தாண்டி. நீ ஒரு சரியான பட்டிக்காடுடி...." வினோதினி கேலி செய்தாள். ஆனால் தேவியிடம் ஒரு புது முடிவு தன் பாசில இருந்து ஐம்பது பைசா நாணயம் ஒன்றை எடுத்தவள் கல்லூரியில உள்ள பப்ளிக் பூத் நோக்கி சென்றாள்.

"எங்கடி போறே?"

"நீ கிளாசுக்கு போ வரேன்."

என்றபடியே பூத்துக்குள் நுழைந்தவள், போலீசுக்கான நூறுக்கு டயல் செய்தாள். அவள் போட்ட 50 பைசாவும் திரும்பி விட்டது மறுபுறம் 'யாரது?' என்று ஒரு குரல்.

"சார்... ஒரு முக்கியமான விஷயம். திருப்பரங்குன்றம் மார்க்கட் ரோடுல ஒரு சிகப்பு கலர் மாருதி கார் ஒரு வயசான அம்மாவை அடிச்சி போட்டுட்டு நிக்காம போயிடிச்சு. அதோட நம்பர் டி.என்.58 0001 உள்ள ஒரு 28 வயசு வாலிப பையன் தான் இருந்தான். அவன் பேர ஜீவா. பாளையம்பட்டி அச்சுத வீர குடும்பத்து இப்போதைய வாரிசான ராஜரத்னத்துக்கு மச்சினன். அவன். விட்றாதீங்க..." என்றவளாய் கட் செய்தாள்....

பூத்துக்கு வெளியே வந்தாள். வினோதினி அவளைப் பார்த்தபடியே இருந்தாள்

"வினோ நீ போகல...?"

"அத விடு... உன் மாமாவை நீயே காட்டிக் கொடுத்துட்டியேடி.

"அவனை என் மாமான்னு சொல்லாதே. அவன் ஒரு ரவுடி! நல்லா ஜெயிலுக்கு போகட்டும்..." என்றாள் மிகுந்த உணர்வோடு.

"இதை நீ அவனை வெறுக்கறதால சொல்றியாடி?"

"எல்லாம் தான்..."

"பைத்தியக்காரி.... ஒரு தப்பை பெரிய தப்பா ஆக்கி அதுல நீயும் மாட்டிக்கிட்டியே...

வினோதினி சொன்னதைக் கேட்டு அதிர்ந்தாள் தேவி!

இன்று

அண்ணன் மோகன்குமார் தன்னைப் பற்றி சொன்ன அந்தச் செய்தி ஸ்ரீதேவியை பிரமிக்க வைத்து விட்டிருந்தது.

"அண்ணே... என்னண்ணே சொல்றே நீ?" என்றாள்.

"ஆமாம்மா... நீ எங்கள வரையில ஒரு அதிசயம். ஆச்சரியம்! செத்துப்பிழைச்ச அபூர்வம்..."

"அது எப்படிண்ணே?" எப்படின்னா? என்னத்தம்மா சொல்ல.

நான் நடந்ததை சொல்றேன். மோகன்குமார் சொல்ல அவன் தாய் பூரணியும் ஆமோதிப்போடு வந்து நின்றாள்.

"ஆமாம் ஸ்ரீதேவி... உன் அண்ணன் சொன்னபடி நீ ஒரு அபூர்வம்தான் ஆமா இப்ப எதுக்குடா இந்த பேச்சு?" என்றும் கேட்டாள்.

இன்னிக்கு ஒரு விசேஷமான நாளும்மா... அதாவது தேதி, மாசம், வருஷம் மூணையும் எப்படிப் பாத்தாலும் மாறாது. அதைச் சொல்லி ஸ்ரீ ஆச்சரியப்பட்டா! உடனே நீ பிறந்த தேதியே கூட அப்படித்தான்னு சொல்லும் போது எல்லாத்தையும் சொல்ல வேண்டி வந்துடுச்சி...

"சரி இந்த பேச்சை இதோட விடு. ஸ்ரீ நீ போய் குளிச்சிட்டு சாப்பிடவா டிபன் ஆறிடப் போகுது என்றாள் பூரணி. 'சரிம்மா' என்றபடியே ஸ்ரீதேவி விலக ராணி மோகன்குமாரை வெறிக்க தொடங்கினாள்.

"ஏம்மா இப்படி பாக்கறே?"

"பாக்காம இப்ப எதுக்கு அந்த பேச்சை எடுத்தே?"

"ஏம்மா.... இப்ப அதானால என்ன நடந்துச்சி?

"என்ன நடந்துடிச்சா.... நம்ப வீட்டுக்கு வந்துட்டு போன குற்றாலம் சித்தர்சாமி சொன்னது உனக்கு ஞாபகத்துல இல்லையா?"

"விடும்மா ... சாமி உன்னை ரொம்பவே பயமுறுத்தி விட்டார்னு தான் தோணுது. நீயும் ஸ்ரீதேவி ஜாதகத்தை எல்லாம் அவர்கிட்ட காட்டியிருக்க கூடாதும்மா."

"காட்டப்போய் தானே பல விஷயங்கள் தெரிய வந்தது?"

"அம்மா... போய் வேலைய பார். எங்கிட்ட இனி சாமியாருங்க பேச்செல்லாம் பேசாதே. இந்த சாமியாருங்க ஒரு இரண்டும் கெட்டானுங்க. அதுலயும் நம்ம வீட்டுக்கு வந்துட்டு போன குற்றால சித்தா என் வரைல மேஜிக் பண்றவர். அவர்கிட்ட ஒரு புண்ணாக்கும் கிடையாது."

"அப்படி எல்லாம் சொல்லாதடா. அவர் நான் கொடுத்த ஆரஞ்சு பழத்துக்குள்ள இருந்து வரவெச்ச மகாலட்சுமி விக்ரகம் அவர் எவ்வளவு பெரிய சித்தர்ங்கறதுக்கு சாட்சி..."

"மண்ணாங்கட்டி.... அந்த விக்ரகத்தை காசு கொடுத்தா கடையும் நாம் வாங்கிடலாம். அவர் நம்மால வாங்க முடியாத ஒன்னை தந்திருந்தா அப்ப நான் அவரை சித்தர்னு ஒத்துக்கிட்டிருப்பேன்..."

"ஏண்டா இப்படி விவாதம் பண்றே? நீ இப்படி பக்தி இல்லாம கண்டபடி பேசறதால தான் உன்னால ஐ.பி.எஸ பரிட்சை பாஸ பண்ண முடியல. திரும்பத் திரும்ப எழுதிகிட்டே இருக்கே..."

பூரணி ஐ.பி.எஸ் படிப்பை தொட்டுச் சொல்லவும் மோகன் முகம் சிவந்து விட்டது. -

"என்னம்மா நீ.... கடைசில என் லட்சியத்தையே ஒரு குறையா சொல்லிட்டே? இதுக்கு தாம்மா உங்கிட்ட நான் இந்த மாதிரி விஷயத்தை எல்லாம் பேசறதே இல்லை.... ச்சே!"

என்று எழுந்து போனான். பூரணிக்கும் தான் கொஞ்சம் அதிகப்படியாகத் தான் பேசிவிட்டோமோ என்று தோன்றியது அப்போது இன்ஸ்பெக்டர் சந்துரு யூனிபார்மோடு உள்ளே நுழைவதைப் பார்த்த பூரணி "வாடா" என்றாள். சந்துரு அவள் தம்பி! மோகன்குமாருக்கு போலீஸ் கனவை உருவாக்கியவர்!

ஸ்டேஷனுக்கு போகும் வழியில அவ்வப்போது தலை காட்டுவார்.

"என்னக்கா.... மோகன் ஏன் முறைச்சுகிட்டே போறான்?" என்று கேட்டபடியே வந்து அமர்ந்தார்.

"அவன் கிடக்கறான்.... இளவயசு இல்லையா?" அப்படித்தான் என்றாள்.

"கொஞ்சம் புரியும்படி சொல்றியா?"

என்று கேட்டவரிடம் நடந்ததைச் சொல்லி முடித்தாள்.

"அப்ப ஸ்ரீதேவிய நீ அந்த சித்தர் சாமி சொன்ன மாதிரி ஒரு அசாதாரண பொண்ணாதான் பாக்கறியா?" என்று கேட்டார் சந்துரு.

"அதுல எனக்கு சந்தேகமே இல்லை.... அவ கையால எது செஞ்சாலும் அது துலங்குதுடா. சாதாரணமா புளியை கரைச்சு பருப்பே போடாம ஒரு குழம்பு வெச்சா.... எப்படி இருந்துச்சு தெரியுமா?"

பூரணி பரவசமாக சொல்ல சந்துருவுக்கும் ஒரு மாதிரி ஆகிவிட்டது.

"அக்கா... அவ உன் மகள். ஆனா நீ அவளை கடவுள் ஆக்கிடுவே போல தெரியுது. அவளுக்கு கல்யாணம் நடந்து குழந்தையெல்லாம் பெத்து அவ நல்ல விதமா வாழனும் மறந்துடாதே...."

"அதுல எனக்கு ஒரு சந்தேகமும் இல்லை. அவ அதிர்ஷ்டத்துக்கு ஒரு கோடீஸ்வரன் அவளைத் தேடி வருவான் தெரிஞ்சுக்கோ..."

"வேண்டாம்கா... இப்படி எல்லாம் கனவு காணாதே அப்புறம் ரொம்ப ஏமாற வேண்டி வந்துவிடும்... நல்ல புருஷன் வரட்டும்னு வேண்டிக்கோ..."

"நல்ல புருஷன் தான்டா... அதே சமயம் அவன் கோடீஸ்வரனாவும் நிச்சயமா இருப்பான். என் மகளை தாங்கு தாங்குன்னு தாங்குவான். நீ வேணா பாரேன்..." பூரணி மிக நம்பிக்கையாக பேசினாள். அப்படியே எக்காரணம் கொண்டும் சித்தர்சாமி சொன்னபடி அவளை தெற்கு பக்கமா எங்கேயும் போயிடாம பாத்துக்கணும்..." என்றாள்.

"ஓஹோ உன் சித்தர்சாமி இப்படி வேற சொல்லி இருக்காராக்கும்?"

"இது தெரியாதா உனக்கு ...?"

"சரி தெற்கு பக்கமான்னா இந்த சென்னைல தெற்கு பக்கமாவா இல்லை சென்னைக்கு வெளிய தெற்கு பக்கமாவா?"

"சென்னைக்கு வெளிய தான்டா... நான் அதை அன்னிக்கே கேட்டுட்டேனே..."

"அப்படின்னா செங்கல்பட்டுல ஆரம்பிச்சு கன்யாகுமரி வரை தென்பக்கம் தான்... அந்த பக்கமே போகக் கூடாதா?"

"ஆமாம்.... தாம்பரத்தை தாண்டக் கூடாதுன்னுட்டார்...."

"என்ன கூத்து இது... தாண்டினா?"

சத்ரு வேடிக்கையாக கேட்க, ஸ்ரீதேவியும் குளித்து முடித்தவளாக திரும்பி வந்திட பூரணி முகத்தில் மட்டும் ஒரு பலமான அதிர்ச்சி.

# 3

அன்று

வினோதினி எதை வைத்து அப்படிச் சொன்னாள் என்று தேவிக்கு புரியவில்லை. மலங்க மலங்க விழித்தாள்.

"என்னடி முழிக்கறே.... நான் சொன்னது உனக்கு புரியலையா?"

"ஆமாண்டி.... போலீஸ் என் மாமாவை பிடிச்சு ஜெயில்ல தானே போடுவாங்க.... அது எப்படி எனக்கு பெரிய பிரச்சனையாகும்?"

"அதெல்லாம் உண்மையா, நேர்மையா போலீஸ், இருந்தா தான்.... இப்ப இருக்கிற போலீஸ் அரசியல்வாதிங்க, பணக்காரங்க, இவங்களுக்கான போலீஸ்! அவங்களுக்கு ஒரு சிக்கல்னா தீர்த்து வைப்பாங்க. ஏழை பாழைகளுக்கு ஒண்ணுன்னா வேடிக்கை தான் பார்ப்பாங்க..."

"போலீஸ்ங்கறது எல்லாருக்காகவும் தானே?"

"நீ என்னடி கொஞ்சம் கூட புரியாதவளாவே இருக்கே. உன்னையெல்லாம் பணக்கார ஜமீன் வம்சத்து பொண்ணுன்னா யாரும் நம்ப மாட்டாங்கடி."

"இதோ பார் வினோதினி.... நான் உன்னைப் போல ஒரு பொண்ணு! இந்த ஜமீன் வம்சம், பணக்காரி, எக்செட்ரா, எக்செட்ரா எல்லாம் எனக்கு தேவையே இல்லை. இது இருபதாம் நூற்றாண்டுடி. இப்ப போய் ஜமீன் வம்சம் அப்படி இப்படின்னு பேசிகிட்டு இருக்கறதும் அபத்தம்...."

"உன்னை நான் பாராட்றேன். ஆனா இந்த உலகம் எப்பவும் பணத்துக்கும், அதிகாரத்துக்கும் சலாம் போடற ஒரு உலகமாதான் இருக்கு. இப்ப கூட சொல்றேன் பார்... நீ போன் பண்ணதால எந்த நல்லதும் நடந்துடாது. ஆனா உன் மாமாகிட்ட நீ வசமா மாட்டுவே..."

"எப்படி?"

"அது நடக்கும் போது தெரியும் உனக்கு. இப்ப காலேஜிக்கு போய் கிளாஸ் அட்டெண்ட் பண்ணுவோம் புறப்படு..."

வினோதினி மிக யதார்த்தமாக பேசினாள். தேவிக்கு தான் கடைசி வரை அடுத்து நடக்கப் போவது புரியவேயில்லை. அடிபட்டு தூக்கி வீசப்பட்டு இறந்த பாட்டியின் உருவம் மட்டும் மனதுக்குள் வந்து வந்து போனது...

தொலைபேசியின் அழைப்பை தொடர்ந்து கையில் எடுத்தார் அக்கவுண்டண்ட் அண்ணாமலை.

"ஹலோ யார் பேசறதுங்க?"

"நான் சப் இன்ஸ்பெக்டர் சண்முகபாண்டி பேசறேன். ஜமீன் வீடுதானே?"

"ஆமாங்க... என்ன விஷயங்க?"

"அங்க ஜீவாங்கறது யாரு?"

"ஜீவாங்களா.... அவர் அய்யாவோட மச்சினரு ஏங்க.... என்னா விசயம்?"

"அவர் இப்ப எங்க?" எஸ்.ஐ சண்முகபாண்டி கேட்க வெளியே காரை அசுர வேகத்தில வந்து நிறுத்திவிட்டு, விசில அடித்தபடியே வந்து கொண்டிருந்தான் ஜீவா. அதைக்கவனித்த அண்ணாமலையும் அவர்கிட்ட தான் பேசணுங்களா?" என்று கேட்க 'ஆமாம்' என்றார் சண்முகபாண்டி! போனும் கை மாறியது.

"ஹலோ ஜீவா ஸ்பீக்கிங்..."

"தம்பி... நான் திருப்பரங்குன்றம் எஸ்.ஐ.சண்முகபாண்டி பேசறேன் தம்பி."

"சொல்லுங்க என்ன விசயம்?"

"என்ன தம்பி ஒரு ஆக்சிடென்ட் பண்ணி ஒரு உசுரை காலி பண்ணிட்டு என்ன விசயம்னு சாதாரணமா கேக்கறீங்க?"

"நானா...? என்ன சப் இன்ஸ்பெக்டர்... யாராவது கம்ளைண்ட் கொடுத்தா உடனே நம்பிடுவீங்களா?"

"நம்பறதும் நம்பாததும போகப் போகத்தானே தெரியும! பெரிய குடும்பமகறதாலயும், உங்க மாமாவை நல்லா தெரிஞ்சதாலயும் தான் போன்ல பேசிகிட்டிருக்கேன். இல்ல நேர்ல வந்து இன்னேரம் கைல விலங்க பூட்டியிருப்பேன்..."

"அப்படியா.... எங்க... வந்து பூட்டித்தான் பாருங்களேன்."

"தம்பி... இப்படி நீங்க பேசறதுல இருந்தே நீங்க தான் குத்தவாளின்னு பளிச்சின்னு தெரியுது. உங்கள மாதிரி மேல் மட்டத்து ஆளுங்க தான பணம் இருக்கற தெம்புல எல்லா தப்பும் பண்ணுவீங்க..."

"இதோ பாருங்க சார்... நான் ஒண்ணும் குடிச்சிகிட்டு வேணும்னுல்லாம் பணணல... அந்த கிழவி குறுக்க வந்து விழுந்துட்டா! இதான் உண்மை. சும்மா தொண தொணன்னு போட்டு அரட்டையை இழுக்காம, கேஸை இழுத்து மூடப் பாருங்க! உங்கள் எப்படி கவனிக்கணுமோ, அப்படி நான் கவனிககறேன போதுமா?"

ஜீவா எப்படி பேச வேண்டுமோ அப்படிப் பேச, சரி சரி நேரல வந்துட்டு போங்க தம்பி. என்று எஸ்.ஐ. யும் சுருதியை குறைத்துக் கொண்டார்.

"நான் ஸ்டேஷனுக்கெல்லாம் வரமாட்டேன். ஒரு பொதுவான இடத்துல மீட் பண்ணிக்கலாம்" என்று பேசிவிட்டு போனை கட் செய்தவன் திரும்பினான். அவனையே பார்த்த படி நின்று கொண்டிருந்தாள் காளியம்மை!

"அக்கா..."

"என்ன அக்கா சொக்கா! பேசுனத எல்லாம் கேட்டுகிட்டுதான் இருநதேன்! நீ சம்பாதிக்காட்டி பரவாயிலலை... இருக்கிறத அழிச்சிடாத... ஆமா செத்தது யார்?"

"அது யாரோ ஒரு கிழவிக்கா?"

"கம்ப்ளைண்ட் கொடுத்தது யார்?"

"தெரியலக்கா..."

"இது உன் மாமாககு தெரியாம பாத்துக்கோ! நான் உன்னை எப்படியாவது இந்த வீட்டு மாப்ளையாக்கிடணும்னு துடிச்சுகிட்டுருக்கேன அதை கெடுத்துடாதே..."

"சரிக்கா "

"அந்த எஸ்.ஐ யும் நீ போய பாககாதே. நானே சமாளிச்சுககறேன என்ற காளியமமை அப்படியே கணக்கெழுதிக் கொண்டிருநத அண்ணாமலையை பார்த்தாள்.

"அம்மா..."

"அந்த எஸ்.ஐ ய பார்த்து ஒரு பத்தாயிரத்த கொடுத்துட்டு வாங்க! தப்பித்தவறிக் கூட போலீஸ் காலடி இந்த பங்களாவுல படக்கூடாது."

"உத்தரவும்மா.... அய்யாக்கு கணக்கு சொல்லும் போது என்னன்னும்மா சொல்றது?"

"எனக்கு பட்டு சேலை வாங்குன வகைலன்னு எதையாவது சொல்லுங்க"

அந்த மாதிரி பல தடவை சொல்லியாச்சும்மா...."

"அப்ப கோவில உண்டியலுக்குன்னு சொல்லிடுங்க. அவா மீறி எதாவது கேட்டா அவரை எப்படி சமாளிக்கணும்னு எனக்கு தெரியும்" என்ற காளியம்மாள் தன் பட்டுச் சேலை முந்தியை இழுத்து இடுப்பில் செருகிக்கொண்ட விதமே அலாதியாக இருந்தது!

மாலை கல்லூரி முடிந்து வீடு திரும்பி தேவிக்கு எல்லாம் சகஜமாக இருப்பது ஆச்சரியமாக இருந்தது. அக்கவுண்டண்ட் அண்ணாமலையிடம் "அண்ணா.... நம்ப வீட்டுக்கு இன்னிக்கு போலீஸ்காரங்க யாரும் வரலையா?" என்று கேட்டாள். அதிர்வோடு பார்த்த அண்ணாமலையும் "எதுக்கும்மா இப்படி கேக்கறீங்க?" என்று கேட்க தேவியிடம் ஒரு தடுமாற்றம் அப்போது காளியம்மாளும் வர அவள் வருவதை கவனிக்காத தேவி.

"மாமா ஒரு ஆக்சிடெண்ட் பண்ணி ஒரு உயிர் போயிடிச்சி அண்ணா.... அதான் கேட்டேன்" என்றாள். அண்ணாமலை மலங்க மலங்க விழித்திட அவளே தொடர்ந்தாள். "நான் தான் கம்ப்ளெண்ட் கொடுத்தேன்" என்றிட காளியம்மாளிடம் பலத்த அதிர்வு!

இன்று

அதிர்ந்த பூரணி தாங்கள் பேசிக்கொண்டதை ஸ்ரீதேவி கேட்டு விட்டிருப்பாளோ என்று ஒரு வித அதிர்வோடு ஸ்ரீதேவியை பார்த்திட அவளிடமோ மிகவே சகஜமான பாவனை சந்துரு மாமாவை பார்க்கவும் ஸ்ரீதேவியிடமும் உற்சாகம்.

"மாமா.... இந்த டிரெஸ்ல சூப்பரா இருக்கீங்க நீங்க சிங்கம் படத்து சூர்யா மாதிரியே இருக்கீங்க.... என்றாள்.

"அப்ப உனக்கு சூர்யான்னா இஷ்டமா ஸ்ரீதேவி? என்று சந்துருவும் கேட்டிட

"ஆமாம் மாமா.... சூர்யா படம்னா முதல் நாள் முதல் ஷோவே போயிடுவோம்" என்றாள் ஸ்ரீதேவி.

"இவளுக்கெல்லாம் இப்படி போய் பாக்கறதால தான் இந்த சினிமா ஹீரோக்கள்ளாம் கோடிக்கணக்குல சம்பாதிக்கறாங்க எங்கள மாதிரி நிஜமான போலீஸ்காரங்கல்லாம் ஆயிரத்துல சம்பளம் வாங்கவே பாடாப்படறோம்" என்ற சந்துரு பூரணியை பார்த்து "அக்கா.... ஸ்ரீதேவி நல்லா வளந்துட்டா இல்ல?" என்றும் கேட்க பூரணி சந்துருவை ஒரு தினுசாக அப்படி பார்த்தாள்.

"என்னக்கா அப்படி பாக்கறே?"

"வளந்துட்டான்னியே.... அது தான்! அவ வளர்ந்தாலும் அதை சொல்லாதே. அவள் ஒரு குழந்தையா தான் நான் இப்பவும் நினைச்சிகிட்டிருக்கேன்."

"குழந்தையாவா.... சரிதான்! இப்ப இவ வயசு என்ன தெரியுமா உனக்கு....?"

"தெரியுண்டா.... இருபத்தி மூணு முடிஞ்சு இருபத்திநாலு நடந்துகிட்டு இருக்கு. அதுக்கென்ன இப்போ?"

"அது சரி.... ஒரு பக்கம் மாப்ள பாக்கணும். நல்ல ஜாதகம் இருந்தா சொல்லுன்னு சொல்லிட்டு குழந்தையாவே நினைச்சுகிட்டு இருக்கேன்னா எப்படிக்கா?"

"அது... அது... என்று பூரணி சற்று தடுமாற அதுவரை எங்கோ போயிருந்த மோகன்குமார் திரும்பி வந்தவனாக "மாமா... ஸ்ரீதேவி விஷயத்துல அம்மா ரொம்பவே குழப்பிக்கறாங்க! சுருக்கமா சொல்லணும்னா அவளுக்கு கல்யாணம் பண்றதுங்கற விஷயத்தை எடுத்தாலே டென்ஷன் ஆயிடறாங்க! மீறி பேசினா, ஒரு கோடீஸ்வரன் தான் மாப்ளையா வருவான்னு ஒரே பல்லவிய பாடறாங்க அந்த குற்றாலம் சித்தர் சாமிய பாத்தது தான் நாங்க பண்ண பெரிய தப்பே..." என்றான்.

ஸ்ரீதேவி "எதைப் பேசினாலும் கடைசில அது என் கல்யாணத்துல வந்து நின்றுடுது தயவு செய்து இந்த கல்யாண பேச்சு விடுங்க" என்றபடியே கடந்து போனாள்.

சந்துருவும் மோகன்குமாரிடம் "டேய் இந்த தடவை நீ பாஸ் பண்ணியே தீரணும்டா... நான் இப்ப வந்தது கூட உன்ன பாக்கத்தான். நீ எக்ஸாம் அட்டெண்ட் பண்ணும் போது உனக்கு உதவியா இருக்கட்டும்னு கடந்த அஞ்சு வருஷத்து கொஸ்டின் பேப்பரையும், அதுக்கு பதிலையும் கொண்டு வந்துருக்கேன்..." என்று ஒரு பென் டிரைவை நீட்டினார் சந்துரு மாமா.

"என்னடா நீ.... இத்துனூண்டு எதையோ நீட்டிட்டு அஞ்சு வருஷ பரிட்சை பேப்பரங்கறே?" என்ற பூரணியை சற்று கேலிப் புன்னகையோடு பார்த்த சந்துரு.

"அக்கா இதைப்பத்தி எல்லாம் உனக்கு எதுவும் தெரியாது. இதுக்கு பேர் பென் டிரைவ். இதுக்குள்ள நூறு சினிமாவை அடைச்சு வரிசையா நாம் போட்டுப் பாக்கலாம். அந்த அளவு விஞ்ஞானம் வளர்ந்திருக்கற காலம் இது. கொஞ்சம் இதைப்பத்தி எல்லாமும் தெரிஞ்சு வெச்சுக்கோக்கா...."
என்று கூறவும் பெருமூச்சு விட்டாள் பூரணி. அப்படியே "என்ன விஞ்ஞான வளர்ச்சியோ.... ஒண்ணு மட்டும் தெரிஞ்சுக்குங்க... உங்க விஞ்ஞானம் இப்படி எதை வேணா கண்டுபிடிக்கலாம். ஆனா ஒரு அரிசியை அதால சுயமா செய்ய முடியாது" என்று தனக்கு தெரிந்த விதத்தில பதில கூறினாள்.

ஸ்ரீதேவி அவளது அறையில் டி.வி முன் உட்கார்ந்திருந்தாள். அப்போது அவளது கைபேசிக்கு அழைப்பு வரவும் காதை கொடுத்தாள். மறுபுறம் அவள் தோழி சுமதி பேசினாள்.

"ஸ்ரீ... என்ன டிவி பாத்துகிட்டிருக்கியா?"

"ஆமாம் சுமதி...."

"உனக்கு ஒரு நியூஸ். அது குட் நியூஸா இல்லை பேட் நியூசாங்கறது நீ எடுத்துக்கறத பொருத்தது."

"என்ன சுமதி புதிர் போடறே?"

"எனக்கு கல்யாணம்டி...."

"வாவ்... கங்கிராஜிலேஷன்ஸ் இது குட் நியூஸ்தான் அதுல என்ன சந்தேகம்."

அப்படின்னா சரி... மாப்ள யாருனு கேட்கலையே..."

"யாருடி?"

மதுரைல பாளையம்பட்டி அச்சுத வீர குடும்பம்னு ஒரு ஜமீன் குடும்பம் இருக்கு...."

"ஓ... பெரிய இடம்தான!"

"ஆமாண்டி.... வர்ற பத்தாம் தேதி நிச்சயதார்த்தம் வெச்சிருக்காங்க. அதுவும் அவங்க மாப்ள வீட்ல தான..."

"வெரிகுட்.... ஆமா மாப்ள என்ன பண்றார்?"

"மாப்ள சிவில் எஞ்ஜினியரிங் முடிச்சிட்டு அவங்க அப்பாவோட கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியை பாத்துக்கறார்."

"மாப்ள பேர்?"

"மாப்ள பேர் மதன்குமார்"

"பரவால்லியே... நல்ல மாடர்ன நேம்தான."

"நீயும் நிச்சயத்துக்கு வரே?"

"நானா?"

"நீயேதான்.... ஏன்டி இழுக்கறே?"

"என்ன எங்கம்மா தாம்பரத்தை தாண்டக்கூடாதுன்னு சொல்லியிருக்காங்க..."

"ஏன் அப்படி?"

"அது அப்படி தான்.... எல்லாம் ஒரு சித்தர் என் ஜாதகத்தை பாத்ததோட விளைவுன்னு வெச்சுக்கயேன...."

"என்ன ஏதாவது கண்டம் இருக்குதா உனக்கு?"

"அப்படித்தான் சொல்லியிருக்கணும்னு நினைக்கறேன்."

"இதை எல்லாம் நீ நம்பறியா?"

"எங்கம்மா நம்பறாங்களே..."

"போடி லூசு.... எனக்கு நீ வந்தாகணும்! என் கல்யாணத்துல நீ தான் என் பக்கத்துல இருந்து எல்லாத்தையும் பாத்துக்க போறே..."

"எனக்கு ஆசையா தான்டி இருக்கு. ஆனா அம்மா விடமாட்டாங்களே..."

"அப்ப ஒன்னு பண்ணு..."

"நிச்சயதார்த்தம் இங்க சென்னைல தான்னு பொய் சொல்லிட்டு வந்துடு. நாங்க ப்ளைட்ல தான் போய்ட்டு வரப் போறோம், காலைல போய்ட்டு நைட் வந்துடலாம்..."

"இல்லடி.... தப்பித் தவறி அம்மா, அப்புறம் அண்ணனுக்கு தெரிஞ்சா அவ்வளவு தான்...."

பேசிக்கொண்டே திரும்பியவள் எதிரில அவள பேச்சைக் கேட்டபடி நின்று கொண்டிருந்தான் அவள் அண்ணன் மோகன்குமார்!

# 4

அன்று

தேவி பேசுவதை காளியம்மாள் கேட்டபடி நிற்பதை அண்ணாமலையும் சற்று தாமதமாகத்தான் கவனித்தார். அவருக்கும் பதைக்கத் தொடங்கியது. ஆனால் தேவி, காளியம்மாள் நிற்பது தெரியாமல் தொடர்ந்து பேசினாள்.

"நான் தான் போலீசுக்கு கம்ப்ளைண்ட் கொடுத்தேன் அண்ணா மாமாவோட ரேஷ் டிரைவிங் எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கல! ஜீவா மாமா மேல தான் தப்பு. பாவம் அந்த பாட்டி... நிச்சயமா அது உயிரோட இருக்க சான்ஸே இல்லை..."

என்றவள் முன்னால் காளியம்மாள் வந்து நிற்கவும் தேவிக்கு சற்று நெஞ்சை அடைத்தது.

"சித்தி" என்றாள் திணறலாக. "நான் உனக்கு சித்தி தான்... ஆனா நீ தான் எனக்கு எப்பவும் சத்துருவா இருக்கே. எவ்வளவு தைரியமா இருந்தா நீ என் தம்பியை போலீசுக்கு காட்டிக் கொடுத்துருப்பே? என்ற காளி கடூரமாக ஆரம்பித்தாள் காளியம்மாள்.

தேவிக்கு பதைத்தாலும் சமாளிக்க முற்பட்டாள்

"மாமா மேல தான் சித்தி தப்பு... போலீஸ் தானா தேடி வந்து பிடிச்சா மாமாவுக்கு தண்டனை அதிகமாகும். அதனால தான் நானே தகவல் கொடுத்தேன்..."

"ஓ... போட்டுக் கொடுத்ததோட இல்லாம அதுக்கு நியாயம் வேற கற்பிக்கிறியா?"

"இல்ல சித்தி... உள்ளதைச் சொன்னேன்."

பதிலுக்கு பதில் என்று பேச்சு வளரும் போது வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம்... பெரியவர் ராஜரத்தினம் வெளியே போய் விட்டு வருகிறார் என்பது தெரியவும் காளியம்மை அப்படியே தலைகீழாக மாறத் தொடங்கினாள்.

"சரி சரி போய்... படிக்கற வேலைய கவனி. அந்த கிழவிக்கு ஒரு ஆபத்தும் இல்லை. அவளுக்கு லேசான காயம் தான். அதுக்கு என்ன உதவி பண்ணணுமோ பண்ணியாச்சி! இதைப்பத்தி நீ இனி யார்கிட்டயும் ஒரு வார்த்தை கூட பேசக்கூடாது. நானும் ஜீவாவை இனிமே பாத்து கார் ஓட்டச் சொல்றேன்" என்று அடக்கமாய் பேசியவளை அண்ணாமலை மட்டும் வெறித்தார். அவருக்கு தான் அவளது சுயரூபம் எப்படிப்பட்டது என்று நன்றாகத் தெரியும். அவர் வரையில் அவளை அவரால் விரும்பவும் முடியவில்லை. வெறுக்கவும் முடியவில்லை.

ராஜரத்னம் உள்ளே நுழையும் போதே சற்று தடுமாறிக் கொண்டு தான் வந்தார். அதுவே அவர் போதையாக இருப்பதை உணர்த்தி விட்டது. காளியம்மாள் அவரை போதையில் பார்க்கவும், வருத்தப்படாமல் தனக்கு மிக சௌகரியம் என்பது போன்ற உணர்வுடன் பார்த்தாள்.

அண்ணாமலைக்கு அவரை அப்படிப் பார்க்கவும் கோபம் தான் வந்தது எங்கே போனாலும் யாராவது பார்ட்டி கொடுத்தார்கள் என்று குடித்து விட்டு வருபவரை எப்படி திருத்துவது என்றும் தெரியவில்லை.

ராஜரத்னத்தின் பெரிய பலவீனமே குடிதான்! இது தெரிந்து பலர் மதுவாலேயே அவரை குட்டிச்சுவர் ஆக்கி அவரை சுரண்டவும் செய்தனர். இன்று யார் எவ்வளவு சுரண்டினார்களோ?

காளியம்மாள் அவரை கைத்தாங்கலாக தன் அறை நோக்கி அழைத்துச் செல்லத் தொடங்கினாள். போகும் போதே அவளிடம் ஒரு தீர்மானம்.

"ஏங்க... இன்னிக்கு யாருங்க பார்ட்டி கொடுத்தா என்று அவரிடம் நைசாக பேசத் தொடங்கினாள்."

"நம்ம ஆனைமலை மூர்த்திக்கு இன்னிக்கு பொறந்த நாள் காளி..."

என்று அவரும் தெளிவாக பதில் கூறினார.

"நீங்க அவருக்கு என்ன பரிசு கொடுத்தீங்க?"

"கைல பணம் கொண்டு போகல... அதனால கழுத்துல கிடந்த சங்கிலியை அப்படியே கழற்றி போட்டுட்டு வந்துட்டேன்."

"அய்யோ... அந்த எட்டுபவுன் இரட்டை வடம் சங்கிலியையா?"

"ஆமாம் காளியம்மா... ஏன் காளியம்மா நம்ம அந்தஸ்துக்கு அது குறைவுன்னு நினைக்கறியா?"

"அ.. அ... ஆமாங்க... காளியம்மாள சமாளித்தாள். மனதுக்குள் எட்டுபவுன் இப்படி அநியாயமாக போயவிட்டதே என்று எரிந்தாள.

அண்ணாமலை காதிலும் அதெல்லாம் விழுந்தது. அள்ள முடியாத அளவு செல்வம் எல்லா பக்கமும் குவிந்து கிடக்கிறது. உழைத்து சம்பாதித்திருந்தால் காசின் அருமை தெரிந்திருக்கும். ஆனால அதற்கு தான் ராஜரத்னம் வரையில அவசியமே இல்லையே...?

இந்த கடவுள் ஒரு பக்கம் அள்ளிக் கொட்டுகிறான் மறுபக்கமோ கிள்ளிக் கூட கொடுப்பதில்லை. எதனால் இப்படி ஒரு பாரபட்சமோ... யோசனையோடு பீரோவை பூட்டிக் கொண்டு கிளம்ப முற்பட்ட

அண்ணாமலை எதிரில் காரை துடைத்துக் கொண்டிருந்தான அமுதன. அவனைப் பார்த்தவருக்கு அவன் அப்பா ராமலிங்கத்தின் உடல் நிலை ஞாபகம் வந்தது.

"என்ன அமுதா... உன் அப்பன் உன்னை அனுப்பிட்டானா இன்னிக்கு?"

"ஆமாங்கண்ணா... லீவு இல்லங்கறதால அம்மா கட்டாயம் டூட்டிக்கு வரணும்னு சொல்லிட்டாங்க. ஆனா காய்ச்சல்ல அவரால அசையக் கூட முடியல. அதான் நான் வந்தேங்க..."

"சரி சரி... நீயும் புறப்படு. அய்யா போதை' தெளிய ரெண்டு நாளாகும். நீ நாளைக்கு வா..."

"அம்மாகிட்ட ஒரு வார்த்தை சொலலிடறேங்க..."

"வேண்டாம்... சாவிய என்கிட்ட கொடுத்துட்டு புறப்படு."

"இல்லீங்க... என்கிட்ட சொல்லாம போகக்கூடாதுன்னு சொன்னாங்க..."

"அப்ப நீ இன்னிக்கு வீட்டுக்கு போன மாதிரிதான். அண்ணாமலை புலம்பியபடி செலல அமுதன காளியம்மாளை தேடிக்கொண்டே போனான். அவளும் ரூமில் ராஜரத்னத்தை படுக்க வைத்தவளாக வெளியில் வந்தாள.

"அம்மா இந்தாங்க சாவி... நான் புறப்படறேன்' என்றவனை மேலும் கீழும் பார்த்தாள்.

"அம்மா... உங்கள தான்!"

"என்னடா..."

"நான் கிளம்பறேன்."

"நீ கிளம்பிட்டா நான் எப்படிடா கோவிலுக்கு போறது?"

"எந்த கோவிலுக்கும்மா?"

"எல்லாம் நம்ப வனபத்ரகாளி கோவிலுக்குதான். போய் கார்கிட்ட இரு.... நான் வந்துடறேன்..."

என்றபடி தேவி இருந்த அறை நோக்கி சென்றாள். அவள் ஹோம் ஒர்க் செய்வதில் மும்முரமாக இருந்தாள். தூர நின்ற நிலையில் ஏற இறங்க பார்த்தவள்,

"உன் படிப்புக்கு ஒரு முடிவு கட்ட, என் தம்பிக்கு உன்ன கட்டி வெசகட்டு மறுவேல பாக்கறேன்" என்று முணுமுணுத்தவளாக புறப்பட்டாள்!"

இன்று

அண்ணன் மோகன்குமாரைப் பார்த்த ஸ்ரீதேவிக்கு லேசாக நெஞ்சை அடைத்தது. திருதிரு விழிப்போடு அவனையே பார்த்தவளாக நிற்பவள் காதில் மறுபக்கத்தில் இருந்து சுமதியின் குரல் ஒலித்தபடியே இருந்தது.

"ஸ்ரீதேவி.... நீ பயப்படாம வாடி....! ஃப்ளைட்ல போய்ட்டு வரதால யாருக்கும் தெரியாது.... நீ தைரியமா வாடி ..."

"..............................."

"ஸ்ரீ.... என்னடி நான் பேசிகிட்டே இருக்கேன்.... எதுவும் சொல்ல மாட்டேங்கறே. வாயத் திறந்து யெஸ்னு சொல்லுடி."

சுமதியின் குரல மோகன் குமார் காதிலும் விழுந்தது. ஸ்ரீதேவி வேகமாய் நான் அப்புறமா பேசறேன்டி என்று போனைக் கத்தரித்தாள்.

"யாரும்மா போனல?" மோகனிடம் ஆர்வம்.

"அது.... அது என் தோழி சுமதிண்ணே...."

"தப்பித் தவறி அப்பா அண்ணனுக்கு தெரிஞ்சா அவ்வளவுதான்னு சொன்னமாதிரி காதுல விழுந்துச்சே?"

"அது வந்துண்ணே.... அவ சினிமாவுக்கு போகலாம வரியான்னா.... அதான்."

"ஸ்ரீ.... இன்னிக்கு சினிமாக்கு போறதெல்லாம் ஒரு விசயமா? நீ எதையோ என்கிட்ட மறைக்கறே....

"அய்யோ இல்லண்ணே.... நீ நினைக்கற மாதிரி எதுவும் இல்லை."

"ஒரு சினிமாவுக்காக நீ இவ்வளவு திணறமாட்டே என்ன விஷயம்.... எதுவா இருந்தாலும் சொல்லு போன்ல யார்.... என்ன பாய் ஃப்ரெண்டா?"

"கடவுளே...."

பாய ஃப்ரெண்டெல்லாம் இல்லண்ணே.... போன்ல பேசினது சுமதிண்ணே...."

மோகன்குமார் விடுவதாக தெரியவில்லை. ஸ்ரீதேவியும் எது உண்மையோ அதை சொல்லி முடித்தாள். மோகனிடமும் மிகுந்த ஆச்சரியம்.

"என்னம்மா இது.... சுமதி உன் கிளாஸ்மேட் தானே?"

"ஆமாண்ணே.... "

"அவ கல்யாண நிச்சயதார்த்தத்துக்கு நீ போனா தானே நல்லா இருக்கும்."

"ஆனா அது மதுரைல இல்லண்ணே நடக்குது."

"அதனால என்ன... நீ போயிட்டு வாம்மா... அதான் காலைல போயிட்டு நைட்டே திரும்பிடப் போறீங்களே...?"

"அண்ணே நிஜமாவா சொல்றே நீ?"

"சத்தியமாவும் சொல்றேன். இந்த மாதிரி விஷயமெல்லாம் வாழ்க்கைல ஒரு தடவைதான் வரும். அதை விடக் கூடாது."

மோகன்குமார் ஸ்ரீதேவி வரையில் அப்படி ஒரு பதிலைச் சொல்வான் என்று ஸ்ரீதேவி கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. அவள் முகத்தில் ஆச்சரியம் பொங்கத் தொடங்கியது.

"என்னம்மா அம்மா கூட சேர்ந்துகிட்டு அந்த சித்தர் சொன்னார்னு உன்னை நான் போக வேண்டாம்னு சொல்வேன்னு நினைச்சியா நீ... நான் அவர் பேச்சை எல்லாம் நம்பறதா இல்லை..."

"அண்ணே... ரொம்ப சந்தோஷம்ணே. அம்மாவை அப்ப எப்படிண்ணே சமாளிக்கறது?"

"அது என் பாடு... நீ நல்ல விதமா திரும்பி வந்த பிறகு நான் அம்மாகிட்ட வெச்சுக்கறேன்."

"அண்ணே அதெல்லாம் வேண்டாண்ணே..."

"இல்லம்மா... மூட நம்பிக்கைக்கு எல்லாம் இடம் கொடுக்க கூடாதும்மா..."

"அந்த சித்தர் என் ஜாதகத்தை பார்த்து அப்படி என்னண்ணே சொல்லியிருப்பார்?"

"அம்மா என்கிட்டவே சொல்ல மாட்டேங்கறாங்களே..."

"ஆமா... ஒருத்தர் ஜாதகத்துல ஊர் விட்டு ஊர் போனா கஷ்டம்னு கூடவா இருக்கும்?"

"அம்மாடி... கேக்கறவன் கேணப்பயலா இருந்தா கேழ்வரகுல நெய் வடியுதுன்னு சொல்வாங்கம்மா! நாம் தாம்மா தெளிவா இருந்துக்கணும்!"

"என்னமோ எனக்கு எல்லாமே ஆச்சரியமா தான் இருக்கு..."

"உன் வயசு அப்படிம்மா... ஆமா உன் தோழியோட மாப்ளை யாரு?"

"மதுரைல பாளையம்பட்டி அச்சத வீர குடும்பம்னு ஒரு ஜமீன்தார் குடும்பம் இருக்காமே?"

"இந்த காலத்துல ஜமீன் குடும்பமா?"

"நானும் ஆச்சரியப்பட்டேன். ஆனா அவங்க ஜமீன்தார் குடும்பம் தானாம்..."

"அப்ப பெரிய இடம்னு தெரியுது... உனக்கும் அதே மாதிரி பெரிய இடமா பார்த்துடுவோமா?"

பேச்சோடு பேச்சாக மோகன்குமார் வேடிக்கையாகத் தான் கேட்டான். ஆனால் ஸ்ரீதேவி முகத்தில் வெட்கமோ இல்லை ஒரு பதிலோ இல்லை மாறாக கலக்கம்!

"ஸ்ரீ என்னாச்சு?"

"ஒண்ணும் இல்லேண்ணே..."

"அப்ப நிறைய இருக்கு... என்னன்னு சொல்லு"

"என்னமோ தெரியலேண்ணே.... கல்யாணம்னு சொன்ன நிமிஷம் மனசுக்குள்ள என்னவோ பண்ணுதுண்ணே...."

"என்னம்மா சொல்றே?"

"எனக்கு எப்படி சொல்றதுன்னு தெரியல, மனசை என்னவோ பண்ணுதுண்ணே?"

"கல்யாணம்கறது ஒரு பெண்ணோட வாழ்க்கைலயே நடக்கற முக்கியமான சம்பவம்மா.... அந்த சம்பவத்துக்கு பிறகு அவ அப்படியே மாறிடறாம்மா...."

இந்த விஷயத்துல ஒரு ஆண் எதையுமே இழக்கறதில்லை.... ஆனா ஒரு பெண் அப்படி இல்லம்மா.... அவ தன் தாய் வீட்டையே மொத்தமா இழந்துட்டு எந்த வீட்டுக்கு வாழப் போறாளோ அந்த வீட்டை தன் வீடா ஏத்துக்கறா. குலதெய்வம், கோத்ரம்னு எல்லாமே அவ வரைல மாறிடுதுன்னா பாத்துக்கையேன்....'

"அப்படி எல்லாம் மாறாம ஒரு பெண்ணால வாழ முடியாதாண்ணே?"

"எப்படிம்மா முடியும் ... காலம் காலமா இது தானேம்மா நடைமுறை...."

"அந்த நடைமுறையை மாத்தக் கூடாதா?"

"எதுக்கும்மா மாத்தணும். நம்ம அம்மா அப்படி நடந்துகிட்டிருந்தா நாம இப்ப இப்படி இருந்திருக்க முடியுமோ முடியாதோ?"

"எனக்கென்னவோ இப்படி மாறுவதற்கு கல்யாணம் பண்ணிக்காமலே இருந்திடறது மேலுண்ணே...."

"நீ நம்ம வீட்டு மேல உள்ள பாசத்துல பேசறே.... ஆனா நடைமுறைகளை மாத்தறதால தீமைதான் ஏற்படும். அதோட இந்த மாதிரி சிந்திக்கறதும் இப்ப எனக்கு சரியா படலை, நீ உன் தோழியோட நல்லபடியா போய்ட்டு வா பாத்துக்கலாம்."

என்ற மோகன்குமார் வந்த மாதிரியே விலகிட ஸ்ரீதேவிக்கு மட்டும் ஏனோ மனது பாரமாகி கனத்துப் போனது போல இருந்தது. ஒரு குழந்தை ஒன்று எங்கோ அழுவது போல ஒரு குரல் அவளுக்குள்....

## 5

அன்று

அமுதன் போட்டிகோவில் காரோடு வந்து நின்றான். காளியம்மாள் மஞ்சள் சிவப்பு கலந்த பட்டு புடவை கட்டிக்கொண்டு வந்து காரில் ஏறினாள். கூடவே அவளுக்கு வலது கை, இடது கை என்று எல்லாமுமான வேலைக்காரி செவ்வந்தி.

செவ்வந்தி ஒரு இரண்டும் கெட்டான். கொஞ்சம் கோவில் மாடும் கூட. காளியம்மாள் எதைச் சொன்னாலும் தலையாட்டுவாள். கிணற்றில் விழச்சொன்னாலும் உத்தரவும்மா என்பாள்.

அமுதன் காரை எடுத்தான். அவன் அப்பா ராமலிங்கம் காளியம்மாளுக்கும் கார் ஓட்டும் போது கவனமாக ஓட்ட வேண்டும் என்று சொன்னது நினைவுக்கு வந்தது. எனவே நிதானமாகவே ஓட்டினான்.

இந்த 1991 லும் ரேசில ஓட்டியவர்கள் கூட ஊருக்குள் நிதானமாகத்தான் ஓட்ட முடியும். அந்த அளவுக்கு சாலைகளில் ஆக்ரமிப்பு ஒருபுறம், வாகனப் பெருக்கம் மறுபுறம், மூன்றாவதாக குண்டும் குழியுமான சாலைகளும் ஒருபுறம்.

எதுவுமே சரியில்லாத ஒரு தேசம் இது! இதிலும் பகதி கொஞ்சம், வளர்ச்சி கொஞ்சம் என்று இருப்பது தான் பெரிய விந்தை.

காளியம்மாள் காருக்குள் இருந்த படியே செல்போன் மூலம் வனபத்ரகாளி கோவில் பூசாரியோடு தொடர்பு கொண்டு பேசத்தொடங்கினாள்.

"பூசாரி நான் காளியம்மா பேசறேன்."

"அம்மா, சொல்லுங்கம்மா, சொல்லுங்கம்மா"

"நான் இப்ப கோவிலுக்கு தான் வந்துகிட்டிருக்கேன்."

"சந்தோஷமா.... வாங்கம்மா, நானும் கோவில்ல தான இருக்கேன."

"நான் கேட்ருந்தேனே அது தயாரா இருக்குதானே?"

"அதுவாம்மா.... தயாரா இருக்கும்மா தயாரா இருக்கு."

"அதுக்காகதான் முக்கியமா வாரேன்..."

"நல்லதும்மா, நல்லதும்மா...."

பூசாரியோடு பேசி முடித்தவளாக செவ்வந்தி பக்கம் திரும்பினாள். அவளும் புன்னகையோடு பார்த்தாள்.

"என்னடி.... பூசாரிகிட்ட நான் என்ன கேட்டுருந்தேன்னு தானே மனசுல நினைக்கறே?"

"இல்லம்மா, ஆமாம்மா...."

"எல்லாத்தையும் நடக்க நடக்க தெரிஞ்சிக்குவே."

"நீங்க எதை செய்தாலும் அது சரியாதாம்மா இருக்கும்."

"இத ஒன்னு சொல்லிட்டு... எனக்கு இப்ப கவலை எல்லாம் என் தம்பிய பத்திதான்."

"ஆமாம்மா... அதுவும் கொஞ்சம் டைடா தான் திரியுது"

சரியா சொன்னேடி.... அவனுக்கு ஒரு கால் கட்டு போட்டாதான் சரியாவாள். இவனால போலீஸ்காரனுக்கு வேற அம்பதாயிரத்தை அழுவும் படி ஆயிடிச்சு...."

"ஐயோ எதுக்கும்மா?"

"ஒரு கிழவி மேல காரை ஏத்தி கொன்னுபிட்டான் என்ற காரியம்மாள் அதை அமுதன் கவனித்து கேட்கிறானா என்றும் பாத்தாள். அவனோ சாலை மேலேயே கண்ணாக இருந்தான. பின் தழைந்த குரலில் பேசத் தொடங்கினாள்.

"அவனுக்கும் தேவிக்கும் கல்யாணத்தை பண்ணிட்டா தான் எனக்கும நிம்மதி. அதுக்கு தான இப்ப கோவிலுக்கும போயகிட்டிருககோம."

"இதுக்கு ஐயா ஒத்துககுவாராம்மா...' செவவநதி பலதத சநதேகததோடு கேட்டாள். அவள் அப்படி கேட்டது காளியம்மாளையே என்னவோ செய்தது.

"ஏண்டி.... ஒரு பொண்ணு தாய் மாமனை கல்யாணம் பண்ணிக்கறது சகஜம் தானேடி...."

"அது சரிதாம்மா.... ஆனா நீங்க தேவிக்கு சித்தி முறை தானே.... அதுதான்...." அவள் இழுத்தாள்.

"சித்தியா இருந்தாலும் நான் தானே இப்ப அவ தாய் ஸ்தானத்துல இருக்கறவ"

"வாஸதவம தாம்மா ஆனா தேவிககு ஜீவா தமபிய பிடிககணுமே. ஜீவா தம்பியும் ஏட்டிக்கு போட்டியா தானே நடந்துக்கறாரு."

"விட்டா நீயே என் புருஷன்கிட்ட போய் வேண்டாம்னு சொலவே போல இருக்கே?" காளியம்மாள் சற்று கோபத்தை காட்டினாள்.

"தப்பா எடுத்துக்காதீங்கம்மா. நான் எப்பவும் உங்க அடிமைம்மா, உங்களுக்கு பிடிக்காததை செய்வேனா? ஆனா நம்ம குமாஸ்தா அண்ணாமலை அப்புறம் ஐயாவை சுத்தி இருக்கறவங்கன்னு எல்லாரும் கலைச்சு விடுவாங்களே. ஜீவா தம்பி எல்லார்கிட்டயும் கெட்ட பேருல்ல எடுத்துருக்கு."

"அதுவும சரிதான். அதுக்குதான் நான் இப்ப பூசாரியை பாக்கறேன். ஒரு வசியப் பொடி இருககுதாம் அதை கலந்து கொடுத்தா என் புருஷன நான் உககாருன்னா உக்காரணும், எழுந்திருன்னா எழுந்திருக்கணும்"

என்று மிக மெல்லிய குரலில் கூறினாள். டிரைவிங் சீட்டில் அமுதன் காதில ஓரளவு கேட்கவே செய்தது. இருநதும் காது கேளாதவன போலவே தான டிரைவ செய்தான.

வனபத்ரகாளி கோவில இருககும் காட்டுப்பகுதியும் தெரிநதது. அதனுள செல்லும் மண்சாலைக்குள் அந்த கார் ஓடத் தொடங்கியது. காளியும் எதிரில் தெரிந்தாள...., அமுதனும காரை ஒரு மரத்தடியில் நிறுததினான. காளியம்மாளும் செவ்வந்தியும் தாங்களாக கதவைத் திறந்து கொண்டு இறங்கினா. அப்படி இறங்கும் போதே "ஏன் நீ கதவை திறககமாட்டியோ?" என்று அமுதனை முறைத்தாள். அமுதன் நெளிந்தான். அப்பா ராமலிங்கம் இவளிடம் எவ்வளவெல்லாம் அவமானப்பட்டிருப்பார் என்றும் எண்ணிப பார்த்தான்.

காளியம்மாளும் விலகிப் போனாள். பெரிய மீசை வைத்துக் கொண்டிருந்த பூசாரி காத்துக் கொண்டிருந்தான். அமுதனுக்கு பின்னால போய் காளியை வணங்கப் பிடிக்கவில்லை.

"எதற்கு தெய்வத்துக்கு இப்படி ஒரு மிரட்டலான தோற்றம்? இதுவா தெய்வீகம்...? என்றும் தனக்கு தானே கேட்டுக் கொண்டான். கூடவே தேவி நினைப்பும் எழும்பியது.

"பாவம் தேவி... அந்த ஜீவாவை மணந்து கொண்டு என்ன பாடெல்லாம் படுவாளோ?" என்றும் எண்ணிப் பார்த்தான். வருத்தமாக இருந்தது. அதுவே பரிதாபமாகவும் மாறியது.

அதே வேளை பூசாரியோ காளியம்மாவிடம் "வசியப்பொடி " என்று இரண்டு பொட்டலங்களைக் கொடுத்தவனாக 'இதுல வெள்ளப் பொட்டலம் உங்க வீட்டுக்காரருக்கு. இந்த சிவப்பு தேவிங்கற உங்க பொண்ணுக்கு... பால்ல கலந்து கொடுத்துடுங்க. இங்க சுடுகாட்டுல ஒரு மண்டலம் நடுநிசில நான் மந்திரம் சொல்லி தயாரிச்சது.

இது உள்ள இறங்கின பிறகு பாருங்க. ரெண்டு பேருமே நீங்க சொல்றதுக்கெல்லாம் தலையாட்டு வாங்க" என்றிட காளியம்மாள் முகத்தில பாளையம்பட்டி அச்சு வீர குடும்பமே அவள் வசம் அப்போதே சிக்கிவிட்டது போல தோன்றியது!

இன்று

இப்போதெல்லாம் ஸ்ரீதேவிக்குள் அடிக்கடி இப்படி ஒரு குழந்தை அழும் குரல் கேட்கிறது. எங்கே அழுகிறது? யார் குழந்தை அது? என்று எந்தக் கேள்விக்கும் விடைதெரியாது. ஒருவேளை தனக்குத்தான் ஏதாவது ஆகி மூளையில் குழப்பமோ என்று கூட கேட்டுக் கொண்டாள்.

பின் வேகமாக அதில் இருந்து மீண்டவள் அண்ணன் மோகன்குமார் மதுரைக்கு போக அனுமதித்ததை எண்ணி சந்தோஷப்படவும் செய்தாள். அந்த சந்தோஷத்தை உடனேயே தோழி சுமதிக்கு போன் போட்டு பகிர்ந்து கொள்ளவும் தொடங்கினாள்.

"சுமதி.... நான் உன் கூட கொஞ்சம் முந்தி பேசிகிட்டிருந்ததை என் அண்ணன் கேட்டுகிட்டே இருந்துருக்காருடி" எனவும் சுமதி பதறினாள்.

"அய்யோ.... அப்ப உன்னால வரமுடியாதா?" என்றாள்.

"அதான் இல்ல அண்ணன் ரொம்ப சந்தோஷமா தாராளமா போயிட்டு வா. இந்த மாதிரி விஷயத்தை எல்லாம் விட்டே கொடுக்கக் கூடாதுன்னு சொல்லவும் எனக்கு ஒரே இன்ப அதிர்ச்சி."

"நிஜமாவா?"

"பிராமிசாடி ..."

"அப்புறமென்ன.... நீ இனி டென்ஷன் இல்லாம வரலாம் ..."

"அது எப்படி... அம்மாதானே இதுல எனக்கு பிரதான வில்லி."

"நீ இப்ப என்னதான சொல்லவரே."

"அம்மாக்கு தெரியாம தான வரப்போறேன். அம்மா பயப்பட்ற காரணம் அண்ணனுக்கே தெரியமாட்டேங்குது. எல்லாத்துக்கும் ஒரு சித்தர் தான் காரணம்! என் ஜாதகத்தை அவர்கிட்ட காட்டினதுதான் முக்கியகாரணம்."

"இந்த காலத்துல ஏதுடி சித்தரும், முனிவரும்.... யாரோ ஃப்ராடு உங்கம்மாவை ஏமாத்திகிட்டு இருக்காங்கன்னு நினைக்கறேன்."

"அண்ணன் கூட அப்படி தான் நினைக்கறான். அதான் நீ போய்ட்டு வான்னுட்டான்."

"சரி... எல்லாத்தையும் தூக்கி போட்டுட்டு சந்தோஷமா வா. எப்பவும் போட்டுட்டு வருவியே ஒரு பர்ப்பிள் கலர் சுடிதார். அதை போட்டுக்காதே... அழகா அந்த ஆரஞ்சு கலர் சாரி கட்டிகிட்டு வா. அவசியப்பட்டா பார்லருக்கு போய் ஃபேஸ் வாஷ் பண்ணி புருவத்தை ட்ரிம் பண்ணிக்கோ. அதுல ஒரு பூனை முடி கொம்பு மாதிரி முளைச்சு உன் அழகையே கெடுத்துகிட்டு இருக்குது..."

"நீ என்னை ரொம்பவே கவனிச்சிருக்கேடி. என் அம்மா கூட என்கிட்ட அந்த முடி பத்தி பேசினதில்லை" என்று ஒரு சிரிப்பு சிரித்தாள் ஸ்ரீதேவி. பின் போனைக் கட் செய்தவளுக்குள் ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி. அதே சமயத்தில் திரும்பவும் அவளுக்குள் அந்த குழந்தையின் அழுகுரல் சப்தம் காதில் ஒலிக்க ஆரம்பித்தது. அவளை அது என்னவோ செய்தது... கூடவே மனக்கண்ணில் ஒரு குழந்தை உருவம் தோன்றி அவளைப் பார்த்து கையசைப்பது போலவும் அந்த உருவத்தை விட்டு தான் வெகுதூரம் விலகிச் செல்வது போலவும் கூட தோன்றியது.

தலையை இருகைகளாலும் பிடித்துக்கொண்டாள். வேகமாக சமையல் கட்டுக்கு சென்று தண்ணீர் குடித்தாள். அப்படியே வந்து டி.வியில் ஒரு சேனலில் காட்சியிலும் ஒரு பெண் குழந்தை. அந்த குழந்தையைப் பிரிந்து குழந்தையின் தாய் போலீசாரால் போலீஸ் ஜீப்பில் ஏற்றப்பட அந்தக் குழந்தையோ அப்படி ஒரு அழுகை அழுகிறது.

அதைக் கண்டவள் டி.வியை அணைத்தாள். அவளைப் பார்த்தபடியே வந்த அவள் தாய் "ஏன்டி ஒரு மாதிரி இருக்கே?" என்று கேட்கவும் பதில் ஒன்றை சரியாக சொல்ல முடியாத படி விழித்தாள்.

"உன்னைத்தான்டி கேக்கறேன்."

"ஒன்னுமில்லம்மா... கொஞ்சம் தலைவலி..."

"இந்த தலைவலியோட தான் நீ அந்த நிச்சயத்துக்கு போகப் போறியா?"

"வேற வழி இல்லம்மா?"

"இது வரை வழி இல்லாம இருந்தே. இப்ப பார் தலைவலி வந்துடுச்சு. இதை சாக்கு வெச்சு உன் தோழிகிட்ட என்னால வர முடியாதுன்னு சொல்லிட்றா..."

"அது... அது..."

"என்ன இது இதுன்னுகிட்டு... என் பேச்சக் கேள்..."

"அட என்னம்மா நீ ஒரு தலைவலிக்கு பயந்து ஒருத்தர் நிச்சயதார்த்தத்தையே ட்ராப் பண்ண முடியுமா?"

"அப்ப நீ என் பேச்சு கேட்கமாட்டே... அப்படி தானே?"

"ஐயோ அம்மா... இங்க லோக்கல்ல தானேம்மா போறேன்."

"உன்ன கொஞ்ச நாளைக்கு எங்கேயுமே அனுப்பாதீங்கன்னு சொல்றாரு அந்த சித்தர். நான் என்னடி செய்வேன்..."

"அட போம்மா... நீயும் உன் சித்தரும்! நான் சொல்றேம்மா... அவர் சித்தரா இருக்கவே முடியாது. சும்மா புருடா விட்டுகிட்டு திரியலாம். அவ்வளவுதான்!"

"சரி... எக்கேடோ கெட்டுப்போ... ஆனா ஒண்ணு நான் இப்ப ஒரு முடிவுக்கு வந்துட்டேன். நீ எங்க போனாலும் உன் பின்னாலேயே தொடருவது தான் என் முடிவு."

"என்னம்மா சொல்றே?" நானும் உன் கூட நிச்சயத்துக்கு வர்றதா முடிவு பண்ணிட்டேன்டி.

அவள் அப்படி கூறவும் ஸ்ரீதேவிக்கு அவள் இதயம் அறுந்து அவள் வயிற்றுக்குள் விழுந்த மாதிரி இருந்தது!

## 6

அன்று

வனபத்ரகாளி கோவிலில இருந்து காரில திரும்பும் போது காரை ஓட்டிவரும் அமுதனிடம் ஒரு அசாத்திய மௌனம். அவன் முகம் முகப்பு கண்ணாடியில தெரிந்தது. அதை பின்னால் இருந்தபடியே கவனித்த காளியம்மாளுக்குள் சற்று அச்சம் ஏற்படத் தொடங்கியது.

'தான் வாங்கிய வசியப் பொடியை இவன் பார்த்திருப்பானோ? அதனால் தான் இவ்வளவு இறுக்கமாய் இருக்கிறானோ?'

அவளின் குற்றமுள்ள மனதுக்குள் குறுகுறுப்பு ஆரம்பமாகி விட்டது. அதை நீக்கிக் கொள்ள விரும்பியவளாய் அவனைச் சீண்டத் தொடங்கினாள்.

"ஏம்பா உன் பேர் என்னன்னு சொன்னே?" தெரியாதவள் போல கேட்டாள். அவனோ காதிலேயே விழாதவன் போல அமைதியாக இருந்தான்.

"டேய் உன்னத்தான்... உன் பேர் என்னன்னு சொன்னே?" என்று திரும்பிக் கேட்டாள்.

"நான் சொல்லவே இல்லீங்களே..." அவன் அவள் எதிர்பாக்காத பதிலைச் சொன்னான். அவளுக்கும் அது அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

"சரி இப்ப சொல்லு... உன் பேர் என்ன?"

"அமுதன்!"

"அமுதனா... வித்யாசமா இருக்கே?" அவன் பதில் கூறாமல் லேசாக சிரித்தான்.

"ஆமா கோவில்ல நான் சாமி கும்பிட்டுகிட்டு இருந்தப்ப என்ன செஞ்சுகிட்டிருந்தே?"

"எதுவும் செய்யலியே?"

"எகணைக்கு மொகணையாகவே பதில சொல்லு. அப்ப நீ எங்கடா இருந்தே?"

"உங்க கூட தான்.... வீட்டை விட்டு புறப்பட்டதுல இருந்தே உங்களோட தானேங்க இருக்கேன்."

அவன் சாதுர்யமாக பேசுகிறானா என்று அவளால அனுமானிக்க முடியவில்லை.

"டேய்... நான் கேக்குறத தெளிவா புரிஞ்சிகிட்டு பதில் சொல. நான் சன்னதில சாமி கும்பிட்டுகிட்டு இருந்தப்ப நீயும் வந்து எங்ககூட சாமி கும்பிட்டியா?"

"நீங்களும் இப்படி தெளிவா கேட்டாதானே எனக்கும் புரியும். நான் அப்ப காரிலேயே தங்கிட்டேங்க."

"நெஜமாவா?"

"இதுல பொய் சொல்ல என்னங்க இருக்கு?"

"அப்ப நான் கோவில்ல என்ன செஞ்சேன், ஏது செஞ்சேனுல்லாம் உனக்கு தெரியாது.... அப்படி தானே?"

"கோயில்ல எல்லாரும் சாமிதான் கும்பிடுவாங்க. வேற என்ன செய்வாங்க.... நீங்க எதாவது செஞ்சீங்களா?"

திரும்பவும் தெரியாதவன் போலவே கேட்டான். காளியம்மாவுக்கோ தன் வாயாலேயே தான் மாட்டிக்கொள்வதை உணர்ந்தாள். அமுதனும் அவள் பூசாரியிடம் வாங்கிய பொட்டலங்களையும், அதைத் தொடர்ந்து பூசாரி சொன்னதையும் எண்ணியவனாக

'என்னையா ஆழம் பாக்கறே?' என்று தனக்கு தானே கேட்டுக் கொண்டான்.

அதற்குமேல் காளியம்மாள் எதுவும் பேசவில்லை. அமுதனும் தன் நடிப்பு அவளை கட்டிப்போட்டு விட்டதை புரிந்து கொண்டான்.

காரும் பங்களாவை அடைந்து நின்றது. காளியம்மாளும் செவ்வந்தியும் இறங்கிக் கொள்ள ராஜரத்னம் காத்துக் கொண்டிருந்தார்.

"நீ பாட்டும் காரை எடுத்துகிட்டு இவளையும் கூட்டிகிட்டு போயிட்டியாக்கும்.... எனக்கு எவ்வளவு வேலை இருக்கு தெரியுமா?" என்று கோபமாக பேசினார்.

"கோவிலுக்கு தாங்க போய்ட்டு வரேன். அதுவும் உங்களுக்காக...."

அவள் பதிலுக்கு சொன்ன விதத்தில் மிகவே பணிவு.

"எனக்கென்ன இப்ப கேடு....?" என்றார் கோபம் குறையாமல.

"ஐயயோ.... எதுக்கு இந்த அளவுக்கு கோபம்?"

"பின்ன.... நான் நல்லாதானே இருக்கேன்...?"

"இப்ப நல்லா இருக்கலாம். ஆனா வரப்போற தசாபுக்தி எதுவும் நல்லா இல்லையே...."

"நீ உடனே ஜாதகம் ஜோசியம்னு ஆரம்பிச்சிடுவியே... இந்த புத்தி நல்லா இருந்தா வேற எந்த புத்தியாலயும் எதையும் செய்ய முடியாது.

சரி சரி நான் வெளிய போய்ட்டு வாரேன். எலேய் காரை எடுடா.... என்று கோபம் குறையாமல் பேசியபடியே காரில் ஏறி அமர்ந்திட காரும் புறப்பட்டது.

அமுதனும் உள்ளே சற்று ரிலாக்ஸ் ஆனான்.

"அய்யா எங்கங்க போகணும்?" என்று கேட்டான்.

"நேரா உங்க வீட்டுக்கு போ..." அவர் பதில் அவனை திகைக்க வைத்தது.

"எங்க வீட்டுக்காய்யா?"

"ஆமாம்ப்பா.... உன் அப்பனுக்கு உடல் நலமில்லைன்னு தானே நீயே வந்துருக்கே."

"ஆமாங்கய்யா..."

"உன் அப்பனைப் பார்த்து நலம் விசாரிக்கணும். அதுக்கு தான் உன் வீட்டுக்கு போக சொன்னேன்."

அவர் பதில் அவனை நெகிழ்த்தியது. வீட்டில் ராஜரத்னத்துக்கு மிக அன்பான வரவேற்பு. அமுதனின் அப்பா ராமலிங்கமும், அம்மா லட்சுமியும் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

ராமலிங்கம் படுத்தபடி இருந்தார். அந்த கட்டிலிலேயே அவர் காலருகில் அமர்ந்து கொண்டு நலம் விசாரித்தார் ராஜரத்னம்!

"பாத்துக்கோ.... நான் இருக்கேன்.... உன் மகனும் உன்ன மாதிரியே கவனமா ஓட்றான்..." என்று அன்பாக பேசினார்.

"சந்தோஷங்க" என்ற ராமலிங்கத்தின் கைகளில் ரூபாய் நோட்டுக் கட்டை வைத்தவர் அமுதனைப் பார்த்து 'நான் இங்க பணம் கொடுத்த விஷயம் காளியம்மாவுக்கு தெரியக்கூடாது என்றார்.

அவர் சொன்ன அந்த விஷயம் அமுதனுக்கு இடித்தது. "உங்க பணத்தை தாரீங்க.... அதே சமயம் அம்மாவுக்கும் பயப்படறீங்களேய்யா..." என்றான்.

"என்ன பண்ணச் சொலறே.. அவ தம்பிக்கு என் காசை அள்ளி இறைக்கறா. நான் கேட்டா கதையா சொல்றா. இந்த விஷயம் தெரிஞ்சா நீ தரலாம். நான் தரக்கூடாதான்னு கேட்டு சண்டை போடுவா!

நான் அவளை இரண்டாம் தாரமா கட்டிகிட்டே இருக்க கூடாது.... தப்பு பண்ணிட்டேன்' என்ற ராஜரத்னத்தை முதல் தடவையாக ஆச்சரியத்தோடு பார்த்த அமுதன் இனியும் இவரிடம் அந்த வசியப் பொடி விஷயத்தை மறைக்கக் கூடாது என்கிற முடிவுக்கு வந்தான்!

இன்று

அம்மாவும் தன்னோடு கல்யாண நிச்சயத்துக்கு வருகிறேன் என்று கூறவும் நல்லவேளை அண்ணன் மோகன்குமார் யதார்த்தமாய் வந்தான்.

ஸ்ரீதேவி மாட்டிக்கொண்டு முழிப்பதைக் கண்டவன் "யம்மா.... உனக்கு ஆனாலும் இந்த பயம் ஆகாதும்மா. இவ எங்க போனாலும் நீ கூடவே போவியா.... என்னம்மா இது?" என்றான்.

அவளோ அவனை முறைத்து பார்த்தாள் "என் பயம் எனக்கு தான்டா தெரியும்" என்றாள்.

"அது தான் பயமாச்சே... அதை எதுக்கு சுமக்கறே. தைரியத்தை வர வை. அந்த பயம் போயிடும். இப்படி நான் எவ்வளவு தான் சொன்னாலும் நீ கேட்க மாட்டே. ஒன்னு பண்றேன். உனக்கு பதிலா இவளோட நான் போய்ட்டு வரேன்... போதுமா?" என்றான்.

அதன் பின் அவளும் எதுவும் பேசவில்லை. ஸ்ரீதேவிக்கும் அப்பாடா என்றானது. நன்றியோடு அண்ணனைப் பார்த்தாள். அவன் அவள் அருகே வந்தவனாக "நான் அம்மாவுக்காக அப்படி சொன்னேன். நீ போய்ட்டு வா. நீ வரும் போது ஒரு போன் பண்ணு. இரண்டு பேரும் அப்புறம் ஒன்னா சேர்ந்து வீட்டுக்கு வந்துடுவோம்" என்று அவளை மேலும் குளிர்வித்தான்.

ஸ்ரீதேவிக்கு அந்த நொடியே வானத்தில் மிதப்பது போல இருந்தது!

சென்னை விமான நிலையம்! காரில் வந்து இறங்கிய சுமதியின் உறவினர்களோடு ஸ்ரீதேவியும் இறங்கினாள். முதல் முறையாக விமான நிலையம் பக்கம் வந்திருக்கிறாள். ஒரு பிரமிப்பு உணர்வு குபீர் என்று ஏற்பட்டது. அதே சமயம் செக்யூரிட்டி செக் அப் எனும் பெயரில் குடைகுடை என்று எல்லாவற்றையும் குடைந்தது எரிச்சலை தந்தது.

இறுதியாக ஏர்போர்ட் விமான தளத்துக்குள் பஸ்ஸில் போய் விமானத்தை அருகிலேயே பார்க்கவும் ஒரு புது உலகத்துக்கு வந்த மாதிரியும் இருந்தது. சுமதியும் அவளைப் போலவே ரசித்தாள். விமானத்தின் உள்ளேயும் இருவரும் அருகருகே அமர்ந்து கொண்டனர்.

அவளுக்கு முன்வரிசையில் ஒரு தாய் தன் குழந்தையோடு அமர்ந்திருக்க அந்த குழந்தை அழத்தொடங்கியது.

ஸ்ரீதேவிக்குள்ளேயும் அந்த குழந்தையின் அழுகை என்னவோ செய்யத் தொடங்கியது. காதைப் பொத்திக்கொண்டாள்.

"என்னடி... எதுக்கு காதைப் பொத்திக்கறே?"

"இந்த அழுகை சப்தத்தை என்னால் கேட்க முடியல சுமதி..."

"குழந்தைன்னா அழறது சகஜம் தானேடி..."

"அது எனக்கு தெரியாம இல்லடி... என்னென்னு தெரியலே! சில நாட்களாவே குழந்தையோட அழும் சப்தம் என்னை ரொம்பவே பாதிக்குது. எனக்குள்ள யாரோ புகுந்து எனக்குள்ள அவங்க ஓடற மாதிரியெல்லாமும் இருக்கு..."

அவள் காதை விட்டு கையை எடுக்காமல் பேசும் போது விமானமும் டேக் ஆஃப் ஆக ஆரம்பித்தது.

வேகமாக ஓடினால் தான் எழும்ப முடியும். அந்த ஓட்டம் ஏனோ ஸ்ரீதேவியை கத்தவைத்து மயங்கவும் வைத்துவிட்டது. வானில் விமானம் ஏறவும் விமானப் பணிப்பெண் ஓடி வந்தாள்.

"என்னாச்சு... எனி பிராப்ளம்?" என்றும் கேட்டாள். மயங்கி விட்டதை பார்த்து தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளித்தாள். கண் விழித்த ஸ்ரீதேவியும் மலங்க மலங்க பார்த்தாள். சுமதிக்குள் பயம் மூளத் தொடங்கிவிட்டது

ஸ்ரீ என்னாச்சுடி உனக்கு... ஏன் இப்படி எல்லாம் நடந்துக்கறே?" என்று அழாத குறையாக கேட்டாள்.

"சாரிடி... விமானம் எழும்பவும் நானும் என் உடம்பை விட்டு எழும்பி ஆகாயத்துல பறந்த மாதிரி இருந்தது. எனக்கு இது முதல் அனுபவம் மாதிரியே இல்லை. இதுக்கு முந்தியும் நடந்திருக்கு" என்றாள்.

சுமதி அவள் சொல்வதை வெறித்தபடியே கேட்டாள்.

"ஐ ஆம் சாரி.... உன்னை நான் ரொம்ப டிஸ்டர்ப் பண்ணிட்டேன்னு நினைக்கறேன். வெரி சாரி..." என்றாள். மதுரையும் வந்தது!

விமானம் இறங்கிய போதும் ஸ்ரீதேவிக்கு உடம்பில் ஒரு இனம் புரியாத குறுகுறுப்பு

விமானததை விட்டு வெளியில் வந்து காரில் பயணித்த போது வரிசையாக பெருங்குடி எனும் இடமும் அதைத் தொடாந்து அவனியாபுரம் கண்மாயும், அதைத் தொடாந்து அவனியாபுரம் என்கிற ஊரும் வந்தது.

அந்த காட்சிகளைப் பார்த்தவளுக்குள் இதற்கு முன் பல நூறு தடவை அந்த காட்சிகளைப் பார்த்தது போன்ற ஒரு உணாவு.

"என்னடி அப்படி பாக்கறே?"

"எனக்கே தெரியல சுமதி.... நான் இந்த ஊருக்கு பல தடவை வந்துருக்கற மாதிரியே இருக்கு. நீ வேணா பாரேன் இப்ப இடது பக்கத்துல ஒரு சினிமா தியேட்டர் வரும். அதுக்கு பக்கத்துல ஒரு கோவிலும் இருக்கும்" என்றாள்.

வெற்றி என்கிற சினிமா தியேட்டரும், ஒரு கோவிலும் அதே போல் வந்தது. சுமதி அவளை ஒரு மாதிரி பாா்க்க ஆரமபித்தாள். காரும் ட்ராஃபிக்கில் தேங்கித் தேங்கிதான் சென்றது. ஒரு வழியாக திருமங்கலம் செல்லும் சாலையைப் பிடித்து திருமங்கலத்துக்குள் நுழைந்தபோது நடுரோட்டில் ஒரு பைத்தியம் நின்று கொண்டிருந்தது.

கையில் ஒரு கம்பு வேறு! காா் நிற்கவும் அந்த பைததியம் காா கதவருகே வந்து ஸ்ரீதேவியை வெறிததுப் பாா்ததது.

ஸ்ரீதேவிக்கோ குபீா் என்று வியா்ததது.

# 7

அன்று

ராஜரத்னத்திடம் வனபத்ரகாளி கோவிலில் பூசாரி கொடுத்த வசியப்பொடி விஷயத்தை சொல்லி விடுவது என்கிற முடிவுக்கு வந்த அமுதன் "ஐயா ஒரு முக்கியமான விஷயங்க..." என்று ஆரம்பித்தான்.

"என்னப்பா?"

"எப்படிச் சொல்றதுன்னு தெரியல. சொல்லாம இருக்கவும் மனசு கேக்க மாட்டேங்குது..."

"என்ன காளியம்மா சம்மந்தப்பட்ட விஷயமா?"

"ஆமாங்க. கரக்டா சொல்லிட்டீங்களே..."

"அவ விஷயம்தான் பேச சங்கடப்படுத்தும்... பேசாம இருக்கவும் முடியாது. அவ அப்படி ஒரு ஜென்மம். போகட்டும் நீ எதுவா இருந்தாலும் தைரியமா சொல்லு."

"நான் சொல்றது பெரிசே இல்லீங்க. நீங்க அதிர்ச்சி அடையக் கூடாது..."

"நீ பீடிகை போடறத பார்த்தா பலமா ஏதோ இருக்கும் போல இருக்குதே..."

"அப்படி தாங்க..." என்ற அமுதன் மொத்த விஷயத்தையும் சொல்லி முடித்தான். அதைக்கேட்டவர் அப்படியே அயர்ந்து விட்டார். உதடுகளிரண்டும் 'பாவி... சண்டாளி... இவ சித்தியா, இல்ல சத்தியா? என்று முணங்கியது.

"பாவங்க உங்க பொண்ணு! அவங்கள உங்க மனைவி ஒரு பொண்ணா பாக்கலீங்க. சொத்தாதான் பாக்குறாங்க. உங்கள் கூட அவங்க பணத்துக்காக தான் கட்டிகிட்டிருக்காங்கன்னு நான் நினைக்கிறேன்..."

"உண்மைதான் அமுதன்! நீ மனசு விட்டு சொல்லிட்டே. நான் சொல்லல அவ்வளவு தான் வித்தியாசம்... சரி உடனே புறப்படு..."

"எங்கங்க?"

"முதல்ல நான் தேவி கூட பேசணும். அவ எதாவது கொடுத்தா சாப்பிடாதேன்னு தடுத்து நிறுத்தணும்."

"அதுவும் சரிதாங்க... புறப்படுங்க..." என்று அமுதனும் புறப்பட்டான். அவன் தாயும் தந்தையும் வம்பில் மாட்டிக் கொண்டு விடாதே பெரிய இடத்து விஷயம்... என்பது போல பார்த்தனர். அமுதன் புரிந்து கொண்டவனாக "ஏன் பயப்படறீங்க... ஐயாவோட உப்பை தின்னுகிட்டே யாரோ எப்படியோ போகட்டும்னு நினைக்கறதுக்கு பேரா பக்தி? விசுவாசம்?' என்று அவர்களுக்கும் ஆறுதல் கூறினான். அவரும் அதைக் கேட்டவராக "அச்சப்படாதீங்க நான் இருக்கறவரை அமுதனுக்கு எந்த வருத்தமும் ஏற்பட விடமாட்டேன்" என்றார். அவர்களுக்கும் அது ஆறுதலாக இருந்தது.

வெளியே வந்த அமுதன் காரை ஒரு பப்ளிக் பூத் நோக்கி செலுத்தினான். ராஜரத்னம் இறங்கிச்சென்று வீட்டுக்கு லேண்ட் லைனில் போன் செய்தார்.

அக்கவுண்டண்ட் மாணிக்கம் தான் போனை எடுத்தார்.

"மாணிக்கம் நான் தான்யா பேசறேன். தேவிக்கு லைன் கொடு."

"இதோ இப்பவேய்யா..."

அடுத்த சில நொடிகளில் தேவியின் அறைக்குள் இருந்த போன் ஒலித்திட அதை அவள் எடுத்தாள்.

"தேவி அப்பா பேசறேம்மா..."

"சொல்லுங்கப்பா..."

"நல்லா இருக்கே தானே?"

"என்னப்பா மூணாம் மனுஷன் மாதிரி பேசறீங்க."

"எல்லாத்துக்கும் காரணமிருக்கும்மா... ஆமா நம்ப வீட்ல உன் சித்தி தன் கையால் உனக்கு சாப்பிட எதுவும் கொடுத்தாளா?"

"இல்லியேப்பா... ஆனா இப்ப சாப்பிட வா, நானே என் கையால பரிமாறப் போறேன்னாங்க..."

"நல்லவேளை... எனக்கு வயித்துவலி சாப்பாடு வேண்டாம்னு சொல்லிடும்மா. அவ கையால எதையும் சாப்டாதே. பச்சத் தண்ணி கூட குடிக்காதே. நான் வீட்டுக்கு வந்துகிட்டிருக்கேன். நான வந்து பேசிக்கறேன்..."

"எதனாலப்பா இப்படி எல்லாம் சொல்லச் சொல்றீங்க?"

"எல்லாத்தையும் நேரல சொல்றேம்மா, நான் சொன்னத மட்டும் மறந்துடாதே..."

போனை கட் செய்தவர் திரும்ப காருக்குள் ஏறியவராக

"வீட்டுக்கு போ" என்றார் அமுதன் அவர் சூடேறி விட்டதை புரிந்து கொண்டான்.

"ஐயா... விஷயத்தை நீங்க பக்குவமா அணுகணுங்க. கோபப்பட்டா எல்லாம் கெட்டுப் போயிடுங்க கையும் களவுமா பிடிச்சாதாங்க அவங்கள நீங்க தண்டிக்க முடியும். இல்லாட்டி அவங்க தாரிச்சிகிட்டு அந்த வசியப் பொடிய தூக்கி போட்டுட்டு நான் பொய் சொன்னதா சொல்லிடுவாங்க..."

"தெரியும் அமுதன்... அவளை கையும் களவுமா பிடிச்சா கூட நாடகமாடுவா. இதுக்கு ஒரே தீர்வு அந்த வனபத்ரகாளி கோவில் பூசாரிகிட்டயே போறது தான். இவ கொடுத்ததை விட கூட கொடுத்தா அவன் உண்மைய ஒத்துகிட்டு போறான்! என்ன சொல்றே நீ?"

"இது ஒரு விதத்துல சரியா இருக்குங்க... கூடவே எனக்கு ஒரு கேள்விங்க..."

"கேளு..."

"இந்த மாதிரி வசிய மருந்தால் ஒருத்தர் மனதை மாத்திட முடியுமுங்களா?"

"மாத்த முடியாம தான் அந்த பூசாரி பொழப்பு நடக்குதா?"

"அப்படின்னா எவ்வளவோ அரசியல்வாதிங்க சினிமாகாரங்க இந்த பூசாரிய விடமாட்டாங்களே...?"

"இப்ப மட்டும் அவங்க யாரும் பூசாரிகிட்ட வரலேன்னு உனக்கு தெரியுமா?"

"அப்படின்னா இது விஞ்ஞான பூர்வமானதா ஆகி வெளிய தெரிஞ்சிடுங்களே?"

"இந்த மாதிரி விஷயங்கள் காதும் காதும் வெச்ச மாதிரி தான் செய்வாங்க. இதுக்கு நேரம் காலம்லாம் இருக்கு. சில நட்சத்திரத்துல பிறந்தவங்களை,

சில தசை நடக்கறவங்களை இதால எதுவும் பண்ண முடியாது. அதனால தான் இது வெளிய பெருசா தெரியாத விஷயமாகவும் நம்ப முடியாத ஒண்ணாவுமே இருக்கு...''

பேச்சோடு பேச்சாக கார் வனபத்ரகாளி கோவில நோக்கி திரும்பியது.

இன்று

வெறித்துப் பார்த்த அந்த பைத்தியத்தை கூட இதற்கு முன் பல முறை பார்த்தது போல ஒரு உணர்வு ஸ்ரீதேவியிடம்... அவள் வெறிக்க அந்த பைத்தியமும் வெறித்திட காரும் அந்த டிராஃபிக்கை கடந்தது. அருகில் அமர்ந்திருந்த அவள் தோழி சுமதியும்.

"என்ன ஸ்ரீதேவி... அந்த பைத்தியத்தை பார்க்கவும் ஒரு மாதிரி ஆயிட்டே?" என்று கேட்டாள்.

"அவரையும் நான் இதுக்கு முந்தி பார்த்த மாதிரி ஒரு ஃபீலிங் சுமதி..."

"நீ இப்படி பேசறதையும் நடந்துக்கறதையும் பார்த்தா எனக்கு பயமா இருக்கு. நீ ஃப்ளைட் ஏறினதுல இருந்தே சரியில்லடி... உன் அம்மா உன் விஷயத்துல பயந்ததுல சரியான ஒரு காரணம் இருக்கற மாதிரி தான் எனக்கு படுது..." என்ற சுமதியை ஸ்ரீதேவி சற்று அதிர்ச்சியோடு பார்த்தாள்.

"என்ன பாக்கறே... என் மனசுல பட்டதை நான் சொன்னேன்."

"வாஸ்தவம் தான் சுமதி. எனக்கே இப்பதான் எனக்குள்ளயே ஒரு சிக்கல் இருக்கற மாதிரி தோணுது.''

"தயவு செய்து இப்படி எல்லாம் எதையாவது நினைச்சு உன்னைப் போட்டு குழப்பிக்காதே. நடக்கப்போறது ஒரு நல்ல காரியம். நாம இப்ப மாப்ள வீட்டுக்கு சொந்தமான கெஸ்ட் ஹவுசுக்கு தான் போறோம். ஒரு மணி நேரம் வரை ரெஸ்ட். அதுக்கு பிறகு சாப்பாடு... சாப்ட்ட பிறகு டிரெஸ் சேஞ்ஜ் பண்ணிகிட்டு நிச்சயதார்த்தம் நடக்கப்போற அவங்க மண்டப வீட்டுக்கு போறோம்."

"ஆமாம்... எப்பவும் பெண் வீட்லதானே நிச்சயதார்த்தம் நடக்கும்... இது என்ன அதிசயமான மாப்ள வீட்டுல?"

"அதுக்கு பேர் தான் அச்சுத வீரப்பர் குடும்பம். அவங்க பாளையக்கார பரம்பரை! அவங்களோட கல்யாணம்கறது அவங்க மண்டப வீட்லதான் நடக்கும். இதுதான் அவங்க நடைமுறை. எப்பவும் அவங்க ராஜகுடும்பங்களோட தான் சம்பந்தம் வைப்பாங்க. முதல தடவையா அவங்க வெளில பாத்திருக்காங்க அவங்க குடும்பத்து மருமகளா போகப்போறேன்.

"ஆமா பாளையக்கார பரம்பரைன்னு ஏதோ சொன்னியே அப்படின்னா என்னடி?''

"நீ ஹிஸ்டரி படிக்கதில்லையா? பாளையக்கார பரம்பரைங்கறது ஒரு விதத்துல குறுநில மன்னர்கள் பரம்பரை. அதாவது 370 வருஷத்துக்கு முந்தி ராணி மங்கம்மா இந்த மதுரையை ஆட்சி செய்தப்போ அவங்க இந்த தென்பகுதி அவ்வளவுக்கும் ராணியா இருந்தாங்க. அதாவது மதுரை, ராஜபாளையம் தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, எட்டயபுரம், கமுதி, தேனி, வருசநாடு, திண்டுக்கல, திருச்சி, ராமநாதபுரம்னு எல்லா ஊருக்கும் அவங்கதான் ராணி. மதுரை அப்ப தலைநகரா இருந்தது.

மதுரைல இருந்து அவங்க ஆட்சி செய்தாங்க இந்த ஊர்களுக்கெல்லாம் டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் மாதிரி குறுநில மன்னர்களை நியமிச்சாங்க. அவங்க

அந்த ஊருல வரி வசூல் பண்ணி ராஜாவா இருந்துகிட்டு ராணி மங்கம்மாளுக்கு வருஷம் ஒரு தடவை கப்பம் கட்டிடுவாங்க.... அப்படி குறுநில மன்னர்களா இருந்தவங்க தான் காலப்போக்குல பாளையக்காரங்கன்னு மாறினாங்க. அப்படி ஒரு பாளையக்காரரா இருந்தவர்தான் அச்சுத விரப்பர். அவர் பரம்பரைல வந்தவர் தான் நான் கட்டிக்கப்போற மாப்பிள்ளையான மதன்குமாரங்கறவர்!"

"சரி இவங்க ஏன் ராஜ குடும்பமா இருந்துகிட்டு ஒரு சாதாரண குடும்பமான உங்க குடும்பத்தோட சம்பந்தம் வெச்சுக்கறாங்க?"

"இப்ப ராஜ குடும்பங்கள் எங்கடி இருக்கு? இதுதான் ஜனநாயக நாடாச்சே.... அதனால நல்லா படிச்ச பொண்ணு கிடைச்சா போதும்னு நினைச்சிருக்கலாம். அதுலயும் நான் ஒரு ஆர்கிடெக்ட் அவர் ஒரு சிவில் எஞ்ஜினியர். தொழில் ரீதியா ஒத்துப் போகறத ஒரு அட்வான்டேஜா நினைச்சிருக்கலாம்...."

சுமதி மனம் விட்டு பேசிக்கொண்டே வந்தாள். அதற்குள் அவர்கள் தங்கவேண்டிய கெஸ்ட் ஹவுசும் வந்துவிட்டது. பசுமையான குழலுக்கு நடுவில அமைந்த பங்களா! கார் உள் நுழைந்து போர்டிகோவில் நின்றது. சுமதியோடு ஸ்ரீதேவியும் இறங்கினாள்.

முகப்பில் பெரிய மான் தலை படம் செய்து மாட்டப்பட்டிருந்தது. அதைப் பார்க்கவுமே அவளுக்குள் ஒரு படபடப்பு. அதையே வெறித்துப் பார்த்தாள். கவனித்த சுமதியும் என்னடி.... திரும்ப பிராப்ளமா? பேசாம வாடி" என்றாள்.

"வரேண்டி.... அதுக்கு தானே அம்மாவை ஏமாத்திட்டு வந்துருக்கேன்.... எனக்கென்னவோ இந்த பங்களாவுக்கு கூட நான் பல தடவை வந்த மாதிரியே ஒரு ஃபீலிங் உள்ள கூட பாரேன் நடு ஹாலல நடுவுல ஒரு அல்லி பூக்கற சிறுகுளம் இருக்கும்.... அப்படியே மாடிப் படியோட தொடக்கத்துல இருபுறமும் யானை உருவம் இருக்கும்...."

என்று பேசிக்கொண்டே உள்ளே நடந்தாள். ஸ்ரீதேவி சொன்னது போலவே உள்ளே ஒரு சிறுகுளம் அதில் அல்லிகள் பூத்திருந்தன. எதிரில் மாடிக்கு செல்லும் படியில் தொடக்கத்தில் இரு மரயானை சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன.

"எப்படி கரெக்டா சொல்லிட்டேன பார்த்தியா?"

என்று கை தட்டினாள் ஸ்ரீதேவி. சுமதி முகமோ அப்படியே மாறியது. ஸ்ரீதேவி தன்னிடம் நடிக்கிறாள் என்றும் தோன்றியது. நிச்சயமாக இவள் இந்த பங்களாவுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் மதுரைக்கே இப்போது தான் வருவது போல் பொய் சொல்லியிருக்கிறாள் என்று தோன்றிற்று.

அப்போது எதிரில மாடிப்படிகளில் இருந்து மதர்த்த மீசையோடு ஒரு மனிதர் இறங்கி வந்தார். கூடவே பட்டுப்புடவையும் ஏராளமான நகைகளுமாய் ஒரு பெண்!

இருவரையும் பாக்கவும சுமதியின் அப்பா அம்மா வணக்கம் என்றனர்.

"வணக்கம்! வணக்கம்! பிரயாணமெல்லாம் சுகமா இருந்ததா?" அந்த மீசைக்காரர் கேட்டார்.

"எல்லாம் நல்லபடியா இருந்தது. ஒரு குறையும் இல்லை " என்றார் சுமதியின் அப்பா.

"தங்கி ஓய்வெடுங்க சரியா 2 மணிக்கு நிச்சயதார்த்தம் தொடங்கிடும். 3 மணிக்கு முடிஞ்சிடும் அப்பால காபி டிபன் சாப்ட்டு நீங்க ஃப்ளைட்டுக்கு

கிளம்பினா சரியா இருக்கும் எட்டு மணிக்கு நீங்க சென்னைல உங்க விட்டுக்கும் போயிடலாம்" என்றார்.

"யாருடி இவர்?" என்று ரகசிய குரலில் கேட்டாள் ஸ்ரீதேவி! இவர் பேர் ஜீவானந்தம், அந்தம்மா பேர் காளியம்மாள். இவர் மகன் தான் மாப்பிள மதன்குமார்" என்றாள் சுமதி. ஸ்ரீதேவிக்குள் பிரளயம் உருவாக தொடங்கியது.

# 8

அன்று

வனபத்ர காளிகோவில்! பூசாரி அச்சுத விர குடும்பத்தைச் சேர்ந்த ராஜரத்னத்தை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவர் முகம் போன போக்கே அதைச் சொல்லியது. அவருக்கு பின்னாலே கையை கட்டிக்கொண்டு பணிவாக நின்று கொண்டிருந்தான் அமுதன்.

"அப்பா.... வாங்கய்யா. நீங்க இங்க வருவீங்கன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலய்யா..." என்று பூசாரியிடம் ஆரம்பம்.

"எதிர்பாராததெல்லாம் நடக்கறது தானே பூசாரி வாழ்க்கை...?"

"அ... அதுவென்னவோ உண்மை தாங்க..."

"காளியம்மாவுக்கு பிடிச்ச இஷ்ட தெய்வம் எனக்குப் பிடிச்சதா இருக்க கூடாதா என்ன?"

"ஐயோ... தாராளமாங்க..., வாங்க கற்பூரம் காட்றேன்! கன்னத்துல போட்டுக்குங்க...."

"இரு பூசாரி அதுக்கு முந்தி உன கன்னத்துல நான் நாலு போட வேண்டியிருக்கே?"

ராஜரத்னம் அப்படிச் சொல்லவுமே பூசாரிக்கு புரிந்து விட்டது. 'அப்பா' என்றார் சற்று நடுக்கமாய்...

"நான் யாரு... எப்படிப்பட்ட குடும்பம்னு உனக்குத் தெரியுமா?"

கேட்கும் போதே குரலில் கடுமை தொனித்தது! அமுதனும் அந்த சமயத்தில் பூசாரியை ஊடுருவிப் பார்த்தான்.

ராஜரத்னம் எப்போதும் வேட்டி கட்டி அவிழாமல் இருக்க இடுப்பில் பெல்ட் கட்டுவார். தோலால் ஆன பட்டையான அந்த பெல்ட் பார்க்க கம்பீரமாய் இருக்கும். கையில் எடுத்தால் அது ஒரு ஆயுதமாகி விடும். அப்படி அவர் கையில் எடுத்த நொடி பூசாரி அப்படியே அந்த கையைப் பிடித்தார்.

"என்ன மன்னிச்சிடுங்கப்பா. இது சன்னதி! இங்க சாமி கால்ல தவிர யார் கால்லயும் விழக்கூடாது இல்லேன்னா உங்க கால்ல நான் விழுந்துடுவேன். அம்மா என்கிட்ட வசிய மருந்து கேட்டதும் நான் கொடுத்ததும் உண்மை தான். அந்த மருந்தை இப்ப நீங்க கேட்டாலும் நான் தருவேன். அது என் பொழப்பு அம்மா எதுக்கு கேட்டாங்கன்னு எனக்கு தெரியாது. இதுல என் தப்பு ஏதாவது இருந்தா நான் மன்னிப்பு கேட்டுக்கறேன்."

"பூசாரி வழிக்கு வந்து விட்டார்!"

"நீ புத்திசாலி பூசாரி... எப்ப எப்படி நடந்துக்கணுமோ அப்படி நடந்துக்க உனக்கு நல்லாவே தெரிஞ்சிருக்கு உண்மைய ஒத்துகிட்டதால இப்ப நான் உன்னை விட்டுட்றேன். இதுல என் தப்பும் இருக்கு. பெரிய ராஜ பரம்பரைல வந்த நான், உடம்பு சுகத்தை இழக்க முடியாம, எங்க அரண்மனைல வேலைபாக்க வந்த காளியம்மாளை கட்டிகிட்டது தான் அந்த தப்பு.

அதுக்கு பரிகாரமா, அவளை இப்பவே போய் பாத்து ஒதுக்கி வைக்கறேன். அவளை எப்படி ஒதுக்கறது வலுவான காரணமில்லையேன்னு தவிச்சுகிட்டு இருந்தேன். இப்ப கிடைச்சிடுச்சு! நான் கூப்பிடும் போது வந்து வசிய மருந்து கொடுத்த விஷயத்தை நீ சொல்லணும். இல்ல உன்னை வந்துடுவேன்...."

என்றவராக புறப்பட்டார். அவர் புறப்பட்ட வேகத்திலும் ஒரு அதகளம்.

பூசாரியை அது என்னவோ செய்தது! இவர் எப்படியும் வீட்டுக்கு போய் பிரச்சினையை உருவாக்க அரை மணி நேரமாவது ஆகும். அதற்குள் காளியம்மாளுக்கு விஷயத்தைச் சொன்னால் அவள் சுதாரித்துக் கொண்டாலும் சுதாரித்துக் கொள்வாள் என்று தோன்றியது. எனவே பப்ளிக் டெலிபோன் பூத்தை நோக்கி ஓடினார்.

அதற்கே பத்து நிமிடம் வரை ஆகிவிட்டது. நல்லவேளையாக காளியம்மாளே போனைக் கையில் எடுத்தாள்.

"அம்மா தப்பு நடந்து போச்சும்மா..." என்று ஆரம்பித்தார் ராஜரத்னம் வந்து மிரட்டி விட்டு வீடு வந்து கொண்டிருப்பதையும் கூறி முடித்தவராக என்ன மன்னிச்சிடுங்கம்மா.... இதுல என் தப்பு எதுவும் இல்லை எல்லாம் அந்த டிரைவர் பையன் பண்ண வேலை மாதிரி தான் தெரியுது" என்றும் முடித்தார்.

காளியம்மாளிடம் ஸ்தம்பிப்பு கச்சிதமாக அவளருகில் வந்த ஜீவா, "என்னக்கா சிலை மாதிரி நின்னுட்டே?" என்று கேட்கவும் அவனை முறைத்தாள்.

"என்னை ஏங்கா முறைக்கறே?" என் கேள்விக்கு பதில் சொல்லு."

"என்னத்துடா சொல்றது... உனக்காக நான் பண்ணப் போன ஒரு காரியம் இப்ப என் தாலிக்கே பகையாகிடும் போல இருக்குடா."

என்று ஆரம்பித்தவள் அமுதன் போட்டு கொடுத்து விட்டதையும் ராஜரத்னம் ஆவேசமாக வந்து கொண்டிருப்பதையும் கூறி முடித்தாள். ஜீவாவும் மிடறு கட்டி விழுங்கத் தொடங்கினாள்.

சட்டென்று காளியம்மாளிடம் ஒரு முடிவு. ஜீவாவின் காதில் ஏதோ கிசுகிசுத்தவள் அப்போதே போனை அடிக்க ஆரம்பித்தாள். அடிக்கும் போதே பலத்த குரலில் எல்லோருக்கும் கேட்கும்படியாக பேசவும் செய்தாள்.

"நீயெல்லாம் ஏண்டா என் தம்பியா வந்து பொறந்தே...? உன்னால என் நிம்மதியே போச்சுடா... இது எப்படிப்பட்ட குடும்பம் தெரியுமா? வேலை பார்க்க வந்த எனக்கு இங்க பொண்டாட்டிங்கற உறவை கொடுத்து தனக்கு பக்கத்துல வெச்சுக்கிட்டவர்டா என் புருஷன். அவர் பேரைக் கெடுக்கற மாதிரியே நடக்கிறியேடா...

உன்னை கட்டி வெச்சு தோலை உரிச்சாலும் தப்பு இல்லை....

என்று அவள் கத்திகத்தி பேசியது வீட்டினுள் அக்கவுண்டண்ட் மாணிக்கம் முதல் சகலரும் கேட்டனர். எல்லோர் முகத்திலும் வியப்பு. அப்போது ஆவேசமாக ராஜரத்னமும் அமுதனோடு உள்ளே நுழைந்தார்.

அவரும் காளியம்மாளின் ஆவேசத்தைப் பார்த்து சற்று ஆடித்தான் போனார். அவர் எதிரில் காளியம்மாள் ஜீவாவை சவுக்காலேயே அடிக்கத் தொடங்கினாள்.

அமுதனுக்கே கூட ஆச்சரியமாகத் தான் இருந்தது. "நிறுத்துடி.... இங்க என்னடி நடக்குது. எதுக்கு இப்ப போட்டு அடிச்சுகிட்டு இருக்கே?" ராஜரத்னம் கேட்டார்.

"நான் என்னன்னு சொல்வேங்க.... வேகமா காரை ஓட்டி ஒரு கிழவியை கொன்னுட்டாங்க இந்த பாவி. போலீஸ்காரங்க விஷயம் தெரிஞ்சு வீட்டுக்கே வந்துட்டாங்க நல்லவேளை.... பணத்தை கொடுத்து சமாளிச்சேன். இவனை விட்டா இந்த ஊரையே கொன்னாலும் கொன்னுடுவாங்க. இவனை திருத்தவும் இவனுக்கு புத்தி வந்து என் பேச்சு கேட்கறதுக்காகவும் காளி கோயில் பூசாரியை பாத்து வசிய மருந்து வாங்கிட்டு வந்து அதைக் கூட கொடுத்து பாத்துட்டேங்க... இவன் எதுக்கும் கட்டுப்படாம இவன் போக்குலதான் போய்கிட்டிருக்கான்..." என்று ஒரு போடு போட்டாள்.

எதை மையமாக வைத்து காளியம்மாளைப் பிடிக்க வேண்டும் என்று ராஜரத்னம் வந்தாரோ அதுவே ஒன்றுமில்லை என்றாகிப் போனது.

அமுதன் அதிர்வுடன் ராஜரத்னத்தை பாத்திட அவரும் அடுத்து என்ன செய்வது என்பது தெரியாமல் அவனைப் பாத்தார்.

அவ்வளவையும் தன் அறையை விட்டு வந்து தேவியும் பாத்துக் கொண்டு தானிருந்தாள்!

இன்று

ஸ்ரீதேவியின் மனதுக்குள் ஒரு பிரளயம் உருவாகுவதை சுமதியும் உணர்ந்தாள்.

"என்னடி.... திரும்பவும் உனக்குள்ள எதாவது சிக்கலா?"

"ஆமாம்... இல்ல...." தடுமாறினாள் ஸ்ரீதேவி.

"என்ன ஆமாம் இல்லை.... எல்லாரும் பாக்கறாங்க பார் உனக்கு ஒரு மாதிரி இருந்தா ரூமுக்குள்ள போய் கொஞ்சம் படுத்து ரெஸ்ட் எடு.... போ....''

சுமதி அவளை விரட்டவும் செய்தாள். ஸ்ரீதேவிக்கும் ஜீவானந்தத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கப் பிடிக்கவில்லை! பக்கத்து அறை நோக்கி நடக்கத் தொடங்கினாள். சுமதியின் அம்மா கல்யாணியும் அவ்வப்போது நடப்பதை கவனித்துக் கொண்டே தானிருந்தாள். சுமதியை நெருங்க வந்து கேட்டாள்.

"ஆமா அவளுக்கு என்னடி பிரச்சினை... ஏன் வந்ததுல இருந்தே ஒரு மாதிரி இருக்கா?"

அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா... அவளுக்கு தலைவலி!"

"தலைவலி அவளுக்கு வந்திருக்குதோ இல்லையோ... அவளால நமக்கு வந்துடுச்சி. நானும் ஏர்போர்ட்டுல இருந்தே பாத்துகிட்டு தாண்டிவரேன். அவ போக்கே பிடிக்கல எனக்கு. நீ தான் அவ என் உயிர்த்தோழி கட்டாயம் என் கூட வரணும்னு கூட்டிகிட்டு வந்துட்டே...." என்று பக்கமாய் நின்று பிறருக்கு கேட்காதபடி கடுகடுத்தாள்.

சுமதிக்கும் ஒரு மாதிரி ஆகிவிட்டது.

"அம்மா கொஞ்சம் அமைதியா இரு.... அவளை நான் ரூம்ல போட்டு பூட்டிட்டேன் நிச்சயம் முடிஞ்சு நாம போகும் போது கூட்டிகிட்டு போகலாம்" என்று அம்மாவை சமாதானம் செய்தாள்.

ஜீவானந்தமும் காளியம்மாளும் மற்றவர்களிடம் பேசியபடி இருந்தனர். அந்த ஹாலில் ராஜரத்னத்தின் படம் பெரிதாய் மாட்டப்பட்டு முன்னால் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பக்கத்திலேயே ஒரு பெண் படமாய் தேவியின் படமும் இருக்க அதற்கு மாலை போடப்பட்டிருந்தது.

சுமதியின் தாய் கல்யாணி அந்த இரு படங்களையும் பார்த்து ஆச்சரியப்பட்டாள். குறிப்பாய் தேவியின் படம் அவளை வெகுவாக ஆச்சரியப்படுத்தியது. அப்போது காளியம்மாளும் அவள் அருகில் வந்தாள். அவள் தேவி படத்தையே பார்த்தபடி நிற்பதை வைத்து பேசத் தொடங்கினாள்.

"என்னங்க... இந்த படத்தையே பாத்துகிட்டு நிக்கறீங்க?"

"ஆமாங்க... இந்த பொண்ணை நான் பல தடவை பார்த்தா மாதிரியே இருக்கு..."

"இவ என் பொண்ணுதான். என் பொண்ணுன்னா என் வயித்துல பிறக்காத பொண்ணு. அதாவது என் வீட்டுக்காரரோட முதல தாரத்துக்கு பொறந்தவ...."

"மாலையெல்லாம் போட்டுக்கறத பார்த்தா...."

"ஆமாம்... சின்ன வயசுலயே செத்துட்டா!"

"கழுத்துல தாலியெல்லாம் இருக்கே...?"

"குழந்தையே இருக்கு... அந்த குழந்தைக்கு இப்ப இருபது வயசு. அதோ பாருங்க..."

காளியம்மாள் கை காட்டிய திக்கில் ஒரு இளம் பெண் இரண்டு பெண்களுக்கு நடுவில் கைதி போல நின்று கொண்டிருந்தாள்.

மருண்ட பார்வை... பிஞ்சு முகம்! கழுத்து நிறைய நகைகள். முகத்தில் ஒரு பயம் தெரிந்தது. கல்யாணிக்கு அந்த பெண்ணைப் பார்க்கவும் பரிதாப உணர்ச்சிதான் ஏற்பட்டது.

"ஏன் ஒரு மாதிரி இருக்கா?"

"ரொம்ப பயந்த சுபாவம்.... வேற ஒண்ணும் இல்ல"

"கூட யார இருக்காங்க?"

"அவங்க அவளோட கேர் பிரண்டஸ்! அவ பேர் மாதங்கி. மாதங்கிக்கு பிஞ்சு மனசு ஒரு கரப்பான் பல்லிய பார்த்தா கூட பயந்துடுவா. அதனால அவளை ஜாக்ரதையா பாத்துக்கறதுக்காக தான் அவங்க..."

காளியம்மாள் விளக்கம் கல்யாணிக்கு ஏதோ சினிமா பார்க்கும் உணர்வைத் தந்தது. அப்போது ஜீவானந்தம் தாட்டியமாக வரவும் அந்த மாதங்கி என்கிற பெண் வேகமாக அங்கிருந்து சென்று விட்டாள்.

ஜீவானந்தம் காளியம்மாளிடம் அதட்டலாக

"என்னக்கா நின்னு பேசிகிட்டிருக்கே.... நேரமாயிகிட்டே இருக்குல்ல....?" என்று அதட்டல் குரலில் கேட்டான்.

"எல்லாம் தெரியுமடா நீ போய் முதலல: தயாராகு! சம்மந்தியம்மா நீங்களும் போங்க.... நடுவுல ஒரு மணி நேரம் தான் இருக்கு....' என்றாள்.

கல்யாணியும் விலகினாள். ஜீவா காளியம்மாளிடம்

"என்னக்கா எதாவது வில்லங்கமா?" என்று கேட்டான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லடா.... தேவி படத்த பார்த்துட்டு பல தடவை பார்த்த மாதிரி இருக்குன்னாங்க. அதான் விபரம் சொல்லிகிட்டிருந்தேன்."

"ஒருவேளை இவங்க சின்ன வயசுல தேவிய பாத்திருப்பாங்களோ?"

"அதெல்லாம் சான்சே இல்லை! மதுரைக்கே இப்ப தாண்டா வந்துருக்காங்க...."

"பாத்துக்கா.... பழைய விஷயம் எதுவும் யாருக்கும் தெரிஞ்சிடக்கூடாது...."

"நீ முதல்ல அதை நினைக்கறத விடு. இப்ப நம வரைல இந்த கலயாணம் நல்லபடியா நடந்து முடியணும். உன் பையனை கொஞ்சம் ஜாக்ரதையா இருக்கசொல. அவன் பாட்டும் பவுடரை போட்டுகிட்டு படுத்துடப் போறான்...." என்றாள் காளியம்மாள்.

"இன்னிக்கு அந்த கழுதையை என் மகன் தொடவே மாட்டான்கா.... சத்யம் செய்துருக்கான்...." என்ற ஜீவாவை வெறித்துப் பார்த்த காளியம்மாள்.

"என் வாழ்க்கைங்கறது உனக்காக போராடறதாலே ஆயிடிச்சுடா.... சின்ன வயசுல நீ என்னை பாடா படுத்தினே! இப்ப உன் மகன்...."

அவள் அலுத்துக்கொள்ள ஜீவாவின் மனைவி ரேணுகா தயங்கியபடியே அங்கே வந்தாள்.

"என்னங்க" என்று ஜீவாவை தன் அருகில் அழைத்தாள்.

"ஏண்டி.... நீ கிட்ட வரமாட்டியோ?" ஜீவா கோபமாக கேட்டுக்கொண்டே அவளை நெருங்கினாள்.

"மதன் எங்கங்க?"

"இதை கேட்கத்தான் வந்தியா.... இப்ப கூட இங்க தாஙேடி இருந்தான்...."

"காணோம்க.... அதான் வந்தேன். எனக்கு பயமா இருக்குங்க..."

"என்னடி பயம்! நல்ல காரியம் நடக்கப்போற நேரத்துல எதாவது பண்ணி சொதப்பிடாதே...'

"நான் எங்க சொதப்பறேன. உங்க பையன் சொதப்பாம இருந்தா போதாது....?"

"திரும்பத் திரும்ப அவனைப் பத்தியே பேசாதே! யாராவது பார்த்தா தப்பா எடுத்துக்க போறாங்க...'

"அவன் எனக்கும் மகன்க.... தப்பா எடுத்துக்க விடுவேனா? அவனை போய் தேடுங்க. அவன் இன்னிக்கும் பவுடர் வாங்கியிருக்கான். அவன் செல்போன் இப்ப எங்கிட்டதான் இருக்கு. அவன் போதைல இருந்தா தான் செல்போன் அவன்கிட்ட இருக்காது. மற்றபடி அவன் எப்பவும் செல்போனோட தான் இருப்பான்.

என்றபடி அவன் செல்போனைக் காட்டினாள் ரேணுகா. காளியம்மாளும் அருகில் வந்தவளாக

"என்ன இரண்டுபேரும் குசுகுசுன்னு பேசிக்கிறீங்க?" என்று கேட்டாள்.

"எல்லாம் என் தலையெழுத்து! நான் பெத்த குல கொழுந்த காணோம்கா... அவன் அவ்வளவு சொல்லியும் கேட்கல."

என்றாள். அப்போது ரேணுகா கண்களில் கண்ணீர் துளிர்த்து விட்டது!

# 9

அன்று

தேவிககே காளியம்மாளின் அந்த கோபம் ஆச்சரியமளித்தது. ஒருவேளை தான் தான் அவளை இது நாள் வரையில் தவறாக புரிந்து கொண்டு விட்டிருக்கிறோமோ என்றும் தோன்றியது.

காளியம்மாள் அவளை மட்டுமல்ல, ராஜரத்னத்தையும் கவனிக்காத மாதிரி கவனித்தாள்.

தன் நடிப்பு எடுபட்டு விட்டதா இல்லை கேள்விக் குறியாகவே இருக்கிறதா என்று கணக்கும் போடத் தொடங்கிவிட்டாள். ராஜரத்னம் ஏமாற்றமுடன் அமுதனைப் பார்த்தார்.

அவளோ நெருங்கி வந்தவளாய் சவுக்கை ராஜரத்னம் கையில் தந்து 'நீங்களும் அடியுங்க. அப்பதான் இவனுக்கு புத்தி வரும்" என்று அவருக்கு மேலும் அதிர்ச்சியளித்தாள்.

அவர் தயங்கினார். தடுமாறினார். இது தான் சமயம் என்று ஜீவாவும் அவர் முன்வந்து அவர் காலில் விழுந்து 'என்னை மன்னிச்சிடுங்க மாமா... நான் இனிமே எந்த தப்பும் பண்ண மாட்டேன்.... அக்காவை அடிக்க வேண்டாம்னு சொல்லுங்க..." என்று பதறுவது போல நடித்தான்.

அவரிடம் மிகவே தர்மசங்கடம்! அப்படியே திரும்பி அமுதனைப் பார்த்தார். அவனும் தர்மசங்கடத்தில் தான் இருந்தான்.

"சரி காளி... அந்த போலீஸ் கேஸை என்ன செஞ்சே?"

"தற்காலிகமா பணத்தை கொடுத்து அடக்கியிருக்கேனக. பேசாம பணத்தை திரும்பி வாங்கிகிட்டு இவனை உள்ற தூக்கி போட்ருவோமா?'' என்று அவர் சற்றும் எதிர்பாராத கோணத்தில் கேட்டாள். ஜீவா அவள் பேச்சால் பயந்து போகத்தொடங்கி அக்கா என்றும் பார்க்காமல் காளியம்மாளை கடுமையாக வெறித்தான்.

இறுதியாக அவன் நினைத்தபடியே எல்லாம் நடக்கத் தொடங்கியது.

"சரி சரி... போய் இனியாவது ஒழுங்கா வேலைய பார்' என்றவராக தன் அறை நோக்கி நடக்கத தொடங்கினார ராஜரத்னம்.

அமுதனும் திரும்பி நடநதான். காளியம்மாளுக்கு அப்பாடா என்று ஆனது. அவள் ஜீவாவை நெருங்கியவள "எனடா தம்பி ரொம்ப அடிச்சிட்டேனா?' என்று மெல்லிய குரலில கேட்டாள்.

"ஆமாங்கா.... இதை நடிப்புன்னா யாரும் நம்பமாட்டாங்க."

"நம்ப வெச்சுட்டேனேடா...."

"அங்க தான்கா நீ நிக்கறே...''

"இனியும நிக்கணும்னா இந்த அமுதன பயலை ஒழிச்சுக் கட்டணுமடா...."

"நீ இப்ப இதைத்தான் சொலவேன்னு நினைச்சேன்."

"நீ நினைக்கததாண்டா லாயக்கு. காரியமெல்லாம் என்கிட்ட மட்டும தாண்டா....''

''அப்படி எல்லாம் என்னை பத்தி தப்புக்கணக்கு போடாதக்கா. நான் என்ன செய்யணும்னு மட்டும் சொல்லு."

"நான் சொல்லி நீ செய்யறதுல என்னடா இருக்கு....?"

"சரிக்கா.... நானே ஒரு திட்டம் போட்றேன். அதுல அந்த அமுதனை இந்த உலகத்தை விட்டே அனுப்பியும் வைக்கறேன்."

"சொன்னா போதாதுடா.... காரியத்த மிச்சம் வைக்காம முடிக்கணும்...''

"முடிக்கறேன்கா... பூனையை மடில கட்டிகிட்டெல்லாம் ஜோசியம் பாக்க முடியாதுக்கா. இவனை வெச்சுகிட்டு இந்த வீட்ல நாமளும் ஒரு திட்டம் கூட போட முடியாது."

"இந்த விளக்கமெல்லாம் அப்புறம முதலல காரியம்' காளியம்மாள கண்டிப்பாக சொல்லவும ஜீவாவும் அதறகுமேல் பேசவில்லை!

ராஜரத்னம் தன அறையில் ஒரு சுருட்டை எடுத்துப பறற வைத்திருநதார. புகை மூட்டம் போட ஆரமபித்திருநதது. மெலல அந்த அறைக்குள நுழைந்திருந்தார அக்கவுண்டண்ட் மாணிக்கம் அவர அழைததில அமுதனும் வந்திருந்தான்.

"அய்யா கூப்ட்டு விட்டீங்களா?''

"ஆமாம் மாணிக்கம்.... உக்காரு'

"பரவாலல நிககறேங்க.."

"என்னய்யா நடககுது இநத வீட்ல...?"

"என்னய்யா பேசமாட்டேஙகறே?"

"நான் பேச என்னங்க இருககு?"

"நீ பயப்பட்றய்யா.... என் உப்புக்கு விசுவாசமா இருக்கறத விட உனக்கு உன் உசுரும் பாதுகாப்பும் பெருசா போயிடிச்சு.... இல்ல?"

"அய்யா... விசுவாசமா இருக்கறதாலதாங்க விலை போகாம இருக்கேன்..."

"அப்ப காளியம்மா இப்ப பண்ண காரியத்தை பத்தி நீ என்ன நினைக்கறே?"

"நான் சொல்ல என்னங்க இருக்கு. அவங்க ஈயை பேனாக்கு வாங்க பேனை பெருமாளாக்குவாங்க...."

"அப்ப இப்ப அவ நாடகமாடியிருக்கா.... அப்படி தானே?"

"அது எனக்கு தெரியாதுங்க...."

"இரண்டு விதமாகவும் பேசினா எப்படிய்யா?"

"அய்யா... நான் உங்ககிட்ட சம்பளம் வாங்கற ஒரு மாசச் சம்பளக்காரன். என்னை ரொம்ப சோதிக்காதீங்க நான் தாங்க மாட்டேன்."

"சரிய்யா.... நீ போ! அமுதா நீ இப்படி வா...." அக்கவுண்டண்ட் மாணிக்கம் விலகிட அமுதன் வந்து நின்றான்.

"அமுதா நீ சொல்லு.... எப்படி எல்லாம் தலைகீழா மாறிடிச்சு?"

"நடுவுல ஏதோ நடந்துருக்குதுங்க...."

"ஏதோன்னா?"

"அந்த பூசாரி முந்திகிட்டிருக்கலாம்..."

"எப்படி?"

"எனைங்கய்யா.... உங்களால யூகிக்க முடியலையா? பூசாரி நாம வந்துட்டு விலகவும் போன் பண்ணிட்டான்னு நினைக்கறேன்."

"அவன்கிட்ட ஏதுய்யா போனு?"

"பப்ளிக் பூத்துல இருந்து பண்ணியிருக்கலாங்க"

"நீ அப்படி வரியா?"

"அதைத்தவிர வேற வழியே இல்லைங்க...."

"சரி... இதை உன்னால நிரூபிக்க முடியுமா?"

"ரொம்ப சுலபங்க... இந்த அறைல இருக்கற போன் அதுக்கு போதும்."

"சரி...நிரூபி பார்க்கலாம்..."

"ரொம்பவே சுலபமான ஒரு வழி இருக்குங்க... நம்ப ஆட்கள ஒருத்தர்கிட்ட ஆயிரம் ரூபாயை கொடுத்து சமயத்துக்கு நீ போன பண்ணதுக்கு இந்த பணத்தை அம்மா கொடுக்கச் சொன்னாங்கன்னு சொல்லி கொடுத்துவிட்டா போதுமயா. அவனும் சந்தோஷமா வாங்கிக்குவான்! வாங்கிகிட்டாலே அவன் தான் போட்டு விட்டான்கறதும் தெரிஞ்சிடுமே?"

ராஜரத்னம் நிமிர்ந்து உட்கார்ந்தார். அப்போது அறைக்குள் தேவியும நுழைந்தாள். அப்பா முன் வந்து நின்றவள் 'அப்பா எனக்கு ரொம்ப பயமா இருக்குப்பா.... ஜீவா மாமா கூட இனி என்னை காலேஜிக்கு அனுப்பவே அனுப்பாதிங்கப்பா" என்று அழத் தொடங்கினாள்.

வெளியே அமுதன் ஓட்டும் காரின் பிரேக்கை பிடுங்கிவிடும் நோக்கோடு நடந்து கொண்டிருந்தான் ஜீவா!

இனறு

மாப்பிள்ளை மதனைக் காணவில்லை என்கிற ஜீவானந்தத்தின் பதில் காளியம்மாளைக் கலக்கிவிட்டது. அம்மா ரேணுகாவோ விசும்பி அழத் தொடங்கிவிட்டாள்.

"நிறுத்திடி.... அழுவறத முதல்ல நிறுத்து! நீயே காட்டிக் கொடுத்துடுவே போல தெரியுதே..."

"என்னை மீறி அழுகை வருதுங்க. நான் என்னங்க பண்ணுவேன?"

"எதையும பண்ணாதே அமைதியா இரு. அவன எங்க இருந்தாலும் கட்டி தூககிட்டுவரேன." ஜீவா என்கிற ஜீவானந்தம் ஆவேசமாக விலகிச சென்றான...

அழுதபடி இருககும் ரேணுகாவை ஆறுதல படுத்த முயன்றாள காளியமமாள.

"அழுவாதடி.... அதான் போயிருக்கான்ல என் தம்பி..."

"போய் என்ன புண்ணியம்! போதைல இருந்தா தெளிய 12 மணி நேரம் ஆகும். நிச்சயதார்த்தம் போது மாப்பிள்ளை எங்கன்னு கேட்டா என்னத்த சொல்ல?"

"'உடம்பு சரியில்ல சளி காய்ச்சலனு எதையாவது சொல்வோம்டி...."

ரேணுகாவின கேள்வி சுருக்கென்று காளியமமாளைத் தைததது.

"அடியே.... என்னடி இது தான் சாக்குன்னு என்னை ஒரு வாறு வாற்றியா?"

"நான் ஏன் வாறேன். அதானே உண்மை " ரேணுகா காட்டமாகவே திருப்பிக் கேட்டாள். காளியம்மாள் முறைத்தாள்.

"முறைக்காதீங்க. பாளையக்கார வம்சம்னு ஏமாத்தி என்னை அழவெச்ச மாதிரி இந்த பொண்ணையும் அழ வைக்க வேண்டாம. எப்ப என் மகன் நிச்சயதாரத்தமனு கூட பார்ககாம போதைக்கு அடிமை ஆயிட்டானோ அவனுக்கு கல்யாணம் பண்றதுங்கறதே வேஸ்ட்."

ரேணுகா விட்டால் அவளே கூட போய் சுமதியின் அப்பா அம்மாவிடம் சொல்லி விடுவாள் என்பது போல பேசினாள. காளியம்மாள் முகம் சிவநதது.

"இந்தாடி.... நான் பாளையக்கார வம்சம் தாண்டி அதுக்கு போட்டியா ஒருத்தர கிடையாது. ஞாபகம் வெச்சுக்க! இன்னொரு தடவை வமசத்த தொட்டு ஏதாவது பேசினே உன வாயை கழிச்சுடுவேன்' என்றாள...

புறத்தில ஜீவானநதம அநத பங்களாவின ஒவவொரு பாகததையும சல்லடை போட்டு தேடிக் கொண்டிருந்தான.

ஒரு அறை கதவை திறந்த போது அந்த அறையில தான ஸ்ரீதேவி படுத்திருந்தாள். அவன் திறந்த வேகமும் கதவு திறந்து கொண்ட சப்தமும் அவளை எழுப்பிவிட்டது. எழுந்தவள் அதே வேகத்தில் ஜீவாவைப் பார்த்து மிரளத்தொடங்கினாள். அவனுக்கும் அவளைப் பார்க்கவும் ஒரு மாதிரி தான் இருந்தது.

"யார் நீங்க?" என்று பயந்தபடி கேட்டாள.

"அது சரி.... நீ யாரும்மா என வீட்ல என்னைப் போய கேளவி கேடகறே?"

"நான் தான் சுமதியோட தோழிங்க...."

86-87/384 Go

"ஓ.... நான் கொஞ்சம் முந்தி கூட பார்தேனலை.... சாரி மறந்துட்டேன்."

"பரவால்ல.... சுமதி பக்கத்து அறைல இருக்கா."

"நான் பாத்துக்கறேன் நீ படுத்து ரெஸ்ட் எடும்மா...." ஜீவா அவளை படுக்கச் சொன்னவனாக திரும்பித் திரும்பி பார்த்தபடி சென்றான். அவன் பார்வையும் அவன் அருகாமையும் ஸ்ரீதேவியை என்னவெல்லாமோ செய்யத் தொடங்கியது.

அந்த பங்களாவுக்குள் நுழைந்ததில் இருந்தே அவளால் இருக்க முடியவில்லை. தூக்கமும் கலைந்து ஒரு இனம் புரியாத குழப்பத்தோடு சிந்தித்தவள் அந்த அறையின் பின்பக்க கதவை திறந்தாள். அது பின்புறமுள்ள ஒரு பூந்தோட்டத்துக்கு செல்வது போல் அவளுக்குள் ஒரு எண்ணம்.

அவள் கையில செல்போனும் இருந்தது. அதோடு நடந்தவளை நிஜமாலுமே அந்த பூந்தோட்டம் வரவேற்றது.

தோட்டத்தில் செம்பருத்தியும், நந்தியாவட்டையும் தழைத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. அங்கே தான் இதற்குமுன் பலமுறை பூப்பறித்தது போல ஒரு உணர்வும் எழும்பியது.

அந்த பூந்தோட்டத்தில் ஒரு பூச்செடியை ஒட்டி முக்கல் முனங்கல் சப்தம் கேட்டது. யாருமே இல்லாத அந்த சூழலில் அந்த சப்தம் ஸ்ரீதேவிக்கு பயத்தை அளித்தாலும் துணிவை வரவழைத்துக் கொண்டு மெல்ல ஒரு செடியில் ஒளிந்து கொண்டு இலைகளின் ஊடாக பார்த்தாள்.

ஜீவானந்தத்தின் மகன் மதன் அங்கே ஒரு வேலைக்கார பெண்ணுடன் சல்லாபித்துக் கொண்டிருந்தான். பகீரென்றது ஸ்ரீதேவிக்கு.

"'அடப்பாவி! நீ இப்படிப்பட்டவனா? இவ்வளவு மோசமானவனா? என்கிற கேள்வியும் தோன்றியது அந்த வேலைக்கார பெண் வேண்டா வெறுப்பாக அவன் பிடியில் கிடந்தாள்.

"வேண்டாம் சின்ன முதலாளி. என்னை விட்றுங்க முதலாளி."

"பயப்படாதே பார்வதி.... எதுவும் ஆயிடாது'

"ஐயயோ உங்களுக்கு இன்னிக்கு நிச்சயதார்த்தம்....''

"அதுபாட்டும் ஒரு பக்கம்.... ஆனா நான் உன்னை எப்பவும் விடமாட்டேன்."

"கள்ளத்தனமா அனுபவிக்கறதுல என்னங்க இருக்கு. எனக்கு இதுல ஒரு பிரயோஜனமும் இல்லையே...."

"கவலைப்படாதே... உன் பேர்ல ஒரு வீடு எழுதி வைக்கிறேன்..."

"வீடா... நீங்களா?"

"ஏன்.... முடியாதா என்னால?''

"இந்த பங்களாவே முதல்ல உங்க சொந்தமில்லை. நீங்களே ஒட்டிகிட்டிருக்கறவங்க தானே?"

"என்னடி சொல்றே?"

"என்னங்க கோபிக்கிறீங்க.... உங்களுக்கு எதுவும் தெரியாதா?"

"எனக்கு தெரியறது இருக்கட்டும்.... உனக்கு இதெல்லாம் எப்படி தெரியும்?''

"என் அப்பன் ஆயிதான் இந்த பாளையக்கார குடும்பத்துல தலைமுறை தலைமுறையா வேலை செய்யறவங்களாச்சே? எங்களுக்கா இந்த குடும்பத்துல நடந்த விஷயங்கள் தெரியாது?"

அவள் பதிலுக்கு திருப்பி கேட்டபோது அங்கே ஜீவானந்தம் தேடிக்கொண்டு வந்து விட்டான். அவன் வரவும் அவள் எழுந்து ஓடிப்போனாள்.

அவள் விலகுவதை ஜீவானந்தமும் பார்த்தவனாக தன் மகனை முறைத்தான். மதன் தலையை குனிந்து கொண்டான்.

"ஏண்டா உன் புத்தி இப்படி போகுது... கொஞ்ச நேரத்துல நிச்சயதார்த்தமடா...?' என்று அலறினான ஜீவானந்தம்.

"அதனால என்ன இபப?"

"அதனால என்ன இபபவா... ஏண்டா உனகது நேரம் காலமே கிடையாதா... இப்பதான் இவ கூட சரசம் பண்ணுவியா?"

"பவுடர் போட்டதுல கொஞ்சம் மூட் ஆயிடிச்சு. சும்மா யோசயன் மாதிரி அலட்டிக்காதப்பா" அலட்சியமாக பதில் சொன்னான் மதன்.

செடி ஒன்றின் மறைவில் இருந்து கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீதேவிக்கு மட்டும் நெருப்பின் மேல் நிற்பது போல இருந்தது!

# 10

அன்று

வெளியே நின்று கொண்டிருநதது கார். அதன் சாவி அமுதன் கையில் இருந்தது! அதன் ட்யூப்ளிகேட் ஜீவாவிடம் இருந்தது! உற்றுப் பார்த்தவன மிக வேகமாய அதில் ஏறி அமாநது காரை எடுத்தான. சபதம கேட்டு கார நின்ற இடத்திற்கு அருகில் இருககும் ஆபிசில டைப்ரைட்டிங் மெஷினில டைப் செயதபடி இருந்த மாணிக்கம ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தார.

காரில் ஜீவா அமர்ந்து செல்வது ஆச்சரியத்தை அளித்தது. சரி எங்கோ வெளியே போகிறான் போல் இருக்கிறது என்று அதை சாதாரணமாகவே எடுத்துக்கொண்டார்.

உள்ளே ராஜரத்னம் ஒரு ஐந்தாயிரம் ரூபாயை எடுத்து வந்தவராக மாணிக்கத்தை இண்டர்காம் போன் வழியாக அழைக்க மாணிக்கமும் மெஷினை விட்டு விட்டு ஓடினார். எதிரில தேவி அவரைக் கடந்து அவளது அறை நோக்கி சென்றபடி இருந்தாள். மாணிக்கமும் ராஜரத்னம் எதிரில் சென்று பெருமூச்சோடு நின்றார.

ராஜரத்னமும் ஏறிட்டவராக ஐந்தாயிரத்தை மாணிககத்திடம் தந்தார்.

"எதுக்குங்க முதலாளி?"

"சொலறேன் கோயில பூசாரியைப் போய் பாரதது இந்த பணத்தை காளியமமா தந்தான்னு கொடு. கொடுககும் போது நீ போன் பண்ணி உஷார பண்ணினதால தான அம்மா திட்டம் போட்டு தப்பிச்சாங்கன்னு சொல்லு. அதுக்கு தான இநத பணம்னு சொல! அவன சநதோஷமா வாங்கிகிட்டா அமுதன் சொன்ன மாதிரி அவன தான காளியமமாளை

உஷார படுத்திவனை ஆவான். நான் அப்படி எல்லாம் எதுவும் செய்யலியே... நான் உஷார்படுத்தினேன்னு நீங்க எதை சொல்றீங்கன்னு திருப்பி கேட்டா பூசாரி மேல தப்பு இல்லன்னு அர்த்தம்."

"ராஜரத்னம் விளக்கி முடித்தார் மாணிக்கத்திடம் சற்று தயக்கம்.

"என்ன மாணிக்கம் யோசிக்கறே?"

"அம்மா தான் தப்பு பண்ணவங்க அதை கண்டுபிடிக்க நாமளும் இப்படி குறுக்கு வழில போகணுங்களா?"

"வேற நல்ல வழி இருந்தா சொல்லு. நான் கேக்கறேன். வைரத்தை வைரத்தால தானே அறுக்கணும்?"

"அதெல்லாம் சரிங்க.... இப்ப அவங்க தப்பை நாம நிரூபிக்கறோம்னே வையுங்க.... அவங்க திருந்திடுவாங்களா?"

"அவ திருந்தற ஜென்மமில்லன்னு எனக்கும் தெரியும் மாணிக்கம் குறைந்த பட்சம் இனி எதாவது பண்ணா வெட்டி விட்டுடுவேன்னு அவளுக்கு ஒரு பயத்தையாவது உருவாக்கலாமில்லியா?"

"என்னமோய்யா நாம அவங்கள அதிகம் தூண்டிவிடற மாதிரி தான் இதோட..... முடிவு இருக்கும் பொதுவா அம்மா மாதிரி ஆளுங்கலாம் நல்ல பாம்பு மாதிரி அவங்களுக்கு அவங்க தப்பே தெரியாது."

"இப்படி கண்டது நினைச்சு பயந்து இப்படியே இருக்க சொல்றியா?"

"அதுவும சரிதாங்க... நான் மனசுலபட்டதை சொன்னேங்க..... இந்த விஷயத்துல நான் போனா கூட சரியிலலீங்க. நான் என் உறவுக்காரன ஒருத்தனை அனுப்பறேன்."

"நீ ரொம்பவே அவளுக்கு பயப்படறே. இதுல இருந்தே காளியம்மா எவ்வளவு பயங்கரமானவள்னு நல்லா தெரியுது."

"பயங்கரம்கற வார்த்தை சாதாரண வார்த்தைங்க..."

"சரி சரி புறப்படு எனக்கு அவளை கையும் களவுமா பிடிக்கணும்."

மாணிக்கம் சரி என்று பணத்தோடு கிளம்ப மௌனமாக நின்ற அமுதனை ராஜரத்னம் பார்த்தார் பின்

"நீ வீட்டுக்கு போய் ரெஸ்ட் எடுத்துட்டு வா அமுதா..."

என்றிட அமுதனும் புறப்பட்டான்.

வெளியே வந்தவன் கார் இல்லாததை பார்த்து ஆச்சரியப்பட்டான். ஜீவா எடுத்துப் போயிருப்பான் என்பது அவனுக்கு தெளிவாகிவிட்டது. தன் வசமிருந்த சாவியை உள்ளே சென்று காளியம்மாளிடம் தந்து விட்டு செல்ல முடிவு செய்தவன்

உள் திரும்பி காளியம்மாள் இருக்கும் உக்ராண அறைக்கு வெளியே போய் நின்றான். உள்ளே டிவியில் டெக்கில் கேசட்டை போட்டு பில்லா என்கிற ரஜினி படத்தை பார்த்துக் கொண்டிருந்தாள் காளியம்மாள். கையிலுள்ள தட்டில் முந்திரிப் பருப்பு இருந்தது. அதைக் கொரித்துக் கொண்டே படம் பார்த்தவள் அமுதன் வந்து நிற்பதை கண்டு கொள்ளவேயில்லை.

அமுதனுக்கு தயக்கமாக இருந்தது. உள்ளே சென்று அவளிடம் கார் சாவியை தருவதற்கு சாவியை ராஜரத்னம் வசம் தந்து விடுவது என்கிற முடிவோடு திரும்பினான். எதிரில் தேவி அவனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

அவள் பார்வையில ஒருவித கூர்மை.

அவனும் அவள் பார்ப்பதை தாள முடியாதபடி தலையைக் குனிந்து கொண்டு நடக்கத் தொடங்கினான்.

அவள் கைச் சொடக்கு போட்டு தடுத்தாள். அவனும் நின்றான்.

"ரொம்ப தேங்க்ஸ்" என்றாள்.

"எதுக்கு?"

"இனிமே எனக்கு நீ.... சாரி நீங்க தான் டிரைவர்."

"நானா?"

"ஆமா.... அப்பா உங்களை தானே கொண்டு போய் விடச் சொன்னார்."

"அதுக்கு எதுக்கு தேங்க்ஸ்.... நான் உங்ககிட்ட சம்பளம் வாங்கற ஒரு வேலைக்காரன்."

"அது உங்க நிலை. அதை கடந்து உங்க நேர்மை, தைரியம், எங்க குடும்பம் மேல காட்ற விசுவாசமெல்லாம் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு."

"சந்தோஷம் நான் கார் சாவியை கொடுக்க வந்தேன். வீட்டுக்கு போகணும். இதை உங்க அப்பாகிட்ட கொடுத்திடுங்க..."

"எப்பவும் சின்னம்மாகிட்ட தானே தருவீங்க?"

"அவங்க டி.வில படம் பாத்துகிட்டு இருக்காங்க. குறுக்கிட்டா கோபப்படுவாங்க. அதோட என் மேல ஏற்கனவே கோபத்துல இருக்காங்க..."

"அதுவும் சரிதான்.... பை த பை எனக்கு கார் ஓட்ட கத்து தரீங்களா?"

"நானா?"

"உங்ககிட்ட தானே கேட்டுகிட்டிருக்கேன்." "டிரைவிங் ஸ்கூல்ல கத்துக்கலாமே?"

"உங்ககிட்ட வேகமா கத்துக்க முடியும்னு நினைக்கிறேன்."

"உங்க சித்திக்கு தெரிஞ்சா அவ்வளவு தான்..."

"யாருக்குமே தெரிய வேண்டாம். நான் வெளிய ஃப்ரண்ட் வீட்டுக்கு இல்ல ட்யூஷனுக்கு போறதா சொல்லிட்டு வரேன். கத்துக்கொடுங்க..."

"பாக்கறேன்"

"இந்த பாக்கற வேலையெல்லாம் வேண்டாம். நீங்கதான் எனக்கு சொல்லித்தரீங்க. இதுல எந்த மாற்றமும் இல்லை" என்று சொல்லி சிரித்தாள். அமுதனை அது என்னவெல்லாமோ செய்யத் தொடங்கிவிட்டது!

அதே சமயம் மாணிக்கத்தின் ஆள் பூசாரியை சந்தித்து மாணிக்கம் சொன்னது போலவே நடந்து கொள்ளவும் பூசாரியும் சந்தோஷமாக பணத்தை வாங்கிகொண்டான். "அம்மாவுக்கு ரொம்ப பெரிய மனசு" என்றும் பாராட்டினான்.

அடுத்த பத்தாவது நிமிஷம் அந்த விஷயம் ராஜரத்னம் காதுகளுக்கு டெலிபோன் வழியாக வரவும் அடுத்த நொடியே பூசாரியை கையும் களவுமாக பிடிக்க புறப்பட்டார். காரை எடுக்கச் சொல்லலாம் என்றால அமுதனை அனுப்பி விட்டது ஞாபகத்துக்கு வந்தது. வெளியே காரும் இல்லை. ஜீவா எடுத்துச் சென்றது தெரியாமல அவர் கோபத்தோடு நின்ற நொடி ஜீவாவும் காரை ஓட்டியபடி பங்களாவினுள் நுழைந்து கொண்டிருந்தான்!

இனறு

ஜீவானந்தம் மதனை முறைத்துப் பார்த்தவனாக "உனக்கு நான் அதிகம் இடம் கொடுத்துட்டேன்டா. அதான் நீ இப்படி எல்லாம் பேசறே கல்யாணம் பண்ணா திருந்திடுவேனனு நான ஒன்னும் உனக்கு கல்யாணம் பண்ணலை. உன் ஜாதகப்படி முதல் மனைவி செத்துடுவான்னு ஜாதகம் சொல்றதால தான் இந்த கல்யாணத்தையே பண்றேன். வாஸ்தவத்துல உனக்கும் செத்துப்போன தேவியுடைய மகள் மாதங்கிக்கும் தான் கல்யாணம் நடக்கணும் அப்படி நடந்தாதான் இந்த பாளையக்கார வம்ச சொத்தை எல்லாமும் நாம் அனுபவிக்க முடியும். ஆனால அவளை உனக்கு கட்டி வெச்சு அவளுக்கு எதாவது ஆயிட்டா அவ்வளவு சொத்தும் கோயில் குளத்துக்கு போயிடும். அப்படி ஒரு உயிலை அவ தாத்தாவான என் அக்கா புருஷன் ராஜரத்னம் எழுதி வெச்சுட்டு செத்தும் போயிட்டான்.

உன்னை நான் ராஜா மாதிரி வாழ வைக்க போராடிகிட்டு இருக்கேன். நீயோ இப்படி கும்மாளம் போட்றியேடா...?"

ஜீவானந்தம் பேசிய அந்த நீண்ட பேச்சு மதனை சறறு கட்டிப போட்டது.

"சாரிப்பா.... இனி இப்படி நடந்துக்க மாட்டேன்" என்றான். "சொல்லாதே, செயலல காட்டு. இபப புறபபடு இநத நிச்சயதார்த்தமும சரி, கலயாணமும சரி அமககளமா நடககணும். இதுலதான என கௌரவம வெறறி எலலாம இருககு. உனக்கும இந்த கலயாணத்தாலதான நல்ல காலமே தொடஙகுது. மறந்துடாதே."

"சரிப்பா.... சும்மா தொண தொணஙகாதீஙக. அதான சரினனு சொல்லிட்டேனல...."

என்றபடியே ஜீவானந்தத்தோடு சேர்ந்து நடந்தான மதன. செடி கொடிகளின பின்னால் ஒளிந்திருந்த ஸ்ரீதேவி அவ்வளவையும் கேட்டு ஸ்தம்பித்து விட்டிருந்தாள்.

இவன் தான் எவ்வளவு மோசமானவன்? இவனுக்கு வாழ்க்கைப்பட்டால சுமதியின் வாழக்கையும அவ்வளவு தான்!

ஸ்ரீதேவிககுள அனல் அடிகக தொடஙகியது. உளளே எல்லா ஏறபாடுகளும் நடககத் தொடஙகுவதறகுள சுமதியிடம விஷயத்தை சொல்லிவிட வேண்டும் என்கிற வேகத்தோடு வந்தவளுக்கு அதிர்சசி காததிருந்தது.

அவள் எந்த கொல்லைப் புற கதவை திறந்து கொண்டு தோட்டத்தின் பககம் வந்திருந்தாளோ அந்த கதவை தாழிட்டுக கொண்டு ஜீவானந்தம போயிருந்தான்.

நாலாபுறமும் தோட்டத்து மதில் சுவர்! அதை ஏறிக் குதித்தால தான வெளியேறவும் முடியும். இல்லாவிட்டால் யாராவது கதவை திறந்து கொண்டு வரும வரை தோட்டத்திலேயே காத்திருக்க வேண்டும.

இப்போது என்ன செய்வது?

ஸ்ரீதேவி தவிக்க ஆரம்பித்தாள். மலங்க மலங்க நாலாபுறமும் பார்த்தாள். நல்லவேளையாக செல்போன் கையில் இருந்தது. அது அப்போது பார்த்து ஒலிக்கவும் செய்தது. சுமதிதான மறுபக்கம் இருந்து அழைத்தவள்.

"சுமதி...."

"எங்க இருக்கே ஸ்ரீதேவி.... உன் ரூம்ல உன்னைக் காணலியே?"

"ஐயோ நல்லவேளை நீ இப்ப கூப்டே, உனக்கு நல்ல நேரம்டி முதல்ல அப்படியே என் ரூமை ஒட்டி வந்த வராண்டா வழியா வா. அதோட முடிவுல தோட்டதுக்கு போற ஒரு கொல்லைப்புற கதவு இருக்கும். அதை திறந்துகிட்டு வா. நான் இப்ப தோட்டத்துல இருக்கேன்."

"மண்ணாங்கட்டி.... நீ எதுக்கு இப்ப அங்க போனே? இங்க நான் இன்னும் அஞ்சு நிமிஷத்துல நிச்சயதார்த்த மேடைக்கு போயாகணும். நீ அப்ப என் கூட இருக்க வேண்டாமா?"

"சுமதி... நான் விபரமா எல்லாத்தையும் சொல்றேன். நான் இப்ப தோட்டத்துல சிக்கிகிட்டு இருக்கேன். தயவு செய்து வந்து என்னை கூட்டிகிட்டு போ. நீ கதவை திறந்து விட்டா தான் என்னால உள்ள வரமுடியும்.

அதே சமயம் உன் வரைல இந்த கல்யாணம் நடக்ககூடாது. இந்த மாப்பிள்ளை நல்லவன் இல்லை. இவன் ஒரு போதை அடிமை. இப்பகூட போதைல தான் இருக்கான். இந்த கல்யாணமே உன்னை கொல்றதுக்காக தான். இவன் ஜாதகப்படி இவனோட முதல மனைவி செத்துடுவாளாம்..."

"என்னாச்சு ஸ்ரீதேவி உனக்கு.... மறை கழண்டு போச்சா? நீ புறப்பட்ட நேரத்துல இருந்தே சரியில்லை. இங்க மதுரை வரவும் சத்தமா உனக்கு மூளை குழம்பிடிச்சின்னு நினைக்கறேன். உன்னை சென்னையை விட்டு போகக் கூடாதுன்னு உன் அம்மா தடுத்ததுல நிறைய அர்த்தம் இருக்குன்னு தான் நினைக்கறேன்.

ஆட்டை கடிச்சு மாட்டை கடிச்சு கடைசில மனுஷனை கடிச்ச கதையா உன்னை கூட்டிகிட்டு வந்த என்கிட்டயே இப்ப உன் வேலைய காட்றியா?"

சுமதி எகிறினாள். ஸ்ரீதேவிக்கோ பதட்டம் எகிறத் தொடங்கியது

"சுமதி.... நான் சொல்றதெல்லாம் சத்யம். நான் தோட்டத்து பக்கம் யதார்த்தமா வந்தப்ப அந்த மதன் இங்க வேலைக்காரியோட கொஞ்சிகிட்டு இருந்தான். என் கண்ணால பார்த்தேன்டி. என்னை நம்புடி...."

"நோ... நீ சொல்றத நான் நம்பமாட்டேன். நிச்சயதார்த்தம் முடியற வரை நீ அங்கேயே இரு. அப்புறமா நானே வந்து உன்னை கூட்டிக்கறேன். உன்னை சென்னைக்கு கூட்டிட்டு போய் உன் வீட்ல விடற வரை எனக்கும் நிம்மதி இல்ல. இப்போதைக்கு அங்கேயே கிட...."

சுமதி போனை கத்திரித்தாள். ஸ்ரீதேவிக்கோ தலையில் இடி விழுந்த மாதிரி இருந்தது.

## 11

அன்று

ஜீவா காரோடு வருவதைப் பார்தத ராஜரத்னம் அவனை வெறித்தார். அவன் காரை கிரீச்சிட்டு நிறுத்தினான். அது பெரிதாக குலுங்கி விட்டு நின்றது. அவனும் இறங்கினான. ராஜரத்னம் அவனை குறுகுறுவென்று ஒரு மாதிரி பார்த்தார. அவனை அது என்னவோ செய்தது.

"என்னத்தான் ஒரு மாதிரி பார்க்கறீங்க?" என்று நெளிந்தபடியே கேட்டான்.

"காரை எடுத்துகிட்டு எங்கடா போய்ட்டு வரே?"

"சும்மா அத்தான்... அப்படியே வெளியே..."

"வெளியனா எங்க?"

"என் ப்ரெண்டை பாத்துட்டு வரேன... எதுக்கு இப்ப வளைச்சு வளைச்சு கேக்கறீங்க?"

"கேக்காம... நீ ஆக்சிடென்ட் பண்ணுவே உன் அக்கா பணத்தை கொடுத்து எல்லாத்தையும் மூடி மறைப்பா... நீ திருந்தாம திரும்ப கார் எடுத்துகிட்டு போவியோ?"

"சாரி அத்தான்... ஏதோ ஒரு தடவை தப்பு நடந்துடிச்சி. ஒவ்வொரு தடவையும் நடக்குமா என்ன?"

"உன் வரைல நடக்கும்டா... ஏன்னா நீ அப்படிப்பட்டவன்..."

ராஜரத்னம் தொண்டை செருமி கத்துவது உள்ளே காளியம்மாள் காதில் விழுந்து அவளும் எழுந்து வந்து விட்டிருந்தாள். அவளோடு அந்த பாளையக்கார வீட்டில் வேலை பார்க்கும் அவ்வளவு வேலைக்காரர்களும் அங்கங்கே நின்று ஜாடை மாடையாக கவனிக்கத் தொடங்கினர்.

காளியம்மாளுக்கு ஏதோ விபரீதம் என்பது புரிந்து விட்டது.

"என்னங்க... என்ன விஷயம் இவன் திரும்ப ஏதாவது தப்பு பண்ணினானுங்களா சொல்லுங்க இப்பவே இவனை இங்க வெட்டிப் போட்டுடறேன்"

காளியம்மாள் தன் நடிப்பை நடிக்கத் தொடங்கி விட்டாள்.

ராஜரதனம் ஒரு வெறிப்பு வெறித்தார். அதில் ஆயிரம் அர்த்தங்கள். அவர் அப்படி அர்த்தத்தோடு வெறித்து அவள் பார்த்ததேயில்லை. அவளுக்குள் பெரிதாய் ஏதோ விபரீதம் என்பது புரியத்தொடங்கியது.

"என்னங்க... நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படி வெறிக்கிறீங்க?" காளியம்மாளும் ஜீவா போலவே குழைவாக கேட்டாள்.

"உனக்கு நிஜமா காரணம் தெரியாதா?" ராஜரத்னம் காட்டமான குரலில் கேட்டார்.

"காரணமா... எனக்கு தெரியுமா? என்னங்க சொல்றீங்க?"

நடிக்காதே காளி... உன் நடிப்புல நான் ஏமாந்துட்டதாகவும் நினைச்சுடாதே..."

"என்னங்க என்னென்னமோ சொல்றீங்க?"

"நான் இன்னும் எதையும் சொல்லவே ஆரம்பிக்கல. நான் சொல்ல வேண்டியத சொல்ல ஆரம்பிச்சா நீ தாங்க மாட்டே."

"போதுங்க... புரியற மாதிரி பேசுங்க... நான் அப்படி என்ன தப்பு பண்ணிட்டேன்?"

"நான் அதை வார்த்தைல சொன்னா நீ அதை அழகா சமாளிச்சிடுவே. சாட்சியோடு உன்ன பிடிச்சா தான் நீ அடங்குவே... வரேன் அந்த சாட்சியோட..." என்றார்...

"மாணிககம்..." என்றார் பலத்த குரலில்! மாணிக்கமும ஓடி வந்தார.

"மாணிககம்... நமப கார் டரைவரையும களதது மேட்டானையும, கோவில் பட்டரையும் உடனே வரசசொலல, ஆமா கஜானா சாவி, பீரோ சாவி, உரககிடஙகு சாவி, மலைக்கோவில ஆபரண அறை சாவியெல்லாம இபப யார்கிட்ட இருக்கு?"

"பீரோ சாவிய தவிர மற்ற எல்லாமே என்கிட்ட தான்யா இருக்கு."

"பீரோ சாவி இப்ப யார்கிட்ட இருக்கு?"

"என்கிட்ட தான் இருக்கு. இப்ப எதுக்குங்க இது பத்தியெல்லாம் கேக்கறீங்க?"

"வாய மூடிகிட்டு அந்த பீரோ சாவிய மாணிக்கததுகிட்ட கொடு..."

"அதுல என நகை நட்டுல இருந்து பணமெல்லாம் இருககுங்க..."

"பின்ன இரும்பு பீரோவுல உப்பு புளிய வெச்சா பூட்டு வாங்க. சாவிய மாணிக்கததுகிட்ட கொடுன்னா கொடுடி..."

"காரணம் சொல்லாம திடுதிடுப்னு கொடுக்க சொன்னா என்னங்க அர்த்தம்?"

"அதான் காரணதத சாட்சியததோட சொல்றேன்னு சொன்னேனே...?"

"யாா அந்த சாட்சி... எதுக்கு அந்த சாட்சி?"

"எல்லாத்தையும் நேர்ல தேங்காய் உடைக்கற மாதிரி உடைக்கறேன். அப்பதான் உன்னை என்னால அறுத்து விட முடியும்..."

"அறுத்து விடறதா... ஐயயோ எதுககுங்க?"

"எதுக்கா... நீ ஒரு மலைப்பாம்பு. விட்டா நீ இந்த பாளையககார குடும்பத்த அப்படியே விழுங்கி ஏப்பம் விட்றுவே? என முதல மனைவி செத்தப்பவே நான கட்டுப்பாடா இருந்துருககணும். அப்ப எனக்கு பணிவிடை செயயற மாதிரி கவுத்துட்டவ நீ.... கவுந்துட்டவன் நான்!

போகட்டுமனு உன் விருப்பங்களுக்கு இடம் கொடுத்தா நீ ரொமபவே ஓவரா போயிட்டே! உன்னை இனியும் விட்டுவைக்க கூடாது..."

"ஐயோ என்னங்க இது என்னென்னவோ சொலறீங்க. உஙக எதிரலதானே இவன் செஞ்ச தப்புக்கு தண்டனை கொடுத்தேன். இவன் இங்க என் கூட இருக்கறது பிடிக்கலன்னா சொல்லுங்க அனுப்பிடறேன்..."

"அனுப்பதான் போறேன்... இவன மட்டுமில்ல இவனோட உன்னையும் சோதது நீ இப்ப முதல்ல சாவிய கொடுடி..." - ராஜரதனததின் கடூரம் தேவியையும் அவள் அறையை விட்டு வெளியே வரச் செய்து எல்லாவற்றையும் பார்க்கும்படி செய்தது.

ஆனால காரியமமாள கொஞசம் கூட அசரவில்லை.

"நீங்க இப்படி திடுதிப்னு சாவிய கேட்டு நானும் கொடுத்துட்டா நான் தப்பு பண்ணது நிஜம்கற மாதிரி ஆயிடும். நீங்க முதல்ல நிரூபியுங்க. அப்ப நான் நீங்க கேட்காமலே சாவிய தரேன்."

காளியம்மாள் சாதித்தாள். ஆனால் உள்ளுக்குள் தங்களின் சதிவேலை அவ்வளவும் அவருக்கு தெரிய வந்து விட்டதாக மனம் படபடத்தாள்.

அவரும் வேட்டியை மடித்து கட்டிக்கொண்டவராக காரில் ஏறி அமர்ந்தார். அப்படி அவர் அமரவும் ஜீவா அதிர்ந்தான். காரும் வேகமாய் சீறத் தொடங்கியது.

"அத்தான். அத்தான்..." என்று கத்திக்கொண்டே பின்னால் ஓடிப் பார்த்தான்.

எல்லோரும் பார்த்துக் கொண்டேயிருந்தனர். ஆனால் கார் கண்களை விட்டு மறைந்துவிட்டது. திரும்பி வந்தான். காளியம்மாள் வேடிக்கை பார்த்த அவ்வளவு பேரையும் ஒரு முறை முறைத்தாள். எல்லோரும் நகரத் தொடங்கினர்.

ஜீவா காளியம்மாளை நெருங்கியவனாய் "அக்கா.... பயப்படாதே.... நமக்கு எதுவும் ஆகாது. உன் புருஷன் உயிரோடு திரும்ப வரமாட்டான்" என்றான் குரூரமான குரலில்...

இன்று

அந்த தோட்டத்தில் ஸ்ரீதேவிக்கு இருப்பு கொள்ளவில்லை. சுமதி தன்னை தவறாக புரிந்து கொண்டது கூட அவளை பாதிக்கவில்லை. ஆனால் மதனை அவள் திருமணம் செய்ய துணிந்து விட்டதை தான் அவளால ஜீரணிக்க முடியவில்லை.

"என்ன ஆனாலும் சரி... இந்த நிச்சயதார்த்தம் நடந்து விடக்கூடாது. நடக்க விடவும் கூடாது என்று அவளுக்குள் ஒரு வைராக்யம் அவளுக்குள் ஒரு புது சக்தியை உருவாக்க தொடங்கியது. மதில் சுவரை தாண்டிக் குதித்து சென்றாவது நிச்சயதார்த்தத்தை தடுத்துவிட வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தவள் சுவர் அருகே சென்று அதன் மேல் ஏற முயன்றாள். அவள் உயரத்திற்கு ஒரு அடி கூடுதலாக இருந்த சுவற்றில் கைவைத்து ஏற முயன்றாள். முன்பின் ஏறி பழக்கமில்லாத நிலையில் கைகள் வழவழத்தன. வியர்த்து வேறு கொட்டத் தொடங்கியது...

நல்லவேளையாக பக்கத்தில் ஒரு இரும்பால் ஆன வாளி கிடந்தது. அதே கவிழ்த்து போட்டு அதன மேல ஏறி நிற்க முயன்றாள்.

அந்த நொடியில அதே இடத்தில் இதேபோல் இதறகு முன்பும் ஏறியது போல ஒரு எண்ண ஓட்டம்! எப்படி ஏறியது என்பது மட்டுமல்ல, ஏறிக் குதித்து ஓட முற்பட்ட போது பின்னால யாரோ துரத்தி வருவது போலவும் ஒரு எண்ணம். அப்படி துரத்தி வருகிறவாகளின கண்களில் படாதபடி பக்கமாய் ஒளிய முற்பட்ட போது எப்போதோ சமாதியான ஒரு சித்தனின் சமாதியும் அதன் மேல் ஒரு சிறு சிவலிங்கமும் இருந்திட அந்த சிவலிங்கம் பின்னால் போய ஒளிந்து கொளளவும துரத்தி வந்தவன கடந்து போகவும் சரியாக இருந்தது.

மதில சுவரை ஒட்டி இருமபு வாளியின் மேல நின்றபடியே தனக்குள ஓடிய எண்ண ஓட்டத்தை கலைத்துக் கொண்ட தேவி ஒரு ஆவேசத்தோடு மேலே ஏறி மறுபுறமும் தயக்கமின்றி குதித்தாள.

அப்படிக் குதித்ததில குதித்த இடத்தில் ஒரு கல் இருந்து காலைக் குத்தியதில் உயிரே போய்விட்டது போல ஒரு வேதனை.

"அம்மா...." என்று அலறியபடியே சுருண்டு விட்டாள். எல்லாம் சில நொடிகள் தான். இப்படியே கிடந்தால் காரியம் கெட்டு எல்லாம் கைமீறி விடும் என்கிற எண்ணம் தோன்றவும் சமாளித்து எழுந்தாள். வேகமாக நடக்க முடியவில்லை. கால் இழுத்தது. ரத்தம் வழிந்து தரையில் சொட்டியது. ஒரு காலால் தான் நடக்க முடிந்தது.

அப்படி நடந்து வந்ததில் அவளை ஒரு ஆச்சரியம் அப்படியே அப்பி எடுத்துக் கொண்டது. அவள் சற்றுமுன் எண்ணிப்பார்த்த அதே சிவலிங்க சமாதி. அதன்மேல் ஒரு ஒல்லியான தாடியும் மீசையுமான மனிதர் படுத்துக் கிடந்தார்.

அவரைப் பார்க்கவும் மனதுக்குள் மளுக்கென்று ஒரு சுடர் எரியத் தொடங்குவது போல ஒரு உணர்வு உதடிரண்டும் 'அருணாசலசாமி' என்றும் முணுமுணுத்தது.

அந்த மெல்லிய முணுமுணுப்பே சமாதி மேல் படுத்திருந்த அவரை எழுந்து அமரச் செய்து அவளையும் பார்க்கச் செய்தது. ஊன்றிப் பார்த்தார். ஸ்ரீதேவியும் பார்த்தாள். இருவர் பார்வையும் பல நொடிகள் வரை அசையாது ஒருவரை ஒருவர் ஊடுருவின.

அவளிடம் 'அருணாசலசாமி அருணாசலசாமி' என்கிற முணுமுணுப்பு அவரும் 'நீ தேவிப் பொண்ணு தானே?' என்று கேட்டார்.

"நான் தேவி.... தேவி..." அவளிடம் திணறல்.

"நீ தேவியே தான்.... நீ வருவேன்னும் எனக்கு தெரியும். அதே போல வந்துட்ட நீ. என் நம்பிக்கை வீண் போகல. உன் காதுல நான் ஓதின மந்திரம் வேலை செய்துடிச்சு. என் குருநாதர் எனக்கு ஓதினது சாதாரண மந்திரமில்ல. உயிரைக் குடையற மந்திரம் அது. ஆத்மாவை கட்டிப்போடற மந்திரம். அற்புதம்.... அற்புதம்...."

அவர் பரவசமாகி உரத்த குரலெடுத்தார். பிறகே அவள் காலைப் பார்த்தார்.

"ஐயயோ உன் பட்டுக்கால்ல ரத்தமா.... சிவ சிவா..." என்றவர் சமாதிமேல் அவளை இழுத்து உட்கார வைத்தவராக "இங்கயே இரு... இந்த காயத்துக்கு குப்பைமேனி சாறு நல்ல மருந்து... அது இங்க ஏராளமா இருக்கு. பறிச்சிகிட்டு வந்துட்றேன்..." என்று ஓடினார்.

அவர் விலகவும் அவள் அந்த சிவலிங்கத்தை பார்த்தாள். மொழு மொழுப்பான அதன் மேல் தன் கண்ணீரால் அபிஷேகம் செய்தது அவள் நினைவில் அலைபாயத் தொடங்கியது. என்ன இது? எங்கிருந்து இந்த மாதிரி எண்ணங்கள் உருவாகின்றன. நான் பிறந்ததில் இருந்து ஒருமுறை கூட வந்திராத இந்த இடத்தில் இருப்பதெல்லாம் எப்படி எனக்குள் காட்சியாகிறது? இந்த மனிதரை நான் எதை வைத்து 'அருணாசலசாமி' என்று என்னையுமறியாமல் கூப்பிட்டேன்.

அவள் தனக்குள் கேட்டுக்கொண்ட போது அவர் ஏராளமான குப்பைமேனிச் செடிகளோடு வந்தவராய் அதன் தலைப்பூக்களை வெட்டி விட்டு தண்டு இலை என்று சகல பாகத்தையும் உள்ளங்கையில் வைத்து கசக்கியவர் அப்படியே கசக்கிய அந்த பச்சிலையை அவள் காலில் கல் குத்திய இடத்தில் வைத்து அழுக்கியவராக தன் அழுக்கு வேட்டியை கிழித்து கட்டியும் போட்டார்.

"ஐயோ சாமி... வேட்டிய கிழிக்காதீங்க." என்றவளை புன்னகையோடு பார்த்தவர் "நான் சன்யாசி கோமணம் கூட எனக்கு போதும்மா. நீ என்ன அப்படியா? நீ ஒரு அதிசயம்.... அப்ப உன்னை என்னால காப்பாத்த

முடியல. ஆனா இப்ப உன்னை நான் விட்றமாட்டேன். விடவேமாட்டேன்' என்றார்.

"நீங்க பேசறதே எனக்கு புரியல... ஆனா உங்களோடு பல காலம் பழகின மாதிரியும் இருக்கு. நான் இந்த மதுரைக்கு மதுரைல இந்த பகுதிக்கும் இப்பதான் வந்துருக்கேன். ஆனா இதுக்கு முந்தி பல தடவை வந்தது மாதிரி இருக்கு..."

"இந்த ஜென்மத்துக்கு இது முதல் தடவையா இருக்கலாம். ஆனா உன் முன் ஜென்மமே இங்க தானே கண்ணு..."

அவர் அப்படி கூறவும் சிலீர் என்ற ஒரு உணர்வு ஸ்ரீதேவியிடம்...

## 12

அன்று

ஜீவாவின் பேச்சைக் கேட்டு காளியம்மாள் அதிர்ந்தாள்.

"என்னடா சொல்றே? அவர் வரமாட்டாரா? எப்படிடா?" என்று கேள்விகளாய் கேட்டாள்.

"ஆமாங்கா... அந்த கார்ல பிரேக்கை பிடுங்கிட்டேன். அதிக பட்சம் அஞ்சு கிலோ மீட்டர் வரை சமாளிச்சி ஓட்டிடலாம் அப்புறமா எல்லாம் கழண்டுடும்... அந்த மாதிரி ஒரு ஏற்பாட்டை பண்ணிகிட்டு தான் வந்தேன்."

"அப்ப அதுக்கு தான் காரை எடுத்துகிட்டு போனியா?"

"ஆமா... என் குறி அந்த அமுதன் மேல... அவன் வண்டிய எடுக்கும் போது மாட்டிச் சாகணும் இல்ல. கால் கை போய் படுத்த படுக்கையா கிடக்கணும்னு நினைச்சேன். ஆனா விதி இவரை அப்படிச் செய்யப் போகுது..."

"அடப்பாவி... இதை ஏன்டா என்கிட்ட சொல்லல..."

"என்ன சொல்லல.... அமுதனை நான் ஒரு கை பாக்கறேன்னு தான் சொன்னேனே...'

"அதுவும் சரிதான்... ஆமா இவர் எதை வெச்சுடா நம்பளை துரத்துவேன்னாரு ...'

"எல்லாம் பூசாரி விஷயமா தான் இருக்கும்...''

"பூசாரி விஷயமா?"

"ஆமாம்... அவன்கிட்ட நீ வசிய மருந்து வாங்கினதுல இருந்து தான் எல்லா சிக்கலும் ஆரம்பம்."

"அதை எல்லாம் தான் சரி பண்ணிட்டேனே..."

"அப்படின்னு நீ நினைச்சுகிட்டு இருக்கே. ஆனா அங்க ஏதோ நடந்துருக்கு..."

"ஏதோன்னா?"

"பூசாரிக்கு போன் போடறேன்.... தானா தெரிஞ்சிட்டு போவுது."

"கோவில்ல ஏதுடா போன்... நீ பப்ளிக் பூத்துக்கு தான் பண்ணனும்."

"அப்படியே பண்ணி பூசாரிய பேசச் சொல்றேன். உன் புருஷன் இப்ப பூசாரிய பாக்கதான் போய் கிட்டிருக்காரு. ஆனா போய் சேரமாட்டாரு! பார்... ஆக்சிடென்ட்டுன்னு தகவல் வரப்போறது..."

"நீ முதல்ல பூசாரியக் கூப்ட்டு பேசு. எனக்கு நெஞ்சை அடைக்குது..."

"இப்ப தான் எனக்கு சந்தோசமா இருக்கு.... இனி இந்த பாளையக்கார குடும்பம் நூறு சதவிகிதம் நம்ப கைலக்கா...."

"நீ முதல்ல பூசாரிய கூப்ட்டு பேசு."

காளியம்மாள் தூண்டிட ஜீவாவும் பூத்துக்கு அழைத்து பூசாரிய ஐந்து நிமிடத்தில் பேசச் சொன்னான். அவ்வளவையும் அக்கவுண்டன்ட் மாணிக்கம் தன் அலுவலக அறையில் இருந்து பார்த்தபடி இருந்தார். அவருக்கு பக்பக்கென்று இருந்தது.

தேவி அவள் அறையில் இருந்தாள். அவள் மனதுக்குள் அமுதன் பொங்கி வழிந்து கொண்டிருந்தான். அவன் உருவை கற்பனையாக மனதில் எண்ணி ஒரு நோட்டில் வரைவதற்கு முயன்று கொண்டிருந்தாள்.

சரியாக ஐந்து நிமிடம்!

தேவியின் பென்சில் அமுதனை ஓரளவு வரைந்து விட்டிருக்க பூசாரியும் புறத்தில் ஜீவாவிடம் பேச ஆரம்பித்திருந்தார்.

"பூசாரியா?"

"ஆமாம் தம்பி..."

"அங்க என் அத்தான் வந்தாரா?"

"அத்தானா... அது யாரு?"

"எங்க அக்கா புருஷன் அதாவது பாளையக்காரர்..."

"ஐயயோ அவர் வந்து போய் பிரச்சனையாகி நானும் உங்களுக்கு தகவல் தந்து நீங்க தான் சுதாரிச்சிட்டீங்களே தம்பி..."

"அது இப்ப ரொம்ப பழைய கதை. இப்ப கூட அவர் உங்கள பாக்கதான் வந்துகிட்டிருக்கார்...."

"என்னை பாக்கவா.... ஐய்யோ எதுக்கு?"

"இது என்ன கேள்வி.... அவருக்கு இன்னும் சந்தேகம் முழுசா தீரலை தையும் களவுமா பிடிச்சி இழுத்துகிட்டு வரேன்னு சொல்லிதான் போயிருக்காரு."

"என்ன தம்பி ஏதேதோ சொல்றீங்க. இப்பதான் பணத்தை கொடுத்து பாராட்டினீங்க. அதுக்குள்ள இப்படியா?"

"என்னது பணத்தை கொடுத்து பாராட்டினோமா?"

"ஆமா... அம்மா நான் தகவல கொடுத்ததுக்காக ஒருத்தர்கிட்ட பணம் கொடுத்து விட்டாங்களே..."

"என்ன பூசாரி உளர்றீங்க. நாங்க அப்படி எதுவும் செய்யல ... யாரகிட்டயும் பணமும் கொடுத்து விடலை...''

"அய்யோ பணத்தை கொண்டுகிட்டு வந்து கொடுத்தாங்களே.... அம்மாதான் சமயத்துக்கு தகவல் கொடுத்ததுக்கு சன்மானம் கொடுத்தாங்கன்னும் சொன்னாங்களே..."

"நானோ அக்காவோ அப்படி எல்லாம் செய்யல. இப்படி எதாவது நடந்திருக்கலாம்னு தான் இப்ப போன் பண்ணச் சொன்னேன். என் யூகம் சரியா தான் இருக்கு. பணத்த கொடுத்து விட்டது என்னோட அத்தான். அதை வெச்சே உங்கள் பிடிக்க இப்ப வந்துகிட்டிருக்கார்.

பயப்படாதீங்க.... அவரால உங்களுக்கு பிரச்சினை எதுவும் வராது. ஏன்னா அவர் உங்கள் பாக்க வரவே போறதில்ல. கார் பிரேக் கொஞ்ச நேரத்துல கழண்டுக்கற மாதிரி ஒரு செட்டப்புல தான் நானே வண்டிய கொண்டு வந்தேன். அது நான் அந்த டிரைவருக்கு வெச்சகுறி. ஆனா என் அத்தான் அதுல சிக்கிட்டாரு. அதுவும் இப்ப நல்லதுக்கு தான். அதிர்ஷ்டம் எப்பவும் எங்க பக்கத்துலதான் இருக்குது..."

ஜீவா சிரித்தான். போனையும் கட் செய்தான். காளியம்மாளிடம் ராஜரத்னத்தின் தந்திரத்தையும் போட்டு உடைத்தான். அவள் மோவாயில கை வைத்துக் கொண்டாள். சகலத்தையும் பார்த்தபடி இருந்த மாணிக்கத்துக்கு நெஞ்சை அடைத்தது. காலம் இப்படியா அசுரர்களுக்கு சாதகமாக மாறும்.... தர்மத்திற்கு சக்தியே கிடையாதா?

இந்த உலகில் நல்லவர்களுக்கே காலமில்லையா? அவர் மனதுக்குள் துடித்தார். தன் எஜமானனுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது என்று சுவற்றில் தொங்கியபடி இருந்த முருகன் படத்தையும் பார்த்து கண்ணீர் விட்டார்.

கச்சிதமாக தொலைபேசி அலட்டியது. காதை கொடுத்தார். கார் ஆக்சிடெண்ட் ஆகி ராஜரதனம் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் தகவல் கச்சிதமாய் வந்து சேர்ந்தது.

ஜீவா உள்ளுக்குள் பூரித்து போனான். காளியம்மாள் தன் நடிப்பை தொடர முடிவு செய்தாள்.

"அயயோ... இப்படி அவசரபபட்டு காரை எடுததுட்டு போய கடைசில இப்படி ஆயிடிச்சே..." என்று ஒப்பாரி வைகக தொடங்கினாள.

தேவியும் கேட்டுவிட்டு ஓடி வந்தாள.

அவளது ஆதார பலமே ராஜரத்னம் தான்!

அவரே இப்போது உயிருக்கு போராடியபடி...

அவளால் தரை மேல் நிற்க முடியவில்லை.

மயக்கம் வந்து ஆககிரமித்துக் கொண்டது அவளை...

இன்று

அருணாசல சித்தர் ஜென்மக்கணக்கை தொட்டுப் பேசவும் ஸ்ரீதேவியிடம் திகைப்பு.

"என்ன சாமி சொல்றீங்க... நான் முன்ஜென்மத்துல இங்க பொறந்தவளா?"

"ஆமாம்மா... உனக்காக தான் நானும் காத்துகிட்டு இருக்கேன்..."

"என்ன சாமி ஏதேதோ சொல்றீங்க... எனக்கு குழப்பமா இருக்கு."

"இப்ப அப்படிதாம்மா இருக்கும். ஆனா போகப்போக எல்லாம் சரியாகிடும். என் வாக்கும் நம்பிக்கையும் கொஞ்சம் கூட பொய்யாகலைம்மா... நீ வந்துட்டே... வந்துட்டே..."

"சாமி உங்க கூட இப்ப பேசற நிலையலயே நானில்ல. அங்க நிச்சயதார்த்தம் நடக்க இருக்குது. அது ஒரு ஏமாற்று கல்யாணம். என் தோழி சுமதி ரொம்ப பாவம் சாமி. அவளை அந்த ஜீவானந்தம் மகன் மதன் கல்யாணம் பண்ணக் கூடாது. அப்படி நடந்தா என் தோழி இறந்து போயிடுவா சாமி..."

"எல்லாம் எனக்கு தெரியும்மா. படுபாவி அந்த ஜீவானந்தம் அவனை விட பெரியபாவி அந்த காளியம்மா. இவங்க தங்களோட தப்புக்கெல்லாம் தண்டனையை அனுபவிக்கற காலம் வந்துடிச்சிம்மா. அந்த காலம் வந்துடிச்சி..."

"நீங்க பேசறது தொடக்கத்துல இருந்தே புரியல. நான் இப்ப நிச்சயதார்த்தம் நடக்கற இடத்துக்கு போகணும். இந்த நிச்சயத்தை தடுத்து நிறுத்தணும் சாமி..."

"உன்னால முடியாது உன் பேச்சும் இப்ப எடுபடாது."

"அதுக்காக என்னை சும்மா இருக்க சொல்றீங்களா?"

"அப்படி சொல்லலை... புத்திசாலித்தனமா நடந்துக்க நான் வழி சொல்றேன். உன்னால் நிச்சயத்தை நிறுத்த முடியாது. ஆனா அந்த மதனால பாதிக்கப்பட்ட ஒரு பொண்ணு இருக்கா. அவளை தூண்டிவிட்டா காரியம் கச்சிதமா நடந்துடும்."

"அவனுக்கு எத்தன பொண்ணுங்களோட தான் சாமி தொடர்பு..."

"ராஜ குடும்பம்னாலே அந்த விஷயம்லாம் சாதாரணமா வந்துடும்மா... பேச நேரமில்ல புறப்படு. போற வழில ஒரு நகைகடை இருக்கு அதுக்குள்ள பதமினிங்கற ஒரு பொண்ணு வேலை பாக்கறா. அவதான் இந்த மதனோட அந்தரங்க காதலி. அவ வரைல இந்த நிச்சயதார்த்தமெல்லாம் எதுவும் தெரியாது. நீ போய் பிரசண்ட் பண்ண நகை வாங்க வந்த மாதிரி விஷயத்தை அவளுக்கு சொல்... மிச்சத்த அவ பாத்துப்பா. இந்த நிச்சயதார்த்தமும் நின்னுடும். அது நிறகவும் நீ புறப்பட்டு உன் இருப்பிடத்துக்கு போகாதே. இங்க என்ன பாக்கவா. உனக்கு நிறைய வேலை இருக்கு. குறிப்பா உன் மகளை நீ தான் காப்பாத்தணும்."

"என் மகளா?"

"ஆமாம்... உன் முன் ஜென்மத்து பொண்ணு தான்! இப்பவும் அந்த காளியம்மா பிடில இருக்கற மாதங்கிங்கறவ! ஒரு அடிமைப் பொண்ணா பயந்த சுபாவம் உள்ளவளா அவ இருக்கற கொடுமையா நீ பார்த்தே. முதல்ல அவளுக்கு ஒரு நல்ல வழிய காட்டிட்டு தான் மத்த விஷயங்களையே யோசிப்பே..."

"ரொம்பவே என்னை குழப்பறீங்களே..."

"குழப்பமம்மா தெளிய வைக்கறேன். ஆபரேஷன் நடக்கும் போது நிறைய ரத்தம் சேதம் இருக்கும். ஆனா அது தான் வியாதியில இருந்து பெரிய நிவாரணம் தரும். இந்த விஷயமும் அப்படி தான்."

"உங்க ஒவ்வொரு வார்த்தையையும் எப்படி எடுத்துக்கறதுன்னே தெரியல உங்கள் கெஞ்சி கேட்டுககறேன் எனக்கு இப்ப அந்த பங்களாவுக்கு போக வழி காட்ட முடியுமா?"

"சொல்றேம்மா... மறக்காம வழியில இருக்கற நகைக்கடைக்கு போய் நான் சொன்ன மாதிரி மட்டும் செய் உன் காரியம் சுலபமாயிடும்.

அந்த பொண்ணே நிச்சயதார்த்தம் நடக்கற பாளையக்கார பண்ணை பங்களாவுக்கும் கூட்டிகிட்டு போயிடுவா. எல்லாம் அதிகபட்சம் இரண்டு கிலோ மீட்டா தூரம் கூட இருக்காதும்மா..."

தேவிக்கும் அவர் பேச்சை கேட்பதை தவிர அப்போதைக்கு வேறு வழி இருப்பதாய் தெரியவில்லை. அவர் கை காட்டிய திசையில் நடந்தாள். சில அடி தூரத்திலேயே தார்ச் சாலை வந்தது. அதில் ஒரு பக்கம் திருப்பரங்குன்றம் நோக்கி சென்றது. மறுபக்கம் அவனியாபுரம் எனும் ஊர் நோக்கி நீண்டிருந்தது.

தேவி கெந்திக் கெந்தி திருப்பரங்குன்ற சாலையில் நடக்க தொடங்கினாள். கையில் கெடிகாரத்தை பார்த்தாள்.

மணி மாலை 41/2 ஆகியிருந்தது. நாலரையில் இருந்து ஐந்து மணிதான் நல்ல நேரம்....

வேக வேகமாக நடந்தாள். பரபரப்பான ஜன நடமாட்டமும் நிறைய கடைகளும் இருபக்கமும் கண்ணில் படத்தொடங்கின. பக்கவாட்டில் ஓங்கி உயர்ந்த திருப்பரங்குன்ற மலை. மையமாய் பெரிய கோபுரம் கோபுர நடுவில் பெரிதாய் வேல் சின்னம். அது அவளுக்கு நம்பிக்கை தந்தது. அருணாசல சித்தர் கூறிய நகைகடையும் கண்ணில பட்டது. கண்ணாடி அடைப்புகளுக்குள் நிறைய நகைகள் ஷெல்ப்பில் கண்ணில் பட்டன. இரண்டு பெண்கள் நின்ற படி இருக்க ஒருத்தி மிக நவீனமாக துப்பட்டா சுடிதாரில இருந்தாள. உள்நுழைந்த ஸ்ரீதேவி பதட்டமாய்" ஒரு கிப்ட் ஐட்டம் வாங்கணும்" என்றாள்.

"எபபடிப்பட்ட ஐட்டம்?" அந்த பெண் கேட்டாள. "இபப பாளையககாரர குடும்பத்துல மதனகறவருக்கும் சுமதிங்கற பொண்ணுக்கும் இன்னும் அரைமணி நேரத்துல நிச்சயதார்த்தம் நடக்க இருக்கு. அந்த நேரத்துல பிரசன்ட் பண்ணத்தான்" என்றாள்.

"பாளையக்கார குடும்பமா... பண்ணை வீட்டு பாளையக்கார குடும்பமா?"

"ஆமாங்க... உங்களுக்கு தெரியுமா?"

"நலலா தெரியும்.... நீஙக இப்ப சொன்னது உண்மையா? இப்பவா நிச்சயதாாத்தம?"

"ஆமாம். அதுக்காக தான் அவசர அவசரமா நகை வாங்க வந்தேன்."

"இல்லை... நீங்க தப்பா சொல்றீங்க. மாப்ளை பேர் மதன்னா சொன்னீங்க."

"ஆமாங்க... எதுக்காக திரும்பத் திரும்ப கேக்கறீங்க..." அவள் உடனே சற்று ஒதுங்கி தன் செல்போனை எடுத்து பேசமுயன்று முடியாமல் திரும்பி வந்தாள்.

உடன் இருநத பெண புரிநதது போல சொல்லத தொடங்கினாள.

"பத்மினி.... நான் ஆரம்பித்துலயே சொன்னேன். நீ கேக்கல. கடைசில அவன் தன் பணக்கார புத்திய காட்டிட்டான் பாத்தியா?" என்றிட அந்த பெண்ணிடம் ஒரு ஆவேசம் அவன் புறப்பட ஸ்ரீதேவியும் அவனை பின் தொடரத் தொடங்கினாள்!

## 13

அன்று

தேவி மயக்கம் தெளிந்து. கண் விழித்த போது படுக்கையில் இருந்தாள். அருகில் வேலைக்காரி பொன்னம்மாள் மட்டும் இருந்தாள். தேவி எழவும் மலங்க மலங்க பாத்தாள்.

"பொன்னம்மா ஏன அப்படி பாக்கறே.... அப்பாவுக்கு ஆக்சிடென்ட்டுன்னு சொன்னாங்களே- இப்ப அப்பா எங்க இருக்காரு? எப்படி இருக்காரு?"

படபடப்போடு கேட்டாள்.

"அதை ஏம்மா கேக்கறீங்க.... இப்ப எல்லாரும் ஆஸ்பத்திரில தான் இருக்காங்க. அப்பா உயிருக்கு போராடிகிட்டிருக்காரு ..."

"ஐயயோ... நான் இப்ப அப்பாவை உடனே பாக்கணுமே எந்த ஆஸ்பத்திரியில இருக்காரு?"

பேச்சோடு தேவி எழுந்து புறப்படவும் தயாரானாள்.

"அம்மா உங்கள இங்கையே பத்ரமா பாத்துக்க சொல்லிட்டு தான் எஜமானியம்மா போயிருக்காங்க. இந்த நிலைல நீங்க வெளிய புறப்பட்டா என் வேலை போயிடும்மா...."

"எனக்கு என் அப்பாவுக்கு என்ன ஆச்சோங்கற கவலை. உனக்கு உன் வேலை பெருசா போயிடிச்சா..." சீறி விழுந்த தேவியை அதற்கு மேல் அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

பங்களாவை விட்டு வெளியே வந்தவள் எதிரில ஒரு டூவீலரில வந்தபடி இருந்தான் அமுதன்.

அவனிடமும் பதட்டம் தெரிந்தது.

"அம்மா ஐயயாவுக்கு ஆக்சிடென்ட்டுன்னு சொன்னாங்க நிஜமாம்மா?" என்று தான் ஆரம்பித்தான்.

"ஆமாம் அமுதன்.... இப்ப அப்பா ஆஸ்பத்திரியில தான் உயிருக்கு போராடிகிட்டிருக்காராம். நல்லவேளை நீங்க வந்தீங்க. வாங்க போவோம்..." என்று கொஞ்சமும் யோசிக்காமல் அவன் டூவிலரின பின்னே ஏறி அமர்ந்தாள். இதை அமுதன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

"அம்மா முதல்ல கீழ இறங்குங்க.... யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க?" என்று படபடப்போடு தன் டூவிலரை விட்டு அவன் இறங்கத் தொடங்கினான்.

"அமுதன்.... யாரைபத்தியும் எனக்கு கவலையில்லை எனக்கு என் அப்பா உயிர் முக்கியம். முதல்ல வண்டிய எடுங்க..."

"ஐயோ அம்மா... நீங்க பாளையக்காரங்க. இப்படி ஒரு டிரைவர் மகனோட டூவீலரில வரக்கூடாது..."

"மண்ணாங்கட்டி.... இப்ப வண்டிய எடுக்கபோறீங்களா இல்ல நான் ஓடியே போகட்டுமா?"

ஆவேசமாக கேட்ட அவளை வெறித்த அமுதன் தயங்கியபடியே நிற்க தேவி ஓடத்தொடங்கினாள். அமுதனும் வேறு வழியின்றி அவளை பின் தொடர்ந்தவனாய் ஒரு இடத்தில் நின்று அவளை ஏற்றிக்கொண்டான்.

அதை எல்லாம் பார்த்தபடியே இருந்த பொன்னம்மாளுக்கு அப்போதே தன்வேலை போய் விட்டதாக தோன்றியது.

*****

திருமங்கலத்தில் இருந்து மதுரை நோக்கி அமுதனின் டூவீலர் வேகமெடுத்தது. அவள் அவன் வயிற்றை சுற்றி தன் வலது கரத்தால பிடித்துக் கொண்டாள். அவனை அது என்னவோ செய்தது. அவளுக்கோ அதுதான் அப்போதைக்கு பெரிய தேவையாக இருந்தது. ஆறுதலாகவும் இருந்தது.

பங்களாவில் இருந்த பொன்னம்மாளை தொலைபேசியின் சிணுங்கல் ஒலி அழைத்தது. ஓடிப்போய் எடுத்து காதைக் கொடுத்தாள்.

"என்னடி... அவ எழுந்திரிச்சிட்டாளா.... இல்ல இன்னும் மயக்கத்துல தான் இருக்காளா?" என்று மறுபக்கமிருந்து கேட்டவள் காளியம்மாள் தான்.

"ஐய்யோ அம்மா.... அது எழுந்திரிச்சு சொல்லச் சொல்ல கேக்காம ஆஸ்பத்திரிக்கு வந்துகிட்டிருக்கும்மா. நான் தடுத்துப் பார்த்தேன் முடியலம்மா..."

"அடிப்பாவி.... அது சரி அவ எப்படி வரா தனியாவா?"

"இல்லம்மா.... அந்த டிரைவர் பையன் அமுதனோட வருதும்மா...."

"என்னடி கொடுமை இது.... அவன் எங்கடி வந்தான் அங்க?"

"என்னம்மா பேசறீங்க.... ஐயாவுக்கு ஆக்சிடென்ட் ஆன விஷயம் ஊருக்கே தெரிஞ்சிருக்கும் போது அவனுக்கு தெரியாதுங்களா?"

"என்னடி வக்கணையா பதில் சொல்றே.... நான் வந்து வெச்சிக்கறேன் உன்ன..." என்று மறுபுறம் அவள் கூவி முடித்திட

"ஆத்தாடி இந்த வீட்டுல வேலைக்கு சேந்ததுக்கு நான் பேசாம சுடுகாட்டுக்கு பொணம் எரிக்க போயிருக்கலாம்" என்று புலம்பத் தொடங்கி விட்டாள் பொன்னம்மாள்!

*****

ஆஸ்பத்திரி! ஒரு புயல் போல் வந்து நின்ற தேவியை காளியம்மாளும் ஜீவாவும் வெறித்தனர். அவளோ அலட்சியமாக அவர்களை கடந்து ஐ.சி.யு வார்டின் முன் சென்று வட்டக் கண்ணாடி வழியாக பார்த்தாள். உள்ளே எதுவுமே தெரியவில்லை. பின்னாலேயே வந்த அமுதன் தயங்கித் தயங்கி நின்றான்.

காளியம்மாளைப் பார்க்கவும் அவனுக்கு அடி வயிற்றில் ஒரு பயப்பள்ளமே விழுந்தது.

"நீ தான் இவளை உன் ஓட்ட வண்டில வெச்சு கூட்டிகிட்டு வந்தியா?" அது ஆஸ்பத்திரி என்றும் பார்க்காமல் வெடிக்கத் தொடங்கினாள் காளியம்மாள்.

"நான் வேண்டாம்னேன்.... அவங்கதான் கேக்கல...."

"சரி சரி... வந்து விட்டுட்டேல்ல இனி நீயோ இல்ல உன் அப்பனோ வேலைக்கே வரக்கூடாது. உன்ன நான் வேலையெ விட்டு தூக்கிட்டேன். ஓடிப்போயிடு...."

"அம்மா.... அய்யாவை மட்டும் நான் ஒரு தடவை பாத்துடறேன்."

"நாங்களே பாக்க முடியாமதான் இங்க நிக்கறோம். இதுல நீ பாத்து என்ன புடுங்கப் போறே இடத்த காலி பண்ணுடா...."

"இல்லம்மா... உங்க பேச்சே சரியில்ல எங்கியோ தப்பு நடந்துருக்கு..."

"என்னடா தப்பு கிப்புன்னு அதிகம் பேசறே..."

"அதிகம் பேசல... நீங்க பதட்டப்படறதுல இருந்தே தெரியுது. ஏதோ சதி பண்ணியிருக்கீங்க..."

அமுதனும் துணிந்து பேசத்தொடங்க ஜீவா தன் முழுக்கை சட்டையை ஏற்றிவிட்டுக் கொண்டு முறைப்போடு முன்னால வந்தான். அதே சமயம் டாக்டரும் வந்தார்.

அவர்கள் கவனம் அவர் பக்கமாய் திரும்பியது. "டாக்டர் அய்யாவுக்கு எப்படி இருக்கு.... உயிருக்கு ஒண்ணும் ஆபத்து இல்லையே...." அமுதன் கேட்க

"உயிருக்கு எந்த ஆபத்துமில்ல... ஆமா இங்க அமுதன் யார்?"

"நான் தான் டாக்டர்..."

"சார் உங்கள தான் பாக்கணும்னு சொன்னார்...."

"என்னையா?"

"ஆமாம்... நீங்க மட்டும் வாங்க..."

"டாக்டர் என்னவிட தேவிம்மா அவங்க அப்பாவை பாக்கறது ரொம்ப முக்கியம்."

"அப்ப அவங்கள மட்டும் கூட்டிகிட்டு உள்ள வாங்க...."

டாக்டர் காளியம்மாளையும், ஜீவாவையும் லட்சியமே செய்யவில்லை. அமுதனும் தேவியை அழைத்துக்கொண்டு டாக்டரை பின் தொடர்ந்தான்.

"டேய் ஜீவா...''

என்னக்கா இது... இந்த ஆள் பொழைச்சிகிட்டான் போல் இருக்கே... இனி நம்ம பொழப்பு அவ்வளவு தானா?"

காளியம்மாள் பதறத் தொடங்கினாள்.

இன்று

பதமினி என்கிற அவள் புத்திசாலித்தனமாக ஆட்டோவை பிடித்தாள் அது புறப்படும் போது ஸ்ரீதேவியும் தொற்றிக் கொண்டாள்.

"நீ எங்க என் கூட வரே?"

"நான் சொல்லப் போய் தானே உனககு உண்மை தெரிஞ்சது?"

"அதனால....?"

"கல்யாணப் பொண்ணு என் தோழி. அவ வாழககையை நான் காப்பாத்தியாகணும் அந்த மதனுககு உன்ன மாதிரி இன்னும் எத்தன பேர?"

"யாருக்கு தெரியும்.... ஆனா அந்த மதன் என்கிட்ட இருந்து தப்பிக்க முடியாது...."

"ஆட்டோ ஓடியபடி இருக்க இருவரிடமும் வாக்குவாதம்!'

"அவன் உன்னை யாருன்னே தெரியாதுன்னு சொன்னா...?"

"சொன்னா என்ன.... கட்டாயம் சொல்வான். ஆனா என் வயித்துல வளர்ற பிள்ளை அவன் தான் அப்பான்னு நிரூபிக்கும்."

"அப்ப நீ காப்பமா?"

"ஆமா..." அவள் சொல்லும் போதே கண்ணீர் வழிந்தது. ஆட்டோவும் பாளைக்கார பண்ணை வீட்டு முகப்பில நின்றது. இருவரும் இறங்கி உள்ளே ஓடத்தொடங்கினர்.

வழியெங்கும் மாவிலைத் தோரணங்கள்.... நிச்சயதார்த்தத்திற்கு வந்தவர்களின் காரகள்... ஜே.ஜே.... என்று கூட்டம்!

உள்ளே செல்லச் செலல மேளதாள சப்தமும் கேட்டது. ஸ்ரீதேவியையும் அந்த பதமினியையும் எங்கோ வெளியே போய் விட்டு அவர்கள் பறக்க பறக்க வருவதாகத்தான் கருதினாரகள்.

நல்லவேளை....

வெற்றிலை பாககு தட்டு இன்னும் மாற்றிக் கொள்ளப் படவில்லை. மேடையில சிம்மாசனம் போன்ற நாற்காலியில் ஒருபுறம் மதனும அருகில் ஸ்ரீதேவியின் தோழி சுமதியும் அமர்ந்திருக்க ஸ்ரீதேவி பதமினியோடு வந்து நின்றாள். ஸ்ரீதேவியை பார்தத சுமதியிடம பெரும திகைப்பு. எப்படி வந்தாள...? யார் அழைத்து வந்திருப்பார்கள் என்று அவள் தனக்குள் கேள்விகளுள் மூழ்கிய போது மதனும் பதமினியை பார்த்தான்.

அவளை அவன் கொஞ்சம கூட எதிர்பார்க்கவில்லை. அவன் முகம் அஷ்ட கோணலாக மாறியது. அமிலத்தை சப்பியவன் போல ஆனான். அதை அவன் அபபாவான ஜீவானந்தமும் கவனித்தார். அவன் அவரை அழைத்து ஏதோ சொல்வதற்குமுன் பதமினி அவர்கள் எல்லோர் முன்னாலும

"நிறுத்துங்க... இங்க என்ன நடக்குது... எனக்கு துரோகம் பண்ணிட்டு இங்க இவன் மாப்பிள்ளையா உட்கார்ந்திருக்கான்.

இவனுக்கு இன்னொரு கல்யாணமா?" என்று வெடித்தாள்.

எல்லோருமே திகைத்துப்போய் பார்த்திட பாய்ந்து வரத் தொடங்கினான் ஜீவானந்தம்.

"ஏய்... யார் நீ... இங்க வந்து என்ன சவுண்டக் கொடுக்கறே?"

"சவுண்டுதான்... வாழக்கையை இழந்துடுவோம்கற நிலைல சவுண்டக் கொடுக்காம என்ன செய்யச் சொல்றீங்க..."

"உளறாதே.... முதல்ல வெளிலபோ...."

"போக மாட்டேன். இந்த மதன என்னை ஏமாத்திட்டு இந்த பொண்ணு கழுத்துல தாலி கட்டப் பாக்கறான். இதை நான் அனுமதிக்க முடியாது."

அவளை அடுத்து பேச விடாத படி இரண்டு பேர் அவள் வாயை மூடி அப்படியே குண்டுக்கட்டாக தூக்கிச் செல்லத் தொடங்கினர். அதைப் பார்த்த ஸ்ரீதேவி.

"என்ன அநியாயம் இது.... அவ என்ன சொல்றான்னு முழுசா கேளுங்க..." என்று இடையில புகுந்து கத்தினாள்.

அப்போது தான் சுமதிக்கும் அவள் உறவினர்களுக்குமே விஷயம் விபரீதமாக போய் கொண்டிருப்பது தெரிந்தது.

சுமதி அருகில் சென்ற ஸ்ரீதேவி அவள் காதில நடந்து முடிந்ததை கூறவும் அவளிடம் உறைந்து விட்ட ஒரு தன்மை.

"என்னம்மா.... என்னாச்சு.... அந்த பொண்ணு ஒரு பைத்தியம். எங்க கல்யாணம் நடந்தாலும் இப்படிதான் வந்து கலாட்டா பண்ணுவா அவளோட நோக்கமே பணம் புடுங்கறது தான்...."

காளியம்மாள் இடையில புகுந்து சமாளிக்கப் பார்த்தாள். ஆனால் சுமதியின் அப்பா அம்மா சுதாரிக்கத் தொடங்கினர்.

"இல்லைங்க... தொடக்கத்துல இருந்தே இங்க நடக்கற எதுவும் நல்ல விதமா தெரியல. ஒரு மணி நேரம் முன்னமேயே நடந்து முடிய வேண்டிய நிச்சயதார்த்தம் ஏன் இவ்வளவு நேரம் இழுத்துகிட்டு போச்சின்னே தெரியல. மாப்ளைய பார்த்தா கொஞ்சம் போதைல இருக்கற மாதிரி வேற தெரியுது .. இங்க தப்பா ஏதோ நடக்குது..." என்றார் சுமதியின் மாமாக்களில் ஒருவர்.

அட நீங்க வேற... பெரிய இடத்து கல்யாணம்னா பணம் புடுங்கலாம்னு இப்ப ரொம்பபேர் அலையறாங்க நீங்க அதை புரிஞ்சிக்குங்க...."

"அப்ப அந்த பொண்ணை போலீஸ்ல ஒப்படைக்க வேண்டியது தானே.... எதுக்கு கட்டி தூக்கிட்டு போனீங்க?"

"அதுக்கெல்லாம் இப்ப நேரமில்ல.... முதல்ல தட்ட மாத்திக்குங்க... மற்ற விஷயங்கள் பிறகு பேசிக்கலாம்..."

"அது சரி.... ஏதோ நாங்க கடைசி நிமிசத்துலயாவது தப்பிச்சோமேன்னு நினைக்கறோம். நீங்க என்னடான்னா கவுக்க பாக்கறீங்களே...."

பேச்சு வளர்ந்து கொண்டே போனது சுமதி கண்ணீருடன் ஸ்ரீதேவியை பார்த்தாள்.

பார்வையே "சாரிடி.... உன்னை நான் தப்பா புரிஞ்கிட்டேன்" என்றது. அங்கே அப்போது மாதங்கியும் வந்திருந்தாள். நடப்பதை எல்லாம் திருதிருவென பார்த்தபடி இருந்தவளை காளியம்மாள் வேகமாய் அங்கிருந்து அழைத்துச் செலலத் தொடங்கினாள்.

மாதங்கியை பார்க்கவும் ஸ்ரீதேவிக்குள்ளேயும் ஒரு பாச நெகிழ்வு. அருணாசல சித்தர் பூர்வ ஜென்மத்தில் அவள் தான் உன் மகளாக பிறந்தவள் என்று சொன்னது காதில் ஒலித்தது. அப்படியே காளியம்மாளை பின் தொடரத் தொடங்கினாள்!

# 14

அன்று

ஐ.சி.யுவில் ஆக்சிஜன் ட்யூப் உதவியுடன் மூச்சு விட்டபடி இருந்த ராஜரத்னம், தேவியும் அமுதனும் வருவதைப் பார்க்கவும் சற்று பரவசமானார். அப்படியே அவர் பார்வை அருகில் வேறு யாராவது இருக்கிறார்களா என்றும் ஒரு சுழற்சியோடு பார்க்க முனைந்தது.

யாரும் இல்லை.... சற்று தள்ளி ஒரு பெட்டில ஒரு ஆக்சிடெண்ட் ஆனவர் மட்டும் ராஜரத்னம் போலவே கிடந்தார். அவர் அருகில் நர்ஸ் ஒருத்தி இருந்து, அவருக்கு கட்டுபோட்டபடி இருந்தாள்.

தேவி ராஜரத்னத்தை பார்க்கக் கூடாத கோலத்தில் பார்க்கவும் வேகமாக இறங்கிச் சென்று அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு அப்பா என்று கண்ணீர் விடத்தொடங்கினாள்.

"தேவி அழுவாத... எனக்கு எதுவுமில்லை நான் தப்பிச்சிட்டேன்... அமுதா இப்படி இந்த பக்கம் வா. வாஸ்தவத்துல எனக்கு நடந்தது தற்செயலான விபத்து இல்லை.... திட்டம் போட்டு செய்யப்பட்ட கொலை முயற்சி" என்றவரை திகைப்போடு பார்த்தான் அமுதன்.

"கொலை முயற்சியும் என் மேல இல்லை.... உன்மேல்! ஏன்னா நீ தானே என் கவனத்துக்கு எல்லா உண்மைகளையும் கொண்டுகிட்டு வந்தவன்...."

"அப்பா என்னப்பா சொல்றீங்க..."

"ஆமாம்மா.... எல்லாம் காளியம்மாளும், அவ தம்பியான அந்த ரவுடிப்பய ஜீவாவும் பண்ண வேலைம்மா, கார்ல பிரேக் லைனிங்கை லூசாக்கற மாதிரி

செட் பண்ணி வெச்சு பெரிய திட்டமே போட்டுருக்காங்க. ஒருவேளை அமுதன் காரை எடுத்துப் போய் இருந்தா அவன் சாகணும்கறது தான் அவங்க திட்டம்."

"ஐயோ என்ன கொடுமைப்பா இது ...''

"கொடுமை தாம்மா.... இந்த கொடுமைக்கு நான் சரியான பதிலடிய அவங்களுக்கு தரபோறேன...''

"போலீசுக்கு போனா சாட்சியிருக்கான்னு கேப்பாங்க. காளியம்மாளும் சட்டத்தையே விலைக்கு வாங்க தெரிஞ்சவ அதனால் எந்த அமுதனை கொல்ல முயற்சி செஞ்சாங்களோ அந்த அமுதன் தான் இனி நம்ம பாளையக்கார குடும்பத்துல எல்லாம்...''

ராஜரத்னம் என்ன சொல்ல வருகிறார் என்பது அமுதனுக்கு புரியவில்லை ஆனால் தேவிக்கு புரிந்தது.

"அப்பா...." என்றாள் பூரிப்பாய்.

"அமுதா... உன் அப்பா அம்மாவை வரச்சொல்... புறப்படு" என்றார் அவரும்.

"ஐயா நீங்க என்ன சொல்றீங்க?"

"போய் உன் அம்மா அப்பாவை வரச்சொல்... அப்புறமா காளியம்மாளையும் அந்த ஜீவாவையும் வரச்சொல்லிட்டு ரெண்டு பேரும் கிளம்புங்க...''

"உங்க உடம்புக்கு ..."

"எனக்கு ஆயுசு நூறு.... இல்லாட்டி எனக்காக ஒரு எருமை கார்ல அடிபட்டு செத்துருக்குமா இல்ல நான் தான் தப்பி இருப்பேனா?"

"இருந்தாலும் பயமா இருக்குங்கய்யா..."

"பயப்படக் கூடாது... தப்பு செய்யத்தான பயப்படணும். இங்க தப்பு செய்யறவன் தைரியமா தப்பு பண்றான். நல்ல மனசோட நாம அவங்க முன்னால பயப்படணுமா? கூடாது!"

ராஜரத்னம் தீர்க்கமாக பேசினார். இருவரும் வெளியே வந்தனர். தேவி அமுதனோடு ஒட்டி உரசிக்கொண்டு வந்தாள்.

"அப்பா சொல்றது உங்களுக்கு புரியலியா?'' என்றும் கேட்டாள். அப்படி கேட்ட போது அவள் குரலில் வெட்கம் இழையோடியது.

அமுதன் மௌனம் சாதித்தான். அவளின் வெட்கம் கலந்த பேச்சு அவனது மௌனம் எல்லாமே காளியம்மாள் வயிற்றில் புளியை கரைத்தது. அடுத்து அவர்கள் தான் உள்ளே சென்றனர்.

காளியம்மாள் ஒப்பாரி பாடத் தொடங்கியவளாகத் தான் ராஜரத்னத்தின் படுக்கையை நெருங்கினாள். ஜீவாவும் கூருதி சேர்த்துக்கொள்ள டாக்டர் "உஸ்ஸ்" என்று உதட்டில் கை வைத்து அதட்டி அமைதிப்படுத்தினார்

இருவரும் ராஜரத்னத்தை மெல்ல நெருங்கி "மாமா...." என்று இழுவையான குரலில் ஆரம்பித்தான் ஜீவா...

"ஐயோ என்னங்க இது கொடுமை... ராஜா மாதிரி நடப்பீங்களே இப்ப இப்படி சாஞ்சு கெடக்கறீங்களே...."

காளியம்மாளும் தன் பங்குக்கு பாடத் தொடங்க இருவரையும் இமைக்காதபடி வெறித்துப் பார்த்தார் ராஜரத்னம். அந்த பார்வையிலும் ஆயிரம் அர்த்தங்கள். ஜீவா அதை கவனித்தவனாக திருதிருவென காளியம்மாள் பக்கம் திரும்பினான். காளியம்மாளும் மெல்ல அமைதியாகி முகத்தில் பலவித உணர்ச்சிகளை காட்டத் தொடங்கினாள்.

"என்னடா.... நான் பொழைச்சது உனக்கு அதிர்ச்சியா இருக்கா?" என்று ராஜரத்னமும் மெல்ல ஆரம்பித்தார்.

"ஐயோ மாமா என்ன சொல்றீங்க...'' ஜீவா நடிக்க தொடங்கினான்.

"டேய்... எனக்கு உன்னப்போல ரெண்டு பங்கு வயது. என்கிட்ட நடிக்காதே.... உன் ஒவ்வொரு அடியையும் நோட்டம் போட்டு உன் ஜாதகத்தையே கைல வெச்சிருக்கேன் நான். நீ என்ன செய்தே என்ன செய்யப் போறேன்னு எல்லாம் எனக்குத் தெரியும். அமுதனை கொலை பண்ண நீ போட்ட திட்டத்துல நான் வந்து சிக்கினதுக்கு பேர்தாண்டா விதி...." என்றவரை மலைக்க பார்த்தான்.

"என்ன காளியம்மா.... நான் சாகாம இப்படி உசுர் பிழைச்சு பேசிகிட்டிருக்கறத நீ கொஞ்சம் கூட எதிர்பார்க்கல இல்ல...."

அடுத்த குறியாக காளியம்மாளைப் பிடிக்கவும் அவள் அழ ஆரம்பித்தாள்.

"அப்படி எல்லாம் சொல்லாதீங்க.... எந்த பொண்ணாவது தன் பூவையும் பொட்டையும் தானே அழிச்சிக்குவாளா....? நீங்க இருந்தா தானேங்க எனக்கும் மதிப்பு....?"

"நீ எப்பவும் நல்லா பேசுவே காளியம்மா.... வாய்தான் உனக்கு பலமும் கூட... அதுல நீ பாயசம் காய்ச்சற மாதிரி யாராலயும் காச்ச முடியாது. வாஸ்தவத்துல உங்க ரெண்டுபேர் மேலயும் நான் போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுத்து உள்ள தள்ளியிருக்கணும். அவ்வளவு தகிடு தித்த வேலைய செய்துருக்கீங்க.... கோவில பூசாரிகிட்ட வசிய மருந்து வாங்குனதுல இருந்து, கார்ல பிரேக்கை புடுங்கி விட்டது வரை நான் எல்லாத்தையும் சொன்னா உங்க கதி என்னாகும் தெரியுமா?"

ராஜரத்னம் அவ்வளவு நேராக விஷயத்துக்கு வருவார் என்று காளியம்மாள் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. வியர்த்துப் போய் விறுவிறுக்கப் பார்த்தாள். ஜீவாவும் வியர்த்து வடிய நின்றான்.

"நான் போலீசுக்கு போறதுக்கு முந்தி உங்க கண் எதிர்ல ஒரு நல்ல காரியத்தை முதல்ல நடத்தி முடிக்க ஆசைப்படறேன். இந்த நல்ல காரியம் உங்க வரைல உங்களுக்கான ஜெயில் தண்டனையை விட கொடிய தண்டனையாகும். அது என்னன்னு தெரியுமா?"

சஸ்பென்சோடு கேட்டார் ராஜரத்னம்

இன்று

காளியம்மாள் மாதங்கியை அழைத்துக்கொண்டு அந்த தோட்ட வீட்டின் மாமமான பகுதி ஒன்றை நோக்கி நடந்தாள். மாதங்கி தேங்கி நிற்கவும் பிடித்து இழுத்துக் கொண்டு வேகமாக செல்லத் தொடங்கினாள். பின் தொடர்ந்த ஸ்ரீதேவிக்கு ஏதோ தப்பு நடப்பது போல தோன்றியது.

அது உண்மை என்பது போல ஒரு வயதான ரவிக்கை கூட தரித்திராத கிழவி ஒருத்தி மாதங்கியை அவளிடம் இருந்து பிடுங்கிக் கொள்வது போல இழுத்துக் கொண்டாள்.

அந்த கிழவி காப்புக் காயத்துப் போய் கொடூரமாக இருந்தாள். தலை முடியெல்லாமும் சடை பிடித்துப் போயிருந்தது கையில் ஒரு பெரிய கம்பு வைத்திருந்தாள். அவள் வசம் மாதங்கி செல்லவும்.

"பாத்து பத்ரமா கூட்டிகிட்டு போ... இவ எக்காரணம் கொண்டு வெளிய வந்துடக் கூடாது" என்றாள் காளியம்மாள். சொல்லிவிட்டு திரும்பியவள் எதிரில் ஸ்ரீதேவி ஒரு கறுப்பு நிழலாக தெரிந்தாள்.

காளியம்மாளுக்கு பகீர் என்றது.

"யாரது அங்கே?" என்றாள் ரௌத்ரமான குரலில்! அந்த குரலே ஸ்ரீதேவியை அங்கிருந்து திரும்பி ஓடும்படிச் செய்தது.

காளியம்மாளும் துரத்திக்கொண்டு வந்தாள். வந்த இடத்தில சுமதி குடும்பத்துக்கும் ஜீவானந்தத்துக்கும் வாக்குவாதம் தான் முற்றியிருந்தது.

"எங்கள விடுங்க... நாங்க இப்பவே கிளம்பறோம்! இந்த சம்பந்தமே எங்களுக்கு வேண்டாம்..."

"அது எப்படிங்க... இவ்வளவு தூரம் வந்துட்டு அப்படியே திரும்பிப் போனா எங்க மானம் மரியாதை என்னாகறது?"

"நல்ல பிள்ளைய பெத்துட்டு மானம் மரியாதை பத்தி பேசுங்க. போதைக்காரன பெத்துட்டு மானம் மரியாதை பத்தி எல்லாம் பேசாதீங்க..."

வாக்கு வாதம் முற்றிவிட்ட நிலையில ஸ்ரீதேவி சுமதியின் பின்னால் போய் ஒன்றும் தெரியாதவள் போல நின்று கொண்டாள். காளியம்மாளும் தேடி வந்தவளாக.

"டேய் இங்க தப்பா ஒருத்தி இருக்காடா... என் பின்னாலயே வந்து வேவு பாத்த அவ யாருன்னு எனக்கு தெரியணும்' என்று கத்தத் தொடங்கினாள். காளியம்மாள் கத்துவதும், ஸ்ரீதேவி பம்முவதும் சுமதிக்கு என்ன நடந்தது என்பதை புரியச் செய்துவிட்டது.

நடுவில் சுமதியின் அப்பா அம்மா முதல் சகலமும் கொண்டு வந்த சீர் தட்டுக்களோடு வெளியேறத் தயாராகி விட்டனர்.

"வேண்டாங்க... எதுவா இருந்தாலும் பேசி சரி செய்துக்கலாம். இப்படி உறவை முறிச்சிகிட்டு போகாதீங்க. கல்யாண செலவு அவ்வளவையும் கூட நாங்களே ஏத்துக்கறோம். இது எங்க மான மரியாதை சம்பந்தப்பட்ட விஷயம்..."

என்று ஜீவா சார்பாக ஒருவர் எவ்வளவோ பேசிப் பார்த்தார்.

சுமதி குடும்பத்தார் கேட்பதாக தெரியவில்லை. விறுவிறுவென அந்த தோட்டத்து வீட்டின் வாசல் பகுதிக்கு சென்று விட்டனர். ஸ்ரீதேவி மனதிலோ மாதங்கி பற்றிய எண்ணமாகவே இருந்தது.

அவளின் குழந்தை முகம் அவளைப் பார்த்து கதறிக்கண்ணீர் வடிப்பது போலவும் தோன்றியது.

அங்கு நிலவிய சர்ச்சையில் காளியம்மாளை ஜீவானந்தம் தனியே கூட்டிக்கொண்டு போய் ஏதோ சொன்னபடி இருக்க அடியாட்கள் போல சிலர் சுமதி குடும்பத்தினர் வெளியே போவதை தடுத்தவர்களாக

"நீங்களே சம்மதிச்சாலும் இனி உங்க சம்மதம் எங்களுக்கு வேண்டாம் உங்க பொண்ணு சென்னைல யாரையோ காதலிக்குதாமல..."

என்று பேச்சை அப்படியே திசைமாற்றினான் ஒருவன். "டேய் உன் நாக்கு அழுகிப் போகும்.... கெஞ்சிப் பாத்து முடியாம போகவும் கொச்சப்படுத்த பாக்கறீங்களா?"

"கொச்சப்படுத்தறதா சரிதான் உன் பொண்ணுக்கு ரெண்டு தடவை அபார்ஷன் நடந்துச்சின்னும் கேள்விபட்டோம். எல்லாம் இப்பதான் தெரியவருது. முன்னாடியே தெரிய வந்திருந்தா இவ்வளவு தூரம் நீங்க வந்திருக்கவே முடியாது தெரிஞ்சிக்குங்க..."

"ஜீவா தரப்பினர் பச்சோந்திகளை விட வேகமாக நிறம் மாறி பேசிய பேச்சுக்கள் சுமதியின் கண்களைக் குளமாக்கிவிட்டன.

இதற்காக இவ்வளவு கனவுகளோடு சென்னையில் இருந்து மதுரைக்கு வந்தோம்....? இது என்ன தலையெழுத்து ... சுமதி கதற ஆரம்பித்தாள். அவள் மாமா ஸ்ரீதேவியோடு அவளை வேகமாக அழைத்துக் கொண்டு போய் வெளியே நின்றபடி இருந்த டாக்சியில் ஏற்றியவராக "நீங்க ரெண்டு பேரும் ஏர்போர்ட்டுக்கு போய் அங்க வெயிட் பண்ணுங்க. இங்க இருக்க வேண்டாம்" என்றார்.

ஆனால் ஸ்ரீதேவிக்குள் மாதங்கி அவளை அழைப்பது போலவே ஒரு பாவனை. இருந்தும் அந்த டாக்சி புறப்பட்டு விட்டது. சுமதி ஸ்ரீதேவியை கட்டிக்கொண்டாள்.

"ஸ்ரீ.... என்னடி இது இப்படி ஆயிடிச்சு. பெரிய இடம்னு நினைச்சு ஏமாந்துட்டோமேடி...." என்று வெடித்து அழுதாள்.

ஸ்ரீதேவிக்குள்ளோ இதே போல ஒரு சம்பவம் தன் வரையிலும் நடந்தது போலவும், இதே காளியம்மாளும் இதே ஜீவானந்தமும் அப்போதும் அதகளம் செய்தது போலவும் தோன்றி அவளை இறுக்கத்துக்குள் புதைத்து

விட்ட நிலையில் கார் திருப்பரங்குன்ற தலையின் கிரிவலப்பாதை வழியாக அவனியாபுரம் நோக்கி சென்றபடி இருந்தது.

இருபுறமும் அடர்வான மரங்கள்.... நிறைய வெள்ளை நிற மயில்கள் கண்ணில் பட்டன. குறிப்பிட்ட ஒரு இடத்தில் நடுச்சாலையில் அந்த அருணாச்சால சித்தர் காவிக் கோவணமும் சடை முடியும் கையில் கோலுமாக நின்றபடி இருக்க சிவபெருமான் போல அவர் கழுத்தில் நல்ல பாம்பு ஒன்றும் வளைத்துக்கொண்டு படம் விரித்திருந்தது! க்ரீச்ச்ச்.....! காரும் தேங்கி நின்றது.

# 15

அன்று

ராஜரத்னம் கேட்ட கேள்வி காளியம்மாளையும், ஜீவாவையும் பெரும் பீதிக்குள் பிடித்து தள்ளியது. தங்கள் தப்பு ஒவ்வொன்றையும் அவர் நூல் பிடித்தது போல சொன்னதிலேயே அவர்களுக்கு பாதி உயிர் போயவிட்டது. மீதி உயிரை அவர் எப்படி எடுக்கப் போகிறாரோ என்பது போல இருவரும் அவரை பயத்தோடு பார்த்தனர்.

"போ.... போ.... கிட்ட நிக்காதே அப்படி போய் நில்லு. என் எதிர்ல உட்காரக் கூட கூடாது நீங்க. என் தோட்டத்துல சாணி அள்றவன் கூட உங்க முன்னால எனக்கு மலையளவு உசந்தவன். ஞாபகம் வெச்சுக்குங்க...."

அவர் பேச்சோடு பேச்சாக விரட்டினார். "ஏங்க இப்படி எல்லாம் பேசறீங்க. நீங்க இப்படி பேசறதால நாலுபேர் முன்னால என் கழுத்துல தாலியகட்டி என்ன பொண்டாட்டியா நீங்க ஆக்கிகிட்டது இல்லன்னு ஆயிடுங்களா?"

என்று காளியம்மாள் குழைந்து பார்த்தாள்.

"இப்ப அதே நாலுபேர் முன்னால் அந்த தாலிய கழட்டப் போறேன். அதுக்குப் பொறவு நீ இந்த பொண்டாட்டி கதை எல்லாம் சொல்ல முடியாது. தெரிஞ்சிக்கோ...." என்று ராஜரத்னம் வெடித்தார்.

"நூறுபேர் வந்தாலும் ஏன் அந்த கடவுளே வந்தாலும் என் தாலிமேல கை வைக்க முடியாதுங்க.... நான் அந்த சத்யவான் சாவித்திரி மாதிரி...."

"தயவு செஞ்சு அந்த பதிவிரதை பேர எல்லாம் உன் வாயால சொல்லாதே மூடிகிட்டு நில்லு. சாவித்திரி புருஷன் உயிரை எமன்கிட்ட இருந்து காப்பாத்தத்தான் பார்த்தா. உன்னை மாதிரி எமனை கூப்பிட்டு இழுத்துகிட்டு போகச் சொல்லல...."

"ஐய்யோ இது அபாண்டம்...."

"பல்ல உடைச்சிப்பிடுவேன். ஆக்சிடெண்ட் ஆகி படுத்துக் கிடக்கற நான் சொல்றது அபாண்டமா? வசியம் பண்ணி கட்டிப் போட பார்த்தே அது முடியலன்ன உடனே கொலை பண்ற அளவுக்கு போயிட்ட! உன்னை நான் கூட வெச்சிகிட்டிருந்தா அதை விட ஒரு தப்பு இருக்க முடியுமாடி...?"

இருவர் பேச்சும் ஆஸ்பத்திரி என்று கூட பாராமல் வளர்ந்து கொண்டே போன நிலையில் அமுதன் தன் அப்பா அம்மாவுடன் வந்து நின்றான்.

"வா ராமலிங்கம்.... உனக்காக தான் காத்துகிட்டிருக்கேன்."

"ஐயயா என்னய்யா இது.... உங்கள நான் இப்படி பாக்க நேருமுன்னு நினைச்சு கூட பாக்கலீங்க...."

"பதட்டப்படாதே. எதிர்பாராத விசயமெல்லாம் நடக்கறதுக்கு பேர் தானே வாழ்க்கை...."

"நல்லதுய்யா! இப்ப எப்படிய்யா இருக்கு உங்க உடம்பு?"

"சின்ன காயம். சில நாள்ல சரியாயிடும். கடவுள் என் பக்கம் தான் இருக்காரு ராமலிங்கம். நின்னுகிட்டே இருக்கியே உக்காரு.... யாரும்மா அங்க.... இவருக்கு ஒரு நாற்காலிய போடு...."

ராஜரத்னத்தின் கட்டளைக் குரல் வேகமாக செயலானது. ஒன்றுக்கு மூன்று நாற்காலிகள் அங்கு போடப்பட்டன. ஆனால் ராமலிங்கம் உட்கார தயக்கம் காட்டினார்.

"உட்காரு ராமலிங்கம்...''

"இல்லய்யா... உங்க முன்னால நான் உட்கார்ந்தா அது மரியாதை இல்லீங்க...''

"உன்னோட எஜமான் விசுவாசத்தை நான் பாராட்டறேன். அதே சமயம் இனி நான் உனக்கு எஜமான் கிடையாது."

"ஐயா... என்னய்யா சொல்றீங்க?''

"ஆமா... நீ என் சம்மந்தியாகப் போறே...?''

"ஐய்யா...''

"வாயப் பிளக்காதே... உன் மகன் அமுதன் தான் என் பொண்ணுக்கு புருஷன். எனக்கும் மாப்ளை...''

"ஐயயா என்னய்யா என்னென்னமோ சொல்றீங்க?''

"இப்ப அப்படித்தான் தோணும் ஆனா எனக்கு தான் இது எவ்வளவு அவசியமனு தெரியும்."

"ஐயயா உங்க அந்தஸ்த்துக்கும் எனக்கும ஏணிவெச்சா கூட எட்டாதுங்களே...''

"அது பொருளாதாரத்துக்கு பொருந்தலாம். குணத்துக்கும் மனசுக்கும் பொருந்தாது."

"ஐயயா இப்படி திடுதிப்னு சொன்னா எப்படிங்க. இப்ப எதனால இப்படி ஒரு முடிவு?''

"அமுதன் என் கூடவே இருக்கனும் ஒரு வேலைக்காரனா இருந்தா அதுக்கு வேற அர்த்தம். என் மாப்ளையா இருந்தா அதுக்கு வேற அர்த்தம்...''

"இந்த விஷயத்துல பாப்பா விருப்பம்னு ஒண்ணு இருக்குங்களே...''

"ராமலிங்கம அவ உன் மகனைததான்யா விரும்பறா. அது தெரிஞ்சு தான் நான் இந்த முடிவுக்கும வந்தேன்...''

"எல்லா கேள்விக்கும் பதில் சொல்லிட்டீங்க... ஆனாலும் ஊர் உலகம்...''

"இந்த வீணாபோன பேச்சை எல்லாம் நீ என்கிட்ட பேசாதே ஊராவது உலகமாவது...? அதுக்கு எந்த காலத்துல கண்ணு காது தெளிவா இருந்துருக்கு?''

"ஐய்யா...!''

"ராமலிங்கம நான் நிறைய தப்பு பண்ணிட்டேன். தேவியோட அம்மா என்ன விட்டு போனப்ப நான் பல்லை கடிச்சிகிட்டு இருந்திருக்கனும். ஆனா அபப இதோ இந்த வீணாப் போனவளை என் பொண்டாட்டியா ஏத்துகிட்டேன் பாரு... அது தான் நான் செய்த பெரிய தப்பு... அதுக்கெல்லாம் பரிகாரம் பண்ணததான நல்ல விசுவாசியான உன்னை நான் சம்மந்தியாக்கிக்க விரும்பறேன் நீ மாட்டேன்னு சொல்லிடாத...''

ராஜரத்னம் கூற, ராமலிங்கம் தயங்கி நின்றிட அம்மாவும் அமுதனும தவிப்போடு அடுத்து நடக்க இருப்பதை எண்ணியபடி இருக்க பெரிய பழத்தட்டும் பூவும் மாலையும் அங்கே வந்து சேர்ந்தது.

காளியம்மாளுக்கும் ஜீவாவுக்கும் அப்போது தான் அவர் எப்படிப்பட்ட தண்டனையை தங்களுக்கு தந்து கொண்டிருப்பதும் புரிந்தது.

இரவு

தேங்கி நின்ற காருக்குள் இருந்து சுமதியும் ஸ்ரீதேவியும் இறங்கினார்கள். காருக்கு முன்னால் கழுத்தில் பாம்போடு அந்த அருணாசல சித்தர்! ஸ்ரீதேவி அவரை அந்த கோலத்தில் பரமசிவனாகவே பார்த்தாள். சுமதிக்கோ பயமாகி விட்டது.

"ஸ்ரீ... யாருடி இவர். நீ பாட்டும் வேற காரைவிட்டு இறங்கிட்டே...'

"பயப்படாத சுமதி. இவர் ஒரு சித்தர் சாமி. பேர் அருணாச்சலம். இவர் மட்டும் இல்லாட்டி உன் நிச்சயதார்த்தம் நின்னு உனக்கும் நல்லது நடந்திருக்காது..."

ஸ்ரீதேவி பேசிக்கொண்டே அவர் அருகே சென்றாள். அவர் கழுத்தில கிடந்த பாம்பை கையில பற்றி பக்கவாட்டில சாலையை ஒட்டிய புதருக்குள் விட்டார். அதுவும் ஓடி மறையத் தொடங்கியது.

அவர் முகத்தில ஒரு அழியாத புன்னகை. காரை ஓட்டி வந்திருந்த டிரைவரும் அவரை வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

"சாமி..."

"வந்துட்டியா... எல்லாம் நல்லபடி முடிஞ்சுதா?"

"நிச்சயம் நடக்கல சாமி. ஆனா தப்புத் தப்பா நிறைய நடக்கும் போல இருக்கு...'

"ஆமா... நிறைய தப்புங்க நடக்கப் போகுது. அந்த ஜீவானந்தம் ஒரு ராட்சஸன். காளியம்மா பேருக்கு ஏற்ப பத்ரகாளி..."

"நீங்க எங்க சாமி இங்க?"

"இது தான் நான் நடமாடற இடம். அதோ அந்த திருப்பரங்குன்ற மலையோட பின்பாகம் தான் நான் தங்கி இருக்கற இடம். அங்க ஒரு சுனை இருக்கு. அதுல மீன் வடிவத்துல என்னைப் போல பல சித்தர் சாமிங்க நீந்திகிட்டு இருக்காங்க...."

அவர் பதில் ஸ்ரீதேவியையும் சுமதியையும் திகைக்க வைத்து, அவர் சொல்வதை எப்படி நம்புவது என்பது போல பார்க்க வைத்தது.

"என்னம்மா... கார்ல வந்து இறங்கியிருக்கற உன் முன்னால நம்ப முடியாத பொய்களை நான் சொல்ற மாதிரி தோணுதா..?"

அவர் கேள்விக்கு ஆமாம் சாமி... என்ற தயங்காமல் பதில் தந்தாள் ஸ்ரீதேவி.

"இப்ப அப்படி தான் தோணும். இது எல்லாத்தையும் கண்ணால பாத்தா மட்டுமே நம்பற காலம். ஆனா கண்ணால பாக்க முடியாத பல விஷயங்கள் கொண்டது தாம்மா இந்த உலகம்...."

"சாமி உங்க புதிரான பேச்சையெல்லாம் பொறுமையா கேக்கற நிலைல நாங்க இல்லை. நாங்க இப்ப விமான நிலையத்துக்கு போய்கிட்டிருக்கோம். இரவுக்குள்ள சென்னைக்கு நாங்க போயாகணும்...."

"அது உங்க திட்டமா இருக்கலாம். ஆனா அப்படி எல்லாம் எதுவும் நடக்கப் போறதில்லம்மா...'

அருணாசல சித்தரின் பதில் ஸ்ரீதேவியை விட சுமதிக்கு பெரிய அதிர்ச்சியை தந்தது.

"என்ன சாமி ஏதேதோ சொல்றீங்க?"

"ஏதேதோ இல்லம்மா.... நடக்கப்போறத சொன்னேன்...."

"இந்த பொண்ணு கூட இரண்டொரு நாள்ள ஊருக்கு போயிடுவா ஆனா நீ இந்த மதுரையை விட்டு இனி போகவே மாட்டேம்மா...."

"'சாமி என்ன சொல்றீங்க நீங்க?"

"இது உன்னோட பூமிம்மா... உன்னால இனி நல்ல காரியங்கள் நடக்க வேண்டியிருக்கும்மா..."

"ஐயோ... நானே என் அம்மாவுக்கு தெரியாமதான் வந்துருக்கேன். நான் மட்டும் போகலேன்னா அவ்வளவு தான்...."

"எல்லாம் எனக்கு தெரியும்மா.... எப்பவும் விதி ரொம்ப பெருசும்மா. அதை யாராலயும் எதுவும் செய்ய முடியாது...."

"சாமி.... என்ன பயமுறுத்தாதீங்க. என்ன போக விடுங்க..."

"தாராளமா போ. ஆனா நீ மதுரையை விட்டு இந்த ஊர் எல்லையவிட்டு ஒரு அங்குலம் கூட போக முடியாது ..."

"எதைவெச்சு சொல்றீங்க சாமி..."

"இந்த கேள்விக்கு நான் வார்த்தைல பதில சொல்ல விரும்பல. நடக்கப் போற சம்பவங்களே உனக்கு எல்லா உண்மைகளையும் புரிய வைக்கும்.

உனக்கு நான் எல்லா உதவியையும் செய்ய தயாரா இருக்கேன். சொல்லப்போனா உதவி செய்யத்தான் நான் இங்க நடமாடிகிட்டு இருக்கேன்...."

"உங்க பேச்சு எனக்கு புரியவே மாட்டேங்குது..."

"போகப்போக புரியும். இப்ப நீ புறப்படு..."

அவர் பூடகமாக பேசி அவளை போகவும் சொல்ல ஸ்ரீதேவிக்கே அது பலத்த ஆச்சரியம் மெல்ல நடந்து காரில் ஏறிகொள்ள காரும் புறப்பட்டது.

அவர் நடுச்சாலையில் நின்று பார்த்துக்கொண்டே நிற்க ஸ்ரீதேவியும் திரும்பிப் பார்த்தாள்.

சுமதிக்கு வயிற்றை கலக்கியது.

"ஸ்ரீ.... உன் அம்மா நீ தாம்பரம் தாண்டக்கூடாதுன்னு ஒரு சாமியார் சொன்னதா சொன்னதுல ஏதோ இருக்குடி...." என்றாள்.

"ஆமாம் சுமதி.... என்னைச் சுத்தி மர்மமா பல விஷயங்கள் புரியற மாதிரியும் இருக்கு. புரியாத மாதிரியும் இருக்கு....''

"எனக்கு முதல்ல இந்த மதுரையை விட்டு புறப்பட்டா போதும்னு இருக்கு. நம்பள முன்னால போகச்சொன்ன என் அப்பா அம்மா அண்ணன் இவங்கல்லாம் வரலைன்னா அவ்வளவு தான். அவங்க நல்லபடியா வந்துடுவாங்கல்ல?

சுமதி பரிதாபமாக கேட்டாள். காரும் விமான நிலையத்தை எட்டியபோது அங்கே ஒரு செய்தி.

பைலட்டுகளில் திடீர் ஸ்ட்ரைக் காரணமாக விமான சேவை ரத்து... என்று!

## 16

அன்று

ராஜரத்னம் அங்கேயே அப்போதே பழத்தட்டை எடுத்து ராமலிங்கம் வசம் தந்து ஒரு சம்பிரதாய நிச்சயதார்த்தத்தை முடித்துக் கொண்டார். ராமலிங்கம் கைகள் நடு நடுங்கத்தான் அந்த தட்டை வாங்கிக் கொண்டார். அப்படி வாங்கும் போது காளியம்மாளையும் ஜீவாவையும் ஒரு பார்வை பார்த்தார். காளியம்மாள் இங்கே தான் தன் அசகாய சூரத்தனத்தை காட்டத் தொடங்கினாள்.

"என்ன ராமலிங்கம் பார்க்கறே... வாங்கிக்க அவர் விருப்பம் தான் எப்பவும் என் விருப்பம். அவர் என்னை புரிஞ்சுக்காம போயிருக்கலாம். ஆனா நான் அப்படியில்லை. அவருக்கு அமுதனைப் பிடிச்சிருக்குன்னா எனக்கும் பிடிச்சிருக்குன்னு தான் அர்த்தம்...."

என்று ஒரு புதிய பல்லவியை பாடத்தொடங்கினாள். அமுதன் அதைக்கேட்டு ஒரு சிரிப்பு சிரித்தான். அதை ஜீவாவும் கவனித்தான். அந்த சிரிப்புக்கு என்ன பொருள் என்று அவர்களுக்கும் தெரிந்தது.

ஜீவாவின் மனதை அமுதனின் சிரிப்பு கிழித்துக் குதறியது. ராஜரத்னம் ராமலிங்கம் கையைப் பற்றிக்கொண்டு பேசத் தொடங்கினார்.

"ராமலிங்கம் கிட்டத்தட்ட நிச்சயதார்த்தம் நடந்து முடிஞ்சிடிச்சு. அடுத்தது கல்யாணம் தான். அதுக்கு முந்தி இவளை அறுத்துக்கட்ற வேலைன்னு ஒண்ணு இருக்கு. இவங்கள வெச்சுகிட்டு எந்த நல்ல காரியத்தையும் பண்ண முடியாது. நான் இரண்டு நாள்ள வீட்டுக்கு வந்துடுவேன். எங்க குடும்பத்து பெரிய மனுஷங்க அவ்வளவு பேரையும் ஒண்ணு சேர்த்து கல்யாண தேதியை முடிவு பண்றேன். அதுவரை நீ தான் வீட்டை பாத்துக்கணும்" என்றார்.

காளியம்மாள் உடம்பு அவர் பேச்சை கேட்டு பதற ஆரம்பித்தது. ஜீவா வெறித்தான்.

ராமலிங்கம் மௌனமாக நின்றார். ஆனால் அமுதன் பேச விரும்பினான்.

"அய்யா..."

"அய்யாவா.... இனி நான் உனக்கு மாமா அமுதா...." ராஜரத்னம் திருத்தினார்.

"ரொம்ப பெரிய வார்த்தைங்க அது. இந்த இடத்துல நான் ஒரு விஷயம் சொல்ல ஆசைப்பட்றேங்க...."

"எதுவா இருந்தாலும் சொல்லு...."

"நான் இப்ப எதைச் சொன்னாலும் நீங்க கேக்கப் போறதில்லை. நானும் விலகி நின்னுல்லாம் பேசப் போறதில்லீங்க. இனி இது என் குடும்பம்னு நினைச்சு தான் பேசப்போறேன்."

"தாராளமா பேசு அமுதன்...."

"எனக்கும் தேவிக்கும் கல்யாணம்கற ஒரு நல்ல காரியம் நடக்கற சமயத்துல இவங்கள வெட்டி விடறதுங்கற ஒரு கெட்ட விஷயம் அவசியங்களா?"

அமுதன் அப்படி ஒரு கேள்வியை கேட்பான் என்று காளியம்மாளே எதிர்பார்க்கவில்லை. ராஜரத்னமும் எதிர்பார்க்கவில்லை.

"நீ என்னய்யா சொல்றே?"

"வேண்டாங்க'' மன்னிக்கற தப்பையா இவங்க பண்ணி இருக்காங்க? உன்னை கொல்லப் பாத்துருக்காங்க. என்னை வசியம் பண்ணி கைக்குள்ள அடக்கப்

பாத்துருக்காங்க. இது நமக்கு தெரிஞ்சு செஞ்ச தப்பு. தெரியாம இன்னும் எவ்வளவோ?

நான் பங்களாவுக்கு திரும்பி வந்து கணக்கு வழக்கையெல்லாம் பாக்கும் போது தெரியும். இந்த பொறம்போக்கு என்னவெல்லாம் பண்ணி வெச்சிருக்கான்னு ...''

"அய்யா இது ஆஸ்பத்திரி. பொது இடம் இங்க இனி எதுவும் பேச வேண்டாம் எல்லாத்தையும் வீட்ல வெச்சு பேசிக்கலாம். நீங்க அமைதியா இருங்க இனி எது நடந்தாலும் அது நல்லதா மட்டும் தான் இருக்கும் எல்லாத்தையும் இனி நான் பார்த்துக்கறேன்.''

என்ற அமுதனை கண் கலங்கப் பார்த்தார் ராஜரத்னம்.

"நான் பார்த்துக்கறேன்னு நீ சொல்றத கேட்க மனசுக்கு ரொம்ப இதமா இருக்குப்பா" என்று கலங்கிய கண்ணிரண்டையும் துடைத்து விட்டுக்கொண்டார்.

ஜீவாவால் அதற்கு மேல் அங்கு நின்று நடப்பதைப் பார்க்க முடியவில்லை. வேகமாய் வெளியேறத் தொடங்கினான்.

"போடா... போ... இனி வீட்டுப்பக்கமே வராதே உன்னால தான் எனக்கும் கெட்ட பேர். அப்படியே போயிடு'' என்று காளியம்மாள் அவன் போனதையும் தனக்கு சாதகமாக்கிக் கொள்ள பார்த்தாள். அமுதன்

அதற்கும் ஒரு சிரிப்பு சிரித்தான். இனி நின்று பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று தெரிந்துவிட்டது அவனுக்கு.

காளியம்மாள் வேகமாக அவனருகில் வந்து அவன் கையை பிடித்துக் கொண்டவள் "அமுதா... இவர் பேச்சை வெச்சு என்னை தப்பா நினைச்சிடாதப்பா. எனக்கு இனி ஜீவா தம்பி கிடையாது நீ தான்! நான் உன்கிட்ட அதிகாரமா ஏதாவது பேசியிருந்தா அதையும் மன்னிச்சிருப்பா......" என்று மளமளவென்று எவரும் எதிர்பார்க்காத அஸ்திரங்களைப் போடத்தொடங்கி விட்டாள்.

"ஏய் நடிக்காதடி.... போடி வெளியே..." என்று இடையிட்டு கத்திய ராஜரத்னம் முன் அருவியாய் கண்ணீர் விட ஆரம்பித்தாள்.

"அப்பா அம்மா நீங்க ரெண்டுபேரும் புறப்படுங்க. நான் இவங்கள வீட்ல விட்டுட்டு தேவிகிட்டயும் சில வார்த்தைகள் பேசணும். பேசிட்டு வரேன்" என்று காளியம்மாளை அழைத்துக் கொண்டு நடந்தான் அமுதன்.

வெளியே நின்று கொண்டிருந்த கார் அருகே ஜீவா நின்று கொண்டிருக்க அமுதன் காரில் ஏறி அதை ஸ்டார்ட் செய்ய முயன்றான். ஜீவா தடுத்தவனாய்

"அமுதா நீ இனி எங்க வீட்டு மாப்ளை.... கீழ இறங்கு நான் காரை ஓட்றேன்" என்றான்.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நீ இடத்தை காலி பண்ணு. உன்னால நான் பட்டதெல்லாம் போதும்'' என்று இடையிட்டு அலறினாள் காளியம்மாள்.

அமுதன் சிரித்தபடியே காரை கிளப்பவும் காளியம்மாள் வேகமாய் பின் பக்கமாய் ஏறிக்கொண்டாள்.

ஜீவா ஆஸ்பத்திரி வாசலில் தனித்து நின்றான். கொலைவெறிக் கோபம் அவன் முகத்தில் அலைபாயத் தொடங்கியது. ராமலிங்கமும் அவர் மனைவியோடு வாசல் பக்கம் வரவும் ஜீவனைப் பார்த்தார். தர்மசங்கடமாக இருந்தது. அவனோடு பேசவேண்டும் போலவும் இருந்தது. பேசினால் அது ஆபத்தில் முடியும் என்றும் தோன்றியது. இறுதியில் எதுவும் பேசாமல் ஒரு ஆட்டோ பிடித்து அதில் ஏறிக்கொண்டார்.

ஜீவாவுக்கு தன் காலடியில் நிலமானது பிளந்து கொண்டுதான் கீழே விழுவது போல தோன்றியது.

பங்களா.

காரில் இருந்து இறங்கிய அமுதனை காளியம்மாள் வேகமாக தடுத்தாள்.

"தம்பி தம்பி இரு.... நீ இப்ப மாப்ளை.... நான் ஆரத்தி எடுத்து கொட்டின பிறகு உள்ளவா...." என்று பங்களாவினுள் ஓடினாள். கார் வரும் சப்தம் கேட்கவுமே வாசற்புரம் வந்து விட்டாள் தேவி. அவளுக்கு காளியம்மாள் பேச்சு எல்லாவற்றையும் புரிய வைத்து விட்டது. காளியம்மாளிடம் தெரிந்த மாற்றமும் ஆச்சரியத்தைத் தந்தது.

வெட்கததோடும் ஆச்சரியத்தோடும் அமுதனைப் பார்த்தாள். அவனும் பதிலுக்கு பார்த்தான். அதற்குள் காளியம்மாள் ஒரு வேலைக்காரியின் கையில் ஆரத்தி தட்டை கொடுத்து எடுத்து வந்து நின்றாள்.

"எடுடி.... என்ன நிக்கறே? இனி அமுதன் இந்த வீட்டு மாப்ளை. ஜீவா இடத்துல எனக்கு தம்பியா வரப்போறவன்...." என்று முகமன் வாசித்தாள். அவளது நடிப்பும் துடிப்பும் ராமலிங்கத்தை சிரிக்க வைத்தபடியே இருந்தன.

தேவிக்கு ஆச்சரியம் தாளவில்லை... என்ன தேவி அப்படி பாக்கறே... அய்யா நமக்கு நிச்சயதார்த்தத்தையே பண்ணி முடிச்சிட்டார். உனக்கும் இதுல பூரண சம்மதம்னு தெரியும் எனக்கு ... சம்மதம்தானே?"

எல்லோர் முன்னாலும் கேட்டான். அவள் முகத்தில் ரத்தச்சிவப்பு வெட்கமாய பூத்தது. பின் எல்லோரையும் ஒரு பார்வை பார்க்க எல்லோரும் விலகிக் கொண்டனர்.

காளியம்மாள் மட்டும் அருகிலேயே நின்றபடி இருந்தாள். "எஜமானியம்மா நான் கொஞ்சம் தேவியோட தனியா பேசணும்" என்றிட.

"அய்யோ பேசுங்க தம்பி.... தாராளமா பேசுங்க...." என்றபடியே தன் அறை நோக்கி செல்லத் தொடங்கினாள் காளியம்மாள்.

அக்கவுண்டண்ட மாணிக்கமும் அப்போது வந்தார் அவர் முகத்திலும் ஆச்சரிய அதிர்வு. அமுதன் தேவியிடம் பேசின பேச்சும் அதிர்வாகத்தான் இருந்தது.

"தேவி.... நீ இனி ஒவ்வொரு நொடியும் ஜாக்ரதையா இருக்கணும். ஒரு பெரிய நாடகம் நம்ம சுத்தி நடந்துகிட்டு இருக்கு. இதைச் சொல்லத்தான் நான் வந்தேன்" என்றான் தேவியிடம் விக்கிப்பு!

இன்று

விமான சேவை ரத்து என்கிற செய்தி ஸ்ரீதேவி வரையில் ஒரு இடியாகத்தான் அவள் காதில் இறங்கியது.

"என்னடி இது கொடுமை.... நடக்கற எதுவுமே நல்லதுக்கா தெரியலியே.... அவங்க ஊர்ல என் அம்மா இப்பவே தவிச்சுகிட்டு இருப்பாங்க...." எனும்போதே ஸ்ரீதேவியின் கைபேசி அவளை அழைத்தது. திரையில் அம்மா முகம் தெரிந்தது.

"அய்யோ அம்மாடி...."

"பேசு.... பதறாதே...."

"என்ன பதறாதே.... நிச்சயம் நல்லபடியா முடிஞ்சதா நீ கிளம்பிட்டியான்னு கேட்பாங்க. நான் என்னத்த சொல்ல?"

"எதையாவது சொல்லி சமாளிடி...." சுமதி எடுத்துத்தர ஸ்ரீதேவியும் போனை காதில் வைத்து பேசத் தொடங்கினாள்.

"அம்மா...."

"அம்மாவேதான். ஏண்டி ஒரு போன்கூட பண்ணல?"

"போனா.... அது.... அது...."

"என்ன அது இதுன்னுகிட்டு.... நிச்சயதார்த்தம் முடிஞ்சிடிச்சா?"

"ஆங்.... முடிஞ்சிடிச்சிம்மா.... இல்லம்மா.... முடியலம்மா...."

"முடியலையா.... என்னடி சொல்றே?"

"அது.... அது...."

"என்னடி அது இதுன்னு மென்னு முழுங்கறே.... என்ன நடந்துச்சு?"

"அது வந்துமமா வந்து.... "ஸ்ரீதேவி பேச முடியாமல் திணறத் தொடங்கவும் சுமதி போனை அவளிடம் இருந்து பறித்து தான் பேசத்தொடங்கினாள்.

"அம்மா நான் சுமதி பேசறேன்...."

"சுமதியா.... என்னம்மா இது ஸ்ரீதேவி என்னென்னமோ சொல்றாளேம்மா...."

"ஒண்ணுமில்லம்மா.... எதிர்பாராத விதமா சில அசம்பாவிதங்கள் நடந்துடிச்சிம்மா. அதை விபரமா உங்களுக்கு ஸ்ரீதேவி நேர்ல சொல்லுவா மத்தபடி வேற ஒண்ணுமில்லம்மா...."

"என்ன சுமதி ஒண்ணுமில்லன்னு சாதாரணமா சொல்றே ஒரு பொண்ணு வரைல நிச்சயதார்த்தம் தாம்மா ரொம்ப முக்கியம். அது பாதி கல்யாணத்துக்கு சமம்."

"ஸ்ரீதேவியின் அம்மாவான பூரணியின் பேச்சு சுமதியை அடுத்து பேசவிடவில்லை. அவள் தொண்டையை துக்கம் அடைக்க தொடங்கியது. கண்களில் கண்ணீர் பிரள ஆரம்பித்தது.

"அம்மாடி அழறியா.... சாரிம்மா.... நான் ஒரு மடச்சி எப்ப எது பேசணும்னு தெரியாம பேசிட்டேன் என்ன தப்பா எடுத்துக்காதே போனை ஸ்ரீதேவிகிட்ட கொடு...." என்ற பூரணியின் குரல் போனையும் தர வைத்தது."

"அம்மா.... என்னம்மா பேசினே.... சுமதி அழுவுறா பார்...."

"சாரிடா.... நான் தான் அவசரப்பட்டு சூழ்நிலை தெரியாம பேசிட்டேன். சரி நீ இன்னும் அங்க என்ன பண்றே?"

"என்ன பண்றேனா.... இப்பதாம்மா நான் சுமதி கூட இருக்கணும். அவ மனசொடிஞ்சி போயிட்டாம்மா."

"இருக்காதா பின்னே.... ஆமா அப்படி என்னடி நடந்தது?"

"அதை எல்லாம் நான் நேரில சொல்றேன். அப்புறம்மா.... என்னால இப்ப வீட்டுக்கு வர முடியாது...."

"அய்யய்யோ என்னடி சொல்றே?"

"எப்படிம்மா இந்த நிலைல இவள விட்டுட்டு நான் வருவேன்."

"அப்படின்னா?"

"நான் இன்னிக்கு இவ கூடவே இருந்துட்டு நாளைக்கு வரேம்மா...."

"நாளைக்கா?"

"என்ன நாளைக்கான்னு இழுக்கறே.... நாளைக்குன்னு சாதாரணமா சொல்லும்மா...."

"அப்படியெல்லாம் சொல்ல முடியாதுடி. விளையாடறியா நீ"

"ஆமா.... எனக்கு ரொம்ப ஆசை பாரு...."

"இதுக்குதான் நான் உன்னை எங்கேயும் போகக் கூடாதுன்னு சொன்னேன். கேட்க மாட்டேங்கறே...."

"நீ மனசை போட்டு குழப்பிக்காதே. இன்னிக்கு நான் சுமதிக்கு துணையா இருந்துட்டு நாளைக்கு வந்துடறேன். நீ அலட்டிக்காம தைரியமா இரு."

வேகமாக பேசிவிட்டு போனை கட் செய்த ஸ்ரீதேவிக்கு குப்பென்று வியர்த்து விட்டது. சுமதியோ கண்ணீர் வழிய வெளியே தேங்கி நிறகும் விமான நிலையத்துக்கு வந்த கார்களை பார்த்தபடி இருந்தாள்.

"அழாத சுமதி.... எப்படியோ அம்மாவை சமாளிச்சிட்டேன். அப்பாடா...." என்று கைகளை உதறினாள்.

"அடுத்து என்ன நடக்கும்னு தான் தெரியல. நீ சொன்ன மாதிரி நம்மை சுத்தி என்னென்னவோ நடக்க ஆரம்பிச்சிடிச்சு. இதை தான் அமானுஷ்யம்னு சொல்றாங்களோ?"

என்று கேட்ட சுமதியை நோக்கி இரண்டு பேர் காருக்கு வெளியே வந்து கொண்டிருந்தனர். அவர்கள் நடையில் ஒரு அசாதய வேகம்!

# 17

அன்று

தேவியின் முகத்தில பயம் பரவுவதை கவனித்த அமுதன் "பயப்படாதே... நாம தைரியமாகவும் விவேகமாகவும் நடந்துகிட்டா நிச்சயம் எல்லாத்தையும் சமாளிச்சிடலாம்'' என்றான்.

"நீ என்ன சொல்ல வரே அமுதா...' என்று கேட்ட தேவி அவனை ஒருமையில் நீ என்று அழைத்து விட்டதற்காக வருந்துவது போல முகத்தை சுளித்துக்கொண்டாள்.

"தேவி.... நீ எப்பவும் நீயா இரு.... உன் வரையில நான் ஒரு வேலைக்கார டிரைவர் தான். என்னை நீ எப்படி வேணா கூப்பிடலாம்...' என்றவனை கண்கள் பளபளக்க பார்த்த தேவி.

"இல்ல.... என் ராஜகுமாரன் நீங்க.... அப்படி எல்லாம் சொல்லாதீங்க....'' என்று தடுத்து விட்டு திரும்பவும் நாலாபுறமும் பார்த்தாள். தான் விலகிக்கொண்டு விட்டதாக காட்டிக்கொண்ட காளியம்மாள் அறைக்குள் கதவை சாத்திக்கொண்டு சாவித் துவாரம் வழியாக பார்த்தபடியே இருந்தாள்

அமுதன் அதை யூகித்தவன் போல "வா... நாம உன் அறைக்கு போய் பேசுவோம்" என்று அவளோடு அறை நோக்கி நடந்தான். அந்த வீட்டுக்குள் இப்படி எல்லாம் கூட காட்சிகள் அரங்கேறும் என்பதை தன் இருப்பிடத்தில இருந்தபடியே பாத்து வாயைப பிளந்து விட்டிருந்தார் கணக்காளர மாணிக்கம்.

அவருக்கு அமுதனை நினைக்க சற்று பொறாமையாக கூட இருந்தது.

"இந்த பயலுக்கு உடம்பெல்லாம் யோக மச்சம் போல...'' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

அங்கங்கே அந்த ஜமீன் பங்களா வேலையாட்களிடம் அமுதன் பற்றித் தான் பேச்சு. அவ்வளவு பேருக்கும் காளியம்மாள் அடங்கி நடப்பது தான் ஆச்சரியமும் கூட....

"எலே... எனனலே நடக்குது நம்ப பங்களாவுல...? நம்ம ராமலிங்கம் மவன் தான் இந்த ஜமீனோட மாப்ளைன்னா நம்ப முடியுதாலே....?'' என்று ஆரம்பித்த பேச்சுக்கு அதற்கேற்ப பதில்கள்.....

"அந்த ஜீவா குரங்குக்கு நம்ப தேவிப் பொண்ணு. ஒரு தெருவுல போறவனை கட்டுனா கூட நல்லா தான் இருக்கும். எப்படியோ அவன் ஒழிஞ்சான். ஆமா அவன் திரும்ப வர மாட்டான்ல..?''

"நல்லா கேட்டே போ.... காளியம்மாளா கொக்கா? தன் தம்பிய அவ அப்படியா தெருவுல விடுவா? எப்படியாவது உள்ள இழுத்துடுவா பாரு!"

"நானும் அப்படித்தான் நினைக்கேன். காளியம்மாளும் சரி, அந்த எழவெடுத்தவனும் சரி சாவுற வரை திருந்தவே மாட்டாங்க. நாம எப்பவும் போல இருப்போம். நமக்கு நல்லகாலம் பொறந்துட்டதா நம்பிட வேண்டாம்...''

இப்படி அந்த பங்களா முழுக்க பல மாதிரி பேச்சுக்கள். ஆனால் அமுதன் தேவியிடம் பேசிய பேச்சுதான் அவளை கண்கலங்கச் செய்திருந்தது.

"தேவி... நான் ஒரு சாதாரண காரோட்டி மவன். உன் அழகுக்கு பெரிய பெரிய இடத்து மாப்ளைங்க வருவாங்க. உனக்கு நான் ஏத்தவனே

156-157/384 Go

இல்லை..." என்று அவன் சொன்ன சொற்கள் அவள் கண்ணீரணைடயும் குற்றாலமாக்கி விட்டிருந்தன.

"இதைச் சொல்லத்தான் இப்படி தனியா கூட்டிகிட்டு வந்தீங்களா?" என்று அவளும் விசும்பலோடு கேட்டாள்.

"அழுவாத.... நான் யதார்த்தத்தை பேசறேன் எங்கிட்ட என்ன இருக்குன்னு நீ ஆசைப்படறே?"

"உங்ககிட்ட ஒண்ணும் இல்லைன்னா எங்கப்பா சம்மதிச்சிருப்பாரா?"

"அதான் எனககும் புரியல.... அவருககு ரொம்ப பெரிய மனசு...."

"அவருககு பெரிய மனசு.... எனக்கு கவிதை மனசு!"

"கவிதை மனசா?"

"ஆமாம் .. ஒரு பொண்ணுக்கு காசு பணம் அந்தஸ்த்துஙகற எல்லாத்தையும் விடவே அவ மனசுக்கு பிடிச்ச புருஷன் தான் எப்பவும் பெருசு. அந்த புருஷன் எப்படி எல்லாம் இருக்கணும்ன்னு அவ எப்பவும் ஒரு கறபனையோடவே இருப்பா. அந்த கறபனை என வரைல ஒரு கவிதை மாதிரி. அந்த கவிதை மாதிரி தான் நீங்களும் இருந்தீங்க. அதான் எனக்கு ரொமப பிடிச்சு போச்சு..."

"தேவி.... நீ இப்படி எல்லாம் கூட பேசுவியா?"

"நீஙக கிட்ட இருநதா இன்னும கூட பேசுவேன. உஙக பககத்துல தான் நான ரொம்ப சுதந்திரமா -'பீல பண்றேன அமுதன்...."

"புரியுது.... சித்திங்கற அந்த கொடுமைககாரி உன்னோட எல்லா சந்தோஷங்களையும் தன் அதிகாரத்தை கொண்டே நசுக்கிட்டா... அவனுக்கு இன்னொரு பலம் அந்த ஜீவா...."

"ஜீவான்னு உடனே தான் ஞாபகம் வருது. அவன் எங்க?"

"நான் தான் சொனனேனே ஒரு நாடகம் நடக்குதுன்னு... அதனபடி அவன இபப உன சித்தியாலயே துரத்தபபட்டுருககான."

"நிஜமாவா?"

"என்ன நிஜமாவா.... அதான் நாடகம்னு சொன்னேனே...."

"அப்படின்னா திரும்பி வருவானா?"

"வந்தே திருவான. சும்மா வரமாட்டான் அடிபட்ட பாம்பா வருவான. என்னை அழிகக என்னவெல்லாம செய்ய முடியுமோ அவ்வளவையும செய்வான்..."

"நீங்க சொல்லும் போதே படபடங்குது அமுதன்...."

அதுக்காக நடககபபோறத பத்தி என்னால பேசாம இருக்க முடியாது தேவி அவன் குறி நான மட்டுமிலல...."

"அப்ப இன்னொருத்தரும் உண்டா?"

"நிச்சயமா....?"

"யார்.... உங்க அப்பாவா?"

"எங்கப்பாவை கொன்னு அவனுக்கு என்ன லாபம் வந்துடப்போகுது. உங்கப்பாவை கொன்னா இந்த ஜமீனையே வசப்படுத்திட்ட மாதிரி தானே?"

"ஐயோ இது என்ன கொடுமை..."

"கொடுமைக்காரன்கிட்ட கொடுமைய தானே நாமளும் எதிர்பார்க்க முடியும்."

"அமுதன நாம பேசாம எங்காவது ஓடிப்போயிடலாமா?"

"பைத்தியம்... உன அப்பாவை விட்டுட்டு என கூட வர உன்னால எப்படி முடியும்?"

"அப்பாவையும் கூட்டிகிட்டுதான். இந்த ஜமீன் சொத்தை எல்லாம் வேணும்னா அந்த ஜீவா எடுத்துக்கட்டும். நம்பளை எதுவும் செய்யாம விட்டா போதும். நான நீங்க சம்பாதிச்சு கொண்டு வாற பணத்துல குடும்பம் நடத்துவேன அமுதன்..."

"இது என்ன கோழைத்தனமான பேச்சு தேவி. யார் சொத்தை யார் அனுபவிக்கறது...? இப்படி சிந்திக்க உன்னால் எப்படி முடியுது..."

"அமுதன எனக்கு நாம நல்லபடியா வாழணும். அதுதான் முக்கியம்..." அவள் அப்படிச் சொன்ன சூட்டோடு அவனை இழுத்து அணைத்தும் கொண்டாள்.

அமுதனுக்கு முதல் முறையாக ஒரு இளம் பெண தரும் சுகம் எப்படிப்பட்டது என்பது புரிய ஆரம்பித்தது.

அவனும் அவளை இறுக அணைத்தவனாக அந்த மெய் மறந்த நிலையில பேசினான்.

"தேவி... நாம நல்லா வாழ்வோம். வாழத்தான் தேவி வாழ்க்கை. இது என் வரைல கடவுள் எனக்கு தந்திருக்கற பெரிய பரிசு. இந்த பரிசை நான் இழக்கமாட்டேன். ஒரு மகாராணி நீ! நீ எனக்கு கிடைச்சிருக்கேன்னா இது விட்ட குறை தொட்ட குறையாதான் இருக்கணும்.

நான் நினைக்கறேன பூர்வ ஜென்மத்துல நானும் நீயும் காதலிச்சு பிரிஞ்சு போயிருக்கணும். அதான இந்த ஜென்மத்துல கடவுள நம்மை சேத்து வைக்கறார்..."

அவன் அப்படிச் சொல்லவும் அவனிடமிருந்து சற்று விலகி "அமுதன இதையே தான் நானும நினைச்சேன். நாம போன ஜென்மத்துல மட்டுமில்ல...

இந்த ஜென்மத்துலயும் மட்டுமல்ல... வரப்போற எல்லா ஜென்மங்கள்ளயும் நாம தான் புருஷன பொண்டாட்டி" என்றாள கண்கள் பனிக்க...

அது வரை கலங்கியிராத அமுதனின் கண்களும் அதைக்கேட்டு பனிக்கத்தொடங்கி விட்டது!

இன்று

அந்த இருவரும் கார் அருகே வந்து கார் நம்பரை பார்த்தபடியே சுமதியிடம் "நீ தான சுமதிங்கற பொண்ணா? என்று கேட்டனா. அவளும் பதட்டத்தோடு தலையசைத்தாள.

"நாங்க உன அண்ணன் அனுப்பி வந்திருக்கோம். ஃப்ளைட் கேன்சல் ஆன விஷயம் செல்போன்ல மெஸேஜா உங்க அண்ணனுக்கு வந்துடிச்சி.

அதனால உங்கள கூட்டிகிட்டு வரச்சொல்லி எங்கள அனுப்பினாங்க"
என்றனர்.

சுமதிக்கு சுருக்கென்றது! ஒரு மாதிரி பார்த்தாள். என்னம்மா பாக்கறே.... நாங்க பின்னாலேயே பைகல வந்தோம் கார் நம்பரை வெச்சுதான உன்னை கண்டு பிடிச்சோம்...''



அதுசரி நீங்க யார்... உங்கள நான அந்த வீடல கூட பாககலியே...?

"நாங்க உன நிச்சயதார்த்தத்தை நிறுத்தின பெண்ணோட மாமனுங்க. எங்களுக்கே கொஞ்சம் முந்தி தான் விஷயம் தெரியும்...''

''இதுக்கு நீங்க எதுக்கு வரணும்.... எங்கண்ணனே எனக்கு போன் பண்ணி பேசியிருக்கலாமே...'

"எத்தன தடவ தான் அவர் பண்ணுவார். ஸ்விட்ச் ஆ:ப்னு வந்துகிட்டே இருந்தா.... "

அவர்கள் சொல்லவும் தான் தன் செல்போனை ஹேண்ட் பேக்கில் இருந்து எடுத்துப் பார்த்தாள். அது ஸ்விட்ச் ஆ:ப செய்யப்பட்டிருந்ததும் தெரிந்தது.

"ஆமா என் போனுக்கு பண்ணியிருக்கலாமே?' தேவி இடையிட்டு கேட்டாள்.

"உன நமபா இவங்க அண்ணன்கிட்ட இல்லம்மா. அவர் தவிச்சு நின்னப்பதான் நாங்க போய் கூட்டிகிட்டு வரோம்னு சொன்னோம். இப்ப கூட கெட்டுப் போயிடலை ஸ்விட்ச் ஆன் பண்ணி அண்ணன் கூட பேசும்மா....

அவர்கள் சொல்ல சுமதியும் வேகமாக செயல்பட்டு அவள் அண்ணன் குமாரைப் பிடித்தாள்.

"அண்ணே... "

"சுமதி.... பேசிட்டியா? ஆமா இப்படித்தான் ஆ:ப் பண்ணி வைப்பியா?"

"சாரிண்ணே.... அந்த நடந்த களேபரத்துல எனக்கு செல்போன் ஞாபகமே வரலைண்ணே...."

"சரிம்மா, வேகமாக அவங்க கூட கிளம்பி வா... நமக்கு :ப்ளைட் இனிமே நாளக்கு காலைல தான்.... அதுவும் நிலைமை சரியானா தான்.... நீங்க கிளம்பவுமே தகவல வந்துடிச்சி. ஆனா உனகிட்டதான் சொலல முடியல...'

"சரிண்ணே நாம இப்ப எங்க தங்கப் போறோம்?"

"ஹோட்டல்ல ரூம் போட்டாச்சும்மா. அவங்க உன்னை ஹோட்டலுக்கு கூட்டி வந்துடுவாங்க..."

"மத்தபடி வேற ஒண்ணும் பிரச்சினை இல்லையே...?"

"ஒண்ணுமில்லம்மா. நமக்கு இப்ப புதுசா ஒரு ஆதரவும் கிடைச்சிருக்கு. அந்த படுபாவி ஜீவா ஏமாத்துன பொண்ணோட குடும்பம வறுமையான குடும்பமா இருந்தாலும் அருமையான குடும்பம்மா. ஊால அந்த குடும்பத்துக்கு ஒரு மரியாதை இருக்கு அவங்களால தான அந்த

ஜீவானந்தமும் இப்ப நம்ப விஷயத்துல எதுவும் பண்ண முடியாம தூரத்துலயே நிக்கறான்."

"சரிண்ணே நான் வந்துட்றேன். மத்த விஷயங்கள் நேர்ல பேசிக்கலாம்..." என்று போனை கட் செய்தாள்.

அவர்களும் காரை வரச் சொல்லி விட்டு முன்னால் நடந்து சென்று ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த பைக்கை ஸ்டார்ட் செய்தனர். கார் பைக்கை பின் தொடர ஆரம்பித்தது!

கார் டிரைவரும் தன் டிரிப் ஷீட்டில் கார் பயணம் தொடர்வதை குறித்துக் கொண்டான்.

ஸ்ரீதேவி முகத்தில தான் ஏராளமான சலனம்!

"புரியுது ஸ்ரீதேவி... நீ இன்னிக்கு உன் அம்மாவை சமாளிச்சிட்டே... நாளைக்கு நாம் எப்படியும் போயிடலாம். தைரியமா இரு..."

"அது இல்லடி... நாம் சித்தர் மாதிரி ஒருத்தரை பார்த்தோமே ஞாபகம் இருக்கா...?"

"அவரை எப்படிடி மறக்க முடியும்... கழுத்துல பாம்போட சிவபெருமான் மாதிரியே தெரிஞ்சாரே..."

"அவர் சொன்னபடியே ஆயிடிச்சு பார்..."

"ஆமால்ல... நீ இந்த ஊரை விட்டு போகமாட்டே. போகவும் முடியாதுன்னாரு..."

"அது தான் எனக்கு பயமா, ஆச்சரியமா இருக்கு. நாளைக்கும் ஒருவேளை போக முடியலேன்னா?"

"உண்மைதான் என் அண்ணன் கூட நாளைக்கு நிலைமை சரியானா தான்னு வேற சொன்னார்..."

"பயமுறுத்தாதடி...... அப்புறம் என் அம்மாவை யாராலையும் சமாளிக்க முடியாத படி ஆயிடும்..."

இருவரும் பேசினதை கேட்ட கார் டிரைவர் பக்கவாட்டில் திரும்பிய பார்த்தவனாக,

"அம்மா நீங்க நாகசித்தரை பார்த்தீங்களா?" என்று கேட்டான். அவர்களுக்கும் பகீரென்றது.

"நாகசித்தரா?"

"ஆமாம். சரவணப் பொய்கையை ஒட்டியே சுத்திகிட்டு திரிவாரு. அவர் மட்டும் தான் கழுத்துல பாம்போட சுத்தறவர். கேட்டா நான் சிவன்டான்னு ஒரு மாதிரி பேசுவார்."

"அவரை உங்களுக்கு தெரியுமா?"

"ஊருக்கே தெரியும்மா..."

"அவர் எப்படிப்பட்டவர்?"

"என்னம்மா இது கேள்வி. அவர் யாருக்காவது தான் கையால விபூதி பூசி விட்டார்னா அவங்க எந்த நிலைல இருந்தாலும் மேல வந்துடு வாங்களாம்...!

"அதை நீங்க நம்பறீங்களா?"

"ஊரே நம்பும் போது நான் மட்டும் எப்படிம்மா தனியா நம்பாம இருக்க முடியும்? ஆமா அவரு உங்கள யாரை பார்த்து இந்த ஊரை விட்டு போக முடியாதுன்னு சொன்னார்?"

"இதோ ஸ்ரீதேவிய பார்த்துதான்..."

"அப்ப நூத்துக்கு நூறு சதவிகிதம் அப்படியே தான் நடக்கும்.." டிரைவரின் பதில் ஸ்ரீதேவியை குப் என்று வியர்க்கச் செய்தது

அதே நேரம் காரும் கிரீச்சிட்டு போலீஸ்காரர்களால நிறுத்தப்பட்டது. சாலையோரமாக ஒரு போலீஸ ஜீப்! சப் இன்ஸபெக்டர் என பலர் போலீஸ் கான்ஸ்டபிள்கள் எல்லா வண்டிகளையுமே செக் செய்து கொண்டிருந்தனர்.

பெரிய அதிகாரி போல தெரிந்த ஒருவர் ஸ்ரீதேவி அமர்ந்திருந்த ஜன்னல் கதவு பக்கமாய் வந்து குனிந்து அவளைப் பார்த்தார். அவளும் பார்த்தாள். பார்த்த நொடியே இருவரையும் ஒருவித தாக்கம் ஆட்கொண்டது. இருவருக்குமே இதற்கு முன் பலமுறை சந்தித்துக் கொண்டது போல ஒரு உணர்வு. அந்த அதிகாரியின் நேம் பேட்ஜில் 'அமுதேஸ்வர்' என்கிற பெயர்!

# 18

அன்று

தேவியின் பேச்சைக் கேட்டு கலங்கிய கண்களோடு அவளை உற்றுப் பார்த்தான் அமுதன். அதன் பின் என்ன நினைத்தானோ.... தயக்கம், தடுமாற்றம் என்கிற சகலத்தையும் விட்டுவிட்டு அவளை அப்படியே இழுத்து அணைத்தான். அது நாள் வரையில் அவனுக்குள் பதுங்கியிருந்த ஒரு ஆண்மகன் அவனுக்குள் வெடித்துப் புறப்பட்டான். அவள் அவன் அணைப்பில் அப்படியே துவண்டு கொடியானாள். இதன் வானம் போலே

அந்த ரசமான காட்சியை சாவித்துவாரம் வழியாக பார்த்தபடி இருந்த காளியம்மாளுக்கு ரத்தம் கொதிக்கத் தொடங்கியது. இப்படி ஒரு காட்சியை அவள் தன் தம்பி ஜீவாவுடன் தான் கற்பனை செய்து வைத்திருந்தாள். ஆனால் இங்கே எல்லாம் தலைகீழாகி விட்டது.

காளியம்மாளால் தொடர்ந்து அந்தக் காட்சியை காண முடியவில்லை. சாவித்துவாரத்தில் இருந்து பார்வையை விலக்கிக் கொண்டவள் மெல்ல நடந்து தன் அறைக்கு சென்றாள். அங்கே அவளுக்கென்றே உள்ள நாற்காலியில் வெட்டுப்பட்டு கீழே விழும் வாழைமரம் போல விழுந்தாள். இப்படியெல்லாம் நடக்கும் என்று அவள் கற்பனை கூட செய்து பார்த்ததில்லை. அதே சமயம் காளியம்மாளை வெளியே விடாமல் உள்ளே இழுத்துக்கொண்ட அமுதனின் செயல் அவளுக்குள் பல கேள்விகளை எழுப்பத் தொடங்கியது.

166-167/384 Go

தாலி கட்டிய கணவனே அறுத்துக்கட்ட முனைந்தும் வேண்டாம் என்று இவன் தடுத்து விட்டான் என்றால் நிச்சயம் உள்குத்து எதாவது இருக்கும் என்றே தோன்றியது.

அது என்னவாய் இருக்கும்...? தன்னை வெளியே விட்டால் தேடி வந்து அறிக்க வேண்டியிருக்கும். உள்ளுக்குள்ளேயே என்றால சுலபம் என்பதால இருக்குமோ? அவளுக்குள் என்ன ஓட்டங்கள்! அப்போது மெல்ல அவள் அறைக்கதவருகே வந்து நின்று பார்த்தான் ஓடமாரி. அவளால் வேலைககு வைக்கப்பட்ட வாய் பேசமுடியாத ஊமை அவன். அவள் சொன்னால் கிணற்றில் கூட குதிப்பான். அவனைப் பார்க்கவும் என்னவென்று ஜாடையிலேயே கேட்டாள். அவன் அவளை அழைத்தான்.

"எங்கடா கூப்பிட்றே?" என்று கேட்டபடியே எழுந்து அவன் பின்னால் சென்றாள். அவன் அந்த ஜமீன் விட்டின் மறைவான பாகங்களில் வழியாக பின்பக்கமாய் இருக்கும் மல்லிகைத் தோட்டம் நோக்கி நடந்தான்.

தோட்டத்துல என்னடா பண்ணப்போறே. எம்புட்டு பூ பூத்துருக்குன்னு காட்டப்போறியா?" என்றபடி சென்றவள் எதிரில ஒரு மலலிகைச செடி அருகே ஜீவானந்தம் நின்றபடி இருந்தான்.

"அடப்பாவி.... நீ தானா? நீ எங்கடா இங்கவந்தே....?"

"என்னக்கா.... நெசமாலுமே என்ன துரத்திட்டதா நினைப்பா உனக்கு?"

"மண்ணாங்கட்டி.... அந்த அமுதன் எமப்பயலா இருக்கான்டா.... என்ன கண்காணிச்சிகிட்டே இருப்பான் உன்னோட. என்ன பாத்தா அவ்வளவு தான்!"

"அக்கா.... நாம அவனை விரட்டுவது போய் இப்ப அவனுக்கு நாம பயப்படறது எவ்வளவு கொடுமை...."

"கொடுமை தான்டா.... கொடுமையே தான்! நீ கொஞ்சம் சூதானமா இருந்திருந்தா இதெல்லாம் எதுவும் நடந்திருக்காது தெரியுமா?"

"பழைய பேச்சவிடு.... எனக்கு ஒரு வழிய சொல்லு...."

"என்னத்த சொல்ல.... இப்போதைக்கு இவன் ராஜ்யமா போச்சு. நீ எங்கையாவது போய் பொறுமையா காத்திரு. என்கூட அப்பப்ப தொடர்புல இரு. சரியான நேரம் வரும். அப்ப நீ உள்ள வந்தா நீ தான் இந்த வீட்டுக்கு ராஜா...."

"அந்த நேரம் எப்பக்கா வரும்?"

"அது எனக்கெப்படிடா தெரியும்.... இங்கே என் பொழப்பே ஆடிகிட்டு இருக்குது. நான் முழு நல்லவளா இவங்க வரை மாறியாகணும். துளி கூட சந்தேகம் வராதபடி நான் நடந்துக்கணும். அப்புறம் தான் எந்த திட்டமா இருந்தாலும் அது சரியா நடக்கும்."

"பக்கா.... சொகுசா இங்க இருந்துட்டேன்.... என்னப்போய் எங்கையாவது போங்கிறியே.... நான் எங்கக்கா போவேன்."

"சாராயக்கார சங்கரலிங்கம்கிட்ட போ.... நான் சொன்னேன்னு சொல்லு. உனக்கு இடம் கொடுப்பான். நீயும் அவன் தொழிலுக்கு ஒத்தாசையா இரு. மிச்சத்த நான் பாத்துக்கறேன்."

என்று ஜீவாவை ஒரு சாராயக்காரனை நோக்கி தள்ளி விட்டவளாய் வந்த வேகத்தில திரும்பத் தொடங்கினாள்.

ஜீவா முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது?

ஆஸ்பத்திரி! அமுதனின் அப்பாவான ராமலிங்கமும் அம்மா மங்களமும் கோவில் பிரசாதமுடன் வந்தபடி இருந்தனர். எதிரில் தென்பட்ட டாக்டரிடம் "ஐயா எப்படி இருக்காரு?" என்று கேட்கவும் "நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணிடலாம்.... இனி பயப்பட எதுவுமேயில்லை. கொஞ்சநாள் காலை ஊனி நடக்காம இருக்கணும். ஒரு மாசம் அப்படி இருந்தா போதும்" என்றார்.

அந்த தகவலோடு ராஜரத்னம் எதிரில் போய் நின்றார் ராமலிங்கம்.

"வா ராமலிங்கம்.... அது என்ன கைல?"

"திருப்பரங்குன்றம் முருகன் பிரசாதங்க...'

"சந்தோஷம்.... முகூர்த்த நாள் குறிச்சிட்டியா?"

"நீங்க முதல்ல வீட்டுக்கு வாங்கய்யா, குறிச்சிடலாம்..."

"நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்றேன்னுட்டாரு டாக்டர். வந்த உடனேயே நாள் பாக்கறது தான் முதல வேலை...."

"கல்யாணத்தை தடபுடலா பண்ற எண்ணம் இருககுங்களா?'

"ஏன் அப்படி கேக்கறே?"

"நாங்க ஈடு கொடுககணுமே...?"

"அதெல்லாம் கவலையே படாதே ராமலிங்கம். எங்க ஜமீன் பரம்பரைக்கு கலப்பு ஒண்ணும் புதுசு கிடையாது. வெள்ளைக்காரன் காலத்துலயே என் பாட்டன்மார்ல ஒருத்தர் லண்டனுக்கு போன இடத்துல வெள்ளக்காரிய கட்டிகிட்டிருக்கார். அதேபோல என் சம்சாரம் வகையறாவுல அவளோட தாய்மாமாக்கள்ள ஒருத்தர் எம்.பி.யா இருந்தாரு டெல்லியில் ஒரு ஹிந்திகாரிய கட்டிககிட்டாரு...."

"இவங்கள்ளாம் ஜாதில வேறவங்களா இருந்தாலும் அந்தஸ்த்துல படிப்புல உங்களுக்கு இணையானவங்க நாங்க என்ன அப்படியா?'

"இதுதான் ராமலிங்கம் தாழ்வு மனப்பான்மைங்கறது. நீ இப்படி சிந்திப்பேன்னு தான் நான் ஒரு ஏற்பாடு பண்ணப்போறேன்..."

"ஏற்பாடா... என்னங்க அது?"

"முதல்ல நம்ம அமுதனை அந்தஸ்துள்ளவனா ஆக்கறது... அதாவது அவனுக்கு மாணிக்க கிரீடம் வெச்சு பட்டம் கட்டப்போறேன். என் மச்சினனை கூப்பிட்டு உன் பிள்ளையா தத்து எடுத்துக்கோன்னும் சொல்லியிருக்கேன்...'

ராஜரத்னம் அப்படி கூறவும் ராமலிங்கத்திடம் ஒரு அதிர்ச்சி அவருக்குள் இடிபோல் பிரவேசித்தது.

"என்ன ராமலிங்கம்... ஏனால் இந்த அதிர்ச்சி...."

"ஒண்ணுமில்லையா. ஒண்ணுமில்லை.... நீங்க ஒரு முடிவு பண்ணிட்டீங்க. என் மகனும் ஒசந்து நல்லா இருந்தா சரி..."

என்று சம்மதித்தார். ஆனால் மங்களத்துக்கு தங்கள் ஒரே பிள்ளையை தத்து என்கிற பேரில் தாரை வார்ப்பதில் கொஞ்சமும் பிரியமில்லை.

தத்துக் கொடுத்துவிட்டால் கொள்ளி போடுவதில் இருந்து எல்லாமே அடிபட்டுப்போய் அநாதைகளாக அல்லவா தங்களுக்கான தகனகிரியை நடக்கும்?

அவளுக்குள் துக்கம் தொண்டையை அடைக்கப் பார்த்தது!

இன்று

ஸ்ரீதேவி அமுர்தேஸ்வர் என்கிற அந்த பெயருக்குரிய போலீஸ் ஆபிசரைப் பார்த்த நொடி ஒரு மின்வெட்டுக்கு தான் ஆளாவது போல உணர்ந்தாள். அந்த ஆபீசருக்கும் அப்படித்தான் இருந்தது.

மிகச்சிறிய வயதில் பெரிய பொறுப்புக்கு வந்துவிட்டது போலவும் தோன்றியது. இருவரும் இப்படி வெறிப்பதை சுமதியும் ஆச்சரியமாக பார்த்தாள், பின் அவள்தான் கலைத்தாள்.

"ஏய் ஸ்ரீ... என்ன இது இந்த வெறிப்பு வெறிச்சிகிட்டு..."

"ஒன்னுமில்லை... சாரி டி... சாரி..."

"எதுக்கு தடுமாறுறே... நாம என்ன கள்ளக்கடத்தலா பண்றோம் இவங்க நம்பள பிடிக்க..."

சுமதியின் இடக்கான பதில் அமுர்தேஸ்வர் என்கிற அந்த அதிகாரியை கொஞ்சம் நீயும் பேசலாம் என்பது போல தூண்டி விட்டது.

"அப்ப கள்ளக் கடத்தல் பத்தியெல்லாம் தெரியும்னு சொல்லுங்க..." என்று ஆரம்பித்தான்.

"ஐயோ சார்... நான் ஒரு பேச்சுக்கு சொன்னேன்...

"நானும் பேச்சுக்கு தான் கேட்டேன். எங்க இருந்து வரீங்க?"

"ஏர்போர்ட்ல இருந்து... அதாவது ஃப்ளைட் கேன்சலாகி திரும்பிவரோம்..."

"ஐ சீ... இங்க எங்க போறீங்க?"

"ஹோட்டல்ல ரூம் போட்டிருகோம் அங்கதான் போறோம் சார்..."

இருவரும் மாறிமாறி பதில் சொல்ல பைக்கில் முன்னால் சென்றவர்கள் திரும்பி வந்தனர். அவர்கள் அந்த அமுர்தேஸ்வரிடம் பேசத்தொடங்கினர்.

"சார்... பாளையம்பட்டி அச்சுத வீர குடும்பத்துல விசேஷம் சார். அதுக்கு வந்தவங்க சார் இவங்க..." என்றார். அந்த குடும்பப் பேரை கேட்ட நொடியே அமுர்தேஸ்வர் முகத்தில் ஒரு பரபரப்பு.

"விசேஷம்னா... விபரமா சொல்லுய்யா..."

"சொல்றமாதிரி இல்லீங்க... இப்ப இருக்கற பெரியவர் ஜீவானந்தம் மகன் மதனுக்கும் இதோ இந்த பொண்ணுக்கும் கல்யாண நிச்சயம் பண்ணி இதோ.. வாழ்க்கையை அழிக்க இருந்தாங்க. நல்லவேளை கடைசி நிமிசத்துல இது தப்பிச்சிக்கிச்சு."

"அந்த மதன் மேல் உங்க ஸ்டேஷன்ல கூட நிறைய கேஸ் இருக்குல்ல?" அமுர்தேஸ்வரர் தன் அருகில் இருந்த சப் இன்ஸ்பெக்டரிடம் கேட்க அவரும் ஆமோதித்தார்.

"அதுசரி... எதுக்கு சார் இந்த சோதனை?" சுமதி சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள். அமுர்தேஸ்வரும் பதிலுக்கு சிரித்தான்...

சப் இன்ஸ்பெக்டர் பதில் சொல்லத் தொடங்கினார். "எலெக்ஷன் டைம்மா. முறையில்லாம் பணம் பொருள்னு கொண்டு போறத தடுக்கத்தான் இந்த

நடவடிக்கை...'' என்றார். அவர்கள் அப்படி பேசிக்கொண்ட போதும் ஸ்ரீதேவி பார்வை அமுதேஸ்வர் மேல் தான் இருந்தது. சுமதியும் அதை கவனித்தாள அமுதேஸ்வரும் அவளையேதான் பார்த்தான். அவனுக்குள்ளேயும் ஒரு இனம்புரியாத குறுகுறுப்பு.

அதன் பின் காரில் ஏறிக்கொள்ள காரும் புறப்பட்டது. காருக்குள் சுமதி ஸ்ரீதேவியை உருட்டத் தொடங்கிவிட்டாள்.

"ஏண்டி.... எதுக்குடி அந்த ஆபீசரை அப்படி பார்த்தே?"

"எப்படி?"

"என்னை எப்படி.... நான் அதை நடிச்சு காட்டட்டுமா?"

"வேண்டாம் விட்று.... என் மனசே சரியில்ல...."

"திரும்ப ஆரம்பிச்சிட்டியா?"

"நான் உள்ளதைச் சொன்னேன்.... என்ன நம்பு."

"எனக்கு பயமா இருக்கு ஸ்ரீ... இங்க ஒருபக்கம் சாமியார் நீ ஊரை விட்டே போகமாட்டேன்னுட்டார். நடக்கறதெல்லாமும் அப்படித்தான் இருக்கு' என்ற சுமதியை நிஜமான பயத்தோடு பார்த்த ஸ்ரீதேவி' சுமதி.... நீ அப்படியெல்லாம சொல்லாத நாளைக்கு நான் உன் கூட சென்னை வந்தே தீரணும். வரலைன்னா அவ்வளவு தான் என் அம்மாவை அப்புறம யாராலயும் சமாதானப்படுத்த முடியாது...." என்றாள். அதற்குள் லாட்ஜ வந்து விட்டது. இருவரும் இறங்கி வேகமாக அறை நோக்கித்தான் சென்றனர்.

ஹோட்டலின் ஏ.சி அறைக்குள் சுமதியின் அப்பா அம்மா, மாமா அண்ணன் என்று எல்லோரும் இருந்து சுமதி வரவும் உயிர் வந்தது போல பெருமூச்சு விட்டனர்.

"நல்லபடியா திரும்பி வந்துட்டீங்களா.... இப்பதான் நிம்மதியா இருக்கு. தம்பிகளா உங்களுக்கு நன்றி' என்றாள் சுமதி அம்மா, அவர்களும் விலகிக்கொண்டனர்.

சுமதியின் அம்மா ராஜேஸ்வரிக்கு அழுகை உடைத்துக் கொண்டு பீறிட்டது

"ஏம்மா, அழறே.... அதான் வந்துட்டேனே...''

"நான் அதுக்கு அழுவல.... கடைசில இவ்வளவு தூரம் வந்தும் உன் கல்யாண நிச்சயதார்த்தம் நடக்காம இப்படி ஆயிடிச்சேம்மா.'

"அது சரி.... அந்த கேடு கெட்டவன்கிட்ட இருந்து நாம் தப்பிச்சதுக்காக சந்தோஷப்பட தெரியலியா உனக்கு?"

"அது எப்படிம்மா.... ஒரு பொண்ணு வரைல நிச்சயமோ இல்லை கல்யாணமோ ஒரு தடவைதாம்மா நடக்கணும். இப்படி எல்லாம் அதுக்கு தடை வரக்கூடாது."

"போதும் உங்க சென்டிமென்ட் பேச்சு. நடந்து முடிஞ்ச அந்த கண்றாவியப்பத்தி இனி ஒரு வார்த்தை பேசக்கூடாது. முதல்ல நல்ல ரெஸ்ட் எடுத்துட்டு காலைல ஊருக்கு கிளம்பற வழிய பார்ப்போம்" என்ற சுமதி அண்ணன் கிரி "ஸ்ரீதேவி உனக்கும் சுமதிக்கும் பக்கத்து ரூம்மா போய் ரெஸ்ட் எடுங்க' என்றான்.

"அண்ணே நாளைக்கு நாம் கட்டாயமா ஊருக்கு போயிடுவோம் தானே?"

"அதுல என்னம்மா சந்தேகம். நாம இங்க இருந்து வேகமா போறதுதான் நமக்கும் நல்லதும்மா...."

"ஆமாண்ணே அம்மா காத்துகிட்டே இருப்பாங்க"

"போயிடலாம்மா... போய் நீங்க ரெஸ்ட் எடுங்க போங்க..."

கிரி அவர்கள் ரூம் கீயை தந்தான். அவர்களும் சென்றனர். அறைக்குள் நுழைந்தனர்.

அந்த அறையும் ஜிலலென்று பளிச்சென இருந்தது. பக்கவாட்டில் ஜன்னல். ஜன்னலின் திரைச்சீலையை விலக்கி ஸ்ரீதேவி அப்படியே வெளியே பார்த்தாள். திருப்பரங்குன்ற மலையின் மேல் பாகம் மாலை வெளிச்சத்தில பளிச்சென்று தெரிந்தது. சுமதி வந்த வேகத்தில் பாத்ரூமுக்குள் நுழைந்து விட்டாள்.

சற்று நேரத்தில் இருட்டிவிடும் நிலையில் அந்த மலையின் பாறை ஒன்றின் மேல் அருணாச்சல சித்தர் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார். அவரைத் திரும்பவும் பார்க்க நேரிடவும் ஸ்ரீதேவிக்குள் ஒரு அதிர்ச்சி. அதே சமயம் அந்த மலைப்பாறை மேல் தான் யாரோடோ ஓடுவது போலவும் தங்களை சிலர் துரத்துவது போலவும் ஒரு காட்சி அவளுக்குள் தோன்றி மறைந்தது. அப்படியே குழந்தை ஒன்றின் அழுகுரலும் காதில் ஒலிக்கத் தொடங்கியது.

எதனால் இப்படி?

# 19

அன்று

மங்களம் முகம் மாறுவதையும் கண்கலங்குவதையும் பார்த்த ராஜரத்னம் அதற்கான காரணத்தை மிக வேகமாக புரிந்து கொண்டார்.

"என்னம்மா.... தத்து கொடுக்கறதுன்னா உடனேயே உறவே இல்லாம போயிடுமேங்கற எண்ணம் வந்துடுச்சா?" என்று சரியாக கேட்டார்.

"ஆமாங்க.... சாஸ்திர பூர்வமா தத்து கொடுத்துட்டா அப்புறம் எங்க பிள்ளை இல்லைங்கறது தானே உண்மை. அக்னிசாட்சியாக தூக்கி கொடுத்துட்றோம்...."

"இதோ பாரும்மா.... நீ அப்படி நினைக்காதே! உங்களுக்குதான் எல்லா உரிமையும் இந்த தத்தெடுப்பு சாஸ்திரப்படி வேண்டாம் சட்டப்படி நடந்தா போதும் இப்ப சம்மதமா?"

"என்ன இருந்தாலும்....?" மங்களம் இழுத்தாள்.

"இதோ பாரா.... நான் இந்த தத்தெடுக்கறது பத்தி அந்தஸ்த்துக்காக மட்டும்னு இப்ப புதுசா உங்ககிட்ட பேசலை! நான் எப்பவோ என் மனசுக்குள்ள முடிவு செய்துட்டேன். இறந்துட்ட என் முதல் சம்சாரத்தோட தம்பியும் வாரிசு இல்லாதவனா இருக்கான். ஆகையால அவன் தந்து எடுத்தா தேவிக்கு அமுதன் மாமன் மகனாயிடுவான்.

அடுத்த எங்க குடும்பம் ராஜகுடும்பம்! உங்களுக்கே தெரியும். வெள்ளைக்காரன் வந்து, ராணி எலிசபெத் கைக்கு ராஜ்யம் அவ்வளவும் போய் ஒரு கலெக்டர் வந்து, இந்த மதுரை ஜில்லாவை நிர்வாகம் பண்ற

வரை எங்க குடும்பம் தான் இந்த திருமங்கலம் உள்ளிட்ட பதினெட்டு பட்டிகளை ஆட்சி பண்ணி வந்துச்சு. இன்னிக்குதான் விருதுநகர்னு பேரு. அன்னிக்கு இந்த ஊருக்கு பேர் விருதுபட்டி தான்.

ராணி மங்கம்மா வடிவமைச்ச பாளையாதிபதிகள் 72 போல எங்க குடும்பமும் ஒன்னு. என் கொள்ளுத்தாத்தனுக்கும் கொள்ளுதாத்தன் மங்கம்மாவுக்கு பரிவட்டம் கட்டி வரிகட்டினவரு. அப்படி ஒரு பாரம்பரியம் அதனால் எங்க குடும்பத்துக்கு ஒரு நவரத்ன கிரீடம் சொந்தமா இருந்தது அப்பவே அதுக்கு ஆயிரம் காணிக்கு மதிப்பு. கிரீடத்துல இருக்கிற மாணிக்கம் கல்லு ஒவ்வொண்ணும் நூறு காரட்டுக்கு குறையாது. இன்னிக்கு அதுக்கு மதிப்பு போடணும்னா பம்பாய்ல இருந்து நவரத்ன பரிசோதகர் தான் வரணும். எப்படியும் 50 கோடி பெறும்.

பணத்த விடு... அது இருக்கற இடத்துல நல்லது மட்டும்தான் நடக்குமாம். அந்த குடும்பத்தை யாராலயும் அழிக்க முடியாது. அந்த கல்லுங்களுக்கு அப்படி ஒரு சக்தி. ஒரு ராஜா தலைல கிரீடம் இருக்க காரணம் அந்த ராஜா நவகிரகங்களோட நல்ல பலத்தோட இருக்கணும்கறதுக்காகதான். ராஜா தப்பா யோசிச்சாலே இல்ல சின்னதா தப்பு பண்ணாலோ கூட அது ஜனங்கள் பாதிக்குமே?"

ராஜரத்னம் தன் பாளையக்கார குடும்பத் தொடர்பான மிக முக்கியமான விஷயத்தை பேசியது ரமலிங்கத்துக்கும் மங்கலத்துக்கும் ஆச்சரியமாக மட்டுமல்ல இவ்வளவு பெரிய ஒரு ராஜகுடும்பத்துக்கா தங்கள் மகன் மருமகனாக போகிறான் என்கிற பிரமிப்பையும் உருவாக்கி விட்டிருந்தது.

ராஜரத்னம் தொடர்ந்தார்.

"அந்த மாணிக்க கிரீடத்தோட நூறு பவுனுக்கு திரளி மாலையும்னு மொத்தமா ஆயிரம் பவுனுக்கு உடம்புல போட்டுக்க நகைநட்டுங்க உண்டு. அதுக்கு பேர் சொர்ணாபரணம். சொர்ணாபரணம் போட்டு தலைல கிரீடத்தோட தான் கல்யாணமே நடக்கும். அந்த சொர்ணாபரத்துலயும் கல்லுங்க உண்டு. இதுபோக நிலம் நீச்சு மனை மாடம்னு ஆயிரம் ஏக்கருக்கு குறைவில்லாத பாளையக்கார குடும்பம் இது. இதுல நிலங்கள்ள முக்காலே மூணு வீசத்தை என் அப்பாவே அரசாங்க வசம் ஒப்படைச்சிட்டாரு.

பூமிதான இயக்கம் நடத்தின வினோபாஜி மதுரை வந்தப்ப எங்க அரண்மனை வீட்டுக்கும் வந்து அப்பா கையால அவரும் நிலங்கள் வாங்கிகிட்டாரு. இப்படி பெரிய பாரம்பரியமும் சொத்து சுகமும் உள்ள குடும்பம் எங்க குடும்பம். இந்த குடும்பத்து மருமகனா மட்டும் நான் அமுதனை பாக்கல... அடுத்து அவன் தான் இந்த பாளையக்கார குடும்பத்துக்கு வாரிசு..." என்று ராஜரத்னம் சொல்லி முடிக்கவும் ராமலிங்கம் மங்களம் இருவரும் ஸ்தம்பித்தே போய் விட்டனர்.

ஆஸ்பத்திரியில் ராஜரத்னம் பேசிய பேச்சு அவ்வளவும் அங்கு ஒட்டுகேட்ட ஒரு நாசால காளியம்மாளுக்கு தெரியவரவும் அவள் மனது கனன்று போகத்தொடங்கியது.

அடுத்தடுத்து காரியங்கள் வேகமாக நடக்க தொடங்கின. ராஜரத்னம் மச்சினன் பாண்டியமாணிக்கம் அமுதனை சட்ட பூர்வமாக நீதிபதி ஒருவரையே விருந்தினராக மாளிகைக்கு அழைத்து அவர் முன் ரிஜிஸ்தரார் மூலம் தத்து எடுத்துக் கொண்டார்.

அடுத்த நொடியே சொர்ணாபரணப் பெட்டி எடுத்து வரப்பட்டது. அதை வேலையாட்கள் சகிதம் எடுத்து வந்தார் ராஜரத்னம். அது இவ்வளவு

நாளாக எங்கிருந்தது என்று யாருக்குமே தெரியாது. முதல் நாள் இரவு காரை எடுத்துக் கொண்டு தனியாக எங்கோ போன ராஜரத்னம் தான் காரில வைத்து பெட்டியை எடுத்து வந்தார.

பெட்டியை தூக்க இரண்டு பேரால கூட முடியாது. ராஜரத்னம் யாருடைய உதவியோடு எப்படி எடுத்து வந்தார் என்பது அவர் மட்டுமே அறிந்த ரகசியம். அந்த பெட்டியில் இருந்து சொர்ணாபரணம் எடுத்து அமுதேஸ்வருக்கு அணிவிக்கப்பட்டது. அதற்கு முன் திருப்பரங்குன்ற வேத பாடசாலையை சேர்ந்த பட்டர் ஒருவர் அமுதனுக்கு கங்கை நீர் கொண்டு அபிஷேகம் செய்தார். அவன் பிறப்புக்கே ஒரு சத்தம் அதனால் உருவாகி விட்டது என்பதே அதன் பொருள். அது மட்டுமல்ல இதுபோல ஒரு அபிஷேகமும் இத்தனை மதிப்புள்ள ஆபரணமும் தரித்திட ஒரு விதி வேண்டும்.

ஜாதகத்தில் அஷ்டலட்சுமி யோகம், கஜகேசரி யோகம், நீசபங்க ராஜயோகம் என்று பல யோகங்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டவர் இது ஒருவிட்ட குறை தொட்ட குறையால் ஏற்பட்ட சம்பவம். பூர்வ ஜென்ம சம்பந்தமே இதற்கெல்லாம் காரணம் என்றும் கூறியவர் இந்த சம்பந்தம் ஏழு தலைமுறைவரை நீடிததே தீரும அது தான் இந்த ஜாதகரின விசேஷம என்றார்.

அப்போது ராஜரத்னத்தால அருணாசல சித்தரும் அழைத்து வரப்பட்டிருந்தார. திருப்பரங்குன்ற மலையின் பின்புறம் உள்ள சித்தன் கோவிலையே தன் இருப்பிடமாகக் கொண்டு அந்த மலை பகுதியையே சுற்றி சுற்றி வரும் அருணாசல சித்தர் ராஜரத்னத்துக்கு ஒரு வகையில் குருவும் கூட ராஜரத்னத்தை பல ஆபத்துகளில் இருநது தடுத்தாட்கொண்டவர். அவர் தன் கையால் அமுதன தலையில அந்த மாணிக்க கிரீடத்தை அணிவித்தார்.

அவ்வேளையில் அமுதனைப் பார்த்தபோது வைத்த கண்ணை எடுக்க முடியவில்லை. போட்டோ கிராபர்கள் கிளிக்கித் தள்ளினர்.

அமுதனும் ஒரு ராஜவம்ச யுவனாக ஜொலித்தான். மங்களத்துக்கும், ராமலிங்கததுககும் ஆனந்தக் கண்ணீரே வந்துவிட்டது. மிகமிக மகிழ்ச்சியாக காட்சி தந்தவள் தேவி தான். தன் காதலால் அவன் இளவரசனாகி விட்டதாக எண்ணினாள்! தன் காதலுக்கு தான் என்ன ஒரு சக்தி என்றும் எண்ணிக்கொண்டாள்.

தததெடுப்பு வைபவம் முடியவுமே ராஜரத்னத்துக்கும் பாண்டிய மாணிக்கததுககும் நிச்சயதார்த்தமும முடிந்தது. தை மாதம் வரும் நல்ல முகூர்த்தத்தில திருமணம் என்று லக்னபத்திரிகையும் எழுதப்பட்டது. மஞ்சள் பூசிய அந்த பத்திரிகையை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் போது தான் நடகக கூடாத அந்த சம்பவமும் நடநதது.

அந்த அரண்மனை வீட்டு கூரையில் தொங்கியபடி இருந்த லஸ்தா விளக்கின் மேல் அமாந்திருந்த ஒரு ஆநதையை யாரும் பாாத்திருககவில்லை. அது போட்ட எச்சம் நீட்டப்பட்ட லகனபததிரிகை மேல விழுந்து மேலே அணணாநது பாாக்கச செயதது!

இன்று

ஸ்ரீதேவி ஹோட்டல் அறையில இருந்தபடியே திருப்பரங்குன்ற மலை மேல் கண்ட காட்சியும், குழந்தையின் அழுகுரலும் அவளை என்னவெல்லாமோ செய்ய ஆரம்பித்தது. உடன் இருந்த சுமதி பாத்ரூம்

போயிருந்தாள் டி.வி. ஆன் செய்யப்பட்ட நிலையில் டிவியில் ஒரு விவாத நிகழ்ச்சி ஓடிக்கொண்டிருந்தது.

குறிப்பாக மறுபிறப்பு உண்டா? இறப்புக்கு பிறகு உயிர் என்னாகிறது? என்பது தான் விவாதப பொருளே.... ஸ்ரீதேவி தன்னையும் மறந்து அதில கவனமானாள்.

ஒருவர் மறுபிறப்பு என்பது நூறு சதவிகிதம் உண்மை என்று ஆரம்பித்தார். பொதுவாக பிறப்பு என்பதே ஒரு வாழ்க்கையை கொண்ட ஒன்று! புல்லாய், புழுவாய், பூண்டாய் நாம் எவ்வகை உயிரினமானாலும் அந்த பிறப்புககேற்ப ஒரு வாழ்க்கை உண்டு. என்ன தான் வாழ்ந்து முடித்தாலும் மனித வாழ்க்கை என்கிற ஒன்றில் எவருக்கும் பூரணமான நிறைவு பெரிதாய் ஏற்படுவதில்லை. உயிர் எப்போது பிரியும் என்பதும் யாருக்கும் தெரியாது. பிரிந்தபின் என்னாகிறோம் என்பதும் தெரியாது எதையும் கொண்டு செல்லவும் முடியாது. உலகத்துக்கே அதிபதியாக திகழ்ந்தவனுக்கும் சரி, ஒன்றுமே இல்லாத ஓட்டாண்டிக்கும் சரி முடிவு என்பது பிடி சாம்பலில் தான்! எனவே தான் இந்த வாழ்க்கை ஒரு மாயையாக கருதினர் ஞானியர்! நம் வாழ்வு என்பது நாம் வாழ்ந்திடும் அந்த தருணம் மட்டுமே மற்றபடி எவ்வளவு நாள் வாழ்ந்திருந்தாலும் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் எல்லாமே நினைவாக மட்டுமே ஆகிவிடுகின்றன. அந்த நினைவுகள் கூட முதுமையில் மறந்து போய்விடுகின்றன. மொத்தத்தில் எஞ்சுவது எதுவுமேயில்லை. மொததத்தில் வாழ்க்கை என்பது ஒரு அனுபவம் அதுவும் மனம் நலததோடு உளளவரை மட்டுமே. எனவே தான் எப்படிப்பட்ட பிறப்பையும் ஞானியர் வெறுத்தனர் மீண்டும் எடுத்தாலும் பிறவாத நிலையே சிறந்தது என்று அறிந்தனர்!

இப்படி ஒருவர் சொல்லி முடித்தார். "இந்த உலகில் கோடானு கோடி பேர்கள் உள்ளனர். இவர்களில் சில நூறு பேர்கள் தான் பிறப்பை வெறுத்து திரும்ப பிறக்ககூடாது என்று கருதுகின்றனர். மற்றபடி கோடிக்கணக்கானோர் வாழவே விரும்புகின்றனர். சோற்றுக்கு அலலாடும ஒரு பிச்சைக்காரன் கூட எப்பாடுபட்டாவது வாழத்தான் விரும்புகிறான். எனவே வாழ்வதற்கே வாழ்க்கை...' என்றார் இன்னொருவர்.

ஆம் வாழத்தான் வாழ்க்கை.... அதற்காகத்தான் பிறந்துள்ளோம் ஆனால் விரும்பியபடி சந்தோஷமாகத் தான் வாழமுடியவில்லை, எல்லோரிடமும் எதாவது ஒரு மனக்குறை. அதை நீக்கிகொண்டு சந்தோஷமாக வாழ்வதற்காக போராடுவதே இன்றைய வாழ்க்கை என்றாகி விட்டது' என்றார் ஒருவர்.

"இப்படி போராடி வாழ்ந்தும் பயனில்லாமல் போகும் போது பெரும் மனக் குறையோடு தான் சாகிறோம். இப்படி வருததமுடன செத்துப போகின்றவர்கள் தான திரும்ப வந்து பிறக்கிறார்கள்' என்று ஒருவர் பாயண்ட்டுக்கு வந்தார்.

"சந்தோஷமாக வாழ முடியாதவாகள திருமபவும மனிதர்களாகத் தான் பிறககிறாாகள என்று கூற முடியாது. சாகும் போது அவர்கள் எபபடிப்பட்ட மனநிலையில் இருநதாாகள் எனபது முககியம். அதறகேறப அவர்கள் ஆடாய் மாடாய் சிங்கமாய் புலியாய் கூட பிறககலாம்'

"இலலை மனிதப்பிறப்பு தான பிறவிகளிலேயே மேலானது. இநத நிலைக்கு வந்து விட்டவர்கள் திரும்பவும் மனிதர்களாகத் தான் பிறக்கின்றனர்! இவர்கள் கீழாக பிறப்பதில்லை...'

"இதற்கு என்ன ஆதாரம்....?"

"நிறைய இருக்கிறது. மேல நாடுகளில் இதை முறையாக ஆராய்ச்சியாகவே செய்து வருகின்றனர். எவ்வளவோ பேருக்கு முற்பிறவி ஞாபகங்கள் வந்து அவர்கள் தங்கள் முற்பிறப்பை உணர்ந்துள்ளனர்..." -

"இந்த முற்பிறவி ஞாபகம் என்பதே ஒரு பொருள். முற்பிறப்பில் இருந்த உடம்பே வேறு அந்த உடம்புக்கான மூளையில் பதிவான ஞாபகங்கள் இந்த பிறப்பில் இருக்கும் புதிய உடம்புக்கான மூளையில் எப்படி வரமுடியும்? இது சாத்யமே இல்லை..."

"அப்படித்தான் விஞ்ஞானம் சொல்கிறது. மேலோட்டமாக பார்த்தால் அது தான் உண்மை என்பது போலவும் படுகிறது. ஆனால் முற்பிறவி ஆராய்ச்சியில் கிடைத்த விஷயங்கள் வியப்படைய வைக்கின்றன. இதிலிருந்து உடம்பு வேறாக இருந்தாலும் ஆத்மா ஒன்றாக இருந்து இவ்வாறு நடக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆத்மா தான் இங்கே உயிர் இந்த உயிர் எந்த உடம்பில புகுந்தாலும் தன் முதல் பிறப்பை மறப்பதில்லை! அடங்காத ஆசைகளோடும், கோபதாபங்களோடும் இறந்து போகின்றவர்கள் ஆவிகளாக அலைவது முதல், அவர்கள் திரும்பவும் வேகமாய் பிறந்து வந்து திரும்ப வாழ்வது வரை இந்த மறுஜென்மத்தில் நடக்கிறது..."

இப்படி டி.வி. யில் விவாதம் நடந்தபடியே இருக்க ஸ்ரீதேவியிடமும் ஒரு பலமான மாற்றம். குறிப்பாக குழந்தை அழும் சப்தம் அவள் காதுகளுக்குள் பலமாக ஒலிக்கத் தொடங்கியது. அந்த குழந்தை கூட எங்கோ பக்கமாய் இருந்தபடி அழுவது போல் தான் அவளுக்கும் தோன்றியது. அப்படியே அறை கதவை திறந்து கொண்டு வெளியே நடக்க ஆரம்பித்தாள்.

ஜீவானந்தம் அனலாய் தென்பட்டான். அருகிலேயே அவனுக்கு சமமாக காளியம்மாள். அருகிலேயே குறுகிய நிலையில் மதனும் அவன் தாயும் நின்றபடி இருந்தனர். அப்போது ஜீவானந்தத்தின் வலது கையான செல்வம் என்பவன் வேகமாய் வந்தவனாய்.

"அண்ணே.... அவங்க யாரும் ஊரைவிட்டு போகலண்ணே.... அவங்க போக இருந்த விமானம் கேன்சலாயிட்டதால லாட்ஜில ரூம் போட்டு தங்கியிருக்காங்க...." என்றான்.

"என்னை அசிங்கப்படுத்திட்டு இதே ஊர்ல அவங்க தங்கி இருந்தா என்னடா அர்த்தம்?"

"அண்ணே அவங்களுக்கு உள்ளூர் சப்போர்ட் இருக்குதுண்ணே. அதுமட்டுமில்ல.... நம்ப ஸ்டேஷன் புது எஸ்.ஐ.க்கும் விஷயம் தெரிஞ்சுபோய் அவர் சப்போட்டும் இருக்கற மாதிரி தெரியுதுண்ணே."

"அந்த எஸ்.ஐ. வரை போய்ட்டாங்களா?"

"அப்படித்தான் தெரியுது நாம் இப்ப கோபப்படறதுல அர்த்தமில்லண்ணே..."

"நாளைக்கு நான் எந்த முகத்தோட்டா வெளியே நடப்பேன்?"

"அதுக்கு என்ன பண்றதுண்ணே... நம்ப தம்பி கொஞ்சம் கவனமா இருந்திருந்தா பிரச்னையில்லலல...?"

"அதுவும் சரிதான்.... இந்த நாயாலதான் எனக்கு அவமானமும் அவமரியாதையும்...."

ஜீவானந்தம் குமுறி வெடித்தான். காளியம்மாளோ தீவிரமான யோசனையில் இருந்தாள். எல்லோரையும் ஒதுங்கிப் போகச் சொன்னவள்

ஜீவானந்தத்தை பார்த்து "டேய்... இந்த நிச்சயதார்த்தத்தை நிறுத்துன அந்த சிறுக்கிக்கே உன் மகனை கட்டி வைப்போம்டா..." என்றாள்.

## 20

அன்று

அண்ணாந்து பார்த்த போது ஆந்தை தெரிந்தது பெரும்பாலும் ஆந்தைகள் நகர எல்லைக்குள் வரவே வராது தப்பித்தவறி வந்து விட்டால் பெரிய மாளிகை போன்ற வீட்டின் மாடங்களிலோ இல்லை இது போன்ற லஸ்தர் விளக்கில வந்து வாகாக உட்கார்ந்து கொள்ளும். இது ஒரு இயற்கையான விஷயம். ஆனாலும் ஆந்தை என்றாலே அதை ஒரு சுடுகாட்டுப பறவையாக கருதி அதைப் பாரபபதே ஒரு நலல சகுனம கிடையாது என்கிற கருத்து காலத்தால உருவாகி விட்டது.

அது அங்கு எல்லோர் முகத்திலும் எதிரொலித்தது. குறிப்பாக அமுதனின் அம்மா மங்களம் கலங்கிப் போனாள்.

"ஐயோ என்னங்க இது அபசகுனமா?" என்று வாய்விட்டாள்.

"பதட்டப்படாத மங்களம்... அபசகுனம்னு நாமளே நினைக்க வேண்டாம் எல்லாமே நலலதுக்குன்னு நினைபபோம்..." என்று ராமலிங்கம் ஆறுதல் பேச்சு பேசினார்.

இடையில் யாரோ அந்த மாளிகையில் உள்ள நாட்டுத் துப்பாக்கியை எடுத்து வந்து சுட முயலவும் அதுவும் பறந்தோடித் தப்பித்தது. இதை பார்த்தபடி இருந்த காளியம்மாளுககு உள்ளுர ஒரே ஆனந்தம. இயற்கையே அவர்களுக்கு எதிராக இருப்பதை தெரிந்து கொண்டவளுககுள் ஒரு புது தெம்பும் அதன் நிமித்தம உருவானது. ராஜரத்னம் கூட கலங்கித்தான போனார். ஆனால் அமுதன் துளி கூட கலங்கவிலலை.

"ஐயா.... வருத்தப்படாதீங்க. இது ஒரு யதார்த்தமான சம்பவம் எதையும் நாம் எப்படி எடுத்துக்கறோம்கறதுல தான் இருக்கு. ஒரு புலி மானை வேட்டையாடுது. அதை பாக்கற நமக்கு பரிதாபமா தான் இருக்கும். ஆனா மான் தான புலிக்கு உணவு அதை துரத்தி அடிச்ச சாப்பிடறதுங்கறது தான் அதோட உழைப்பு. உண்மைல உழைச்சு சாப்பிடுது. ஆனா நாம மான் பக்கம் நின்னு பாக்கறதால அதை கொலையா எடுத்துக்கறோம். இப்படி எல்லா விஷயத்துக்கும் இன்னொரு பக்கம் இருக்குங்க" என்று தத்துவமாய் பேசினான்.

அந்த தத்துவப் பேச்சிலும் ஒரு அர்த்தம் இருக்கத்தான் செய்தது. ராஜரத்னம் அதைக்கேட்டு சந்தோஷப்பட்டார். அமுதன் மங்களத்தையும் அதே போல் ஆறுதல் படுத்தினான். அந்த நொடியே ராஜரத்னத்தின் சொத்துக்கள் அவ்வளவுக்கும் தான் ஒரு பாதுகாவலன் என்கிற ஒரு பொறுப்புணர்ச்சியையும ஏற்படுத்திக் கொண்டான.

அவன் அணிந்த கிரீடம் முதல் மாலைகள் வரை சகலமும் திரும்ப எடுத்து பாதுகாப்பாய் பெட்டியில் வைக்கப்பட அதை ராஜரத்னம் தன் வசமிருந்த திண்டுக்கல் பூட்டாலே பூட்டி சாவிகளை பாக்கெட்டில் போட்டுக்கொண்டு அதை எடுத்துக் கொண்டு தன அறைக்கு போய் தற்காலிகமாக அங்குள்ள பீரோமேலும் வைத்தார். காளியம்மாள் பார்த்துக்கொண்டே இருந்தாள்! அவள் பார்ப்பதை அமுதனும் பார்த்தான். மெல்ல காளியம்மாளை நெருங்கி வந்தவன் மர்மமாக சிரித்தான். பின் "என்ன அத்தை" நகை பெட்டி மேலேயே பார்வையா இருக்கற மாதிரி தெரியுதே..." என்று சிரித்தபடியே கேட்டான்.

காளியம்மாளுக்கு சுரீர் என்றது. திருதிருவென்று அவனைப் பார்த்தாள்.

அப்படியே அத்தையா?" என்றும் கேட்டாள்.

"இல்லையா?"

"ஆ....மாமா... ஆமாமா...."

"அய்யா உங்கள அறுத்து கட்றவரை நீங்க அத்தை தானே?"

"அறுத்து கட்றதா...?"

"ஆமா.... அதுக்கு தானே ஆசைப்பட்டார. நானில்லல தடுத்து நிறுத்தி வெசசிருக்கேன."

"இப்ப எதுக்கு அந்த பேச்சு?"

"சும்மா ஞாபகம் வந்துச்சு.... சொன்னேன்."

"ஞாபகத்துல இது தானா வரணும்?"

"நல்லபடியா நான் நினைக்கணும்னா வாலை சுருட்டிகிட்டு இருக்கணும். நாட்டாமை பண்ண முனையக்கூடாது...."

"என்ன பதிலக காணோம்?"

"என்னத்த சொலல.... இப்ப உனக்கு நேரம்.... பேசு...."

"இனி எனக்குதான் எப்பவும் நேரம் அப்புறம் இனி உக்காந்து தேயக்க கூடாது. உருப்படியா எதையாவது செய்யணும்."

"என்னடா சொல்றே?"

"டா" வா?"

"என்ன மாப்ள சொல்றீங்க?"

"அது.... தாங்கிக்க முடியல இல்ல?"

"எதை?"

"ஒரு டிரைவர் மகன் இந்த வீட்டுக்கு வாரிசா வந்ததை...."

"பதில் சொல்ல முடியாததுல இருந்தே உன் மனசு தெரியுது. உன்னை வெட்டி விட்டுட்டா வெளியே இருந்து ஏதாவது குடைச்சல் கொடுப்பே. நீ இங்கையே இருக்கணும். மயக்கியும் ஏமாத்தியும் இது நாள் வரை இந்த சொத்து சுகங்களை அனுபவிச்சதுக்கெல்லாம் பரிகாரமா எல்லா வேலையும் செய்யணும்."

"வேலையா?"

"ஆமா... இனி இந்த மாளிகைல கூட்டி அள்ள வேலைக்காரி கிடையாது. துணி துவைக்கறதுல இருந்து மாட்டுக்கு புண்ணாக்கு வைக்கற வரை எல்லாம் நீ தான்."

"இது உனக்கே அதிகமா தெரியல...."

"சத்யமா இதை நான் சொல்லல.... அய்யா தான் சொல்லச் சொன்னார். அப்புறம் உன் தம்பிக்கும் ஒரு வழி பாத்துருக்கோம்."

அமுதன் அதிர்ச்சியை அதிகரித்தான்.

"அந்தமான்ல ஒரு மர ஆலை நமக்கு சொந்தமா இருக்குல்ல...?" என்று கேட்கவும் அவனை விழுங்குவது போல வெறித்தாள் காளியம்மாள்.

"அந்த மர ஆலையை அங்க போய் இருந்து பாத்துக்க வேண்டியது தான் உன் தம்பி ஜீவாவோட வேலை...."

"அவன் அதுக்கெல்லாம் சம்மதிக்கமாட்டான்...."

"அப்ப சரி போலீஸ் இன்ஸ்பெக்டர்கிட்ட சொல்லி, கிழவியை ஆக்சிடென்ட்ல கொன்ன கேசுல உள்ள தூக்கி போட்டுட்றேன்."

என்ற அமுதனை அதிர்ச்சியோடு பார்த்தாள் காளியம்மாள். இதில் ஒரு ஆச்சரியம் என்னவென்றால் ஜம்பு அந்தமான் போக சம்மதித்தது தான்!

இன்று

ஜீவாவின் மகன் மதன் ஏமாற்றியதாக சொன்ன பதமினி என்கிற அந்த பெண்ணிறகே திருமணம் செய்து வைதது விடலாம் என்று காளியம்மாள் கூறியதைக் கேட்டு ஜம்புவே சற்று ஆடிததான போனார்.

"யக்கா.... என்னக்கா சொல்றே நீ?"

"ஆமாண்டா... நான் நல்லா யோசிச்சு பாத்துட்டு தான் சொலறேன். போ... போய் அந்த பொண்ணு வீட்டுகாரங்கள் வந்து பேசச்சொல்லு."

"அய்ய... அதுங்க குடியிருக்க குச்சு வீடு கூட இல்லாத அனாதைங்க்கா...."

"பனாதையோ அனாதையோ உன் மகன் மாதங்கியை கட்டி எல்லா சொத்தும வரணும்னா இந்த ஊரல நம்பள பத்தி யாரும் புரளி பேசககூடாது. அதுக்கு இடம் தரவே கூடாது."

"உனக்கா ஊா பயம?"

"இனிமே பயந்து தான தீரணும். இந்த விநாடிவரை அந்த நகைப்பெட்டி இருக்கிற இடம் தெரியல. நமப ஒரே பிடியே அந்த மாதங்கி மட்டும் தான. நாம பயபபடாட்டி எல்லாம் கைவிட்டுப் போயிடும...."

"அது எப்படி போகும்? நம்பளை அடக்கப் பார்த்தவங்கள தான் நாம் அழிச்சி காலி பண்ணிட்டோமே?"

"என்னைத்த காலி பண்ணே.... அந்த கெழ சித்தன் ஒரு சாட்சியா இந்த ஊரையேதான சுத்தி வந்துகிட்டிருக்கான்?"

"அவன் ஒரு கபோதி... அவனால என்ன பண்ண முடியும் நம்பள...?"

"இப்படி என்னை கேள்வி கேட்கறத விட்டுட்டு நான் சொன்னபடி செய்."

உன் மகன் ஜாதகத்துக்கு முதல பொண்டாட்டியா வந்து சாகப்போறவ அந்தஸ்தோட வந்தா என்ன இல்லை அனாதையா வந்தா தான் என்ன?"

"அது எப்படிக்கா.... உள்ளூர்ல பொண்ணு கட்டி அவ செத்தாலும் பொண்ணு வீட்டுக்காரங்க பின்னால சொந்தம் கொண்டாடிகிட்டு திரியக்கூடாதுன்னு தானே சென்னைல பொண்ணப் பாத்தோம்?"

"இதோ பாருடா.... உன் மகன் செஞ்ச காரியத்துக்கு இப்ப இது தான ஒருவழி. மூடிகிட்டு பேச்ச கேள்..."

காளியம்மாள் - சொன்னதோடு எழுந்தும் போய்விட ஜீவானந்தத்துக்கும் வேறுவழி இருப்பது போல் தெரியவில்லை. –

"சண்டாளப் பய எல்லாம் கூடி வரும போது இப்படி பண்ணிபிட்டானே?" என்று தன் மகனை தனக்கு தானே நொந்து கொண்டவனாய் அந்த பத்மினி என்கிற பெண் வீட்டுக்காரர்களுக்கு தகவல் அனுப்ப தயாரானான்.

ஸ்ரீதேவி இருட்டு கட்டியிருக்கும அந்த ஒன்பது மணிப் பொழுதில மிக பழக்கப்பட்டவள் போல திருப்பரங்குன்ற மலையின் கிரிவலச சாலையில் நடந்து கொண்டிருந்தாள. நூறு மீட்டருக்கு ஒரு விளக்கு கம்பம்- அதன் கீழாக கொஞ்சம் போல வெளிச்சம். மற்றபடி சாலையில யாருமில்லை. அவ்வப்போது ஒரு காரோ இல்லை வேனோ கடந்து போனபடி இருந்தது.

ஸ்ரீதேவியிடம் கூட பழக்கப்பட்டது போல ஒரு நடை அவள் கால்கள் மலையின் பின்புறமாய் உள்ள சித்தர் கோவில் சுனைப்பகுதி நோக்கி நடக்க ஆரம்பித்தது. ஆளரவமற்ற இருளில் எப்படி நடக்க முடியும் என்று அவளுக்குள் தயக்கமே இல்லை.

அப்படி நடக்கும் போது "தேவி சுனைல இருக்குற மீன்களுக்கு பொரி போடும் போது கவனமா போடணும். வழுக்கி விழுந்துடாம கவனமா இருக்கணும்" என்று யாரோ சொல்வது போல் கூட ஒரு எண்ணம்.

குழந்தை அழுகுரல் இப்போது அவளுக்குள் அடங்கி விட்டிருந்தது.

"நீ வேணா பாரு... உனக்கு தங்க விக்ரகமாட்டம் ஒரு ஆண் குழந்தை தான் பிறக்கும்..."

"ஏன பொண்ணா இருந்தா ஆகாதா? அது என்ன ஆண் குழந்தை? பொண்ணு பொறந்தாலும் சந்தோஷம்தான்."

"போதும் நாங்க பொண்ணா பொறந்து பட்டுகிட்டிருக்கற பாடு...."

"ஏன் இரண்டு குழந்தையும் பிறக்க கூடாதா?" '

'அப்படி ஆண் ஒன்னு, பெண் ஒன்னு ஒரே பிரசவத்துல பொறந்தா நீலன், நீலின்னு சொல்வாங்க. அது அவ்வளவு நல்லதும் கிடையாது."

அவள் நடக்க இப்படிப்பட்ட உரையாடல்களும் எங்கிருந்தோ அவள் நினைவுக்கு வரதொடங்கிற்று. ஒரு இடத்தில் அந்த அருணாசல சித்தர் கையில தீப்பந்தமுடன் நின்று கொண்டிருந்தார்.

ஒரு சிலை நடந்து வருவது போல ஸ்ரீதேவி நடந்து வருவதை கையில் வைத்திருந்த தீப்பந்த ஒளியோடு பார்த்தார்.

"வாம்மா.... நீ வருவேன்னு தான் நினைச்சிட்டிருக்கேன்" என்றார். அவளிடம் எந்த பதிலும் இல்லை.

"வா.... நான் குகைக்கு போவோம். உனக்காக நான் 20 வருஷமா காத்து கிட்டிருந்தது வீண் போகல... ஒரு வாரமா செம்போத்து கத்தும் போதே நினைச்சேன். அதிசயம் நடக்கப் போகுதுன்னு..." என்றவராய் அவளை அழைத்துக்கொண்டு மலைமேல் ஏறத்தொடங்கினார் அவர்.

ஹோட்டல் அறையில் சுமதியிடம் ஒரே பதட்டம். சுற்றி அவளது அண்ணன் மற்றும் உறவினர்கள் எல்லோரிடமும் புலம்பல்.

"அவ என்ன சின்ன குழந்தையா... காணோம்னு தேட? எங்கையாவது ஷாப்பிங் போயிருக்கலாம் வந்துடுவா!! கொஞ்சம் வெயிட் பண்ணி பார்ப்போம்..." என்றார் சுமதியின் அண்ணன்.

"அந்த பொண்ணோட ஆரம்பத்துல இருந்தே சிக்கல். இப்ப ஆளையே காணோம். அவங்க வீட்ல கேட்டா என்னத்த சொல்ல?"

"அதுக்குள்ள அவ காணாம போயிட்டதாவும், கண்ட மாதிரியும் கற்பனை பண்ணாம மூடிக்கிட்டு எல்லாரும் இருங்க. நாங்க வெளிய போய் பார்க்கறோம்...."

என்று சிலர் லாட்ஜை விட்டு தெருவில் இறங்கினர். அப்போது பத்மினி வீட்டு உறவுக்காரர்கள் சிலர் சுமதி அண்ணனை நோக்கி வந்தவர்களாய்.

"ஹலோ சார்! நிச்சயத்தை நடக்க விடாம பண்ணது ஒர்க் அவுட் ஆயிடிச்சு சார். எங்க பொண்ணு பத்மினியை கட்டிக்க பெரிய குடும்பத்துல சம்மதிச்சிட்டாங்க...." என்றார் அவர்களில் ஒருவர்.

"அப்படியா ரொம்ப நல்ல விஷயம்" என்றான் சுமதி அண்ணன்.

"ஆனா பத்மினி இனி அவன் எனக்கு வேணாங்கறா?"

"அப்படியா.... இது என்ன ட்விஸ்ட்டுக்கு மேல டிவிஸ்ட்டு?"

"என்னத்த சொல்றது.... அவனுக்கு ஜாதகத்துல களத்ரதோஷம் இருக்காம்ல. முதல்ல கட்ற பொண்ணு எவளா இருந்தாலும் அவ தங்கமாட்டாளாம். இது நடந்த கலாட்டால தெரியவும் எங்க பொண்ணு யோசிக்குது."

"இது மதனை காதலிக்கும் போது உங்க பொண்ணுக்கு தெரியலியா?"

"பெரிய இடம்... சந்தோசமா இருக்கலாம்னு ஆசைப்பட்டு தான் எங்க பொண்ணு காதலிச்சிருக்கு. ஆனா காதலிக்கறதே சாகறதுக்குன்னா எந்த பொண்ணுக்கு புடிக்கும?"

"சரி முடிவா நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"

"உங்க கூட வந்துச்சே ஒரு பொண்ணு.... பேர்கூட தேவியோ, ஸ்ரீதேவியோன்னு ..."

"அத தேடிதான் நாங்க புறப்பட்டோம்...."

"தேடின்னா?"

"அவ எங்கையோ சொல்லாம கொள்ளாம போயிட்டா..."

"இந்த ராத்திரியிலையா?"

"ஆமா உங்களுக்கெதுக்கு அவ?"

"இல்ல... அந்த பொண்ணையும் விடக்கூடாது. அவளால தான் எல்லாம் கெட்டதுன்னும் அந்த ஜீவானந்தம் ஆட்கள் பேசிகிட்டாங்க. அதான்

நடந்ததை சொல்லி விடியவும் ஊருக்கு புறப்படச் சொல்லிடலாம்னு வந்தோம்" வந்தவர்கள் அதிர்ச்சியளித்தனர்.

# 21

அன்று ஜம்பு அந்தமான் போக சம்மதிப்பான் என்று அமுதன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. எந்த ஒரு நல்ல குணங்களும் இல்லாதவன் இப்படி எதிர்ப்பு காட்டாமல் சம்மதிக்கிறான் என்றால் அதற்கு பின்னால் நிச்சயமாக ஏதோ ஒரு திட்டம் இருக்க வேண்டும் என்பதை அமுதன் அந்த க்ஷணமே புரிந்து கொண்டான்.

அது என்ன என்பதை போகப் போகத்தானே தெரிந்து கொள்ள முடியும்? சில விஷயங்களை விட்டுப்பிடித்தால் தான் வசப்படும்! ஜம்பு விஷயமும் அந்த ரகம் தான்.

அந்தமானுக்கு அவனை கப்பலில் அனுப்பி வைப்பது என்று முடிவாகிறது. அங்கேயே வசிக்கப்போவதால் துணிமணி அது இது என்று நான்கைந்து பெட்டிகள் சேர்ந்து விட்டன. காளியம்மாள் தான் மிகவே கலங்கிப் போனாள். அவனில்லாமல் எப்படி அவள் இங்கே காலம் தள்ளுவாள்?

அமுதன் அவனை சும்மா விடவில்லை. கடுமையாக அவன் உழைத்தே தீரும்படியாக வயல்வெளி அறுப்புப்பணிகளுக்கு அனுப்பி வைத்தான். போனால் போகிறதென்று ஒரு குடையை அவன் பிடித்துக்கொள்ளக் கொடுத்தான் அதைப் பிடித்துக் கொண்டு வரப்பில நின்றபடியே எல்லாரையும் வேலை வாங்க வேண்டும். கால் வலித்தால் வரப்பில அமர்ந்து கொள்ளலாம். இதை எல்லாம் கங்காணிகள் என்பவர்கள் கூலிக்கு செய்வார்கள்!

ஜமீன்தாரினியை கங்காணி என்று ஆக்கிவிட்டான். அப்படியே அவனை கண்காணிக்க ஒரு ஆளைப் போட்டான். தொடக்கத்தில் காளியம்மாள்

இந்த கங்காணி வேலையை ஒழுங்காக செய்யாமல் வயலை ஒட்டிய ஒரு விவசாயி வீட்டின் முன் உள்ள மரத்தடி கட்டிலில் போய் படுத்துக்கொண்டாள். அமுதனுக்கு தகவல் போகவும் அந்த விவசாயி வீட்டையே பூட்டி கட்டிலையும் அகற்றி விட்டான். ஜம்புவும் அந்தமான் சென்றுவிட்ட நிலையில், குறித்த முகூர்த்தத்தில் அமுதன் தேவி திருமணம் அமர்க்களமாக நடந்தேறியது. திருமணம் திருப்பரங்குன்றம் சாமி சன்னதியில் நடந்திட, அருணாசல சித்தர் தான் தாலியை எடுத்து தந்து ஆசீர்வதித்தார். கல்யாணத்தின் போது காளியம்மை வரக்கூடாது என்று ராஜரத்னம் உத்தரவு போட்டுவிட்டார். நான் பந்தி விருந்தையாவது கவனித்துக்கொள்ளவா என்று கேட்டவளை "மூடிகிட்டு இருந்தாபோதும்' என்று சொல்லிவிட்டார். அப்படியே 'நீ பாட்டும் விருந்துல விஷத்தை கலந்து மொத்த குடும்பத்தையே அழிச்சாலும் அழிச்சிடுவே என்று அவர் சொன்னது தான் உச்சம்.

கல்யாணத்தில் அருணாசல சித்தர் ஆசீர்வதித்தபோது "ஏழேழு ஜென்மத்துக்கும் நீங்க இணை பிரியாம இருக்கணும்' என்று வாழ்த்தினர். அப்போது ராஜரத்னம் கூட சித்தரிடம்

"'சாமி இந்த ஏழு ஜென்மமெல்லாம் உண்மைங்களா?" என்று கேட்டார்

"அதுல என்ன சந்தேகம் ராஜரத்னம்..? ஒரு உயிருக்கு கணக்கேயில்லாதபடி ஜென்மங்கள் உண்டு. புல், பூண்டு, புழு, பூச்சின்னு எப்படி வேணா அந்த பிறப்பு நடக்கும். நம்மோட அடுத்த பிறப்பை நம்ப நடப்பு பிறப்போட செயல்பாடுகள் தான் தீர்மானிக்குது. கர்மாங்கறத நான் செயல்பாடுன்னு சொன்னேன்...''

"அது எப்படி சாமி?''

"எப்படி சாமின்னா என்னத்த சொல்ல.... இந்த பூமில மனுஷனைத் தவிர மற்ற எந்த உயிர்க்கும் பாவ புண்ணியம் கிடையாது. மனுஷனுக்கு மட்டும் எதனால பாவ புண்ணியம்னா அவனுக்கு எது பாவம் எது புண்ணியம்னு புரிஞ்சிக்கற சக்தி உண்டு. அதன் காரணமா மனசு வந்துடுது. மனம் உடையவன் அதனால அவன் மனதன். மனதன் தான் திரிஞ்சு மனிதன்னு ஆனது."

"அப்ப மற்ற உயிர்கள் பாவம் செஞ்சாலும் பாதிப்பு கிடையாதா சாமி?''

"மற்ற உயிர்கள் பாவம் செய்யறதே இல்லையே... அப்புறம் எப்படி பாதிப்பு ஏற்படும்?"

"என்ன சாமி நீங்க? ஒரு புலி ஆட்டை அடிச்சு தின்னுது. ஒரு முதலை எது கிடைச்சாலும் விழுங்கியது. பாம்பு தவளையை உசுரோட விழுங்கிடுது.... இந்த கொலையெல்லாம் பாவமில்லையா? ராஜரத்னம் கேள்விக்கு சிரித்த அருணாசல சித்தர்.

"உனக்கு அரிசி, பருப்பு மாதிரி அதுக்கு அதெல்லாம் தாம்ப்பா உணவு. சாப்ட்டா தானே அது உயிர் வாழ முடியும்?

"அதுசரி சாமி.... அதுக்காக இன்னொரு உயிரை வாழவிடாம செய்யுதே?"

"அப்படி இல்ல.... தவளை பாம்புக்கு உணவாகி அது பாம்பா மாறிடுது. பாம்பு கருடனுக்கு உணவாகி அது கருடனா மாறுது கருடனை இன்னொரு மிருகம் வேட்டையாடுது.... இப்படி ஒன்றைக்குள்ள ஒண்ணு அடங்கி உயிர் சுழற்சி நடக்குது. இங்க இந்த உயிர்களுக்கு வருத்தம் சந்தோஷம்கற உணர்வுகளே கிடையாது. மனசுன்னு ஒண்ணு இருந்தாதானே இதையெல்லாம் நினைக்க...''

"அப்ப நாம மாமிசம் சாப்பிட்றது மட்டும் எப்படி தவறாகும்? நமக்குள்ள ஆடு கோழி அடங்கி நம்பள போல மாறிடுதுன்னு சொல்லலாம் தானே?"

"தாராளமா.... உயர்ந்த மனிதப் பிறப்பை எடுத்துட்டு இதுகள தின்னு ஏன் கீழிறங்கறே... மாமிச உணவு சாப்பிடாமலேயே நில்லுன்னு தானே நாங்க சொல்றோம்."

"அப்படி பார்த்தா நாம சாப்பிட்ற நெல், கீரை கூட உயிர்தான். அதை மட்டும் சாப்பிடலாமா?"

"தாவரங்களுக்கு உயிர் இருக்கு மறுக்கல! ஆனா அவைகளுக்கு வலியை உணர மூளைன்னு ஒண்ணை கொடுக்கல. அதனால அது உயிரோட்டம் இருந்தா வளரும். அது அறுபட்டா வளர்ச்சி நின்னுடும் அவ்வளவு தான். நாம ஒரு தாவரத்தை அப்படியே விட்டாலும் அது தன் இலை பூ காய் கனிகளை உதிர்த்துட்டு தன்னை புதுப்பிச்சிக்கும். ஆகையால தாவரங்களை உண்பது பாவமாகாது தாவரங்கள் மாமிசங்களாகாது."

அந்த கல்யாண களம் என்பது ஒரு நல்ல விவாத களமாகவும் மாறியது. ராஜரத்னத்துக்கு அருணாசல சித்தரால் பல புதிய விளக்கங்கள் கிடைத்தன. இருந்தும் குழப்பம் நீங்கின பாடில்லை.

"எவ்வளவோ ஜென்மங்கள் இருக்குன்னு சொல்லிட்டு ஏழுன்னு ஒரு கணக்கு எதனால் சாமி?" என்று கேட்டார்.

"மனிதர்கள். சிலருக்கு மட்டும் இந்த ஏழு ஜென்மம் சாத்யம். நம் உடம்புல நம்ம ஏழுதலைமுறை பாட்டன் பூட்டன் பதிவு நம்ப ரத்தத்துல இருக்கு. இப்படி இல்லாம ஒரு மனிதன் கூட, இந்த உலகத்துல கிடையாது. இந்த பதிவுக்கேற்ப தான் நம்ப வாழ்க்கைல நல்லது கெட்டதும் நடக்குது. நாம ஒரு தப்பும் செய்யாம சுத்த தங்கம் போல ஒரு வாழ்க்கை வாழும்போதும், நமக்கு துன்பம் வந்தா அதற்கு பாட்டன் பூட்டன் பாவங்கள் தான் காரணம்.

அதை நாம் அனுபவிச்சி தான் தீரணும். இது துன்பத்துக்கு மட்டுமில்ல இன்பத்துக்கும் பொருந்தும்.

சிலர்கிட்ட நாம விரும்பற மாதிரி ஒரு விஷயமும் இருக்காது. அவ்வளவு ஏன் அவங்க மிகப்பெரிய பாவியாகவும் இருப்பாங்க. ஆனா எல்லாவித வசதிகளோட சந்தோஷமாவும் இருப்பாங்க. அது எதனாலன்னா அவங்க பாட்டன் பூட்டன் செய்த புண்ணியம். இந்த புண்ணியம் இரண்டு விதம். புண்ணியம் செய்தவர்களே திரும்ப பிறந்து வந்து அனுபவிக்கறது ஒரு விதம். அவங்க வாரிசுகள் அனுபவிக்கிறது ஒரு விதம். அதை புண்ணியத்தோட அளவு தீர்மானிக்கும்."

இப்படி அருணாசல சித்தர் கூறிவிட்டு 'இப்ப கல்யாணமான அமுதனும், தேவியும் அவங்க பாவ புண்ணியங்களை அவங்களே பிறந்து வந்து அனுபவிக்கிற ரகம்' என்று அவர் சொல்லவும் எல்லோரிடமும் ஆச்சரியம்.

"அது எப்படி சாமி... எதை வெச்சு சொல்றீங்கன்னு" கேட்டார் ராஜரத்னம்" எல்லாருடைய ஜாதகத்துலயும் பூர்வ ஜென்ம புண்ய ஸ்தானம்னு ஒரு கட்டம் உண்டு. அந்த கட்டத்துல எல்லாம் இருக்கும். அதை வெச்சு சொல்லிடலாம்" என்றார் அருணாசல சித்தர்.

"அப்ப இவங்க ஜென்ம ஜென்மமா புருஷன் பொண்டாட்டியாகவே வாழ்ந்தவங்களா சாமி?"

"ஆமாம்.... இது ஆறாவது ஜென்மம். அடுத்து ஜென்மத்துலயும் இவங்க கணவன் மனைவி தான் இது மாறாது" என்ற போது எல்லோரிடமும் பெரும் ஆச்சரியம்!

இனறு

ஸ்ரீதேவி பற்றி வந்தவர்கள் சொன்ன விஷயம் சுமதி அண்ணன் குமார் முகத்தில பெரும் பீதியைக் கிளப்பியது.

"என்னங்க சொல்றீங்க... ஸ்ரீதேவி அப்படி என்ன தப்பு பண்ணினா? என்று கேட்டான குமார்..

"அந்த பொண்ணால தானேங்க மதனுக்கு நிச்சயதார்த்தம்கற விஷயமே தெரியவந்தது. இலலேன்னா நிச்சயதார்த்தம் எங்க பொண்ணுக்கு சுலபமா நடந்திருக்குமேங்கறது அவங்க கோபம்..."

"அட இபபடி ஒரு சிக்கலா இதுல..."

"வாஸதவத்துல அந்த பொண்ணு உஙக பொண்ணு, எங்க பொண்ணுன்னு இரணடு பேரையும் காப்பாத்தியிருக்குஙக அநத மதன் ஒரு ஒண்ணா நமப அயோக்யப பயலுங்க..."

"உண்மை தான்..."

"ஆமா நீங்க எங்க இந்த ராத்திரி நேரததுல?"

"அது... அது..."

"என்ன... ஏதாவது பிரசனையா?"

"நீஙக இப்ப சொனனதை கேட்டா நிச்சயம அப்படித்தான்னு மனசு சொல்லுது..."

"கொஞ்சம் புரியற மாதிரி சொல்லுங்க ..."

"நாங்க லாட்ஜில ரூம் போட்டு தங்கியிருந்த இடத்துல அந்த பொண்ணு ஸ்ரீதேவியை காணோங்க... அதான் அதை தேடிகிட்டு வந்துருக்கோம்..."

"அடக் கொடுமையே... இது நிச்சயம் அந்த ஜம்புலிங்கம் வகையறா வேலையா தான இருக்கணும். எங்களுக்கு சந்தேகமே இல்லை..."

"அப்ப எங்க பொண்ணை அவங்க தான கடத்தியிருக்காங்களா?"

"சந்தேகமே படாதீங்க... முதல்ல போலீஸ ஸ்டேஷனுக்கு போய் புகார கொடுஙக. இபப இருக்கற சப் இனஸபெகடர் ரொமப நலல மனுஷன. சின்ன வயசுல ரொமப வேகமா இந்த போஸட்டுக்கு வந்தவர். அவருக்கு இந்த ஜமபுலிங்கம கூட்டத்தை கண்டாலே பிடிக்காது. போய புகார் கொடுஙக. மிச்சத்தை அவர் பாத்துப்பார்."

வந்தவா குமாரை போலீஸ ஸ்டேஷன நோக்கி திருப்பி விட்டார. குமாருக்கும் வேறுவழி தெரியவில்லை. தலையெழுத்தே என்று ஸ்டேஷன் நோக்கி ஓடத்தொடங்கினான்!

*****

திருப்பரங்குன்ற மலைப்பகுதி! ஜில்லென்று காற்று நிரம்பிய ஆக்சிஜனோடு வீசிகொண்டிருந்தது. மேலே இருந்து நாலா புறமும் பாரத்ததில் வட புறமாய் மதுரை நகரம் நட்சத்திரங்களை வீசி எறிந்தது போல மினு மினுக்க காட்சியளித்தது. பாறை ஒன்றின் மேல் அருணாசல சித்தரும் அவர் எதிரில் ஸ்ரீதேவியும் அமர்ந்திருக்க சித்தர் அவளுக்கு சில யோகா பயிற்சியை சொல்லிக் கொடுத்தபடி இருந்தார். அவளும் அதை அக்கறையாக செய்தபடி இருந்தாள்.

முதலில் பிராணாயாமம், அதன் பின் பதமாசனம் அதற்கும் பின் குக்குடாசனம், ரஜோலி என்று வரிசையாக அவர் சொல்லச் சொல்ல அவளும் செய்யலானாள்.

அவளுக்கு அது மிகவே புதிதாக இருந்த போதிலும் அவள் அதை மிக இலகுவாகச் செய்தாள். அவளுககே அது ஆச்சரியமாக இருநதது.

பொதுவாக ஆசனததை காலை செய்ய வேண்டியது. இரவில செய்ய வேண்டிய பயிறசி என்று வகை செய்திருப்பாாகள். இந்த யோக பயிற்சிகளை இரவில் செய்வது அந்த மலையில திரிந்த படி இருக்கும் சில திருட்டு பரதேசிகளுக்கு ஆச்சரியமாக இருநதது.

மலஜலம் கழிக்கவும், மல்லாக்க படுத்துககொண்டு சுருட்டு பிடிககவும் மேலே உள்ள பாறைகள் மிக ஏற்றவை அதறகாக வந்த சஞ்ஜீவிராயன் என்கிற ஒரு பிச்சைப் பரதேசி ஸ்ரீதேவி செய்யும் ஆசனததை பாாத்து ஆசசரியப்பட்டான்.

நெருங்கிச் சென்று "என்ன கெழட்டு சித்தா.... இப்ப போய் யோகம் சொல்லித்தரே...! என்று கேட்டான். அருணாசல சித்தர் முறைத்தும் பாாத்தார்.

"ஆ ஊன்னா முறைச்சிடு.... ஆமா யார் இந்த பொண்ணு இந்த வயசுல உனக்கு எப்படிய்யா இப்படி சின்னப் பொண்ணுங்க மாட்றாங்க?" என்று கிண்டல் செய்த சஞ்ஜீவிராயன் முன் சித்தரும் கோபத்தோடு தன் அருகில் கிடந்த ஒரு கம்பைத் தூக்கிப் போட்டார்.

அது அடுத்த நொடியே ஒரு ராஜநாகமாக மாறி சஞ்ஜீவிராயனை துரத்தத் தொடங்கியது. ராயனும் திரும்பிக்கூட பார்ககாதபடி ஓடத்தொடங்கினான்.

அந்த காட்சி ஸ்ரீதேவியையும் ஒரு உலுககு உலுக்கியது. தன் யோகம் கலைந்தவளாக சித்தரை பயத்தோடு பார்த்தாள்.

"பயப்படாதே.... நான் சொல்றபடி தொடாந்து செய். உனக்கு இது ஒண்ணும் புதுசு இல்லை. இதே இடத்துல 24 வருஷங்களுக்கு முன்னால நீ செய்தது தான் இதெல்லாம்...."

"நான் அபப பொறக்கவே இல்லையே சாமி...."

"நான் உன் முன் ஜெனம பிறபப சொனனேன்...."

"அப்படியா.... நான இந்த ஊாலதான பிறநது வளாநதேனா?"

"ஆமாம். அதனால தான் உனக்கு இந்த ஊரும் இடங்களும நீ இங்க வரும் போது புதுசாவே தெரியல...."

"என்னால இதை நம்பமுடியல சாமி...."

"நம்புவே.... போகப்போக நம்புவே! நீ இப்ப ஒரு உலக அதிசயம். உனக்கு இது ஏழாவது ஜென்மம்!"

"நீங்க சொல்றதுல ஒரு பாதி உண்மை. மறுபாதிதான் கொழப்புது ..."

"நலலா கொழமபு. அதுல ஒண்ணும் தப்பே இலலை. நமப மதத்தோடு மறு ஜெனம :பிலாச:பிககு நீ ஒரு நல்ல உதாரணம் தெரியுமா?"

"சாமி...."

"ஆமாம்மா.... நம்ப மதத்தோட பல சித்தாநதங்களுக்கு நீ இபப சாட்சி. என் நம்பிக்கையையும் கணிப்பையும் நீ கொஞ்சம் கூட பொய்யாககல...."

"சாமி.... நீங்க சொலறது உண்மைன்னா எனக்கு எதுககு இந்த பொறப்பு?"

"அதை நீ தெரிஞ்சுக்க தான் யோகம் செய்ய சொன்னேன். உன் வரைல இந்த உடம்பு மட்டும் தான் வேற ஆத்மா கடந்த எல்லா பிறப்புலயும் ஒண்ணு தான்..."

"ஆத்மான்னா உயிரா?"

"ஆமாம்... அப்படியும் சொல்லலாம்..."

"அப்ப நான் தொடர்ந்து பெண் பிறப்பாவே பிறந்துகிட்டு இருக்கேனா?"

"ஆமாம் ஸ்ரீதேவி, பூர்வ பிறப்புல உன் பேர் தேவி. உன் அப்பா பேர் ராஜரத்னம். நீ அமுதன் என்பவனை கல்யாணம் பண்ணிகிட்டே. உங்களுக்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்தது..."

"அப்படியா...?"

"அந்த குழந்தை இப்பவும் இருக்கு... ஆனா உன்னை விட கொஞ்சம் கூடுதல் வயதோட..."

"யார் அது?"

"நீ கூட நிச்சயதார்த்த சமயம் அந்த காளியம்மா பங்களாவுல செக்கச்செவேல்னு ஒரு பொண்ண பார்த்தியே...?"

"அந்தப் பெண்ணா?"

"அவளே தான்..."

"நிஜமாவா?"

"நான் சொல்லித் தரும் யோகங்களை செய்... உன் மூளை நரம்பு தூண்டப்பட்டு உன் பூர்வ ஜென்மம் உனக்கு பளிச்சின்னு ஞாபகத்துல வரும் பார்..." சித்தர் சொல்லிவிட்டு யோகம் கற்பிக்க தயாரான நொடி, மலைமேல் ஜம்புவின் ஆட்களும் வந்திருந்தனர்!

206-207/384 Go

# 22

அன்று

அருணாசல சித்தா தேவி மற்றும் அமுதனின் ஜென்மத்தொடர்பு பற்றி சொன்ன செய்திகள் பலரை ஆச்சரியப்பட வைத்தன. அந்த கூட்டத்தில ஜோசப் என்று ஒரு கிறித்தவரும் இருந்தார். அவர் முகத்தில மட்டும் பெரிய சிந்தனை ஓட்டம்.

சிந்து மதத்தை தவிர மற்ற மதங்கள் இந்த மறு பிறப்பு கொள்கையை நம்புவதில்லை. ஒரு உயிருக்கு ஒரு பிறப்புதான் என்றும் கூறுகின்றன. அது தான் ஜோசப்பை அப்படி சிந்திக்கச் செய்திருந்தது.

"என்னங்க.... சாமி சொல்றத உங்களால ஏத்துக்க முடியல?" என்று கேட்டார் ஒருவர்.

"ஆமாம்.... எங்க வரைல எங்க கடவுள் நாங்க எவ்வளவு பாவம் பண்ணியிருந்தாலும் மன்னிச்சு எங்களுக்கு சொர்க்கத்தை கொடுத்துடறார். அதனால திரும்பப் பிறக்க தேவையில்லங்கறது எங்க கருத்து...." என்றார் ஜோசப்.

"சாமி இதுக்கு நீங்க என்ன சொல்றீங்க?" என்று கேள்வி கேட்டவரே சித்தரிடம் கேட்டார்.

"அது எப்படி...? எவ்வளவு பாவம் பண்ணாலும் கடைசில கடவுள் மன்னிச்சிடுவார்னா பாவம் செய்ய யாரும் தயங்க மாட்டாங்களே.... கடைசில மன்னிப்பு கேட்டுட்டா தீர்ந்துடும்னுல்ல தப்பு பண்ணுவாங்க.... அது அப்படி இல்ல.... அத அப்படி புரிஞ்சிக்கவும் கூடாது. தெரியாம தப்பு செய்திருந்தாதான் கடவுளும் போனா போகட்டும்னு மன்னிப்பார். தெரிஞ்சு செய்யற பாவங்களுக்கு நாம பதில் சொல்லியே தீரணும். பாவம் புண்ணியம் காரணமா தான் பிறக்கும் போதே ஏற்ற தாழ்வோட பிறக்கறோம். ஏழை குடும்பத்துல பணக்கார குடும்பத்துல கருப்பா, செவப்பா, குட்டையான்னு பலவிதமா பிறக்கறோம். எல்லாத்துக்கும் பின்னால நாம பண்ற கர்மா இருக்கு. அதுகிட்ட இருந்து ஒரு ஆத்மா தப்பிக்கவே முடியாது."

என்று உறுதியாக கூறிய சித்தரிடம் அது என்ன ஏழு ஜென்மங்கற கணக்கு.... ஏன் இன்னும் கூட குறைய இருக்கக்கூடாது. இதை யார் தீர்மானம் செய்தார்? என்று ஒருவர் இடையிட்டார்.

"ஆமா இது கல்யாண வீடா.... இல்ல கருத்தரங்கம் நடக்கற இடமா.... போங்க போய் ஜமீன் குடும்ப விருந்தை நல்லா சாப்பிடுங்க. 18 வகை காய்கறியோட அமர்க்களமான விருந்து." என்றார் இன்னொருவர்.

"அந்த ஏழு ஜென்ம கணக்குக்கு நான் முதல்ல பதில் சொல்லிடறேன். நம்ப பூமிக்கு மேல பூமியை சுத்தி ஆகாயத்துல எவ்வளவோ நட்சத்திரங்கள், கிரகங்கள் சுத்திகிட்டிருக்கு! இருந்தாலும் சூரியன் சந்திரன் செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனிங்கற ஏழு கிரகங்களோட கதிர் வீச்சு மட்டும் தான் நம்ம பூமிமேல விழுது. மற்ற கிரகங்கள் கதிர் வீச்சு சம்மந்தமே இல்லாம ரொம்ப தூரத்துல இருக்கு. இந்த ஏழு வண்ணமயமான கிரகங்கள்தான் ஒளியாகவும், ஏழு சுரமாகவும் ஒலியாகவும் இருக்கு! மனிதனும் ஒரு ஒளி ஒலி கலவை தானே? அதனால இந்த ஏழோட சம்பந்தம் அவன் வரைல இப்படி தான் உருவாகுது. எல்லா உயிர்களுக்கும் ஏழு சம்பந்தம் இல்லை. மனிதனுக்கு மட்டும் தான் இருக்கு. இந்த ஏழு கிரகங்களும் ஒரு மனிதன் வாழ்க்கைல 120 வருஷ அளவு தங்களோட பங்களிப்பை தருது. அதனால ஒரு மனிதன் ஆயுள் 120 னு

தீர்மானமாச்சு. நூறு வருஷம் வாழணும்னு வாழத்தறதெல்லாம் சும்மா ஒரு நடைமுறை.... இருந்தாலும் செய்யமுடியாது. ஆகையால கணக்கு தான் முதலாவது.... மொழி கூட அப்புறம் தான். அதனால தான் எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்னு எண்ணை முதல்ல வெச்சு சொன்னாங்க. அந்த எண்ணான கணக்குல ஏழு ஜென்மக் கணக்கு ஒரு ஆச்சரியமான விஷயம்...."

என்று அருணாசல சித்தர் நீண்ட விளக்கம் தந்தார். நாம் வாழும் வாழ்க்கைக்குள் இது போல எவ்வளவோ விஷயங்கள். நாம் தான் எதையும் தெரிந்து கொள்ளாமல் புரிந்து கொள்ளவும் முடியாமல், மனிதப் பிறப்பு என்பதே சாப்பிடவும் தூங்கவுமான ஒரு பிறப்பு என்பது போல வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று தோன்றியது சித்தர் பேச்சைக் கேட்ட சிலருக்கு.... அதன் பின் விருந்தும் முடிந்தது. விருந்தில் கடைசி பந்தியில் மிச்சம் மீதியைத்தான் காளியம்மாள் சாப்பிடும் படி ஆனது. பலர் அதை ரசித்தனர் சிலர் அவளிடமே போய் "இப்படி மானம் கெட்டு மரியாதை கெட்டு நீ இங்க வாழணுமா இதுக்கு நீ பிச்சை எடுத்து பிழைக்கலாமே..." என்றார்.

காளியம்மாள் முகம் அதைக்கேட்டு சிவந்து போனது.

நல்லவேளை ஜம்பு அப்போது இல்லை. அவனை அந்தமானுக்கு கப்பல் ஏற்றி விட்டிருந்தார்கள். காளியம்மாள் தனிமையில் நெருப்பாக தகித்தாள். அப்போது பெரிய அளவில் மேள தாள சப்தம் அவள் காதில் கேட்டது. எழுந்து போய் பார்த்தாள். திருமண கோலத்தில் தலையில வைர கிரீடத்துடன் கழுத்தில் நவரதன மாலையுடன் அமுதனும் தேவியும் குலதெய்வ கோவிலுக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் முன் சட்டையணியாத திறந்த மார்போடு கையில் ஒரு அடிக்கு குறையாத மூன்று சாவிகளோடு ராஜரத்னமும் இருந்தார்.

காளியம்மாள் அந்த குலதெய்வம் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால் போய் வணங்கும் ஒரு வாய்ப்பே ஏறபடவில்லை. மேள தாளத்தோடு மணமக்கள் நடக்க ஒரு கூட்டம் பின் தொடர காளியம்மாளும் பின் தொடர்வது தெரியாமல் பின் தொடர்ந்தாள்!

திருப்பரங்குன்ற மலையின் பின்புறம் ஆட்டுக்கோல் சித்தர் என்பவரின் ஜீவசமாதியை கடந்து சென்றால் வயல் வெளியில ஒரு ஆலமரததடியில இருந்தது அந்த குல தெய்வ கோவில்! மிகச்சிறிய கோவில். கோவிலை ஒட்டி ஒரு கலவெட்டு! அதில்...?

இன்று

அநத இரவு வேளையில ஜம்புவின் ஆட்கள் மேலேறி வந்தபடி இருகக அருணாசல சித்தரும ஸ்ரீதேவியை யோகத்தில ஆழத்தியிருநதார். ஸ்ரீதேவிககு அந்த மலைககாற்றின் குளுமையும், ஒருவித பச்சை வாசனையும் அவளை ஒரு புது உலகுக்கு கொண்டு போயிருநதது. அப்படியே அவள் செய்த ஆசனஙகளின் விளைவால உடலில ஒரு வேகமான ரத்த ஓட்டமும மனதில் ஒரு இனம் புரியாத இலேசான தன்மையும் ஏற்பட்டிருந்தது. அப்படியே 'மாலையும் கழுத்துமாக அவள் அமுதனோடு வயல் வெளியில இருக்கும குலதெய்வக கோவில நோக்கி நடககும் நடையும் வாத்ய சபதமும் காதில கேட்டது.

அமுதன் தலையில் கிரீடமுடன் ஒரு ராஜா போல காட்சி தந்தான். அருகில் மணமகளாய் கழுத்து நிறைய நகைகளுடன் தேவி நடககும் காட்சி.

ஸ்ரீதேவியின் மனக்கண்களில் விரிந்த காட்சி அவளை பரவசத்தில் ஆழ்த்திய அந்த தருணத்தில் 'டேய்... அங்க பாருங்கடா அவளை....' என்கிற குரல் கேட்டது. ஐம்புவின் ஆட்கள் தான் டார்ச் லைட்டை உருட்டிக் கொண்டு அங்கே வந்திருந்தனர். அவர்களோடு சஞ்ஜீவராயின் என்கிற அந்த பரதேசியும் இருந்தான். அவன் தான் தேடித் திரிந்த அவர்களை இழுத்துக்கொண்டு வந்திருந்தான்.

"நான் சொன்னேன்ல.... பாருங்க" கிட்டபோனா அந்த சித்தன் பாம்பை ஏவி விடறான்...." என்றான்.

"பாம்பாவது தேளாவது.... என்ன சித்து வேலை காட்றானாக்கும்..." என்றபடி ஐம்புவின் ஆட்கள் சித்தரை நெருங்கினர். ஒரு பாறை இடுக்கில் தீப்பந்தம் எரிந்தபடி இருக்க சுமாரான வெளிச்சம். ஸ்ரீதேவி நடப்பது எதுவும் தெரியாத நிலையில் முன்ஜென்ம நினைவுகளில் இருந்தாள்.

அருணாசல சித்தர் அவர்களை திரும்பிப் பார்த்தார்.

"என்ன பாக்கறே... இந்த பொண்ணை வசியம் பண்ணி இழுத்துகிட்டு வந்துட்டியா? இந்த வயசுல உனக்கு வயசுப் பொண்ணு கேட்குதா?" என்றான் அவர்களின் ஒருவன்.

"ஏ கெழவா.... மரியாதையா இவள எங்க கூட அனுப்பி வை. இல்ல நீ அவ்வளவு தான்...." என்றான் இன்னொருவன்.

அருணாசல சித்தர் முறைத்து மட்டும் பார்த்தார்.

"என்ன முறைக்கறே.... அப்படியே இங்க இருந்து உன்னை ' பந்தை உருட்டி விடற மாதிரி உருட்டி விடுவோம். பாக்கிறியா? என்று ஒருவன் அருகில் வந்தான். அப்போது உர்ர்ர்... என்று ஒரு உறுமல் சப்தம் கேட்டது. ஒரு நாய் ஒன்று பாறை மேல கம்பீரமாக நின்றபடி உறும ஆரம்பித்திருந்தது! அவர்கள் பார்க்கப் பார்க்க ஒவ்வொரு பாறை மேலும் ஒரு நாய் தெரியத் தொடங்கியது. கிட்டத்தட்ட ஏழு எட்டு நாய்கள்! அவ்வளவும் அவர்கள் மேல் ஒரே பாய்ச்சலாக பாயத்தொடங்கின. முன்பு பாம்பு- இப்போது நாய்கள்!

அவர்கள் சிதறி ஓடத்தொடங்கினர்.

ஸ்ரீதேவியோ தன் பூர்வ ஜென்ம நினைவுகளில் மூழ்கியிருந்தாள். அதில முதல் இரவில அவள் பாலோடு அமுதன் முன் நிற்க, அவன் அவளை அருகில் அமரச் செய்து முதலில் அவளைத் தான் பாலைக்குடிக்க வைத்தான்.

அப்படியே "எல்லாமே ஒரு கனவு போல இருக்குல்ல..." என்றான். பின் அள்ளி அணைத்துக் கொண்டான். அந்த காட்சியும் எண்ணமும் அவள் முகத்தில வெட்கத்தை உருவாக்கி விட்டிருந்தது.

மொத்தத்தில் அவள் பூர்வ ஜென்ம நினைவுகளில் மொத்தமாக லயிக்கத் தொடங்கி விட்டாள்!

அந்த இரவு வேளையில் அங்கங்கே நாய்க்கடியோடு சட்டையெல்லாம் கிழிந்த நிலையில் காளியம்மாள் முன் வந்து நின்றவர்கள் அவளுக்கு அதிர்ச்சியளித்தனர்.

"என்னடா இது கோலம்?" என்று அவள் கேட்க ஜம்புவும் வந்து சேர்ந்தான். அவர்களும் ஸ்ரீதேவி மலை மேலே அருணாசல சித்தரோடு இருப்பதையும், அவளை நெருங்கிய போது சித்தர் நாய்களை ஏவி விட்டு கடிக்கச் செய்ததையும் கூறி முடித்தனர்.

"என்னடா இது கொடுமை... இந்த கெழவன் எங்க இருந்து நம்ப விஷயத்துல பூந்தான்?" என்று மோவாயில் கை வைத்தாள் காளியம்மாள்.

"அவ அங்க என்னடா பண்றா?"

"அவ அந்த கெழவன முன்னால யோகாசனத்துல உக்காந்துகிட்டிருந்தா..."

"என்னடா உளாறீங்க...?"

"போய் பாருங்க தெரியும்..."

"ஜம்பு நகத்தை கடிக்கத் தொடங்க காளியம்மாளும் "டேய் அந்த சித்தன்கிட்ட கவனமா இருக்கணும். அவன் அந்த காலத்துல இருந்தே இருக்கறவன்! அவனுக்கு இந்த குடும்ப விஷயம் அவ்வளவும் தெரியும்! நடுவுல ஒதுங்கியிருந்தவன் இப்ப திரும்ப மூக்கை நுழைக்க ஆரம்பிச்சது தான் ஏன்னு தெரியல...." என்றாள்.

"அக்கா... எனக்கென்னவோ பெரிய சதி வேலை நம்மை சுத்தி நடக்கற மாதிரி தெரியுது. அந்த பொண்ணால தான் நிச்சயதார்த்தம் நின்னுச்சு. இப்ப அவ கிழவன் கூட மலை மேல உககாந்து என்னவோ பண்றா! வாஸ்தவத்துல அவ இப்ப சென்னை திரும்பி அங்கயில்லை படுத்து தூங்கிகிட்டு இருக்கணும். ஆனா இங்க அந்த சித்தன் கூட இருககான்னா பெருசா ஏதோ நடககுதுக்கா..."

ஜம்பு குறுககும் நெடுக்கும் நடந்து தவிககத் தொடங்க டேய் இங்க நடந்தா ஆசசா... வா போய் பார்ப்போம். கைல துப்பாககிய எடுத்துக்க நாய் வந்தா சுட்டுத் தள்ளு...." என்றாள். அவளிடம் அப்படி ஒரு ஆவேசம்.

அடுத்த நொடிகளில் அவர்கள் இருவரோடும் ஒரு கார திருப்பரங்குன்ற கிரிவலச சாலையில் வேகமெடுத்து ஓடத் தொடங்கியது!

போலீஸ் ஸ்டேஷனில் சுமதி அண்ணன் குமார் கம்ப்ளைண்ட் எழுதிக் கொடுத்த நிலையில் இரவு ரோந்துக்காவல் செய்வதற்காக ஸ்டேஷனுக்குள் நுழைந்து கொண்டிருந்தார் சப் இன்ஸ்பெக்டர் அமுதேஷ்வர்! கம்ப்ளைன்டை பார்த்துவிட்டு 'போட்டோ இருக்கா' என்று கேட்டார்!

# 23

அன்று

அந்த கல்வெட்டில் 'திருமங்கலம் சபத குடும்ப வகையறாவுக்கு சொந்தமான பெருந்தேவி திருக்கோவில் என்கிற வாசகங்கள் காணப்பட்டன. ஒரு சதுரக்கல்லில் பெருந்தேவி அம்மன் உருவம் செதுக்கப்பட்டு அதற்கு எண்ணெய் பூசி சந்தன குங்குமம் பொட்டு வைக்கப்பட்ட நிலையில் ஏழுவித பூக்கள் கொண்ட கதம்பமாலை சாற்றப்பட்டிருந்தது...

ராஜரத்னம் அமுதனோடும் தேவியோடும் சிறிய அந்த சன்னதி முன் கூட்டமாக நின்றார். அமுதன் தலையில் கிரீடத்தோடு நின்றதை கூட்டத்தார் பார்த்தபடியே இருந்தனர். பூசாரி பொன்னம்பலக் கண்ணன் என்பவர் மார்பு முழுக்க சந்தனம் பூசியவராக ஓடி வந்து ராஜரத்னம் முன் மிக மரியாதையாக நின்றார்.

"எங்கவே போய்ட்டரு.... பூசையப் போடுமய்யா.... இன்னும் எவ்வளவு கல்யாண சோலிய பாக்க வேண்டியிருக்கு" என்று அதட்டினார் ராஜரத்னம். பூசாரியும் தடபுடலாக பூஜையை தொடங்கினார்.

அப்போது தலையில் அரிப்பெடுக்கவும் கிரீடத்தை கழற்ற முனைந்தான் அமுதன். அதை ஒரு உறவுக்காரர் வேகமாக தடுத்தார்.

"தம்பி... பூஜை சமயத்துல கிரீடத்தை கழட்டாதீங்க. இனி இந்த திருமங்கல பாளையக்கார குடும்பத்துக்கும் சப்த குடும்ப வகையறாக்களுக்கும் நீங்க தான் தலைக்கட்டு. அதாவது ராஜா மாதிரி. அதுக்கு அத்தாட்சி தான் இந்த கிரீடம்... இதோடு மதிப்பு எவ்வளவுன்னு தெரியுமா?" என்றும் கேட்டார்.

ராஜரத்னம் பூஜையில் கவனமாக இருந்ததால் உறவினர் பேசியதில் கவனம் செலுத்தவில்லை. அதே சமயம் மெல்ல வந்து ஒட்டிக் கொண்டிருந்த காளியம்மாள் காதுகளில் அது விழுந்தது. அமுதன் அந்த உறவினரிடம் கேள்வி கேட்டிருக்க அவரே சொன்னார்... "தம்பி இது அந்த காலத்துலயே லட்சம் வராகனுக்கு மதிப்பிடப்பட்டது. இப்ப என் கணக்கு சரியா இருந்தா 90 கோடிக்கு குறையாது" என்றார். காளியம்மாள் வாயைப் பிளந்து விட்டாள்.

"இதுல நவரத்னக் கல்லு அவ்வளவும் இருக்கு. கூடுதலாக நாகமாணிக்கமும் இருக்கு" என்று அந்த கல்லையும் தொட்டுகாட்டினார்.

காளியம்மாளுக்கு பரபரவென்று இருந்தது. 'ஒரு கார் டிரைவர் மகனின் தலை மேல் 90 கோடிகளா?' விக்கித்து நின்று விட்டாள். சட்டென்று திரும்பிய ராஜமாணிக்கம் "ஏலேய்... இப்ப எதுக்குய்யா இதோட மதிப்பை எல்லாம் சொல்லிகிட்டு வாய வெச்சுகிட்டு சும்மா இருங்கடா" என்று அதட்டினார்.

பூசாரியும் கற்பூர ஆரத்தியை காட்டிட அமுதன் கண்ணில் ஒற்றிக் கொண்டான். அதை தொடர்ந்து அவனுக்கு பரிவட்டம் கட்டப்பட்டு பெருந்தேவித் தாயின் கால் சலங்கைகள் கட்டப்பட்டன. அந்த சலங்கைகளை கட்டிக்கொண்ட நிலையில அவன் கோவிலை சுற்றிவர வேண்டும். முன்னதாய பூசாரி அமுதனைப் பார்த்து 'ராசா... இனி நீங்க தான் எங்களுக்கும் ஏழு குடும்பத்துக்கும் எல்லாம்... இந்த நிமிஷம் நீங்க குலதெய்வமான பெருந்தேவியோட புத்ரர். ஆத்தா உங்ககிட்ட இப்ப கால்சலங்கை வடிவத்துல குடி இருக்கா. இந்த சலங்கை சபதம்

உங்களுக்கு எப்ப கேட்டாலும் ஆத்தா உங்களுக்கு வழிகாட்றா... உங்கள பாத்துகிட்டு இருக்கான்னு அர்த்தம்..." என்றார்.

அமுதனுக்கு அவர் அடிக்கடி ஏழு குடும்பம். ஏழு குடும்பம் என்று சொல்வது யாரை என்று தெரியவில்லை. அதைக் கேட்கவும் செய்தான்.

"தம்பி உங்க பாளையக்கார அச்சுதப்பகுடும்பம் தான் தலைகுடும்பம். முதல் குடும்பம். இது போக ஆறு குடும்பம் இருக்கு. இந்த ஆறு குடும்பமும் உங்க அங்காளி பங்காளிகள் தான். இந்த ஏழு குடும்பதுக்குதான் இந்த கோவில்ல முன்னுரிமை இந்த ஏழு குடும்பமும் ஏழு தலைமுறைக்கு பிரியாம இருக்கும்கறது நம்பிக்கை. இந்த கோவிலை உங்க முன்னோர்கள் கட்டினப்ப பெருந்தேவி அம்மா கனவுல வந்து வாக்கு கொடுத்தாங்களாம். உங்க குடும்பத்தை இந்த தாய் தான் இப்பவும் காவல் காத்துகிட்டு வரா. இங்க வந்து உருளி நின்னா ஓடிவருவ தம்பி. இப்ப கூட உங்களை வாழ்த்த அவ ஏதாவது வடிவத்துல வருவா. குறிப்பா அவ சர்ப்பமா வர்றது தான் வழக்கம்..." எனும்போது பெருந்தேவி அம்மன் சிலைமேல் ஒரு சர்ப்பம் படம் விரித்து நின்றது.

எல்லோரும் சிலிர்ப்போடு கன்னத்தில் போட்டுக் கொண்டனர். ராஜரதனம் விக்கித்துப் போய் பார்கக காளியம்மா மனதிலும் முதல் தடவையாக ஒரு இனம் புரியாத பயம்!

பூசாரி திரும்பவும் கற்பூர ஆரத்தி காட்டிய பிறகே அந்த சர்பமும் அப்படியே பின்னடங்கி மறைந்தும் போனது. எல்லோரும் பூரித்தனர். அமுதன் இனி திருமங்கல அச்சுதப்பா பாளையக்கார குடும்பத்தை தலைமை தாங்கி நடத்துவான் என்றும் உறுதியாக நம்பதொடங்கினர்!

முதல் இரவு!

கிட்டதட்ட ஒரு லாரியளவு பூக்களைக் கொண்டு குவித்து அறையை அலங்கரித்தது அதில் அமுதனைப் பிடித்து தள்ளியிருந்தனர். சில நிமிடங்களில் தேவியும் அனுப்பப்பட்டாள். தேவி உள்ளே வரவும் அமுதன் எழுந்து நின்றான். அவன் காலில் விழமுற்பட்ட போது தடுத்தான்.

"தேவி... நீ என் கால்ல விழக்கூடாது. நான் தான் உன் கால்ல விழணும். எனக்கு எவ்வளவு பெரிய வாழ்க்கையை நீ கொடுத்திருக்கே" என்றவன் வாயைப் பொத்தினாள் தேவி.

"இந்த பணம், காசு, நிலம், நீச்சு, நகை நட்டு இது எதையும் வெசசு எடை போடாதீங்க. எல்லாத்துலயும் பெருசு அன்பும் பாசமும் தான்... அதுல எங்க வீட்டை விடவே உங்க வீடுதான் கோடீசுவர வீடு" என்றாள்.

"இனிமே உங்களுக்கு நான் ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவன்கற தாழ்வு மனப்பான்மையே கூடாது. நாம் இநத ஜென்மம் மட்டுமில்ல வரப்போற ஜென்மத்துலயும் கணவன் மனைவியா இருப்போம். இன்னிக்கு ஊஞ்சலல நம்மை உட்காரவெச்சு பண்ணாடிங்கறவா பாட்டு படிச்சாரே கேட்டிங்களா?"

"கேட்டேன்... அதே சமயம் என் கவனமெல்லாம் உன் சித்தி மேலயும் இருந்தது..." -

"நல்ல நேரத்துல அவங்களபத்தி பேசிகிட்டு..."

"சரி பாட்டுல என்ன படிச்சாங்க..."

"நமக்கு இது ஆறாவது ஜென்மமாம். ஏழு ஜென்மம் நாம் பிரியாம இருப்போமாம்..."

"அது என்ன ஏழுங்கற கணக்கு... அதுக்கு மேல தொடரக் கூடாதா?"

"ஏழுங்கறது தான் கணக்கு அப்புறம் நாம் பிறக்கவே மாட்டோம் மோட்சம்தான்...."

"சரி... இப்பவே எதுக்கு மோட்சத்தை பத்தி பேசிகிட்டு.... இந்த ஜென்மாந்தரக் கணக்குல எல்லாமும் எனக்கு பெருசா நம்பிக்கை கிடையாது... வாழ்க்கை ஒரு தடவைதான் வாழப் போறதும் ஒரு தடவை அந்த வாழ்க்கையை அர்த்தத்தோடு எல்லாருக்கும் பயன்படற மாதிரி வாழ்ந்துடணும் இது தான் என் கொள்கை ..."

"அது சரி... இருந்தாலும் நாம ஒண்ணும் தாய் தகப்பன் இல்லாம தானா உருவாகிடலையே .. ஒரு தாய தகப்பனுக்கு பிறந்தவங்க தானே நாம?"

"அதனால?"

"அவங்க பாவ புண்ணியம். அவங்க அப்பா அம்மா பாவ புண்ணியமனு ஒரு கணக்கு இருக்கே. அதை அடிப்படையா வெச்சுதானே நாம இந்த பூமில பிறக்கறோம்."

"இதை எதை வெச்சு நம்பச் சொல்றே?"

"நம்ப வாழ்க்கைய வெச்சு தான். நம்ப வாழ்க்கைல நாம் நினைக்கற மாதிரியேவா எல்லாம் நடந்துடுது .. பல நேரங்கள்ள நடக்கறதுக்கு தகுந்த மாதிரிதானே நாம வாழறோம்?"

"அதனால?"

"என்ன அதனால.... நம்ப வாழ்கையே நம்ப கைல இல்லாத ஒண்ணு தானே?"

"இல்ல.... இது என் கைல இருக்கற ஒண்ணாதான் நான் நினைக்கறேன்...."

"வேண்டாங்க.... முதல் இரவுல நமக்குள்ள தர்க்கம் வேண்டாம். விளக்கை அணைச்சிட்டு வாங்க...." என்று வெட்கத்தோடு சொன்னாள் தேவி.

இன்று

அமுதேஷ்வர் ஸ்ரீதேவியின் போட்டோவை கேட்கவும் சுமதியின் அண்ணன் குமார் உடனேயே தன் செல்போனில் அன்று நிச்சயதார்த்தம் நடந்த போது எடுத்த படங்களில் ஸ்ரீதேவி இருக்கும் படத்தை சற்று பெரிது படுத்தி காட்டினான்.

ஸ்ரீதேவியின் அந்த படம் அமுதேஷ்வரை கூர்மையாக பார்க்க வைத்தது. "சரி... இதை எனக்கு ஃபார்வர்ட் பண்ணுங்க மிச்சத்த நான் பார்த்துக்கறேன்" என்றான்.

குமார் அடுத்த நொடியே ஃபார்வர்ட் செய்தான். "சார்... விடிஞ்சா நாங்க விமானத்துல சென்னை போகணும். அந்த பொண்ணு இல்லாம போனா அவங்க வீட்டுக்கும் பதில் சொல்ல முடியாது...' என்ற குமாரை சற்று கோபத்தோடு பார்த்த அமுதேஷ்வர்.

"என்ன சார் நடுராத்திரில கம்ப்ளைண்ட் கொடுத்துட்டு விடியறதுக்குள்ள தேடி கண்டுபிடிக்க சொல்றீங்க. அந்த பொண்ணு தன் இஷ்டத்துக்கு எங்கையாவது போகும் நாங்க எங்க தூக்கத்தை கெடுத்துகிட்டு தேடணுமா?"

"நான் சொல்றத நீங்க சரியா புரிஞ்சிக்கலன்னு நினைக்கறேன்..."

"எல்லாம் நல்லா புரியுது. நீங்க விளக்கம் தர வேண்டாம். உங்க அதிஷ்டம் இப்ப நாங்க கம்ப்ளைண்டை எடுத்துகிட்டு இருக்கோம். புறப்படுங்க... பொழுது விடியட்டும்' என்னன்னு பாக்கலாம்..."

"அப்ப காலைல நாங்க சென்னைக்கு?"

"போறதும் போகாததும் உங்க இஷ்டம். கம்ப்ளைண்ட் கொடுத்துட்டு பொறுப்பில்லாம போனா நாங்க என்ன செய்ய முடியும்?"

"சார்... அந்த பொண்ணு தொலைஞ்சு போக சின்னக் குழந்தை இல்லை சார்... அவளை அந்த பாளையக்கார குடும்பம்தான் சார் கடத்தியிருக்கணும்."

"ஹோட்டல்ல ரூம்ல இருக்கும்போது காணாமல் போனவள அவங்க எப்படி கடத்தியிருக்க முடியும?"

"வாஸ்தவம் தான். அவங்கமேல தான் எங்களுக்கும் சந்தேகம். ஏன்னா அவளால தான் கல்யாணம் நின்னுச்சு. எங்களுக்கு நல்லது நடந்திடுச்சி. அதே சமயம் அந்த குடும்பத்துக்கு பெரிய அவமானமா போயிடிச்சு. அதனால...''

"புரியுது... நான் என்னன்னு பாக்கறேன். நீங்க புறப்படுங்க" என்ற குமாரை வழியனுப்பிய அமுதேஷ்வா திரும்ப செல்போனில் ஸ்ரீதேவி படத்தை பார்த்தான்.

அந்த முகத்தை பலகாலம் பார்த்தது போல ஒரு உணர்வு. அப்படியே இரவு ரோந்துக்காக ஜீப்பில் ஏறி அமர்ந்தவன் டிரைவ் போலீசிடம் "திருப்பரங்குன்ற கிரிவீதியை சுத்தி வந்துட்டு அப்படியே மதுரை பெரியார் பஸ் ஸ்டாண்ட் பக்கம் ஜீப்பை விடுய்யா....'' என்றான்.

ஹெட்லைட் வெளிச்சம் தெருவில பாய்ந்திட ஜீப்பும் புறப்பட்டது!

மலைப்பகுதி! ஸ்ரீதேவி அருணாசல சித்தர் முன் கட்டுப் பெட்டியாக அமர்ந்திருந்தாள். அவர் அவளுக்கு யோகாசனங்களின் அடுத்தடுத்த

கட்டங்களை சொன்னதோடு தன் கட்டை விரலால் அவள் நெற்றிப் பொட்டில் கை வைத்து தன் தவ சக்தியை ஒரு மின்சாரம் போல அவளுக்குள் பாய்ச்சியதில அவளுக்குள் இப்போது தான் யார் என்பதே மறந்து போய் ஒரு கைக்குழந்தையின் அழுகுரலுக்குள் தன்னை இழந்திருந்தாள்.

அருணாசல சித்தரும் அவளிடம் பேச ஆரம்பித்திருந்தார்.

"தேவி...''

"ஸ்ரீதேவின்னு சொல்லுங்க சாமி..."

"எத்தனை ஜென்மம் எடுத்தாலும் தேவிங்கற உன் பேரு மட்டும் மாற்றமில்லை முதல ஜென்மத்துல நீ பிரபாதேவி இரண்டாவதுல நீ லஷ்மிதேவி, மூணாவதுல நீ காஞ்சனா தேவி, நாலில மாதுரிதேவி, ஐந்தில நீ லதாதேவி, ஆறில நீ ஸ்ரீதேவி, ஏழில நீ இப்ப தேவி...''

"இப்படி நான பெண்ணாகவே பிறக்கவும் தேவிங்கற பேரே எனக்கு வாய்க்கவும் காரணம் என்ன சாமி?"

"உங்க குலதெய்வமான பெருந்தேவி தான். அவ ஆசீர்வாதத்துல பிறந்த நீ அவமேல ரொம்ப பக்தியா இருந்தே.... எல்லா ஜென்மமும் நான் உன்னையே வணங்கணும்னு அவகிட்ட வரம் கேட்டே அவளும் கொடுத்துட்டா...."

"சாமிகிட்ட எல்லாரும் எவ்வளவோ கேட்கறாங்க. அதெல்லாம் கிடைச்சிடுதா. இது மட்டும் எப்படி சாமி நடந்தது?''

"சுருக்கமா சொல்லப் போனா இதையும் விதின்னு தான சொல்லணும்."

"அப்படியே இருக்கட்டும். என் காதுல ஒரு குழந்தை அழுகுரல் இடைவிடாம கேட்குதே எதனால சாமி?"

"அது நீ பெற்ற பெண் குழந்தைதான். அவளை நீ ஜனிச் செடுக்கவுமே உன் விதி அந்த பிறப்புல முடிஞ்சி போச்சு. இப்ப ஏழாம் பிறப்பெடுத்து வந்துருக்கே..."

"அந்த குரல் என் காதுல இப்ப கேட்க காரணம்?"

"ஒரு தாயை ஒரு குழந்தை இழந்தா எவ்வளவு கஷ்டப்படும்னு உனக்கு தெரியும் தானே?"

"நல்லா தெரியும்.... இப்ப என் குழந்தை எங்க இருக்கா?"

"இதே ஊர்ல நீ எந்த குடும்பத்து நிச்சயதார்த்தத்துல கலந்துக்க வந்தியோ அந்த பாளையக்கார குடும்பத்துல ஒரு அடிமையா கொலு பொம்மையா இருக்கா...."

"ஐயோ கேட்கவே நெஞ்சை என்னவோ செய்யுதே..."

"செய்யணும்னு தானே சொல்றேன். எனக்கும் சில கடமைகள் இருக்கே..."

"எனக்கு இப்பவே என் மகளை பாக்கணும். அவளை தூக்கிக் கொஞ்சணும் போல இருக்குசாமி..."

"எல்லாம் நடக்கும். அதுக்குத்தான் நீ திரும்ப பிறந்தும் வந்துருக்கே. பொழுது விடியட்டும் வயல்காட்டுல உள்ள உங்க பெருந்தேவி அம்மன் கோவிலுக்கு போ. அப்ப நிறைய அதிசயங்கள் நடக்கும். உன் பூர்வ ஜென்ம புருஷனையும் அப்ப நீ பாப்பே..."

"அப்படின்னா அவர் உயிரோடு தான் இருக்காரா?"

"உன்னைப் போலவே மறு பிறப்பெடுத்து வந்திருக்காரும்மா...."

"யார் அவர்?"

"நாளைக்கு நீ நேர்ல பாப்பே..."

"அதுவரை என் குழந்தையோட அழுகுரலை நான் கேட்டுகிட்டே தான் இருக்கணுமா?"

"வேண்டாம். நீ அமைதியா தூங்கு" சொன்ன வேகத்தில அவள் தலையில் கை வைத்தார் அருணாசல சித்தர். அவளும் தன்னை மறந்து தூங்கத் தொடங்கினாள்.

அப்போது வானில் மழைவருவதற்கான அறிகுறிகள். இடி இடித்து மின்னல் வெட்டியது. காளியம்மாளும், ஜீவானந்தமும் அடிவாரத்தில் தாங்கள் வந்த காரில் இருந்து இறங்கி மேலே ஏற ஆரம்பித்திருந்தனர்.

காளியம்மாள் கைவசம் துப்பாக்கி வைத்திருந்தாள்.

"எந்த நாய் வருதுன்னு பார்க்கறேன்..." என்றபடியே மேல் ஏறினாள்.

ரோந்து சுற்றி வந்தபடி இருந்த அமுதேசுவரும் அந்த நேரத்தில் அவர்கள் மலை மேல் ஏறுவதைப் பார்த்தவனாக அவனும் மேலே ஏறத்தொடங்கினான்.

# 24

அன்று

மறுநாள் காலை!

தேவி தான் படுக்கையறையில் முதலில் கண் விழித்தாள். அமுதன் உறக்கத்தில் தான் இருந்தான். ஆழ்ந்த தூக்கத்தில் அவனைப் பார்த்த தேவிக்கு பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல தோன்றியது. பால் நிலா போல முதல் பிரம்மா தனி கவனம் எடுத்து செய்தது போல ஒரு லட்சணம் அதில் அழகான அரும்பு மீசை.

தலைமுடி கலைந்திருந்தது அதிலும் ஒரு கலையழகு தென்பட்டது. கழுத்தில் தேவியின் குங்குமம் கறை படிந்திருந்தது

களியாட்டத்தின் போது அவன் கழுத்தில் முகம் புதைக்கப்போய் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும். அவன் அப்படியே எழுந்து சென்றால் யாராவது பார்த்தால் சிரிக்கக்கூடும் எனவே அவள் தன் சேலை முந்தியைக் கொண்டு துடைக்க முற்பட்டாள். கறை அதிகமாகி சேலை முந்தியும் கறையானது. இதை கறை என்று சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது இது ஒரு இன்பத்தடயம்.

ஒரு பெண் பூரணமாக அவள் இப்படிப்பட்ட தடயங்களுக்கு ஆளாக வேண்டும் தேவி அவ்வேளையில் சேலை முந்தானையைப் பார்த்து இந்த சேலையை எக்காரணம் கொண்டும் தோய்த்து விடாமல் அப்படியே பத்திரமாக பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

மனம் முழுக்க ஒரு பேரமைதி!

ஒரு பெண் வரையில் ஆசைப்பட்டவன் புருஷனாக கிடைப்பது என்பது தான் அவள் வரையில் புதையல்.

தேவிக்கும் அந்த புதையல் கிடைத்துவிட்டது. அவள் மனம் போல மாங்கல்யம் அமைந்துவிட்டது நடக்குமோ நடக்காதோ என்கிற எல்லா அச்சங்களும் ஒழிந்துவிட்டன. அவ்வேளையில் ஜம்புவின் நினைவும் வரவே செய்தது தெளிந்த நீரோடையில் ஒரு கல் விழுந்து கலங்கியது போல அவள் மனமும் அவனால் கலங்கத் தொடங்கியது. எங்கே அவன் புருஷனாக வந்து பாடாய் படப் போகிறோமோ என்பதெல்லாம் ஒரு பயமாய் மட்டுமே அமைந்து அந்த கட்டங்களை எல்லாமும் கடந்தாகிவிட்டது

இந்த இனிய காலை வேளையில் அந்த அசுரனைப் போய் நினைத்துக் கொண்டு என்று அவளாக அவன் எண்ணத்தை வலிந்து விலக்கிக் கொண்டாள். எழுந்து நின்று அமுதன் காலைத் தொட்டு வணங்கினாள். அப்படி வணங்க வேண்டும் என்று யாரும் சொல்லித் தரவில்லை. அவளுக்கே தோன்றியது. அப்போது அவன் கால் கட்டை விரலுக்கும் அடுத்த விரலுக்கும் இடையே மிளகு அளவில் ஒரு மச்சம் தெரிந்தது. ஏதோ கறையோ என்று தேய்த்துப் பார்த்தாள். அவன் புரண்டு படுத்ததில் அடிபாதம் தெரிந்தது. பளிச்சென்று அழுக்கின்றி இருந்தது

கால்களை தங்கம் போல் வைத்துக் கொள்வது ஒரு கலை, இப்படிப்பட்டவர்கள் வாழ்வில் எடுக்கிற முயற்சிகளில் எல்லாம் வெற்றி பெறுவார்களாம். சாமுத்ரிகா லட்சணத்தில் இந்த விஷயம் அழுத்தமாக சொல்லப்பட்டிருக்கிறது. தேவிக்கு அதெல்லாம் தெரியாது. ஆனால் அவன் அவளை எல்லா விதத்திலும் கவர்கின்றவனாக இருந்தான். அவனைப் பார்த்துக்கொண்டே ஆடையை திருத்திக்கொண்டு அவள் வெளியேறினாள்.

பெரிய அந்த அரண்மனை வீட்டில் ஒரு பெரிய காரியத்தை சாதித்துவிட்ட மன நிம்மதியோடு உறவினர்கள் சிலரோடு பேசிக்கொண்டிருந்தார் ராஜரத்னம்.

"கல்யாணம் தடபுடலா முடிஞ்சிடிச்சு. மருமகனும் வந்தாச்சு. இனி இந்த அச்சுதப்பர் குடும்பத்தை கைல பிடிக்க முடியாதுன்னு சொல்லுங்க..." என்று அதில் ஒருவர் கூற "இப்ப என்ன பிடிக்கற மாதிரியா இருக்கு... எப்பவும் இந்த குடும்பம் டாப்ல இருக்கற குடும்பம் தானே..." என்றார் இன்னொருவர்.

முன்பெல்லாம் இப்படி பேசும் போது காளியம்மாள் இருப்பாள். அவளுக்கு வெற்றிலை மடித்து தருவாள் ஒருத்தி. இப்போது அந்த தர்பார் இல்லை. வீட்டு வேலைக்காரர்கள் கூட ஒருவித சுதந்திர உணர்வுடன் தான் காணப்பட்டனர். காளியம்மாள் தன் அறையில் ஜன்னல் வழியே வெளியே தெரியும் தோட்டதனை பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

அவள் பாரக்க தோட்டத்து மரத்தில் பச்சைப்பாம்பு ஒன்று கிளைக்குருவி ஒன்றை குறி வைத்திருந்தது. கூர்ந்து கவனித்தால தான் பசசைப் பாமபுகள கண்களில படும். இல்லாவிட்டால இலையோடும கிளையோடும் அதுபோலவே தான் தெரியும். காளியம்மாளுக்கு கூர்மையான கண்கள... அவள கண்களுக்கு அந்த பாம்பு தெரிந்துவிட்டது. அவள பார்த்தபடியே ஒரே தாவில குருவியையும் அது கவ்விப் பிடித்தது. குருவி படபடத்து துடி துடித்து தப்பிக்கப் பாரத்தும் பயனில்லை அந்த பசசைப் பாம்பின வாய் குருவியின அளவுககேற்ப திறந்து கொண்டு குருவியை விழுங்கி முடித்து விட்டது.

இங்கே குருவிக்காக பரிதாப்படுவதா? இல்லை பாமபின திறமையை மெச்சுவதா என்கிற கேளவி காளியம்மாளுக்குள எழுந்தது. இயற்கை இப்படித்தான செயலபடுகிறது. ஒன்று அழிந்தாலே இன்னொன்று உருவாக முடியும் எனபதே இயற்கையின அடிப்படை விதியாக இருக்கும் போது தான மட்டும் முடங்கிக் கிடப்பதில் என்ன அர்த்தம் இருந்து விட முடியும?

அவளுக்குள் ஒரு வைராக்யம்! அப்போது அதற்கு தோதாக அவள அறை தொலைபேசி வழியாக ஜீவா காளியம்மாளை அழைத்தான்.

"அக்கா..."

"என்னடா?"

"எப்படி இருக்கேன்னு கேட்க மாட்டியா?"

"ரொம்ப விரக்தியில பேசறக்கா நீ..."

"நீ விஷயத்துக்கு வா..."

"நான் இங்க ஒரு மலையாள நம்பூதிரி சாமியை பார்த்தேன்..."

"அவங்க கேரளாவுல்ல இருப்பாங்க... அந்த பகுதில என்ன வேலை அவருக்கு...?"

"சரி அவருக்கென்ன?"

"மனுஷன பெரிய கில்லாடியா இருக்காருக்கா. குறிப்பா வசியம், சூன்யம் இதுல அசத்தறாரு..."

"நம்ப பூசாரிய விடவா?"

"பூசாரில்லாம் ஒண்ணாங்கிளாஸ். இவர் இந்த வித்தைல டாக்டர் பட்டமே வாங்கினவர்?"

"சரி என்ன செய்யலாம்கறே?"

"நான் நம்ப சிக்கல சொன்னேன். என்னால அதை சாதாரணமா தீர்த்து வைக்க முடியும்னு சொன்னார்...."

"எப்படி?"

காளியம்மாள் கேட்க அவன் சொல்லத் தொடங்கினான்!

இன்று

அந்த இரவு வேளையில் காளியம்மாளும் ஜீவானந்தமும் மலைமேல ஏறுவதை பார்த்தபடியே பின்தொடர்ந்த அமுதேஷ்வருக்கு ஏனோ முதல் முறையாக அங்கு நுழைவது போலவே தெரியவில்லை.

மிகமிக பரிச்சயமான ஒரு இடத்தில் பலநாள் வந்து சென்ற உணர்வில கால்கள் மேலேறின. முன்னால் சென்றபடி இருக்கும் காளியம்மாள் பேசுவது அமுதேஸ்வர் காதில் விழுந்தது.

"ஜீவானந்தம்... அந்த காலத்துல உன் மாமாங்கற மலையையே விழுங்கி ஏப்பம் விட்டவ நான்கறது உனக்கு தெரியும். அப்படிப்பட்ட என்னை இந்த பொண்ணு இந்த ராத்திரியில் இந்த மலையை ஏறும்படி பண்ணிட்டாளேடா..."

"விடுக்கா... நம்ப வழில குறுக்க வந்துட்டு ஒருத்தரால நிம்மதியா வாழ்ந்துட முடியுமா? வா ரெண்டுல ஒண்ணு பாத்துடுவோம்..."

"நாதேரி நாய... எல்லாம் நல்லா கூடி வந்தது. அவளையும் கெடுத்து குட்டிச் சுவராக்கிட்டு இங்க இந்த கிழட்டு சித்தனை பாக்க வந்துருக்காளே... இந்த சித்தன் ஏதாவது திட்டம் போட்டுக் கொடுத்திருப்பானோ?"

"இருக்கும்கா... இவன் ஒருத்தன்தான் நம்பள பத்தி நல்லா தெரிஞ்ச ஒரே ஆள். இன்னிக்கு இவனையும் போட்டுத் தள்ள முடியும்னா போட்டுத் தள்ளிடணும்..."

"பாத்து... நம்ப ஊர் ஸ்டேஷனுக்கு புதுசா வந்துருக்கற ஒரு இன்ஸ்பெக்டர் ஒரு மாதிரின்னு கேள்விப்பட்டேன்."

"மாதிரியாவது கீதிரியாவது... அஞ்சுங்கற இடத்துல பத்து... இல்ல பதினஞ்சு... ரேட்டு கூடும் போது யாரா இருந்தாலும் விழுந்தாகணும்கா... அவனைப் பத்தி மட்டும் பயப்படாதே..."

அவர்கள் பேச்சில தானும் அடிபடுவது அமுதேஸ்வருக்கு புரிந்தது நல்லவேளையாக கூட வந்த கான்ஸ்டபிளை கீழேயே நிறுத்திவிட்டு தனியாக வந்ததிலும் ஒரு நல்லது இருப்பதுபோல தோன்றியது. -

காற்று நல்ல விசையோடு வீசிக்கொண்டிருக்க பல இடங்களில் இடறல்கள். பார்த்துப் பார்த்து நடக்க வேண்டியிருந்தது. அமாவாசையாக இருந்திருந்தால் சிரமம். இன்னும் சில நாட்களில் பௌர்ணமி வான நிலவின் ஒளி அந்த மலை மேல நடக்க போதுமானதாக இருந்தது.

"டேய்... இன்னும் எவ்வளவு தூரம்டா போகணும் மூச்சு வாங்குதுடா..." என்றாள் காளியம்மாள்.

"அதோ தெரியுது பார் மண்டக்கணக்கா பாறை... அதுகிட்டத்தான்..."

சொல்லிக்கொண்டே அவன் முன்னால சென்றான். அமுதேஷ்வரும் விட்டுப் பிடிக்க விரும்பும் ஒருவனைப் போல அமைதியாக பின் தொடர்ந்தான்.

ஜீவானந்தம் சொன்னது போல அந்த பெரிய பாறைக்கு பின் போய் டார்ச்லைட் வெளிச்சத்தை உருட்டிய போது அங்கே ஸ்ரீதேவி சுருண்டு படுத்திருந்தாள். அருகில் சித்தர் யோகாசன கோலத்தில் அமர்ந்திருந்தார். வெளிச்சம் மேலே பட்ட நொடி கண்களைத் திறந்தார்.

"டேய் கிழவா...'' எடுத்த எடுப்பில் எகிறினான் ஜீவா... சித்தரிடம் எந்த ரியாக்ஷனுமில்லை. பெருமூச்சோடு காளியம்மாளும் அவனை நெருங்கி "எங்கடா கிழவன்?" என்று கேட்க "இதோ உக்காந்துருக்கான் பார்... திருதிருன்னு முழிக்கறதயும் பார்" என்று டார்ச் லைட் வெளிச்சம் பாய்ச்சினான். காளியம்மாளும் பார்த்தாள்.)

"அவ எங்கடா..."

"பக்கத்துல படுத்துருக்கா பார...''

"படுத்துருக்காளா.... மிதிடா அவளை...."

காளியம்மாள் சொல்ல, ஜீவாவும் மிதிக்க கால் ஓங்க "நிறுத்து" என்றார் சித்தர். ஜீவாவும் ஒரு விநாடி காலை உயர்த்தியபடியே வெறித்தான்.

"திரும்பிப் போ... இங்க இருந்தே நீ நீயா இருக்க மாட்டே....."

"அப்படியா... நான் நானா இருக்க மாட்டேனா என்ன பூச்சாண்டி காட்றியா. இது தெரிஞ்சு தான் துப்பாக்கியோட வந்துருக்கேன். இவ எங்க வீட்டு விசேஷத்துக்கு வந்தவ. இவளை மயக்கி இழுத்துகிட்டு வந்து வெச்சுகிட்டு என்ன பண்றே?"

"வார்த்தைகள் அளந்து பேசு...''

"அதை நீ சொல்லாத கிழவா... அவள எழுப்பி எங்களோட அனுப்பிவை....''

"வந்தா கூட்டிகிட்டு போ....''

"என்ன வரமாட்டாங்கற என்னமா? என்ன பண்ணி வெச்சிருக்கே ஜோலிய முடிச்சிட்டியா?"

ஜீவானந்தம் அப்படி கேட்ட நொடி எழுந்து நின்ற அந்த சித்தர் வர்மம் தெரிந்தவர் போல அவன் கண்டங்கழுத்தில் ஒரு குத்து குத்தினார்.

அடுத்த நொடி அவன் வாய் இழுத்துக்கொண்டது.

"டேய்ய...! என்று ஆவேசமாக முன் வந்த காளியம்மாளுக்கும் அதே குத்து. அவள் வாயும் இழுத்துகொண்டது. கூட வந்திருந்த மற்ற இருவரும் அதைப்பார்த்து "சாமி எங்கள் எதுவும் செஞ்சிடாதீங்க..." இவங்கள கூட்டிகிட்டு போயிடறோம்...'' என்று ஆளுக்கொருவராக பிடித்துக்கொண்டு விலகத் தொடங்கினர்.

அவ்வளவையும் பார்த்தபடி இருந்த அமுதேஷ்வர் வியப்பின் உச்சியில இருந்தான். அவர்கள் விலகவும் மெல்ல சித்தரை நோக்கி நடந்தான். சித்தரும் திரும்பிப் பார்த்தார்.

"நமஸ்காரம் சாமி."

"யாரு?"

"ஏரியா சப் இன்ஸ்பெக்டருங்க...''

"என்ன அவங்க கூட நீயும் வந்தியா?''

"இல்லை.... அவங்களுக்கு தெரியாம அவர்களை தொடர்ந்து வந்தேன்...''

"இப்ப என்ன வேணும் உனக்கு?"

"இந்த பொண்ணு காணம்னு கம்பளைண்ட வந்துருக்கு..."

"அப்படியா...?"

"சாதாரணமா கேக்கறீங்களே... இந்த பொண்ணு சென்னைல இருந்து நிச்சயதார்த்த விசேஷத்துக்கு வந்த பொண்ணு இங்க எப்படி வந்தா?"

"நீ எப்படி வந்தியோ அப்படி தான்..."

"அப்ப உங்களுக்கு இவளை தெரியுமா?"

"இவள மட்டுமில்ல... உன்னையும் தெரியும்."

"என்னை தான் ஊருக்கே தெரியுமே..."

"ஊருக்கு நீ ஒரு போலீஸ்காரன்னு மட்டும் தான் தெரியும். ஆனா நீ ரொம்ப விசேஷமானவன்னு தெரியாதே?"

"நான் விசேஷமானவனா?"

"ரொம்ப ரொம்ப விசேஷமானவன். நீ மட்டுமல்ல... இதோ இவளும்..."

"எந்த வகைல சாமி?"

"இங்க வரும்போது பலதடவை வந்த மாதிரி இருந்ததா?"

"ஆமாம் சாமி..."

"அதுக்கு பேர் தான் முன்ஜென்ம சம்பந்தம்னு பேர்"

"முன்ஜென்ம சம்பந்தமா...? எனக்கா? இந்த மலையோடையா?"

"ஆமாம்... அதோ நீ தள்ளி விடப்பட்டு இறந்துபோன இடம்..."

அவர் ஒரு திசைநோக்கி கை காட்டினார். அமுதேஷ்வருக்கு ஒரு புராணகதை கேட்பது போல் இருந்தது.

"நம்ப முடியலையா?"

"ஆமாம..."

"இதோ இங்க யோகம் செய்ததால ஆழ்ந்த நித்ரைல இருக்காளே ஸ்ரீதேவி... இவதான் உன் முன்ஜென்ம மனைவி..."

"சாமி ஈஈ"

"எதுக்கு?"

"தீட்சை கொடுக்கறேன். உன் புருவ மையத்துல சுடர் விளக்கேத்தறேன். அப்ப தெரியும் நான் சொல்றது உண்மையா பொய்யான்னு?"

அவனும் அவரை நெருங்க அவர் தன் கட்டைவிரலால் அவன் நெற்றிப் பொட்டைத் தொட்டு தன் யோக சக்தியை செலுத்தத் தொடங்கினார். அவனுக்குள் மின்சாரம் பாய்வது போல ஒரு பரவசம்... அதைத்தொடர்ந்து ஒருவித மயக்க நிலை... பின் அதில ஒரு தெளிவு... அந்த தெளிவில் ஒரு காட்சி... அவனும் தேவியும் ஒரு சேர அந்த மலை வெளியில விழ ஆரம்பிக்கின்றனர்...!

# 25

அன்று

காளியம்மாள் முன் ஜீவா அந்த மலையாள நம்பூதிரி பற்றி கூறத்தொடங்கினான்: யக்கா.... அந்த நம்பூதிரி பேர் கேசவன் நம்பூதிரி கேரளாவுல வயநாடுங்கற இடத்தை சேர்ந்தவன். பரம்பரை பரம்பரையா பில்லி சூன்யம் ஏவலனு பேர் போன குடும்பம். இங்க அந்த மானில ஒரு பெரிய தொழிலதிபருக்கு குடும்பத்துல சிக்கல். அதை தீர்த்து வைக்க நம்பூதிரிய அந்தமானுக்கே வரவழைச்சுட்டாா. அப்படி வந்த இடத்துலதான் பார்த்தேன்....

"அதெல்லாம் இருக்கட்டும் வந்த நம்பூதிரியால சிக்கல் தீர்ந்ததா?"

"தீராம? தீர்ந்தாதான்கா காசு!"

"அப்படி என்ன சிக்கல் அந்த ஆளுக்கு?"

"கிட்டதட்ட நம்ப சிக்கல மாதிரி தான்...."

"புரியற மாதிரி சொல்லுடா...."

"அந்த தொழிலதிபா மகள் இங்க அவங்க தொழிற்சாலை வேலை பாக்கற ஒரு எலக்ட்ரிஷியன காதலிச்சு கல்யாணமும் பண்ணிட்டா. இப்ப நம்பூதரி வரவும் தாலியை கழட்டி அவன் மூஞ்சிமேல எரியும்படி பண்ணிட்டார்...."

"நெசமாவா?"

"பொறவு...?"

"சரி நம்ம விஷயத்துல அந்த நம்பூதிரி என்ன செய்ய முடியும்?"

"என்னவேணுமனா செய்வான். நீ முதலல நம்பூதிரிய பாரு...."

"எப்படிடா?"

"நான் மதுரைக்கு வரசொல்றேன்...."

"பாத்துடா சிக்கலாயிடப் போகுது ..."

"நீயா இப்படி பயந்து போய் பேசறே?"

"நான் எங்க பேசறேன்.... என்ன பேச வெச்சுட்டான அந்த அமுதன்.... இப்ப அவன் தான் இந்த ஜமீனுக்கே ராசா உன் மாமா கூட அவன் உக்காருன்னா உக்காரணும் எழுந்திருன்னா எழுந்திரிக்கனும். அப்படி இருக்கு நிலை...."

"எல்லாத்தையும் மாத்துவோம். என்ன ஒரு கைதி மாதிரி இந்த அந்தமானுக்கு அனுப்பிவிட்ட அவனை நான் ஆகாசத்துக்கே அனுப்பி வெச்சாதான் என் மனசு அடங்கும்...."

ஜீவா கொந்தளித்தான்.

"இனி வெட்டியா கோவப்படக்கூடாது.... காரியத்துல காட்டணும்."

"அதுக்கு இந்த நம்பூதிரிதான் தோது. இவன விட்டா நமக்கு கதி கிடையாது."

"சரி.... இதுக்கெல்லாம் அவன் எவ்வளவு கேட்டான்?"

"தெரியலக்கா.... அதை மட்டும் நீயே பேசி முடிவு செய்துக்க."

"சரிடா.... அவனை மதுரைக்கு அனுப்பி வை. மிச்சத்த நான் பார்த்துக்கறேன்...."

"அனுப்பி வைக்கறேன். அவனே உனக்கு போன் பண்ணி இடத்தை சொல்வான்! நீ போய் சந்திச்சு பேசு. மற்றதெல்லாம் தானா நடக்கும்."

"நம்ப ஊர் பூசாரி விஷயம் மாதிரி சொதப்பிடாம இருந்தா போதும் எனக்கு..."

காளியம்மாள் பேசி முடித்தாள். ஒரு புது தெம்பு வந்துவிட்டது போல இருந்தது அவளுக்கு! அறையை விட்டு வெளியே வந்தாள். ராஜரத்னம் எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தார். பளிச்சென்ற வேட்டி ஜிப்பாவில் ஜொலித்தார். அவரோடு அமுதனும் இருந்தான்.

"மாப்ள... நான் கொஞ்சம் கொடைக்கானல் வரை போய்ட்டு வந்துடறேன். பாத்துக்குங்க..." என்றார் அமுதனிடம் அதைக் கேட்ட காளியம்மாள் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவளாக.

"நல்லாருக்கு கல்யாணமான சின்னஞ்சிறுசுங்க போற இடத்துக்கு நீங்க போறீங்களா?" என்று ஆரம்பித்தாள்.

பதிலுக்கு ராஜரத்னம் அவளை முறைத்துப் பார்த்தார். பட்டதை சொன்னேன். கல்யாணமாகி தேனிலவுக்கு போக வேண்டிய அமுதனை இங்க இருக்க சொல்லிட்டு நீங்க போனா என்னங்க அர்த்தம்?"

காளியம்மாள் கேட்டதில் ஒன்றும் தவறில்லை. அதே சமயம் அவளா இவ்வளவு விநயமாக பேசுகிறாள் என்று ஆச்சரியம் ராஜரத்னத்துக்கு ஏற்பட்டது.

"மாமா நீங்க போய்ட்டு வாங்க. நீங்க என்னை கூப்பிட்டாலும் நான் இங்க இருந்து வரமாட்டேன். இங்க வேலையும் நிறைய இருக்கு..." என்றான் அமுதன்.

"இல்ல மாப்ள... இவ எந்த அர்த்தத்துல சொல்லியிருந்தாலும் சரி கொடைக்கானலுக்கு நீங்களும் தேவியும் போய்ட்டு வரது தான் சரி. நான் போக நினைச்சது அங்க ஒரு எஸ்டேட் விலைக்கு வருது... அதை பாத்து பிடிச்சிருந்தா வாங்கத்தான். அதை நீங்களே செய்துடுங்க. தேனிலவுக்கு போனா மாதிரியும் ஆச்சு. எஸ்டேட்டை பார்த்தா மாதிரியும் ஆச்சு..."

என்ற ராஜரத்னம் அதன்பின் அவன் எவ்வளவு மறுத்தும் விடவில்லை. அரை மனதாக அமுதனும் தேவியுடன் புறப்பட்டான். போகும்போது காளியம்மாள் அருகில் சென்றவன் "நான் இல்லன்னு உங்க பழைய ஆட்டத்தை ஆடத்தொடங்கிடாதீங்க. நான் இல்லாட்டியும் இங்க உங்களை கண்காணிக்க ஆட்கள் இருக்காங்க என்றான். அதைக்கேட்டு காளியம்மாள் வெளிறிப் போனாள்!

கொடைக்கானல்!

ஊருக்குள் நுழையும் போதே மிக இதமாய் இருந்தது. மெல்லிய குளிர்! திரும்பிய பக்கமெல்லாம் பசுமை.... காற்றிலும் ஒருவித தாவர வாசம்!

காரைவிட்டு இறங்கி அங்கிருக்கும் கெஸ்ட் ஹவுசுக்குள் நுழைந்த போது தேவிக்கு ஒரு புது உலகில் புகுவதுபோல இருந்தது. சிலிர்த்துப்போனாள். அதை கவனித்த அமுதனும் சிரித்தான்!

"ஏங்க இந்த ஊர் மாதிரி எல்லா ஊரும் இல்லை.... நம்ப மதுரைல எவ்வளவு வெய்யில்... இல்ல?" என்று ஒரு சிறு குழந்தை போல கேட்டாள்.

"உலகமே இந்த மாதிரி மலை ஊரா இருக்க முடியாது தேவி.... இருக்கவும் கூடாது" என்றான் அமுதன்.

"ஏன்... எதனால?" என்று உற்சாகமானாள் தேவி.

"எதுவும் அளவோட இருக்கணும். அப்பதான் மதிப்பு..."

"இதை நான் ஒத்துக்கமாட்டேன்... நல்லா இருக்கறதுக்கு எதுக்கு அளவும் ஆட்டுக்குட்டியும்...? நல்லதுன்னா அது நிறைய இருந்தா தானே நல்லது?"

| தேவி அவனோடு விவாதம் புரியத்தொடங்கி விட்டாள். அவள் இப்படி எல்லாம் பேசுகிறவள அல்ல. அமுதனின நெருககம பேசசெய்தது. அவனும் அவள் கேள்விகளை ரசித்தான். அறைக்குள் நுழைந்தவர்கள் சூடான வெந்நீரில் குளித்து முடித்து. அழகான உடையை உடுத்திக்கொண்டு டிபனும் சாப்பிட்டனர். குளிரான சூழலுக்கு சுடச்சுட சாப்பிடுவது பரம சுகமாய் இருந்தது.

தேவிககு அபபோது தான் வாழ்க்கை என்பது எத்தனை இன்பமானது என்பதே தெரிய ஆரம்பித்தது. அப்படியே விலைக்கு வந்த எஸ்டேட்டை போய் பார்த்துவந்தனர். ஏராளமான பழமரங்கள் விலை உயர்ந்த தேக்கு அங்காங்கே சந்தனம் என்று அந்த எஸடேட தேவிக்கு மிகப் பிடித்துவிட்டது. அந்த எஸ்டேட்டுககுள் அருவி ஒன்றும் சிறிய அளவில இயற்கையாகவே அமைந்திருநதது.

"இந்த எஸ்டேட்டடை கட்டாயம வாஙகணுமக நாம்..." என்றாள தேவி... அபபடியே "இங்க குறைஞ்சது பத்து நாளாவது இருந்துட்டு தாஙக போகணும்' என்றும்கூட அடம பிடித்தாள்.

அமுதனும் மறுக்கவில்லை. தேவிக்கு அங்கேயே அப்படியே இருந்துவிட மாட்டோமா என்றிருந்தது. தாயில்லாத பெண்.... காளியம்மாளால் அடக்கியே வளர்ககப்பட்டவள்.... இப்போது தான வாழவே ஆரம்பித்திருப்பதால் அவள் மகிழ்ச்சிக்கு நடைபோட அமுதனுக்கும் மனம்

வரவில்லை. அதே சமயம் மதுரையில அரண்மனை போன்ற அந்த வீட்டில் ராஜரத்னத்துக்கு காளியம்மாளால் எதாவது பிரச்சனை வந்து விட்டால என்ன செய்வது என்கிற ஒரு பயமும் அவன நெஞ்சை அடைத்தபோது கெஸ்ட் ஹவுஸ் மேனேஜர் போன வந்திருப்பதாக அழைத்தார்.

ஓடிப்போய் போன அட்டெண்ட் செய்தான். மறுபுறம் அககவுண்டணட் மாணிக்கம் பேசினார்.

"தம்பி..."

"சொல்லுங்கய்யா..."

"காளியம்மா தன வேலையை காட்டிட்டா தமபி, ஐயயா அவ ரூமே கதின்னு இருக்காரு..."

மாணிககத்தின் பதில் அமுதனை தேள போல் கொட்டியது!

இனறு

சித்தர் அளித்த தீட்சை அமுதேஷ்வரை ஒரு புதிய காட்சியையே காணும்படி செய்துவிட்டது. ஒரு சேர விழுந்த இருவரும் தெறித்துப் போகின்றனர்! அப்படித் தெறிக்கும் போது ஏற்பட்ட வலி ஒரு விநாடி அவன் உடம்பில் பரவி 'ஐய்யோ...' என்று கத்தினான். தீட்சை கலைந்து அமுதேஷவராக மாறி சித்தர் எதிரில கண்களைத் திறநதவனாக மலங்க மலங்கப் பார்த்தான்.

பொழுதும் விடியத் தொடங்கியிருநதது. ஸ்ரீதேவியிடம மட்டும அசைவேயிலலை. கண மலர்ந்த அமுதேஷவரை பார்தத சிததா மௌனமயாக சிரித்தார்.

"சாமி..."

"சொல்லு... எப்படி இருந்தது?"

"எப்படிச் சொல்வேன்... கனவா? இல்லை கற்பனையா...? எதைன்னு சொல்ல?"

"மனசுக்குள்ள தோணுகிற காட்சிகள் கனவா, கற்பனையா தான் இருக்கணுமா... ஏன் பழைய சம்பவங்களா... நினைவுகளா இருக்கக் கூடாதா?"

"நிச்சயமா இருக்கலாம்... ஆனா இப்போதைய என் வாழ்க்கைல இப்படி எல்லாம் நடக்கவேயில்லையே?"

"உன் பூர்வ ஜென்ம காட்சி அதுன்னு நான் தான் சொன்னேனே...?"

"பூர்வ ஜென்மங்கற ஒரு விஷயமே என் வரைல ஒரு கற்பனை தான் சாமி..."

"அனுபவப்படாத வரை நாம் எப்படி வேணா நினைக்கலாம். அனுபவம் தான் முடிவானது..."

"அதை நானும் ஒத்துக்கறேன்... அதே சமயம் எதை இங்க நீங்க அனுபவம்னு சொல்றீங்க?"

"உனக்குள்ள தோன்றிய காட்சியை தான்..."

"அது ஏன் ஒரு கனவா இல்லை பிரமையா இருக்கக்கூடாது?"

"ஒரு கோணத்துல இப்ப நீ வாழற நான் வாழற வாழ்க்கையே பிரமை தான்பா... கழிஞ்சு போன நொடியில் தொடங்கி நீ பிறந்த நேரம் வரை பின்னோக்கி பார்... அவ்வளவும் இப்ப வெறும் நினைவு தானே?"

"ஆமாம்... ஆனா அது பொய்யில்லாத நான் வாழ்ந்த வாழ்க்கையாச்சே?"

"நானும் இல்லைங்கலே... எவ்வளவு தான் வாழ்ந்தாலும் அவ்வளவும் நினைவு தான்... நினைவுங்கிறதோ ஒலி. அதாவது சப்தம்! ஆமாம் தானே?"

"ஆமாம்... அதனால என்ன?"

"அதனால என்னவா? கடந்த காலம்கறது ஒளியும் ஒலியுமா இருந்தாலும் நினைவுங்கற சப்தமா. அதாவது ஒலியா தான் மனசுக்குள்ள இருக்கு ஒளி விலகிடுது... இல்லையா?"

"ஆமாம்... இப்ப இந்த ஆராய்ச்சி எதுக்கு சாமி?"

உனக்கு புரியந்தான... இடையிடாம என் பேச்சைக் கேள். நான் பேசறதும் விஞ்ஞானம் தான்! ஏன் நம்முடைய ஆன்மிகமும் ஒருவகை விஞ்ஞானமே... சாதாரண விஞ்ஞானம் கூட இல்லை... சூப்பர் சைன்ஸ்..."

"சாமி நீங்க நேரா விஷயத்துக்கு வாங்க எனக்குள்ள இப்ப தோன்றிய காட்சில நான் இந்த மலைமேல இருந்து தள்ளி விடப்பட்டு கீழ விழற மாதிரி உணர்ந்தேன். என் கூட இந்த பொண்ணும் விழறா... அதே சமயம் இந்த பொண்ணையே நான் இப்பதான் பாக்கறேன்... அதனால இதை நீங்க சொல்ற மாதிரி ஒரு பூர்வ ஜென்ம நினைப்பா எடுத்துக்கவும் முடியல... ஒரே குழப்பமா இருக்கு..."

"நல்லா குழம்பு... குழம்பினாதான் தெளிய முடியும்."

242-243/384 Go

நீ குழம்பறதுல எனக்கும் சரி உனக்கும் சரி நல்லது தான் நடக்கும்.

"சாமி.... ஒரு போலீஸ்காரான என் கேள்விக்கு பதில் சொல்லுங்க. இந்த பொண்ணு ஊருக்கு போகணும். அவங்க வீட்ல துடிச்சிகிட்டு இருப்பாங்க..."

"அவங்க வீட்ல மட்டுமா..."

"நீங்க என்ன சொல்றிங்க?"

"அப்பா... இங்க ஒரு உயிர் பிறந்த நாள்ள இருந்தே துடிச்சிகிட்டு இருக்கு... அதுக்கு நான மட்டும் தான சாட்சி..."

"யார் சாமி அது?"

"உன் மகள்....பேர் மாதங்கி"

"சாமி.... எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலை..."

"அதனால என்ன... இவ உன்னால அதாவது உன் பூர்வ ஜென்மத்தால் உருவானவ..."

"ஐயோ சாமி.... நான் அதை நம்பலைன்னு தான் சொன்னேன்...."

உங்கள மாதிரி மனிதர்கள் எப்பவும புரியறமாதிரியே பேசமாட்டீங்களா... ஏன் இப்படி புரியாத புதிராவே பேசறீங்க..."

"சரி நான் இனி பேசல... நடக்க நடக்க நீயே புரிஞ்சிக்கோ..."

சித்தர் அப்படிச் சொன்ன நொடி சூரியன் உதயமாகி மொத்த இருளும் நீங்கி விட்டிருந்தது!

# 26

அன்று

அமுதன் ரிசீவரைப் பிடித்தபடியே அப்படியே நின்று விட்டான். மேற்கொண்டு அவனால பேச முடியவில்லை. அது போன் செய்து பேசிக் கொண்டிருக்கும் மாணிக்கத்துக்கு புரிந்தது.

"தம்பி.... உங்களால பேச முடியலலல....? எனக்கு தெரியும தம்பி. நீங்க இல்லாத இந்த இடைப்பட்ட நாள்ள காளியம்மா ரகசியமா என்னவெல்லாமோ பண்ணிட்டா.... நாங்க யாரும் அவளை கவனிக்கலைங்கறத உறுதி செய்துகிட்டு வெளிய எங்கியோ போய்ட்டு வந்தா."

"அதெல்லாம் இருக்கட்டும்.... மாமா என்ன அவ்வளவு சுடடவா ஸ்திர புத்தி இல்லாதவர்?"

"அந்த விஷயத்துல பில்லி சூனியம் ஏவல அது இதுன்னு நிறைய விஷயங்கள் இருக்கு தம்பி. உங்களுக்கு சொன்னால்லாம் புரியாது அனுபவிச்சாதான் தெரியும்."

"மண்ணாங்கட்டி.... மனுஷன் மன உறுதியோட இருந்தா எதால என்ன செய்ய முடியும்?"

"வீர வசனமலாம் அது முன்னால் எடுபடாது தம்பி... அது ஒரு வேற மாதிரியான உலகம்."

"நான் இந்த காலத்து மனுஷன். இது விஞ்ஞான யுகம். நாம பேசிக்கிட்டிருக்கற போனல இருந்து டெலிவிஷன் அது இதுன்னு

எவ்வளவோ வந்துடுச்சி. இந்த காலத்துலயுமா இந்த மாதிரி முட்டாள் தனமான மூடத்தனங்களை நீங்க நம்பறீங்க...''

"ஐயாவை வந்து பார்த்தா நீங்களும் நம்புவீங்க தம்பி...'

"வரேன்... இப்பவே வரேன்... அவளை இரண்டுல ஒண்ணு பாக்கறேன்..."

"பதட்டமில்லாம வாங்க... இந்த விஷயம் தேவிக்கு தெரிய வேண்டாம். அதோட சந்தோஷத்தோட ஆயுள் வெறும் 15 நாள் தான்னு ஆயிட வேண்டாம்.'

''எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன். நீங்கல்லாம் ஒத்துழைச்சா போதும்...'

"நிச்சயமா தம்பி... இந்த உலகமே கை விட்டாலும் நான் உங்க பக்கம் தான் தம்பி நிப்பேன்.'

இந்த பக்கமாய் ரிசீவரை வைத்தான் அமுதன். அந்த பக்கமாய் மாணிக்கமும் வைத்தார். வைத்தவரை தன் அறையின் ஒரு மூலையில் இருந்து பார்த்துக் கொண்டே இருந்தாள் காளியம்மாள்! அவள் முகத்தில் ஒரு முடிவு தெரிந்தது

திரும்பி வந்த அமுதன் முகத்தில் தென்பட்ட சோர்வு தேவியை கேள்வி கேட்கச் செய்தது.

''யாருங்க போனல ஏதாவது முக்ய விஷயமா?'

"ஆமா தேவி.... நாம உடனடியா கிளம்பணும்?"

''ஐயோ அதுக்குள்ளாறயா?"

"ஆமா...''

"அப்படி என்ன அவசரம்?''

"ஊரில உங்க அப்பாவுக்கு உடம்பு சரியில்லையாம்.'

"ஐயோ... அப்பாக்கு என்ன?"

"போய் பாத்தா தான் தெரியும் கிளம்பு..."

அதற்கு மேல அவளுக்கும் அந்த கொடைக்கானல் இனிக்கவில்லை. இருவரும் அசுர வேகத்தில் புறப்பட்டனர். அமுதன் இறுக்கமாக இருந்தான். தேவியிடமும் பாசப்பதட்டம் வரும் போது தேனாய் இனித்த மலைப்பாதை வளைவுகள் திரும்பும் வேளையில பாம்பு நெளிவது போன்ற அச்சத்தை ஏற்படுத்தின. இது தான் வாழ்க்கை.... உள்ளிருக்கும் எண்ணங்களுக்கு ஏற்ப புறத்தில் உள்ள காட்சி இனியதாகவும் கசப்பானதாகவும் மாறும். தேவியும் மாறியிருந்தாள். தன்னை மறந்து வாழ்ந்த வாழ்க்கை ஒரு நீர்க்குமிழி உடைவது போல் உடைந்து விட்டதாய் கருதினாள். கார் நல்ல வேகம் எடுத்துத்தான் சென்றது! அமுதன் மாணிக்கம் சொன்ன அந்த பில்லி சூனியம் போன்ற விஷயங்கள் குறித்த எண்ணங்களில் இருந்தான்.

'அவையெல்லாம் உண்மையில் என்ன? இதெல்லாம் எந்த அளவிற்கு உண்மை? கேள்விகளுள் தெளிந்தான். ஒருபுறம் இதெல்லாம் மூடநம்பிக்கை, ஏமாற்று என்று பலர் சொல்லிக் கொண்டிருந்தாலும் இது அழியாமல் ஒழிந்து போகாமல் எப்படி இருந்தபடியே இருக்கிறது? ஒருவேளை திருட்டு, பொய், சூது போல் இதுவும் அழிவின்றி ஒருபுறம் இருந்தபடியே தான் இருக்குமோ?'

அவன் சிந்தித்தபடியே தான் வந்தான். இரண்டரை மணிநேர கால அளவில் கார் திருப்பரங்குன்ற மாளிகை போன்ற வீட்டை அடைந்து நின்றது.

கதவைத் திறந்து கொண்டு இறங்கும் போது ஓடி வரும் வேலைக்காரர்கள் ஒருவரையும் காணோம். தேவி ஆச்சரியப்பட்டாள்.

"முத்தைய்யா... அய்யாச்சாமி, மனோகர்..." என்று அமுதன் குரல் கொடுத்தும் ஒருவரும் வரவில்லை. அமுதனே ஆச்சர்யத்தோடு டிக்கியை திறந்து பெட்டியை இறக்கிட தேவி வேகமாக உள்ளே ஓடினாள்.

"அப்பா..." என்கிற அவள் குரல் கேட்டு மெல்ல வெளியே வந்தாள் காளியம்மாள். வந்த ஜோரில் "வா கண்ணு" என்றாள் இதமாய்...

"சித்தி... அப்பாவுக்கு உடம்புக்கு என்ன?"

"அவர் உடம்புக்கு ஒன்னுமில்லையே... ஆமா நீ வர இன்னும் பத்து பதினைஞ்சு நாள் ஆகும்னாங்க. என்ன இது திடுதிப்னு வந்து நிக்கறே?"

"அதெல்லாம் அப்புறம்... அப்பா எங்க இப்ப?"

"என் ரூம்ல தான் இருக்கார்... போய் வேணா பார்..." தேவி உள் ஓடினாள். அறையில் படுக்கையில திறந்த மார்போடு ஏகாந்தமாய் அமர்ந்து மது அருந்திக்கொண்டிருந்தார் ராஜரத்னம். அவர் முன்னால் மது பாட்டிலோடு சிப்ஸ் காரகடலை என்கிற உசுப்பேத்தும் ஐட்டங்கள்!

தேவிக்கு கண்முழி தெரித்து விட்டது. "அப்பா என்னப்பா இது பழக்கம்?" என்று கேட்டவளை அவர் நிமிர்ந்து கூட பார்க்கவில்லை. அதே சமயம் பெட்டியோடு உள் நுழைந்த அமுதனை ஒரு மாதிரி பார்த்தாள் காளியம்மாள்.

"அக்கா... நெல் மூட்டையை எல்லாம் ரைஸ் மில்லுக்கு ஏத்தி அனுப்பிட்டேன் மொத்தமா 460 மூட்டைங்க..." என்றபடியே ஜீவாவும் அப்போது வந்தான்.

"அந்தமானில் இருக்க வேண்டியவன் எப்போது வந்தான்? அமுதன் அவனைப் பார்த்து அதிர்ந்த போது காளியம்மாள் நெருங்கியவளாக பேசத் தொடங்கினாள்.

"என்ன மாப்ள... கொடைக்கானல் எப்படி இருந்தது?"

"நல்லா இருந்தது சின்ன மாமியாரே...!" அவனும் சளைக்கவில்லை.

"இங்க இனி உன் பருப்பு வேகாது... விட்ட அவ்வளவையும் நான் பிடிச்சிட்டேன்" என்று ஆவேசமான முக பாவனையோடு அவனை வெறித்தாள் காளியம்மாள்!

இன்று

உதய சூரியனைப் பார்த்த அமுரதேஷ்வர் முகத்தில் ஒரு புது தெம்பு மலையின் அந்த ஒட்டு மொத்த சூழலும் இப்போது பளிச்சென்று தெரிந்தது. குறிப்பாக தன்னை மறந்து தியானத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீதேவி ஒரு பெண் யோகி போல தெரிந்தாள். மெல்ல வீசிக்கொண்டிருந்த காற்றில் அவள் கூந்தல் கலைந்த பறந்தபடி இருக்க அவளையே பார்த்தான் அமுரதேஷ்வர்.

அவனுக்கு அந்த முகத்தை அப்படியே பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்றெல்லாம் தோன்றியது. சித்தரும் அதை ரசித்தார்.

"என்னப்பா... நீ தேடி வந்த பொண்ணை அப்படி பாக்கறே?"

"சொல்லத் தெரியல சாமி. பாத்துகிட்டே இருக்கணும் போல இருக்கு."

"இந்த உணர்ச்சிக்கு நீ என்ன காரணம் சொல்வே?"

"தெரியல..."

"இந்த பொண்ணை கூட்டிகிட்டு போய் கம்பளைண்ட் கொடுத்தவங்ககிட்ட ஒப்படைக்கணும்."

"இவ உன்னை பாக்கணும் அதுக்காகதான் சென்னைல இருந்தே வந்தா. கல்யாண நிச்சயதார்த்தமங்கறதெல்லாம் சும்மா ஒரு மேல காரணம். அதே போல நீயும் இவளை பாக்கணும். பாத்துட்டே இனி நடக்க வேண்டியது தானா நடக்கும். போ போய் அவ தியானத்தை அவளைத் தொட்டு உசுப்பி கலைச்சு விடு..."

"கலைச்சு விட்டு....?"

"கூட்டிகிட்டு போ.... நீ எதுக்காக வந்தியோ அந்த கடமையை செய்... முதல்ல தொடு..."

அவர் அழுத்தமாக சொல்லவும் அமுதேஷ்வர் அவள் அருகே சென்று சற்றே தயங்கியவனாக நின்று விட்டு பின் மெல்ல அவள் தோளைத் தொட்டான். தொட்ட நொடி மின்சாரம் பாய்ந்த மாதிரி ஒரு உணர்வு அவனிடத்தில் அவளும் கண் திறந்தாள்.

அமுதேஷ்வரைப் பார்த்தாள். சில விநாடிகள் வெறித்து விட்டு "அமுதா.... வந்திட்டியா?" என்றாள். அவனிடமோ அதற்கு என்ன பதில் கூறுவது என்கிற தடுமாற்றம் மலங்க மலங்கப் பார்த்தபடியே வெறித்தாள்.

"அவங்கள சும்மா விடக்கூடாது அமுதன்.... சும்மா விடவே கூடாது" என்றாள் அடுத்து

"யாரை?" அமுதேஷ்வர் சன்னமான குரலில் கேட்டான்.

"யாரையா.... என்ன கேள்வி இது அமுதன்? நம்ப குழந்தையை பறிச்சிகிட்டு நம்மை ஓடஓட விரட்டின அந்த ஜீவாவை, காளியம்மாளை அவளோட கூட்டத்துல இருக்கற யாரையும் சும்மா விடவே கூடாது அமுதன்...."

அவள் பேசுவது அவனுக்கு புரிவது போலவும் இருந்தது. புதிராகவும் இருந்தது. சித்தர் சாமியை பார்த்தான்.

"என்ன பாக்கறே? என் ஆதம சக்தியால கொஞ்சம் உசுப்பி விட்டேன். ஆழ்ந்த தியானத்துக்குள்ள அடி மனசுக்குள்ள போனவை எல்லாம் ஞாபகம் வந்துடிச்சி.... அதான் இப்படி பேசறா!"

"எதெல்லாம் சாமி?"

"போதும் சாமி.... இதுக்கும் மேல நான் இங்க நின்னா இந்த பொண்ணு இன்னும் உளற ஆரம்பிச்சிடுவா. அப்புறம் நான் இன்னும் குழம்பிப் போவேன். இங்க வந்த இடத்துல தலைல அடிபட்டு சித்தம் கலங்கி ஏதேதோ பேசறாங்கன்னு தான் எனக்கு தோணுது. நீங்க அதை பூர்வ ஜென்மம் வரைக்கும் கொண்டு போயிடுங்க. விட்டா அதுக்கும் முந்தின ஜென்மத்துக்கும் போவீங்க.

இதோபாரும்மா.... உன்னை காணோம்னு சுமதிங்கறவங்களோட அண்ணன் குமார ராத்திரி போலீஸ கம்பளைண்ட் கொடுத்துருக்கார நல்லவேளை

நைட் ரைட வந்த இடத்துல இங்க நீ இருக்கறத நான கண்டு பிடிச்சிட்டேன்.

புறப்படு.... முதல்ல உன்னை அவங்க கிட்ட ஒப்படைச்சிட்டு மறுவேலை பாக்கறேன்....

"அது யார் சுமதி... குமார்?"

அதுசரி அதையெல்லாம் ஸ்டேஷனல வந்து பாத்து தெரிஞ்சிககோ சாமி நான கூட்டிகிட்டு போறேன் அவசியப்பட்டா நீங்களும் ஸடேஷனுககு வர வேண்டியிருக்கும நான் இப்படி போகவும நீங்க பாட்டும் எஙகையாவது போயிடாதிங்க..."

என்றபடி திரும்ப ஸ்ரீதேவியை கையை பிடிதது இழுகக முனைநதான. இம்முறையும் அவனிடம் அதே இனம புரியாத ஒரு உணர்வு. அவள அவனோடு செலல தயஙகினாள ஆனால சித்தா போகசசொன்னார.

"போமமா.... போ.... இனி எனககு பெருசா வேலையிலல. உஙக விதி எப்படி வேலை செய்யப் போகுதுஙகறத நான பாககத்தான் போறேன" என்றார்.

அவளும் அமுதன் பின்னால் வேறு வழியின்றி நடப்பவள் போல் நடநதாள்.

*****

சென்னை:

ஸ்ரீதேவி வீட்டு லேண்ட் லைன போனை அவள் அண்ணன மோகன்குமார தான் அட்டெண்ட் செய்தான."

"மோகன்குமார் அண்ணனா?" சுமதி பேசினாள்.

"ஆமாம்மா.... யார் சுமதியா?"

"சொல்லும்மா என்ன விஷயம்....?"

"அண்ணே நான் இப்ப சொல்லப் போறத கேட்டு அதிர்ச்சி அடையாதீங்க. எனக்கும் எப்படி சொல்றதுன்னு தெரியல சொல்லாம இருக்கவும் முடியல...."

"என்னம்மா.... என்ன ஏதாவது பிரச்னையா? நீ இப்ப எங்க இருந்து பேசறே?"

"மதுரைல இருந்து தாணணே. என நிச்சயதாாத்தம நடககலணணே நின்னுடிச்சு."

"எனககும தெரியும. நேத்து நைட் ஸ்ரீதேவி எலலாம சொன்னா.... என வரைல உனககு நலலது தான நடநதிருககு. நீ தைரியமா இரு...."

"நான் தைரியமாதான இருககேன.... ஆனா ஸ்ரீதேவி இப்ப பெரிய பிரச்னையாயிட்டா...."

சுமதி அவள் இரவில் காணாமல் போய் போலீசில் புகார் கொடுத்திருப்பது வரை சொல்லி முடித்தாள்.

"அப்ப ஸ்ரீதேவி இப்ப உன கூட இல்லையா?"

"இலலணணே எங்கேன்னும் தெரியல. நாங்க இப்ப ஏர்போர்ட்ல இருககணும. 9 மணிக்கு ஒரு விமானம் இருக்கு. அதுல புறப்படணும். ஆனா ஸ்ரீதேவிய விட்டுட்டு எப்படி வரமுடியும். அதனால எங்கண்ணன் டிக்கெட்டை கேன்சல பணணிட்டார."

"சரிம்மா.... நான் இப்ப உடனே புறப்பட்டு வரேன். நீங்க அவளை தேடிகிட்டு இருங்க.... விட்றாதீங்க."

"அதுக்கு தான் இந்த காலை நேரத்துலயே கூப்ட்டேன். என்னை மன்னிச்சிடுங்கண்ணே. அவ சென்னைய தாண்டுனா ஆபத்துன்னு ஒரு சித்தர் சொன்னதா அவ சொல்லியிருக்கா. அது இப்ப உண்மையாயிடிச்சு."

சுமதி சித்தரைத் தொட்டு சொன்ன விஷயம் மோகன்குமாரையும் திகைக்க வைத்தது!

## 27

அன்று

காளியம்மாள் பார்வையின் பொருளை அமுதன் புரிந்துகொண்டான். காளியம்மாளும் அவன் சீக்கிரமாய் வந்துவிட்ட ஆச்சரியத்தை முகம் நிறையக் காட்டினாள்.

"நான் இவ்வளவு சீக்கிரம் வருவேன்னு நீங்க எதிர்பார்க்கல இல்ல?" அமுதன் ஆரம்பித்தான்.

"இல்லியே. தெரியுமே... மாணிக்கம் நீ வரப்போறத சொல்லிட்டான்."

அவள் அவனை ஒருமையில் நீ என்று குறிப்பிட்டது அவனைக் குத்தியது. அப்போது மாணிக்கமும் கையில் ஒரு பெரிய லெட்ஜர் நோட்டுடன் வந்தார். வந்தவர் அமுதனை பார்க்கவேயில்லை.

"அம்மா இதுல ஒரு கையெழுத்த போட்டுடுங்க...' என்று செக் புக் ஒன்றை நீட்டினார். காளியம்மாளும் மிடுக்காக வாங்கி கையெழுத்து போட்டுத்தந்தாள். வாங்கிகொண்டு அவரும் திரும்பிப் பார்க்காமலே சென்றார்.

அமுதனை அவர் போக்கு மேலும் அதிரச் செய்தது! "என்னப்பா.... இனி எப்படி காலந்தள்ளப் போறோம்னு மலைப்பா இருக்கா?" நடந்து போய் நாற்காலியில் அமர்ந்தபடியே கேட்க தேவியும் வந்து நின்றாள்.

"என்ன உங்கப்பாவ பாத்துட்டியா?"

"உம்"

"இந்த ஷணம் விஸ்கி வாங்கிட்டுவான்னு ஒரே ரகளை நானும் வேண்டாங்கன்னு சொன்னேன்பா. கேக்கல ஒரே பிடிவாதம். அதான் போகட்டும்னு வாங்கிட்டு வந்து கொடுத்தேன்."

தேவி கேட்காமலே காரணத்தை சொன்னாள். அது ஒரு பொய்யான காரணம் என்பது அமுதனுக்கும் தெரிந்தது.

"அதுசரி... ஜீவா எப்ப அந்தமான்ல இருந்து வந்தான்?" சற்று தினவாக அமுதன் கேட்டான்.

"அவன் வந்து நாலு நாளாச்சு. கிளம்பி வாடான்னா வந்து தானே தீரணும்?"

"யாா் வரச் சொன்னது?"

"என்னப்பா குரலை ஒசத்தறே... டிரைவர் மவனே. பழசை மறந்து இளவரசனாவே ஆயிட்ட போல தெரியுதே? இதெல்லாம் எங்கிட்ட வேண்டாம். வரச்சொன்னவர் என் புருஷன். இந்த வீட்டுக்கு உரிமைப்பட்டவர்.

அவர் சொல்லவும் அவனும் வந்துட்டான். இதுல நீ கேள்வி கேட்க என்ன இருக்கு?"

"நான் இந்த வீட்டு மாப்ள... நிர்வாகமும் இப்ப என்கைல.... அவர்தான் சொன்னாருன்னு ரீல் விடறியா. நீ யாரு. எப்படிப்பட்டவன்னு எனக்கு நல்லா தெரியும்."

"என் வந்ததும் வராததுமா குதிக்கறே... உங்கப்பாவே வாயை மூடிக்கிட்டு பழையபடி கார டிரைவரா வேலைக்கு வந்து சேர்ந்துட்டாரு. நீ என்னமோ கிடந்து குதிக்கறே..."

காளியம்மாள் அமுதன் அப்பாவை தொட்டு பேசவும் அமுதனுக்கு நடு நெற்றியில் பூரான் நெளிவது போல் இருந்தது.

"என்ன சொல்றே... எங்கப்பா திரும்பவும் டிரைவரா சேர்ந்துட்டாரா?"

"ஆமா... இப்ப கூட கோயிலுக்கு போகணும்னேன். சர்வீசுக்கு விட்ட காரை எடுத்துகிட்டு வரேன்னு போயிருக்கான் உன் அப்பன்..."

"சித்தி... என்ன இது? அவர் என் மாமனார். அவன் இவன்னு பேசறீங்க..." என்று தேவியும் கோபித்தபடி வாயைத் திறக்க பதிலுக்கு ஒரு பார்வை தான் பார்த்தாள். காளியம்மாள் பார்க்கும் போதே ஒரு சிரிப்பு... அப்படியே மெல்ல அவள் அருகில் சென்றவள் அவள் தலையை வருடத்தொடங்க தேவியிடம் கோபம் போன இடம் தெரியவில்லை.

"சித்தி.... சித்தி.... சரி சித்தி...." என்றாள்.

"பரவால்ல... போய் ரெஸ்ட் எடு..." என்ற உடன் தேவி அமுதனைக் கூட பார்க்காமல் அங்கிருந்து விலகினாள். அப்படியே திரும்பி அமுதன் அருகில் வந்தவள் அவனை உற்றுப் பார்த்து விட்டு "என்ன டிரைவர் மவனே... நடக்கறது எல்லாம் புரியாத புதிரா இருக்கா?" என்றும் கேட்டாள்.

"புதிரா... உன்கிட்டயா? ஒரு புண்ணாக்குமில்லை. நீ ஏதோ சித்து வேலை காட்டிகிட்டு இருக்கே... அது மட்டும் நல்லா தெரியுது."

"பரவால்லியே. புரிஞ்சிகிட்ட போல இருக்கு."

"உன்னை மாதிரி கேடு கெட்டவங்களுக்கு அததவிர வேற என்ன தெரியும். நேர்வழிக்கும் உனக்கும் தான் சம்மந்தமில்லையே..."

"சும்மா புலம்பாத... உன் வாயையும் கட்டிடுவேன். இப்ப உன் பொண்டாட்டிய கட்டினேன் பார். அந்த மாதிரி ஆனா அப்படி கட்டிட்டா நீ வருத்தப்பட முடியாது. எனக்கோ நீ வருத்தப்படணும். அப்படியே உன்னை யாரும் இந்த வீட்ல மதிக்க கூடாது. போகப்போக பார் உன் பொண்டாட்டியே உன் பேச்சு கேட்கமாட்டா. என் பேச்சு தான் கேட்பா. நீ புழுங்கிக் போய் வேதனை தாளாமல் என் கால்ல வந்து விழணும் நடக்குதா இல்லையா பார்."

காளியம்மாள் மிக அழுத்தமான குரலில் சொல்லிவிட்டு மெல்ல அவனைவிட்டு விலகிச் சென்றாள். அவன் அடுத்து நேராக ராஜரத்னம் இருக்கும் அறை நோக்கித்தான் சென்றான்.

அவர் போதையில் தலை தொங்கிப் போய் கிடந்தார். அவரைச்சுற்றி மிக்சர் காராசேவ் என்று தின்பண்டங்கள் சிதறிக் கிடந்தன. அவரோடு பேச முடியாது என்பது பளிச்சென்று தெரிந்தது. அடுத்து நேராக மாணிக்கம் முன் தான் போய் நின்றான்.

அவர் எழுதியபடியே இருந்தார். நிமிரக்கூட இல்லை. அவர் தோளைத் தொட்டு உசுப்பினான். நிமிர்ந்து பார்த்தவர்.

"என்ன தம்பி... எப்ப வந்தீங்க?" என்று ஆரம்பித்தார்."

"எப்பவா... நான் வரப்போறது உங்களுக்கு தெரியாது?"

"தெரியாதே தம்பி..."

"என்ன மாணிக்கம். நீங்க போன் பண்ணிச் சொல்லித் தானே நான் ஓடிவந்துருக்கேன்."

"அப்படிங்களா?"

"என்ன அப்புடிங்களா...? என்னாச்சு மாணிக்கம் உங்களுக்கு?"

"நான் நல்லா தானே தம்பி இருக்கேன்."

"இல்ல... இங்க நடக்க கூடாது ஏதோ பயங்கரமா நடந்துருக்கு. நீங்களும் மாறிப் பேசறீங்க. அந்த காளியம்மா உங்களை வெட்டிடுவேன்னும் கொன்னுடுவேன்னும் மிரட்னாங்களா?"

"அதெல்லாம் எதுவுமில்லை தம்பி..." அவர் திரும்ப எழுதத் தொடங்கினார். எரிச்சலுடன் அடுத்து தேவி எதிரில் போய் நின்றான். தேவி சூட்கேஸ் துணிமணியை உள்ளே வார்ட் ரோப்பை திறந்து அடுக்கிக்கொண்டிருந்தாள்.

"தேவி..."

"வாங்க..."

"என்னாச்சு உனக்கு உன் சித்தி தலை மேல கை வைக்கவும் அப்படியே பெட்டி பாம்பா அடங்கிட்டே. உங்கப்பா என்னடான்னா போதைல கிடக்கறாரு..."

"நீங்க என்ன சொல்றீங்க?"

"சுரைக்காய்ல உப்பு இல்லை. கண்டக்காய்ல கசப்பு இல்லங்கறேன். நாம இப்ப எவ்வளவு பெரிய ஆபத்துல இருக்கோம் தெரியுமா?"

"நீங்க சொல்றதே எனக்கு எதுவும் புரியல. என்னாச்சு உங்களுக்கு? என்று தேவி திருப்பிக் கேட்கவும் தான் அமுதனுக்கு காளியம்மாள் சொன்னது உடனே நினைவுக்கு வந்தது. இவளிடம் தொடர்ந்து பேசுவதாலும் பயனில்லை என்பதை உணர்ந்து கொண்டவன். "சரிசரி... உன் வேலைய பார்... நான் வரேன்' என்றவன் நகம் கடித்தபடியே வெளியே வந்தான்.

அவன் பார்வையில் வீட்டைச் சுற்றி குங்குமம் பூசப்பட்ட எலுமிச்சம் பழத்துண்டுகள் கண்ணில் கட்டன. அப்போது ஜீவாவும் நவீனமாக உடையில வந்தவனாக அமுதனை ஒரு சுற்று சுற்றினான். பின் சிரித்தபடி "உனக்கு இந்த மாசம் மட்டும் தான் அடுத்த மாசமோ நாளோ, கிழமையோ வேற எதுவும் கிடையாது."

"என்று மிரட்டலாய் பேசியவனைப் பார்த்து அமுதன்" என்னடா எச்சலை... மிரட்டிப் பாக்கறியா?" என்று கேட்க ஆமாம்... மிரட்டல்தான்! சாதாரண மிரட்டல் இல்ல! உன் வாழ்க்கைல நீ இது வரை பாத்துருக்காத மிரட்டல்! நீ சாகற வரை அனுபவிக்க போற கஷ்டங்கள் நினைச்சா எனக்கே கொஞ்சம் கஷ்டமா தான் இருக்கு..."

ஜீவாவிடம் அபரிமிதமான தெம்பு! அமுதனுக்கும் ஒரு பெரிய விபரீதம் அந்த வீட்டில் விசுவரூபம் எழுந்து நிற்பது புரிந்தது. இதிலிருந்து எப்படி தப்பிப்பது?

இனறு

திகைப்போடு ரிசீவரை வைத்தவன் திரும்பினான். அவன் அம்மா அவனையே வெறித்தபடி....

"அம்மா...."

"யாருடா போன்ல. ஏன் உன் முகம் ஒருமாதிரி இருக்கு?"

"ஒண்ணுமில்லம்மா..."

"அப்படிண்ணாலே ஒரு விஷயமில்லை பல விஷயம்னு தானேடா அர்த்தம்..."

"ஆமாம்மா.... பல விஷயம் தான்!"

"அப்ப சொல்லு. எனக்கு படபடங்குது...."

"அம்மா நம்ம ஸ்ரீதேவி விஷயத்துல நடக்க கூடாதது நடக்க ஆரம்பிச்சிடிச்சும்மா...."

"ஐயோ அவளுக்கென்னடா... கல்யாண நிச்சயதார்த்தம்னு போனவளுக்கு ஏதாவது சிக்கலா?"

"அம்மா... என்ன முதல்ல மன்னிச்சிடு... அவ இப்ப சென்னைலயே இல்ல..."

மோகன்குமார் இறுதியாக சுமதி சொன்னது வரை சொல்லி முடிக்க அம்மா முகத்தில பதிலுக்கு உறைந்து விட்டது போல ஒரு பீதி.

"அம்மா.... நீ இப்படி எல்லாம் ஆகி என்னை பயமுறுத்தாதே. நிச்சயதார்த்தத்துக்கு போன இடத்துல எப்படியோ மிஸ் ஆகியிருக்கா? இது என்ன உன் காலமா? செல்போன் யுகம்... எங்க இருந்தும் யார் கூடவும் பேசமுடியும்... அவள கண்டு பிடிச்சிடலாம். நான் இப்பவே புறப்படறேன்..." என்றவன் முன் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் வெறித்தாள்.

"ஒண்ணும் ஆயிடலம்மா தைரியமா இரு..."

"நான் படிச்சுப் படிச்சு சொன்னேன்.... கேட்காம கடைசில இப்ப சித்தர்சாமி வாக்கு பலிச்சிடிச்சு பார்த்தியா?"

"இதோ பாருமமா.... காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதை தான். சித்தர் சாமி பத்தில்லாம் இப்ப நினைக்காதே..."

"இலல மோகன்... அவர் தனியா வேற என்னை கூப்ட்டு ஜாக்ரதை ஜாக்ரதைன்னு சொன்னார். ஏன் சாமி இப்படி சொல்றீங்கன்னு கேட்டதுக்கு உன் பொண்ணு ஜாதகம் அப்படின்னாரு... கடைசில அப்படிதானே ஆகியிருக்கு..."

"என்னம்மா நீ... அவ்வளவு சொன்னவர் தெளிவா மதுரை பக்கம் இவ போவா... அப்படி போனா காணமா போவான்னுல்ல சொல்லியிருக்கணும். அதை ஏன் சொலலலை...?"

"அவர் சொன்னாருடா... சொன்னாரு... மதுரை பககம் மட்டும இவ போனா பேராபத்து இவளுககு காத்திருககுன்னும சொலலிட்டார். நான் தாண்டா உங்க யார்கிட்டயும் அதை சொல்லலை" எனவும் மோகன்குமாரே ஒரு வினாடி ஆடித்தான போனான். அவனிடம உறைந்து போன ஒரு தன்மை.

"டேய் என்னடா என்ன சொல்லிட்டு நீ இப்ப சிலையாகிட்டே..."

"எனககு இந்த பிரசனையை எப்படி எடுததுககறதுன்னே தெரியலம்மா... ஸ்ரீதேவியோட பிறபபுல இருந்தே பல ஆச்சரியங்கள் தொடர்ந்துகிட்டே வருது. நம்ப தலைக்கு மேல யாரோ உக்காந்துகிட்டு நம்பள அவங்க இஷ்டததுககு ஆட்டி வைககற மாதிரியும தோணுதும்மா..."

"கிட்டதட்ட அது தான் உண்மை. அதைத்தான் விதி. விதின்னு சொல்றோம்."

"சரிம்மா இப்ப நான என்ன பண்ணட்டும்?"

"என்ன பண்ணவா? உடனே மதுரை கிளம்புவோம். அதுககு முந்தி அநத சித்தர் சாமியை ஒரு பாாவை பாாத்துட்டு நடநததை சொலவோம. நிச்சயம் அவர் நமக்கு ஏதாவது நலலது சொலவாரு..."

பதறியபடியே பெட்டியை எடுக்க ஓடினாள் அம்மா. மோகன்குமாருககும் அது சரி என்றுபட்டது.

*****

லாட்ஜில் இருநத குமாருக்கு சப இன்ஸ்பெகடர் அமுதனிடமிருந்து வநத போன அவனை உடனே ஸ்டேஷனுக்கு வரசசொலலவே, புறப்பட்டான். அமுதேஷ்வர் ஸ்ரீதேவி கிடைத்த விபரததையும கூற சுமதி முதல எலலோருககும் ஒரே சந்தோஷம்.

"அண்ணே ஸ்டேஷனுக்கு நானும் உன கூட வரேண்ணே..." என்று அவளும் புறப்பட்டாள்.

"நலல நேரத்துல அவள கூட்டிகிட்டு வாங்க... ஒரு வாடகை காரல நாம உடனே புறப்படுவோம. நல்ல. ஊர். நல்ல நிச்சயதார்த்தம்" என்று புலமபினார் உறவுக்காரர்!

காளியம்மாளையும், ஜீவானந்தத்தையும் பார்க்க வரும்படி ஒரு போனை கேரளத்து கேசவன் நம்பூதிரிக்கு போட்டு அவரோடு பேசிககொண்டிருந்தான் ஜீவானந்தத்தின் மகன் மதன்.

"நம்பூதிரி... கொஞ்சம் உடனே வாங்க! இங்க எல்லாமே கெட்டு குட்டிச்சுவரா போச்சு. அப்பாவும் பாட்டியும் வர்ம அடிபட்டு பேச முடியாம வெளியில துடிச்சிகிட்டு இருககாங்க.

ஸ்ரீதேவிககற ஒரு பொண்ணால புதுசா ஒரே பிரசனை.

என்று அவன் கூறவும் நம்பூதிரியும் வருவதாக ஒப்புக் கொண்டவர். "நான் வரும் சமயம் ஆ பெண்ணிண்ட காலடி மண் அல்லெங்கில ஒரு வஸ்தரம்

அதுவுமில்லலங்கில் அவளது கேசம்.... இப்படி எதாவது இருந்தால் எனக்கு அது வலிய சகாயமாயிட்டிருக்கும்" என்றார்.

"அப்படியே செய்யறேன் நம்பூதிரி" என்ற மதன் வேகமாக புறப்பட்டான். எதிரில் அவனது பண்ணையாள் ஒருவன் ஓடிவந்தவனாய் "ஐய்யா.... அந்த பொண்ணு இப்ப ஸ்டேஷன்ல தான் இருக்குது...' என்றிட அவனிடமும் ஒரு புது வேகம்!

## 28

அன்று

ஜீவாவின உதாரான பேசசு அமுதனை தீவிரமாக யோசிகக வைதத அநத வேளையில அவன அபபா ராமலிஙகம காரை ஓட்டிக்கொண்டு அநத பஙகளாவுக்குள நுழைநதிருநதார. முனபோல ஒரு பயநத பணிவான டிரைவராக அவர நடநது வநத விதம அவனை தெரிககவிட்டது.

அவனருகில வநதவர அவனை மேலும கீழும பாரததார. பின மௌனமாக காளியம்மாளை தேடிக்கொண்டு போகத் தொடங்கினார்.

"அப்பா...." அமுதன் பலத்த குரலோடு தடுத்தான். அவரும் நின்றார். முகத்தில் இனம் புரியாத தவிப்பு.

"என்னப்பா இது? இது என்ன கோலம்... நீஙக இப்ப இநத வீட்டு சம்மநதிப்பா....

"மெல்லப் பேசுப்பா.... எஜமானியம்மா காதுல விழுந்துடப் போகுது."

"எஜமானியமமாளா.... இஙக இருக்கற ஒணட வநத பிடாரி எஜமானியம்மாளா.... என்னாச்சுப்பா உங்களுக்கு? இஙக என்ன தாமபபா நடந்துகிட்டிருக்கு....?"

"இதோ பாருப்பா.... எவ்வளவு உயரத்துல பறநதாலும் ஊர்க குருவியால பருந்து ஆக முடியாதுப்பா...."

அவர சராசரி மனிதர்கள் தங்களை சமாதானம் செய்து கொள்ளப் பயன்படுத்தும் பழமொழிகளை பயன்படுத்தத் தொடங்கிவிட்டார். பதிலுக்கு

அமுதன் வாயைத் திறந்த போது காளியம்மாளே அவர்களை நோக்கி வந்தாள்.

"என்ன ராமலிங்கம் பேச்சு.... போய் வேலைய பாரு. சம்மந்திங்கற எண்ணத்தை எல்லாம் மறந்துடணும்னு சொல்லியிருக்கேன்ல?" அதட்டலாய் அவள் கூறவும் ராமலிங்கம் வேகமாக விலகத் தொடங்கினார்.

அதற்குமேல் அமுதனால் அங்கே நிற்க முடியவில்லை நேராக ராஜரத்னத்தின் அறைக்கு தான் சென்றான். அவர் குறட்டை விட்டு கொண்டிருந்தார். அவர் அருகே ஏராளமான மதுபாட்டில்கள்... அவன் முகம் உடனேயே கோணிக்கொண்டது.

அவன் செயல்களை பார்த்தபடியே இருந்தாள் காளியம்மாள். அவளோடு இருந்தான் ஜீவா.... அவன் முகத்திலும் ஒரு அசாதாரணச்சிரிப்பு.

அமுதனுக்கு அறிவுக்கெல்லாம் அப்பால் பட்டு ஏதோ ஒன்று நடந்திருப்பது புரிந்தது!

என்ன அது?

காளியம்மாள் முன்பே பூசாரியைக் கொண்டு வசியம் செய்ய எண்ணிய அது போன்ற சாமாசார செயல்பாடுகளா? அவையெல்லாம் நிஜம் தானா? மூடநம்பிக்கைகள் இல்லையா? அவனுக்குள் கேள்விகளின் அணி வகுப்பு... இதற்கெல்லாம் யாரிடம் விடையை கேட்பது...?

புரியாத அந்த புதிர்களை எண்ணியபடியே வெளியேற தொடங்கினான்!

*****

அமுதனுக்கு எப்போதுமே திருப்பரங்குன்ற மலையின் காற்றோட்டமான ஒரு பகுதி மிகப்பிடிக்கும். அங்கே குரங்குகள் ஒருபுறம் கொட்ட மடிக்கும் மறுபுறம் எங்கும் காணப்படாத வெள்ளை மயில்களும் நிறைய கண்களில் படும்.

வாழ வழியில்லாத பிச்சைக்காரர்களில் சிலர் அங்கே சாமியார் தோற்றத்தில் அங்காங்கே சுருண்டு கிடப்பார்கள். அவர்களை உண்மையான சாமியார்களாக வாழ்க்கையை வென்று விட்டவர்களாக கருதி சிலர் வணங்கி நிற்கும் போது அவர்களுக்கே ஒரு மாதிரி இருக்கும். தங்களுக்கு இப்படி ஒரு மதிப்பா என்று நினைத்துக் கொள்வார்கள்.

அமுதன் அவர்களை வேடிக்கை பார்த்தபடியே நடப்பான். வாழ்க்கை எனும் ஒரு விஷயம் இநத மனிதர்களை எப்படி எல்லாம் ஆட்டுவிக்கிறது என்று நினைத்துக் கொள்வான். மேலே இருந்து கீழுள்ள ஊரைப்பார்க்கும் போது ரசமாக இருக்கும். மிகப்பெரிய லாரி, பஸ்கள் எல்லாம் ஒரு பொம்மை போல சிறிதாகி ஓடுவதை காணும் போது தூரம என்பதே பெரிது சிறிது என்பதை தீர்மானிப்பதாகவும் தோன்றும். அடுத்து எங்கிருந்து எப்படிப் பார்க்கிறோம் எனபதும சேர்ந்து ஒரு கருதது உருவாவதாகப்படும்.

மொததத்தில் அந்த மலைப் பகுதி அமுதனை சிந்தனையாளனாக ஆக்கிவிடும்.

மனம் கனக்கும் சமயங்களில எல்லாம் அந்த மலை தான ஆறுதல். இபபோதும அமுதன அங்குதான் சென்றான். வழக்கமாய் அமரும் பாறை மேல போய் அமர்ந்து கொண்டான். காளியம்மாள் அவன் முன் கை தட்டி சிரிப்பது போல ஒரு பிரமை தோன்றியது துளிகூட கல்வியறிவு இல்லாத ஒருத்தி தைரியம் என்கிற ஒரு விஷயத்தினாலேயே சகலத்தையும் சாதிக்கிறாள என்று தோனறவும் தன் தைரியம் அவளுக்கு துளியும்

சளைத்ததில்லை என்று நினைத்துக் கொண்டான். அதே சமயம் அவள் தன்னைச் சுற்றியுள்ளவர்களை மழுங்கடிப்பது எப்படி என்றும் தெரிய வில்லை. தனது பெற்றெடுத்த அப்பாவையே கட்டிப்போட்டு விட்டாளே....? இது எப்படி சாத்யம்....?

ஒருவேளை இந்த ஆவியம், வசியம் என்பதெல்லாம் நிஜமோ? சேச்சே... இது உண்மையாக இருந்தால் தெருவுக்கு தெரு அவர்கள் தான் கடை விரித்திருப்பார்கள்... இந்த நாட்டில் ஒவ்வொரு நல்லவனுக்கும் எதிரியாக ஒரு கெட்டவன் இருக்கிறான். இந்த கெட்டவன் தனக்கெதிரான நல்லவனை இதனாலேயே வாழ முடியாதபடி செய்து விடுவான். அதன் பின் இந்த பூமியே மிக மோசமானவர்களின் கூடாரமாக மாறி நல்லவர் ஒவ்வொருவரும் அடிமைகளாக வாழும் ஒரு நிலை தான் ஏற்பட்டிருக்கும் நிச்சயமாக இந்த மாதிரி விஷயங்கள் எல்லாமே பித்தலாட்டமானவை தான் என்றும் தனக்கு தானே நினைத்துக் கொண்ட போது 'போடா...போ' என்று யாரோ அதட்டலாய் சொல்வது காதில் ஒலித்தது. திரும்பிப் பார்த்தான். சற்றுத் தொலைவில் அருணாசல சித்தர் படுத்திருந்தார். அவர்முன் ஒரு நல்ல பாம்பு படம் விரித்து நின்றபடி இருக்க அவர் அந்த பாம்பைத் தான் போகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒரு ஆச்சரியம் போல அதுவும் போக ஆரம்பித்தது. பாம்புக்கு காதுகளே இல்லை என்பது தான் உலக கருத்து. அது அதிர்வைக் கொண்டே வாழும் ஜீவன். அப்படிப்பட்ட பாம்பு அந்த சித்தர் பேச்சை கேட்டது அமுதனுக்கு பெரிய ஆச்சரியம். இதுவும் ஏதாவது கண் கட்டா? என்பது போல எண்ணியவனை அவரும் பார்த்தார். சிரித்தார். அவனை அருகிலும் அழைத்தார். அமுதன் நெருங்கினான்.

"என்ன கல்யாண மாப்ளே... இங்க எங்க வந்தே... ஏன் ஒருமாதிரி இருக்கே?" என்றும் கேட்டார்.

"நீங்க என் கல்யாணத்துக்கு வந்திருந்தீங்கல்ல...?"

"ஆமாம்... இந்த பரதேசி கலந்துகிட்ட முதல் கல்யாணமும் உன் கல்யாணம்தான். கடேசி கல்யாணமும் உன் கல்யாணம் தான். ஆமா எப்படி இருக்கே?"

"ஏன் உயிரோட இருக்கோம்னு இருக்கு சாமி... என்னை சுத்தி என்ன நடக்குதுன்னே புரியல. உங்கள் எல்லாம் பாத்தா ஒரு இனம் புரியாத கோபமும் வருது."

"நீ நடந்த விஷயத்தை சொல் முதல்ல..."

அமுதன் சொல்லத் தொடங்கினான்!

இனறு

ஸ்ரீதேவி போலீஸ் ஸ்டேஷனில் இருப்பதை பண்ணையாள் சொல்லவும் மதன் உடனே தன் சகாக்கள் சிலருடன் போலீஸ் ஸ்டேஷன் நோக்கி புறப்பட்டு விட்டான்" எங்கடா கிளம்பிட்டே...' என்று காட்டமாக கேட்டாள் காளியம்மாள்.

"பாட்டி அந்த சிறுக்கி போலீஸ ஸ்டேஷன்ல தான் இருக்காளாம். நடுவுல என்னவோ நடந்துருக்கு. இல்லாட்டி அவங்க இன்னேரம் சென்னையில இருக்கணும்."

"நம்மள பத்தி போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுத்துருப்பாளோ?"

"அவ யார் பாட்டி கம்ப்ளைண்ட் கொடுக்கறதுக்கு.... வேற ஏதோ சிக்கல் பாட்டி...."

"என்னன்னு கவனிங்கடா.... நடக்கற எதுவும் நல்லதா இல்லை. நாதாரிப்பயலே.... நீ மட்டும் நிச்சயத்துல போது ஒழுங்கா இருந்திருந்தா இப்படி எல்லாம் ஆகியிருக்குமா?"

"திட்டாத பாட்டி. நடந்த தப்பை எல்லாம் நான் எப்படி சரி செய்யறேன்னு மட்டும் பார்" என்று சவால் விட்டபடி வேகமெடுத்தான் மதன்!

*****

போலீஸ் ஸ்டேஷன்! குமாரும் சுமதியும் ஒரு ஆட்டோவில் வந்து இறங்கவும் ஸ்ரீதேவியும் அவர்களைப் பார்த்து உற்சாகமானாள். இருவரையும் அமுதனும் வரவேற்று உட்காரச் சொன்னார். சுமதி ஸ்ரீதேவியை நெருங்கி கட்டிக்கொண்டவளாய் "எங்கடி போய்ட்டே ராத்திரியெல்லாம் நாங்க துடிச்சு போய்ட்டோம் தெரியுமா?" என்று கோபமாக அவளை எதிர் கொண்டாள்.

"இவங்க மலை உச்சில ஒரு சாமியார் கூட இருந்தாங்க. ராத்திரி ரவுண்ட்ஸ் போன இடத்துல அந்த ஜீவானந்தம் குரூப் மலைக்குமேல போறத பார்த்து தான் நானும் பின்னாலேயே போனேன். அப்படி போனா போன இடத்துல அவர் முன்னால இந்த பொண்ணு தியானத்துல உட்கார்ந்துகிட்டிருந்தா...." என்று நடந்ததை கூறத்தொடங்கிவிட்டான் அமுதேஸ்வரர்.

"ஐயய்யோ.... அவங்க எதுக்கு சார் மலைக்கு வந்தாங்க?" என்று படபடத்தான் குமார்.

"அதை இவங்ககிட்டதான் கேக்கணும். ஆனா அவங்க தப்பானவங்கன்னு நான் தெரிஞ்சி வெச்சிருக்கேன். அங்க எனக்கும் விநோதமான அனுபவங்கள்! நினைச்சா சிரிப்பாவும் இருக்கு. பயமாகவும் இருக்கு...."

"என்னென்னமோ சொல்றீங்களே சார்...."

"நான் முழுசா எதையுமே சொல்லல... அதை நீங்க முதல்ல புரிஞ்சுக்குங்க. இந்த பொண்ணுக்கு இன்னும் ஆபத்து நீங்கல.... அவங்க இந்த பொண்ணை ஏன் தேடி வந்தாங்கன்னும் தெரியல...."

"சார் இவளால தான் சார் என் தங்கை தப்பிச்சா.... நாங்க அந்த ஜீவானந்தம் மகன் மதனுக்கு என் தங்கை சுமதியை கட்டிக் கொடுக்க இருந்தோம். ஆனா அவன் ஒரு கேடு கெட்டவன்ங்கறத ஸ்ரீதேவி தான் கண்டுபிடிச்சு சொன்னா. அதனால நடக்க இருந்த கல்யாணம் நின்னுபோனது. அது அவங்க வரைல பெரிய அவமானமா மாறிடிச்சு. அதான் ஸ்ரீதேவியை குறிவெச்சு வந்துருக்காங்க. அதே சமயம் இவ எப்படி மலை உச்சிக்கு சாமியார்கிட்ட போனான்னும் தெரியல...."

என்ற குமார் ஸ்ரீதேவியை பார்த்து "என்னம்மா நடந்துச்சு... வாய்திறந்து சொல்லமாட்டியா?" என்று பதட்டம் குறையாமல் கேட்டான்.

ஸ்ரீதேவியோ அமுதன் மேலேயே பார்வையாக இருந்தாள். அவனும் அவளைப் பார்த்து "கேக்கறாங்க பார் பதில் சொல்...." என்றான்.

"என்ன சொல்ல.... எதை சொல்ல.... இந்த ஊருக்கு வந்ததுல இருந்தே நான் நானா இல்லை. இதை என்னால் ஒரு புது ஊராவும் நினைக்க முடியல.... இவரையும் என்னால ஒரு புதியவரா நினைக்க முடியல...."

"இப்படி சொன்னா எப்படிம்மா. ஆமா நீ சென்னையை விட்டே போகக்கூடாதுன்னு யாராவது உனக்கு இதுக்கு முந்தி சொல்லியிருந்தாங்களா?"

"ஆமாம்... ஒரு சித்தர் என் அம்மாகிட்ட சொல்லியிருந்தார். நான் இங்க வந்திருக்கிறது இந்த நிமிஷம் வரை என அம்மாவுக்கு கூட தெரியாது..."

"யாரும்மா அந்த சித்தர்... ஏன அவா அப்படி சொன்னார்?"

"தெரியல... ஆனா அவா சொன்னது உண்மை."

எனக்கும் இந்த ஊருக்கும் நிச்சயம் ஏதோ தொடர்பு இருக்கு. என் காதுல ஒரு குழந்தையோட அழுற சப்தம் கேட்டுகிட்டே இருக்கு..." ஸ்ரீதேவி சலனத்தோடு பேசினாள். -

"சார்... என்ன சார் இது? ஸ்ரீதேவி பேசறத வெச்சு பார்த்தா தலைல அடிகிடிபட்டு, ஏதாவது நடந்துடிச்சா....?"

குமார் அமுதேஷ்வரிடம் கேட்க அமுதனும் ஒன்றும் கூறாமல் "முதல்ல கூட்டிகிட்டு போங்க... சாப்ட்டு கொஞ்சம் ஓயவு எடுககட்டும். அப்புறம் எதையும் பேசுங்க. அந்த ஜீவானந்தம் குரூப்பால ஏதாவது பிரச்னை வந்தா போன் பண்ணுங்க. நான் பாத்துக்கறேன்" என்றான்.

அப்படியே "நானும் ராத்திரி தூங்கல.... போய் ரெஸ்ட் எடுக்கணும் புறப்படுங்க போகும்போது ஒரு கையெழுத்து போட்டுட்டு போங்க. உங்க கம்ப்ளைண்ட் ரெகார்ட் ஆகியிருக்கு. நல்லவேளை எஃப் ஐ ஆர் போடலை. போட்டிருந்தா நிறைய ஃபார்மாலிடீஸ் இருக்கு. இப்படி அனுப்ப முடியாது...." என்றான்.

குமாரும் சுமதியும் ஸ்ரீதேவியை அணைப்பாக அணைத்தபடி அழைத்துச் செல்லத் தொடங்கினர். அமுதனிடம் மட்டும் தீவிரமான சிந்தனை!

போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளியே அவர்கள் வரவும் ஸ்ரீதேவி செல்போனில் அழைப்பொலி. திரையைப் பார்த்தாள். அதில் அண்ணன் பெயர்!"

"ஸ்ரீ.... எங்கடா இருக்கே.... நல்லா இருக்கியா?"

"நல்லா இருக்கேண்ணே..., எனக்கு எந்த பிரச்னையுமில்லை...."

"நீ காணாம போயிட்டேன்னு குமார்ங்கறவர் போன் பண்ணியிருந்தார். நானும் ட்ரை பண்ணிகிட்டே இருந்தேன் உன் போன் லைன் கிடைக்கவேயில்லை...."

"ஆமாண்ணே.... நான் மலைமேல இருந்தேன். அங்க டவர் இருந்திருக்காது...."

"உனக்கு இப்ப எந்த பிரச்னையுமில்லையே?"

"எதுவும் இல்லண்ணே... ஆனா எனக்கு இந்த ஊரை விட்டு வர மனசே இல்லண்ணே...."

ஸ்ரீதேவி பேசிக்கொண்டே ஆட்டோவில அவர்களுடன் ஏறிட ஆட்டோ புறப்பட்டது. அது புறப்பட்ட சில நொடிகளில் அந்த இடத்துக்கு வந்து நின்ற ஒருவன் ஸ்ரீதேவி காலடி பதிந்திருந்த இடத்தில் இருந்து கொஞ்சம் மண்ணை எடுத்து ஒரு பொட்டலம் போல கட்டிக் கொண்டான்.

# 29

அன்று

திருப்பரங்குன்ற மலை மேல ஆளரவமற்ற ஒரு சூழலில அருணாசல சித்தர் முன்னால வரிசையாக தனக்கு நேரிட்ட அனுபவங்களை சொல்லத் தொடங்கியிருந்தான அமுதன.

"சாமி....

நான் ஒரு சாதாரண கார் டிரைவரோட பையன். ஆனா சுயமரியாதை உணர்வுள்ளவன். சத்யமா தேவி எனக்கு மனைவியா வருவாண்னுல்லாம் கொஞ்சமும் நினைக்கல. அவ்வளவு ஏன்? அவ தான் முதல்ல என்னை காதலிச்சா.... அப்புறம் தான் நான் காதலிச்சேன். அப்படி காதலிக்கத் தொடங்கறதுக்கு முன்னால எவ்வளவு யோசிக்கணுமோ அவ்வளவு யோசிக்கவும் செய்தேன். நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்காத விதமா ரொம்ப வேகமா கல்யாணத்துலயும் போய் முடிஞ்சிடிச்சு.

என் வாழ்க்கை இப்படி தலைகீழா மாறும்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கல. தேவியோட சந்தோஷமா என் வாழ்க்கை ஆரம்பமாச்சு. ஆனா இப்ப அதுல அவ சித்தியான காளியம்மாளால எல்லாமே கெட்டு குட்டிச் சுவராயிடிச்சு...

அவ ஒரு தப்பான பொம்பளன்னு ஊருக்கே நல்லா தெரியும். ஆனாலும் யாராலயும் எதையும் செய்ய முடியல. என மாமா இப்ப நூறு சதவிகிதம் அவ கண்ட்ரோலுக்கு போய்ட்டார். அவர் போனது கூட எனக்கு ஆச்சரியமில்ல. என அப்பா போனது தான பெரிய ஆச்சரியம! தலை நிமிர்ந்து சுயமரியாதியா வலம் வரவேண்டியவர். திரும்ப கார் டிரைவரா அந்த காளியம்மாள் அடிமையா மாறிட்டார். கேட்டா எவ்வளவு உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாதுன்னு பழமொழிய சொல்றார். எனக்கு ஒண்ணுமே புரியல. அந்த ஜீவாவும் அந்தமான்ல இருந்து திரும்பி வந்து பழைய திமிரோட நடந்துக்கறான்.

சாமி ஒரு பொம்பளையால எப்படி சாமி இப்படி எல்லாரையும் தன் கட்டுப்பாட்டுக்குள்ள வெச்சிருக்க முடியுது?"

ஒரு நீண்ட விளக்கத்தோடு கேள்வி கேட்டு நிறுத்தியவனை புன்னகையோடு பார்த்த அருணாசல சித்தர்" உன் கேள்வி அவ்வளவு தானா.... இல்ல இன்னும் இருக்கா?" என்று கேட்டார்.

"இருக்கு சாமி.... அந்த காளியம்மாள் ஏதோ பில்லி சூனியம வசியம் அப்படி இப்படின்னு நடந்துகிட்ட மாதிரி தெரியுது. இதெல்லாம் உண்மையா சாமி...?"

"உன கண எதிரல மாற்றங்கள பாத்துமா இப்படி நீ கேககறே?"

"அது எப்படி சாமி? அது நிஜமனா இந்த நாட்டுல நல்லவஙகளே இருக்க முடியாதே? எல்லா கெட்டவனும்ல பிரதானமா இருப்பான.

"இப்ப அப்படி இல்லைன்னு நீ நினைககறியா?"

"என்ன சொல்றீங்க.... இப்ப நான் இருக்கேன். அந்த பில்லியும் சூனியமும் என்னை ஏன் கட்டிப் போடலை?"

"நலல கேள்விய தான் கேட்டுருக்கே? இது கலியுகம்ப்பா. இந்த யுகம் எப்படி இருககணுமோ அப்படி இருக்கு.... என் வரைல நீ வசியப்படலைன்னா அதுக்கும் சில காரணங்கள் இருககு அதுககு பதில அந்த காளியம்மாவுககு தான் தெரியும்...."

"சாமி.... இதுக்கு விமோசனமே இல்லையா? விட்டா அவ என் தேவியோட மனசைக்கூட மாத்திடுவா போல இருக்கு சாமி...."

"என்ன என்னப்பா பண்ணச் சொல்றே? நானே இந்த வாழ்க்கை வேண்டாம்னு சன்யாசியா ஆயிட்ட ஒருத்தன் தானே?"

"அப்ப உங்களால எனக்கு எந்த உதவியும் செய்ய முடியாதா?"

"கடவுளை நம்பு. உனக்கு உதவ கடவுளாலதான் முடியும்?"

"கண்ணுக்கே தெரியாதவரை எதை வெச்சு சாமி நம்பச் சொலறீங்க?"

"அப்ப நீ ஒரு நாத்திகனா?"

"நான் நாத்திகனும் இல்ல ஆத்திகனுமில்ல. மனுஷன் சாமி."

"அமுதா... இப்படி பதில் சொல்றது சுலபம். அதே சமயம் நீ புரிஞ்சுக்கவும், ஜெயிககவும் நினைககற விஷயம் சாதாரண மானதிலல."

"சாமி... உங்ககிட்ட நான் தத்துவம் பேச வரலை. இபப நான் இருக்கற கொடுமையான சூழநிலைல இருந்து விடுதலை அடைய வழி கேட்கறேன்.

இந்த தேசம கோடி கோடியா வெசசிருககறவனை பெரிய ஆளா சொலறதில்லை.... எலலாத்தையும் விட்டவனைத்தான் அப்படிச் சொல்லுது. அப்படிப் பார்த்தா நீங்க சாதாரணமானவர் இல்ல. ஆனா நீங்க உங்க மதிப்பு தெரியாம நானொரு சனயாசி என்னால என்ன முடியும்னா என்ன அர்த்தம் சாமி?"

அமுதன் கேட்ட ஆழமான அந்த கேள்வி அருணாசல சித்தரை ஊடுருவிப் பார்க்கச் செய்தது.

"என்ன சாமி அப்படி பாக்கறீங்க?"

"நீ தெளிவா யோசிக்கறே.... நல்லா கேள்வி கேட்கறே.... ராமகிருஷ்ண பரமஹம்சர் முன்னால விவேகானந்தர் உன்னை மாதிரி தான் பேசுவாராம்...."

"சாமி.... அவரோட ஒப்பிட்ற அளவு நானில்ல சாமி. நான் ரொம்ப சாமான்யன. எனக்கு உங்களால முடிஞ்ச உதவியை நீங்க செய்து தான் தீரணும்."

"முதலல இநத சாமான்யன், சராசரின்னு பேசறத விடு. என்னால எதையும் சாதிகக முடியும்னு நமபு. நமப மன அமைபபுங்கறது நேர்மறையா எப்பவும் இருக்கறது மிக முக்கியம.

அந்த காளியம்மா குறுககு வழி முறைல போய தறகாலிகமா வெறறியடைஞ்சிருககா. அவளோட அதே வழில நீ போய முதல்ல அவளை கட்டிபபோடு. அதுககு உனக்கு தெய்வ பலம ரொம்ப அவசியம.

வேட்டைக்கு போகும்போது மிருகத்துக்கு ஏற்ப ஆயுதங்களோட போற மாதிரிதான் இதுவும்."

"அப்ப என்ன கடவுள் நம்பிக்கைக்கு ஆட்பட சொல்றீங்களா?"

"ஆமா.... சராசரி நம்பிக்கைகளை கடந்த மிக ஆழமான நம்பிக்கை. உறுதியான நம்பிக்கை எல்லா இடத்துலயும் நிரம்பி வழியற கடவுள் எனக்குள்ளயும் இருக்கார்.... அந்த கடவுள் வேற நான் வேற இல்லங்கற அளவுக்கு ஞானத்தெளிவு. இது உனக்கு மிக முக்கியம்."

"இதெல்லாம் கொஞ்ச நாளில வரப்போற விஷயமா? அனுபவத்தால மட்டும் தான் வரமுடியும்."

"அமுதா... கடவுள் நம்பிக்கை வேற உன்னை நீ நம்பறது வேற கிடையாதுப்பா. உன்னை நீ நம்பறே தானே?"

"அதுல மட்டும் எந்த சந்தேகமும் கிடையாது சாமி..."

"அப்ப அது கூட கடவுள் நம்பிக்கை தான். எல்லா அணுவுலயும் இருக்கற கடவுள் உனக்குள்ளயும் இருக்கறதால நீயும் கடவுள் தான்..."

"சாமி... நான் கடவுளா மனுஷனாங்கறத விட இப்ப ரொம்ப முக்கியமான விஷயம் அந்த காளியம்மாளை அடக்கறது தான். அதுக்கு என்ன வழி? என்ன செய்தா அவளோட கட்டுப்பாட்டுல இருக்கற என் அப்பா, மாமனார் எல்லாரும் மாறுவாங்க?"

"அதை உன் ஆத்ம பலத்தால மட்டுமே சாதிக்க முடியும் இல்லன்னா அவளோட ஏவல உன்னையும் தன் வசப்படுத்திடும்..."

"அது என்ன மயக்க மாத்திரையா.... என் ரத்தத்துல கலந்து நான் என்னை மறக்க?"

"அப்படியும் கூட ஒரு வழி உண்டு. நீ உட்கொள்ற உணவு வழியா உன்னை கட்டிப்போட்றது. அனேகமா உன் மாமனார் அப்பா அப்படித்தான் அவகிட்ட சிக்கி இருக்கணும்."

"அப்படின்னா அது விஞ்ஞானமாச்சே சாமி..."

"இதுவும் விஞ்ஞானம் தான். இந்த விஞ்ஞானம் இரண்டு விதமா இருக்கு. புரியற விஞ்ஞானமா ஒரு விதமாவும், புரியாத விஞ்ஞானமா இன்னொரு விதமாகவும் இருக்கு."

"குழப்பறீங்களே சாமி...."

"விஷயம் அந்த மாதிரி.... மனித உருவமே ஒரு அற்புதமான விஞ்ஞானம் தான். விரல் நுனில வளர்ற நகங்கள், மடக்க தோதான பந்துக்கிண்ண மூட்டுக்கள், கண்ணுக்கு மேல கூரை போல இமை, வாயில மிகச்சரியா 32 பற்கள், குறிப்பிட்ட இடங்கள்ல மட்டும் வளரும் முடி.... இப்படி சொல்லிகிட்டே போகலாம்.

பூமியோட இரவு பகல், தேஞ்சு வளரும் நிலா மூணு பங்கு நீர்.... எல்லா அதி அற்புதமான விஞ்ஞானம். இதை நிர்வகிக்கிற அந்த மகாசக்தியை தான் கடவுள்னு சொல்றோம்."

அருணாசல சித்தர் அமுதனுக்கு விளக்கமளித்தபடி இருக்க அவன் அங்கிருப்பதை தேடிவந்து பார்த்த ஒருவன் காளியம்மாளிடம் சொல்ல விலக ஆரம்பித்தான்.

இன்று

ஸ்ரீதேவியின் காலடி மண்ணை எடுத்துக்கொண்டவன் நாலா புறமும் ஒரு பார்வை பார்த்துவிட்டு ஒரு ஆவேசத்தோடு அங்கிருந்து புறப்பட்டான். அவன் அப்படிச் செய்ததை போலீஸ் ஸ்டேஷன் வாசலில் காவலில் இருந்து மாரிமுத்து என்ற போலீஸ்காரர் ஒருவர் பார்த்துவிட்டு யோசிக்க ஆரம்பித்தார்.

உள்ளூர் போலீஸ்காரர் என்பதால் அவருக்கு அவன் ஜீவானந்தம் ஆள் என்பது தெரிந்திருந்தது. சற்று யோசித்தவர் உள்ளே சென்று அமுதேஷ்வர் முன் நின்றார்.

"சார்..."

"என்ன மாரிமுத்து?"

"இப்ப நம்ப ஸ்டேஷனல இருந்து ஒரு பொண்ணு போனிச்சு தாங்களே....?!

"அதுக்கென்ன மாரிமுத்து?"

"இல்ல அதோட காலடி மண்ணை இந்த ஜீவானந்தத்தின் ஆள் ஒருத்தன் குனிஞ்சு எடுத்துகிட்டு போறான்யா...."

"யாரு ஸ்ரீதேவி காலடி மண்ணையா?"

"ஆமாங்க..."

"இது என்ன விநோதம். அந்த மண்ணை எடுத்து என்ன செய்வாங்க...."

"சார்.... செய்வினைக்கு அதெல்லாம் தான் சார் வேணும்!"

"செய்வினையா?"

"ஆமாம் சார்.... கேரளாவுல வயநாட்டு பக்கத்துல இருந்து ஒரு நம்பூதிரி வந்து நம்ப திருப்பரங்குன்றத்துல தங்கியிருக்கார் சார். வரவெச்சிருக்கறது அந்த காளியம்மாளும் அவ தம்பி ஜீவானந்தமும் தான் சார்..."

"அவருக்கும் செய்வினைக்கும் என்ன சம்பந்தம்?"

"அதையெல்லாம் செய்யறதே அவர் தானே சார்...."

"இதெல்லாம் உங்களுக்கு எப்படி தெரியும் மாரிமுத்து?"

"நான் காலைல வாக்கிங் போகும் போது சரவணப் பொய்கை பக்கம் இந்த நம்பூதிரி வந்து குளிச்சிகிட்டு இருந்ததை பார்த்தேன். அவங்க கரைல உக்காந்து ஏதோ பூஜை எல்லாம் செய்துகிட்டிருந்தார் அவர்...."

"எல்லாமே பெரிய மர்மமா இருக்கே...."

"அந்த குடும்ப விஷயமே மர்மம் தான் சார். அதுலயும் அந்த. ஜீவானந்தம் பெரிய மொல்லமாரி. எந்த கட்சி ஆட்சிக்கு வருதோ அந்த கட்சி கொடியை தன் கார்ல கட்டிடுவான். அந்த காளியம்மா புருஷனையே கொன்னு சொத்தை அபகரிச்சவ.

ஏராளமா சொத்து இருக்கு சார். ஆனா எதையும் விக்க முடியாது. அனுபவிக்கற பாத்யதை மட்டும் தான்...."

"பரவாயில்லியே இவ்வளவு விஷயம் தெரிஞ்சிருக்கே உங்களுக்கு...."

"இதுக்கும் மேலயே தெரியும் சார். ஊருக்கே தெரியும் போது நம்ம டிபார்ட்மெண்டுக்கு தெரியலன்னா எப்படி சார்...?"

"எப்படி இவ்வளவு கிரிமினலா இருந்துகிட்டு மாட்டாம இருக்காங்க?"

"என்ன சார் நீங்க.... எந்த கிரிமினல் மாட்டி தண்டனை அனுபவிச்சிகிட்டிருக்காங்க. இவங்க அனுபவிக்க....?"

"நீங்க என்ன சொல்றீங்க?"

"அரசியல் செல்வாக்கு இருக்கும் போது நம்பளால என்ன சார் செய்ய முடியும். நாம் புடிச்சாலும் வக்கீல் கோர்ட்டுக்கு போய் வெளிய எடுத்துடுவாரு. அதனால இந்த ஸ்டேஷனுக்கு வர்ற இன்ஸ்பெக்டருங்க அவங்களை அட்ஜஸ் பண்ணிப் போய் அதுவே பழக்கமாயிடிச்சு சார்.... நீங்க தான் அவங்ககிட்ட இன்னும் மடங்காம இருக்கீங்க...."

"பாராட்றீங்களா.... இல்லை என்னையும் அட்ஜஸ் பண்ணிப் போன்னு சொல்றீங்களா?"

"ஐயோ சார்.... நான் உங்கள பாத்து பெருமைப்பட்றேன் சார். எனக்கும் இந்த போலீஸ் வேலையே புடிக்கல சார். நமக்கும் நல்லவங்களுக்கும் சம்மந்தமே இல்லாம போயிடிச்சே சார்...."

"நீங்க சொல்றது எனக்கு புரியல...."

"தப்பு பண்ணவன், கேடுகெட்டவன் கொலகாரன் இவன்லாம் தானே நம்மகிட்ட வரான்? எந்த நல்லவன் போலீஸ் ஸ்டேஷன் வரான்? இந்த குப்பைங்களோட குப்பை கொட்டி நம்ம வாழ்க்கையும்ல குப்பையா இருக்கு.."

"அடேயப்பா உங்களுக்குள்ள இவ்வளவு உணர்ச்சிகளா? குட்! போகட்டும் அந்த மண்ணை எடுத்துகிட்டு போனதால ஸ்ரீதேவிக்கு எதாவது பிரச்னை வருமா?"

"நிச்சயமா வரும் சார். அதைக்கொண்டு எதாவது மாய மந்திர வேலை செய்வாங்க. அந்த பொண்ணையும் பாதிக்கும் சார்...."

"இப்படி எல்லாம் செய்ய முடியுமா?"

"செய்ய முடியாம தான் நம்பூதிரி மாதிரி ஆளுங்க வண்டி ஓடுதுங்களா?"

"இந்த விஞ்ஞான உலகத்துல எப்படி மாரிமுத்து இதை எல்லாம் நம்பறது?"

"என்ன சார் பெரிய விஞ்ஞான உலகம்? என்னென்னவோ கண்டுபிடிக்கறாங்க. ஆனா அவங்களுக்கு வியாதி வராம இருக்குதா?"

"அவங்க சாகாம இருக்காங்களா?"

"இதென்ன பேச்சு.... பொறந்துட்டா ஒரு நாள் செத்து தானே தீரணும்? உடம்புன்னா வியாதியும் வரத்தானே செய்யும்?"

"அதை மாத்த முடியல தானே....? அதே சமயம் இவங்க கண்டுபிடிக்கறதும் இந்த பூமில ஏற்கனவே இருக்கறதுதானே? புதுசா எதை இவங்க உருவாக்கினாங்க...?"

"வாட் டு யூ மீன்?"

"சார்... விஞ்ஞானம்கறது ஒண்ணும் பெரிய விஷயம் இல்ல சார். இந்த நம்பூதிரி மாதிரி ஆட்கள் பண்றது தான் என் வரைல பெரிய விஷயம்."

"என்ன பண்ணுவார் அந்த நம்பூதிரி?"

"அது தெரியாது. ஆனா அந்த பொண்ணு ஒழுங்கா ஊர் போய் சேரமாட்டா இது நிச்சயம் சார்...."

அந்த போலீஸ்காரர் சொன்னது அமுதேஸ்வரை பெரிதாக சிந்திக்கச் செய்தது.

காரில் சாமான்களை ஏற்றி விட்டு குமாரும் சுமதியும் காரில் ஏறினர். உள்ளே ஸ்ரீதேவி அமர்ந்திருந்தாள். காரும் புறப்பட்டது.

"ஏர்போர்ட் தானே சார்?" என்று கார் டிரைவர் கேட்க 'ஆமாம்' என்றான் குமார். ஸ்ரீதேவி வெளியே தெரிந்த திருப்பரங்குன்ற மலையை வெறித்துப் பார்த்தபடியே வந்தாள்.

"என்னடி அப்படி பாக்கறே.... நீ இன்னும் நார்மல் மூடுக்கு வரவே இல்லை. உன்ன நல்லபடியா உன் வீட்ல கொண்டு போய் விட்டா போதும் எனக்கு...." என்று சுமதி புலம்பியபடியே அவளைத் தொடர்ந்தாள். நடுவில்

ஸ்ரீதேவி செல்போனில் திரும்பவந்தான் அவள் அண்ணன். "ஸ்ரீதேவி கிளம்பிட்டியா?" "கிளம்பிட்டேண்ணே.... ஏழரைக்கு ஃப்ளைட் எட்டரைக்கு சென்னை வந்துடும் 9 மணிக்கு வெளிய வந்துடுவோம்...."

"உனக்காக நான் ஏர்போட்ல காத்துருக்கேன்" என்று அண்ணன் சொல்ல. ஸ்ரீதேவியும் சரி என்ற நிலையில் டமால் என்று ஒரு மோதல்!

# 30

அன்று

காளியம்மாள் ஜெகஜோதியாக இருந்தாள்! கழுத்து கொள்ளாத காசு மாலை, அகலக் கரை பட்டுப்புடவை. ஒரு ரூபாய் நாணய சைஸ் குங்குமப் பொட்டு என்று ஒரே அதகளம். அவள் வரையில் அவள் இழந்த சாம்ராஜ்யம் திரும்பக் கிடைத்துவிட்டது. அது ஒரு அதிசயம். துணிவே துணை என்று ஒரு பழமொழி உண்டு. அது நல்லவர்கள் வசம் இருந்தால் தான் நல்லது. ஆனால் அதை எப்போதும் அப்படி இல்லாதவர்களே கொண்டிருக்கிறார்கள்.

இந்த துணிவு யாரிடம் இருக்கிறதோ அவர்களுக்கு தேவைப்படுவதை எல்லாம் இது கொடுத்து விடுகிறது.

காளியம்பாளுக்கும் கொடுத்து விட்டது. பாவம் செய்யத் தயங்காத துணிவு, கொலை கூட செய்யத் தயங்காத துணிவு, பிறர் சொத்தை அபகரிக்கும் பேராசைத் துணிவு, தான் நினைப்பதை அப்படியே நடத்திக்காட்டும் துணிவு என்று காளியம்மாளிடம் தான் எத்தனை துணிச்சல்!

காளியம்மாள் வசம் அந்த பாளையச் சொத்து அவ்வளவும் வரவும், அதுவரை அவளை எதிர்த்தவர்கள் எல்லாரும் கூட கப்சிப்!

இப்படி ஒரு நிலையில தான் சித்தரோடு, அமுதனை பார்த்த சேதியோடு வந்து சேர்ந்தான் அவளது அடியாட்களில் ஒருவன்.

வந்தவன் கச்சிதமாய் காதில் மந்திரம் ஓதுவது போல சொல்லி முடித்தான். காளியம்மாளும் அகண்ட விழிகளோடு கேட்டுக் கொண்டாள்.

அப்போது வாயில்புறம் அரவம். அமர்ந்த நிலையில கழுத்தை வளைத்து பார்த்தாள்.

ஒரு மஞ்சள் கொடி பறக்க ஒரு பிளை மவுத் கார் வந்து நின்றது. அது நம்பூதிரியின் கார்: காளியம்மாளுக்கு மறுவாழ்வளித்தவனின் கார்.... காளியம்மாள் துள்ளிக்கொண்டு எழுந்தாள். நம்பூதிரியோடு ஜீவானந்தமும் காரில் இருந்து இறங்கி அவரை அழைத்துக் கொண்டு வரத் தொடங்கியிருந்தான்.

"வரணும் வரணும்.... என் குலசாமி வரணும்.... என் பழனி முருகன் வரணும். அந்த ஏழுமலையான் வரணும்..."

என்று காளியம்மாள் வாய் கொள்ளாத வரவேற்பளித்தாள். அவளது குரல் கேட்டு பங்களாவே திரும்பிப் பார்த்தது.

நம்பூதிரி கச்சவேட்டி உடுத்தி முன் குடுமியோடு தோளில் ஒரு பட்டுத்துண்டோடு வந்தபடி இருந்தார். நெற்றியில் தீட்டியது போல களபச் சந்தனம், நல்ல உயரம்! தீர்க்கமான விழிகள்....

அதர்வணவேத மந்திரங்கள் ஆளையே மாற்றிவிடும் என்பதற்கு ஒரு நல்ல சாட்சியாக தெரிந்தான். நடந்து வந்தவனுக்கு சிம்மாசனம் போன்ற இருக்கையை காட்டினாள் காளியம்மாள்.

"உக்காருங்க நம்பூதிரி...."

"என்னம்மா... திரும்ப ராணி ஆயிட்டியா?"

"ஆஹா... ராணியாவா மகாராணியாவே ஆயிட்டேன் சாமி..."

"உன் ஜாதகம் என்ன சாதாரண ஜாதகமா... ராஜயோக ஜாதகமாச்சே...?"

"இருந்தாலும் நடுவுல வழுக்கி விழுந்து தெருவுக்கே போகத் தெரிஞ்சேனே சாமி...."

"நடந்து முடிஞ்சதை இனி பேசாதே. பின்னால பாக்கவே பாக்காதே.... எப்பவும் முன்னால பார்..."

"நல்லது சாமி.... என்ன சாப்பிட்றீங்க?"

"நாங்க வெளிய எதையும் சாப்பிட மாட்டோம். அது எங்க சங்கல்பம்! நீ வரச் சொன்னதால வந்துருக்கேன். நான் வந்த வேலையும் முடிஞ்சது புறப்படலாமில்லையா?"

"அதுக்கு முந்தி முக்கியமா ஒரு விஷயம் சாமி."

"சொல்லு...."

"எல்லாரும் அடங்கிட்டாங்க. ஆனா இந்த அமுதனை மட்டும் அப்படியே விட்டு வெச்சிருக்கோம். அவன் என்ன செய்ய?"

"அவனை நீ பெருசா நினைக்காதே. அவன் அவனா இருக்கட்டும். அப்பதான் ஊர் உன்னை நம்பும். அவனை நாம வசியப்படுத்தறது பெருசில்ல. பிறகு ஊரே நீ குறுக்கு வழியில போனதா பேசும். அதுல என் தலையும் உருளும். தேவையா?"

"அவன் அடங்காம சித்தா சாமிகிட்ட போய் ஏதோ திட்டம் போடத் தொடங்கிட்டானே... எனக்கு இப்ப தான் தகவல் வந்தது..."

"இந்த காலத்துல சித்தரா.... நம்ப முடியலியே?"

"ஒருத்தர் இல்ல.... பலபேர் இருக்காங்க இந்த திருப்பரங்குன்ற மலையை சுத்தி...."

"பிச்சைக்காரனை சித்தன்னு சொல்லாதே..."

"இவர் சித்தர் தான்.... பிச்சைக்காரனில்லை.... எனக்கு நல்லா தெரியும். என் விட்டுக்காரருக்கும் ரொம்ப வேண்டியவர்."

"அப்படின்னா இவனையும் கட்டிப் போட்டுட வேண்டியது தான்..."

"அதான்... அதைத்தான் நானும் சொல்ல வந்தேன்..."

"அப்படின்னா நான் தந்த வசிய மருந்தை இன்னிக்கே சாப்பாட்டுல கலந்து கொடுத்துடு. கூடவே இப்பதான் தரப்போற மருந்தையும் கலந்து கொடு."

"இரண்டையும் சாப்ட்டா என்னாவாவான்?"

"தன்னையே மறந்து போவான். இயற்கை உபாதைகளை மட்டும் யாரா சொல்லாமலும் நிறைவேத்துவாங்க. மற்ற எல்லாத்துக்கும் ஒருத்தர் துணை வேணும்."

"அப்ப சித்தம் கலங்கி மௌனமாயிடுவானா?"

"ஆமா... தன்னையே மறந்தவனுக்கு எப்படி பேச்சு மட்டும் வரும்?

"சபாஷ்.... அவன் ஒரு நடை பிணமா திரியணும். அதை இந்த ஊரும் பாக்கணும். காளியம்மாளா கொக்கான்னு வாயல விரல் வைக்கணும்."

"காளியம்மாள் வக்கரித்தாள்.

நம்பூதிரியும் ஒரு குடுவையை எடுத்து தண்ணீர் போல் ஒன்றைத் தரவும் வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

"பாத்து காளியம்மா... இது மகா மந்த்ர ஜலம். ஒரு சொட்டு யார் சாப்ட்டாலும் சுய நினைவு போயிடும்."

பயமுறுத்திய நம்பூதிரிக்கு அடுத்து பெரிய அளவில் மரியாதைகள் செய்யத் தொடங்கினாள் காளியம்மாள். தட்டு நிறைய பணக்கட்டுக்கள்.... தங்கக் காசுகள்.... வெள்ளிப் பாத்திரங்கள் என்று ஒரே தடபுடல்! நம்பூதிரி அதை பார்த்ததோடு சரி வாங்கிக் கொண்டதெல்லாம் அவரது உதவியாளன் மந்திர மோகன் என்பவன் தான்....

இறுதியாக நம்பூதிரி புறப்படும் போது ஏதோ மறந்து விட்ட ஒன்று ஞாபகத்துக்கு வந்ததுபோல "ஆக கிரீடம் கிட்டியோ?" என்று கேட்டார்.

காளியம்மாள் முகம் அதைக்கேட்ட நொடி மிக வேகமாய் மாறத்தொடங்கியது!

இன்று

டமால் எனகிற அந்த மோதலைத் தொடர்ந்து ஸ்ரீதேவி அமர்ந்திருந்த அந்த கார் அப்படியே பக்கவாட்டில் கவிழ்ந்து மூன்றுமுறை உருண்டு பிறகே நின்றது.

அந்த மோதலுக்கும் உருளலுக்கும் காரணம் ஒரு லாரி. காரை பக்கவாட்டில் ஓவர்டேக் செய்வது போல வந்து இடித்துத் தள்ளிவிட்ட நிலையில் அந்த லாரி ஓட்டமெடுத்து விட்டது.

கவிழ்ந்து விழுந்த காருக்குள் இருந்து வெளியே தூக்கி எறியப்பட்ட நிலையில் ஸ்ரீதேவி மயங்கிவிட, அவள் தோழி சுமதி ஒருசிறு காயமும் இன்றி இடித்துவிட்டு சென்ற அந்த லாரியைத் தான் பார்த்தாள். லாரியின் பின் புறத்தில் நம்பர் பிளேட்டை பார்க்க முடியவில்லை. ஆனால் திருஷ்டிக்கு என வரையப்படும் ஒரு பூதமுகம் மட்டும் பின்புறத்தில் தெரிந்தது.

அதற்குள் காரில் இருந்த சுமதியின் அம்மா, அண்ணன் மற்றும் டிரைவர் என்று எல்லோரிடமும் ஒரே கூக்குரல்! சுமதியின் கவனம் அவர்கள் பக்கம் திரும்பியது! காருக்குள் மாட்டிக் கொண்டு அலறும் அவர்கள் வெளியே எடுக்க அவளும் தயாரானாள்!

ஜீவானந்தம் அறைந்த அறையில் அந்த லாரி டிரைவர் காதில் விமானம் பறக்கத்தொடங்கியது.

"முடிச்சிட்டு வாங்கடான்னா அடிச்சிட்டு வந்து நிக்கறீங்க. பின்னாலேயே போலீஸ் மோப்பம் பிடிச்சிட்டு வருவாங்க அப்ப என்ன பண்ணுவீங்க?" என்று காஜித்தான்.

"இடிச்ச இடில நிச்சயம் கார் தீப்பிடிச்சு கருகிப் போயிருக்க வேண்டியதுங்க கார் அவ்வளவு உருண்டும் எப்படியோ தப்பிச்சிகிட்டாங்க" என்றான் கிளினர்.

"இதைச் சொல்ல எதுக்குடா வரணும் இங்க? சரி சரி... லாரியோட உடனே வடநாட்டு பக்கம் போயிடுங்க. எவ்வளவு வேகமா போக முடியுமோ போங்க. இப்பல்லாம் திரும்பின பக்கமெல்லாம் சி.சி.கேமரா.... அது எதையாவது வெச்சு அந்த சப் இன்ஸ்பெக்டர் உங்கள் கண்டு பிடிச்சாலும் என்னைப் பத்தி மூச்சு விடகூடாது. எதிர்பார்க்காத விதமா நடந்துடிச்சின்னு சொல்லணும் என்ன?"

"நாங்க எந்த காலத்துலயும் துரோகம் மட்டும் பண்ண மாட்டோங்க. அதே சமயம் ஒருவேளை போலீஸ் எங்கள் நெருங்கிட்டா நீங்க தான் எப்படியாவது எங்கள் வெளிய எடுக்கணும்."

"அதை எல்லாம் அப்புறம் பேசிக்கலாம். முதல்ல இந்த ஸ்டேட்டை விட்டு வெளிய போற வழிய பாருங்க. கமான் க்விக்..."

ஜீவா கர்ஜித்தவனாக ஒரு நோட்டுக்கட்டை தூக்கிப்போட, அதை பிடித்த நிலையில் இருவரும் புறப்பட்டனர். காளியம்மாள் வந்தாள்.

"என்னடா.... எகணைக்கு மொகணையாயிட்டுதோ?"

"ஆமாம்கா... அம்புட்டு பேரும் தப்பிட்டாங்க."

"ஆயுசு கெட்டி போல விடு கலங்கி உக்காராம அடுத்து என்ன செய்யறதுன்னு யோசி..."

"என்னத்த செய்ய... இந்த ஸ்ரீதேவி செத்தா சாகட்டும்னு இவ கழுத்துல என் மகனை தாலி கட்டச் சொல்லியிருந்தா இந்த சிக்கலுக்கே இடமில்லாம போயிருக்கும். நீ ஜோசியக்காரன் சொன்னதை கட்டிகிட்டு அழுவுறே..."

"என்னடா ரொம்ப பேசறே? அந்த ஜோசியக்காரன் யாரோ இல்லடா நாம இப்ப நல்லா இருக்க காரணமான நம்பூதிரி. அவர் பேச்சையா அலட்சியப்படுத்தறே?"

"அக்கா.... நம்பூதிரி சொன்னமாதிரி என் மகன் கூட வாழமுடியாம இந்த கழுதை செத்து தான் போகட்டுமே? என்ன இப்போ?"

"அறிவு கெட்டவனே... அது எனக்கும் தெரியாதா? ஆனா இவ உயிரோட இருக்கறவரை தான் இந்த சொத்தை நாம் ஆண்டு அனுபவிக்க முடியும். இவளுக்கு தப்பா எது நடந்தாலும் அவ்வளவு சொத்தும், மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு போயிடும்டா! அது தெரியும் தானே உனக்கு...?

காளியம்மாள் அப்படி ஒரு அஸ்திரத்தை பிரயோகிக்கவும் தான் அமைதியானான் ஜீவா.

"பொல்லாத உன் புருஷன இவ்வளவு வில்லங்கமாவா சொத்தை எழுதி வைப்பான்? ச்சே...''

ஜீவானந்தம் சலித்துக்கொள்ள அவன் மகன் மதன் அப்போது அங்கு வந்தவனாக "அப்பா... அந்த லாரிகாரர்களை அந்த சப் இன்ஸ்பெக்டர் பிடிச்சிட்டானாம். இப்பதான் போன் வந்தது. ஆஸ்பத்திரில கிடக்கும் போதும் அவங்க சும்மா இல்லாம நம்பள பத்தின அனேக விஷயங்களை அந்த சப் இன்ஸ்பெக்டருகிட்ட சொல்லியிருக்காங்க. குறிப்பா லாரி பின்னால இருந்த திருஷ்டி பொம்மை படம் தான் இதுல பிரதானம்! மதன் சொல்லச் சொல்ல ஜீவாவுக்கு கோபம் அவனையே அடிக்கும் அளவு ஆத்திரமாக மாறிற்று.

"என்னை ஏம்பபா அடிக்கறே?"

"அடிக்காம நிச்சயதார்த்தம் சமயம் நீ ஒழுக்கமா இருந்திருந்தா இப்படி எல்லாம் நடக்குமா?"

"டேய் நடந்து முடிஞ்ச போச்சு இப்ப எதுக்கு? அடுத்து நடக்க வேண்டியத பார். நான் நம்ப நம்பூதிரிகிட்டயே வேற வழி முறை இருக்கான்னு கேக்கறேன். அவருக்கும் ஒரு போனைப் போடு" என்றாள் காளியம்மாள்.

"ஜீவாவும் நம்பூதிரியை தொடர்பு கொள்ள தயாரானான்!

விமான நிலையம்!

ஸ்ரீதேவியின் அண்ணன் மோகன்குமாரும் அம்மா பூரணியும் வெளியே வந்த நிலையில காத்திருந்த டாக்சியில் ஏறினர். பூரணி நொறுங்கிப் போயிருந்தாள். மௌனமாய கண்களில் கண்ணீரோடு இருந்தாள்.

கார் கிளம்பியது! டிரைவர் அட்ரஸ் கேட்க ஸ்ரீதேவி இருக்கும் ஆஸ்பத்திரி பெயரைச்சொன்னான் மோகன்குமார். அப்படியே பூரணியிடம் "அம்மா.... ஸ்ரீதேவி உயிருக்கெல்லாம் ஒரு ஆபத்தும் இல்லம்மா லேசான காயம் தாம்மா....' என்று அவளை சமாதானப்படுத்தப் பார்த்தான்.

"போதுண்டா... எனக்கு தெரியாம அவளை நீ இங்க அனுப்பினதே தப்புடா. இப்பவாவது சித்தர்சாமி சொன்னது அவ்வளவு உண்மைன்னு உனக்கு புரியுதா?"

"புரியுதும்மா... ஏதோ நடந்தது நடந்து போச்சு. விடு! நாம தான் வந்துட்டோமே பதரமா திரும்ப அவளை கூட்டிகிட்டு போயிடுவோம்... நீ தைரியமா இரு?"

"இல்லடா... இனி அவ நம்மகூட வரமாட்டா. வரவும் அவளால முடியாது" பூரணி புதிராக பேசினாள். மோகன் குமாரிடமும் திகைப்பு!

# 31

அன்று

காளியம்மாளின் மாறிய முகமே கிரீடம் கிடைக்கவில்லை என்பதை சொல்லிவிட்டது. நம்பூதிரியிடமும் அதனால் சலனம்! கவனித்தபடி இருந்த ஜீவானந்தம் "அந்த கிரீடம் பற்றிய ரகசியம் இரண்டே பேருக்கு தான் தெரியும் நம்பூதிரி.... ஒண்ணு என் மாமா அடுத்தது அந்த அமுதன்! இதுல என் மாமாவுக்கு உங்க மருந்தால 'தான்' யாருன்னே தெரியாது. மீதி இருக்கறது அமுதன் தான்.

இவன் கிட்ட இருந்து அந்த ரகசியத்தை உங்களால வாங்க முடியுமா?' என்று கேட்கவும் அவனை நான் சந்திக்கும்படி செய்.... என்று ஒரு வரியில முடித்துவிட்டு கிளம்பினார்.

நம்பூதிரியை அதன்பின் காரில ஏற்றி அனுப்பி விட்டு திரும்பி வந்தவன் முன்னால "எப்படி சந்திக்க வைக்கப் போகிறாய்?" என்பது போல பார்த்தாள் காளியம்மாள்.

"என்னக்கா.... அந்த அமுதனும் நம்பூதிரியும் சந்திச்சிக்கறது அவ்வளவு பெருசா என்ன? தேனி இப்ப இங்க நம்ப அடிமையா தானே இருக்கா... அவளுக்கு நம்பூதிரி ஏதோ பூஜை செய்துகிட்டு இருக்கான்னு ஒரு தகவல சொன்னா போதுமே ஓடிவந்து நிப்பாள். அது போதுமே? நாம அவனை பிடிச்சு நிறுத்த ...?

"நீ சொல்றதும் சரிதான். சொதப்பாம சரியா செய். இந்த தடவை அந்த அமுதன்கிட்ட ரகசியத்தை நாம் வாங்கிடணும் அதுக்கப்புறம் அவனை பைத்தியமாக்கி ஊரைச் சுத்தி விடுவோம். அதைப் பார்த்துட்டு என்னை எதிர்க்கவே எல்லாரும் பயப்படணும்."

"ஏக்கா.... நான் தெரியாம தான் கேக்கறேன். அந்த கிரீடம் என்ன ஒரு அரை கிலோ அளவு தங்கமா இருக்குமா?"

"எதுக்கு கேக்கறே?"

"இல்ல ஒரு அரை கிலோ தங்கத்துக்காக இவ்வளவு மெனக்கெடணுமா?"

"அது தங்கத்துக்காக மட்டுமில்ல... அது ஒரு நினைவுச சின்னம்! பத்தாயிரம் வருஷமா இருக்கற கலைப்பொருள். பாண்டிய ராஜா காலத்துல செய்யப்பட்ட அந்த கிரீடம் இதுவரை நூறு தலைக்கு மேல பாத்திடிச்சி! அதப்பத்தி பம்பாய்காரனும் வெளிநாட்டானும் கேள்விப்பட்டா எவ்வளவு கோடின்னாலும் தந்து வாங்கிட்டு போயிடுவாங்க...."

"எவ்வளவு கோடின்னாலும்னா...." ஒரு அஞ்சு கோடி போதுமா?"

"பைத்தியகாரா.... அதைப்பத்தி தெரிஞ்ச ஒரு பம்பாய் சேட் அதுக்கு அம்பது கோடி தர தயாரா இருக்கான்.... போதுமா?"

"ஐய்ய்ய்யோ.... "ஜீவானந்தம் ஐய்யோவை சொன்ன விதமே அபாரமாய் இருந்தது.

"அதை பத்தி என் புருஷன்கிட்ட நானும் எப்படியெப்படி எல்லாமோ கேட்டு பாத்துட்டேன். என்னால் ஒரு தகவலையும் வாங்க முடியல...."

"நம்ப நம்பூதிரிய விட்டு ட்ரை பண்ணி பாத்தா என்ன? இந்த அமுதன்கிட்ட எதுக்கு தொங்கிகிட்டு ...?"

"இப்பதான் நீ சரியான கேள்விய கேட்டுருக்கே. இப்ப அந்த கிரீடம் இருக்கற இடம் அமுதனுக்கு மட்டும் தான் தெரியும். அமுதன்கிட்ட பொறுப்ப ஒப்படைச்ச நிமிஷம் அவன் தான் அதை பாதுகாக்கணும். அவன் அதை எங்க வேணா கொண்டுபோய் பாதுகாத்துக்கலாம். அதை பத்தி அவன் யார்கிட்டயும் சொல்லக்கூடாது. இப்படி ஒரு சத்யப்ரமாணம் எடுத்துகிட்டு தான் எல்லோரும் அதை பாதுகாத்துருக்காங்க. ஒருத்தருக்கு மட்டுமே தெரிஞ்சதா அது இருந்ததாலதான் எவ்வளவோ களவுகள் நடுவுல நடந்தப்ப கூட அதை மட்டும் யாராலையும் களவாட முடியல."

"ஐயயோ அக்கா... இந்த மொத்த சொத்தும் கூட அது ஒண்ணுக்கு ஈடாகாது போல தெரியுதே?"

"ஆமாண்டா... ஆனா கிரீடத்தை கை மாத்தணும்னா அதுக்கு நாம ராஜபரம்பரைங்கற அடையாளம் வேணும். நீ திருடி எடுத்துகிட்டு போய் வித்தா பாதி விலைகூட கிடைக்காது. அதே உன் மாமா ஒரு கூட்டம் போட்டு எல்லா முன்னாலையும் ஏலம் போட்டார்னா உலகம் பூரா இருந்து ஏலம் கேட்க ஆட்கள் வருவாங்க. சட்டப்படி லாபம் வரும். வரியெல்லாம் போனா கூட நமக்கு நிறைய பணம் கிடைக்கும்."

அப்ப சரிக்கா... இந்த அமுதனை விட்டுடக் கூடாதுக்கா, நம்பூதிரி நிச்சயமா அவன் வாயால உண்மைய சொல்ல வைப்பாரு பாரு..."

ஜீவானந்தம் முகத்தில் ஆசை வழிவது நன்றாக தெரிந்தது. அப்போது வேலைக்காரி ஒருத்தி ஓடி வந்து நின்றாள்.

"என்னடி?"

"அம்மா சின்னம்மா...."

"அடிக்கடி வாந்தி எடுக்கறாங்க...."

"அதுக்கென்ன?"

"சமையக்கட்டுக்கு வந்து ஊறுகாய்க்கு வெச்சிருந்த மாங்காயையும் எடுத்து சாப்டாங்க..."

"அப்படியா?" காளியம்மாள முகத்தில அதிர்ச்சி பரவத் தொடங்கியது.

"என்னக்கா?"

"என்னடா எனக்கா நொண்ணைக்கான்னுகிட்டு.... புரியலியா? முழுகாம இருக்காடா அவ...'

"அடக்கொடுமையே.... அதுக்குள்ள வாரிசு உருவாக தொடங்கிடிச்சா? ஆபத்தாச்சேக்கா.... இந்த ஒரு அமுதனையே எப்படி சமாளிக்கறதுன்னு யோசிச்சிகிட்டு இருக்கோம். இதுல இது வேறயா.... ஒண்ணும் கெட்டுப் போயிடலக்கா... நம்பூதிரிகிட்ட சொன்னா இந்த வாரிசை கலைக்க அவரே மருந்து தந்துடுவாரு..."

ஜீவானந்தம் சொன்னது எதுவும் காதில் விழவில்லை காளியம்மாளுக்கு எழுந்து சென்று மறைவாக நின்று தேவி என்ன செய்கிறாள் என்று பார்த்தாள்.

அவளும் மாங்காய் தின்றபடி இருந்தாள். மெல்ல அருகில் சென்றாள், பேச ஆரம்பித்தாள்.

"தேவிக் கண்ணு..."

"சித்தி..."

"என்னடா... வாந்தி மசக்கைன்னு கேள்விப்பட்டேன். சித்திகிட்ட சொல்லமாட்டியா?"

"அது வந்து சித்தி..."

"ஏன் என்ன பாத்து மிரள்றே... பயப்படாதே! நீயே ஒரு குழந்தை இப்ப உன் வயித்துல ஒரு குழந்தை."

"அப்படியா சித்தி?"

"அதுசரி சுமக்கற உனக்கு தெரியல நான் சொல்ல வேண்டியிருக்கு பாரு..."

"அப்ப நான் தாயாகப் போறேனா சித்தி?"

"ஆமாம் இதை முதல்ல உன் புருஷன்கிட்ட சொல்."

"சரி சித்தி..." தேவி ஒரு அடிமை போலவே பதில் சொல்ல காளியம்மாளும் கண்களை உருட்டிக்கொண்டே,

"வாடா வா... உன்கிட்ட எப்படி உண்மையை வரவழைக்கறதுன்னு யோசிச்சிகிட்டிருந்தேன். இப்ப அதுக்கு சரியான வழி கிடைச்சிடிச்சு" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

இன்று

திகைத்த மோகனகுமாரிடம் பூரணி தொடர்ந்து கலக்கமுடன் பேச ஆரம்பித்தாள்

"மோகன் இனி அவளை நாம நம்ம பெண்ணா எங்கேயும் கூட்டிகிட்டு போக முடியாது. அவ ஒரு அதிசயப் பிறப்பு. உனக்கு தான் தெரியுமேடா?"

பூரணி ஞாபகப்படுத்தவும் மோகன்குமாரும் அவள் பிறப்பை ஒருமுறை நினைத்துப் பார்த்தான். 19.9.1991 என்பது தான் அவள் பிறந்தநாள். இந்த நாளை தலைகீழாக திருப்பிப் பார்த்தாலும் அதே நாள்தான் வரும். கணக்கு மாறாது.

ஸ்ரீதேவியின் பிறந்த தேதி மட்டுமல்ல.... அவள் பிறக்கும் போதே இறந்துவிட்டதாக கருதி மூட்டை கட்டித் தந்து விட்டார்கள்.

பூரணி குழந்தையின் சவத்தைப் பார்த்து அழுத அழுகைக்கும் ஒரு அளவில்லை.

இறுதியில சுடுகாட்டுக்கு கொண்டு போய், குழி வெட்டி குழிக்குள்ளும் குழந்தையை வைத்தாயிற்று. ஆனால கைப்பிடி மண் போட்டு குழியை மூடப்போன சமயம் வெடுக்கென்று கால்கள் இழுக்க குழந்தை அழத்தொடங்கியது. குழியை மூடப் போன வெட்டியானே அதிர்ந்துவிட்டான். வேகமா குழிக்குள் கையை விட்டு குழந்தையை தூக்கியவன் முதல் காரியமாக குழந்தையின் இரு கால்களையும் தன் தலையில படும்படி வைத்து வணங்கினான்! பிறகுதான் பேசினான்.

"பிடிங்கசாமி... இது தெய்வக் குழந்தை! இந்த மண்ணுக்கு வந்து குழியில விழுந்த பிறகும் இது எழுந்திருக்குதுன்னா இது சாதாரணமில்ல. என் அனுபவத்துல நான் பாக்கற முதல் விஷயம்

என்றவன் "ருத்ரபூமியில் பிறந்த நீ ருத்ராவதி...." என்று பேரும் இட்டு விட்டான்.

ஆனால் பூரணி குழந்தைக்கு ஸ்ரீதேவி என்று தான் பெயர் வைத்தாள். ஏன் என்று கேட்ட போது ஏனோ தெரியவில்லை... இந்த பெயரே என் மனதில்

விடாமல் தோன்றுகிறது என்றாள்! அதன்பின் ஸ்ரீதேவி வளர்ந்த விதமே பல அதிசயங்கள் கொண்டது தான்.

குழந்தையாக இருக்கும் போதே நன்றாக அலங்கரித்துக் கொள்வாள். அதுமட்டுமல்ல சிறு குழந்தைகளின் படமோ, கேலண்டரோ கண்ணில் பட்டால் வைத்த விழி வாங்கமாட்டாள். மற்ற குழந்தைகள் போல விளையாட்டோ, அழுகையோ எதுவும் கிடையாது. மணி சப்தம் கேட்டால் தானாக கைகளைக் கூப்பிக் கொள்வாள்.

இதெல்லாம் பூரணியை பெரிதும் பாதித்தன. தனக்கு பிறந்திருப்பது சாதாரண குழந்தையல்ல சராசரி குழந்தையல்ல என்று எண்ணச் செய்து விட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்ரீதேவியிடம் ஒரு அபார சக்தி இருந்தது. காய்ச்சலில் ஒருமுறை பூரணி படுத்திருந்த சமயம் ஸ்ரீதேவி அவள் மேல் விழுந்து கொஞ்சி விளையாடினாள். அவள் விளையாட விளையாட பூரணியின் உடம்பில் ஒரு புது சக்தி உருவாகத் தொடங்கியது. சில மணி நேரங்களில் பூரணி பூரணமாக குணமாகி எழுந்து நின்று விட்டாள்.

இப்படி ஸ்ரீதேவியின் பின்னால் இன்னும் எவ்வளவோ அதிசயங்கள்! இதெல்லாம் வெளியே தெரிந்தால் அவளை யாரும் சகஜமாக பார்க்கமாட்டார்கள் என்று பூரணி எதைப்பற்றியும் வெளியே பேசியதில்லை. தன் மூத்த பிள்ளையிடமே அவள் பல விஷயங்களை மறைத்து விட்டது தான் விந்தை.

மோகன்குமாரும் பூரணி சொன்னதை எண்ணிப் பார்த்தபடியே இருக்க அவர்கள் பயணித்த டாக்சி ஆஸ்பத்திரியை அடைந்து விட்டிருந்தது.

இருவரும் இறங்கி ஸ்ரீதேவி கிடக்கும் வார்டு நோக்கி நடந்தனர். ஆஸ்பத்திரிக்கு வெளியே ஜீவாவும், மதனும் தங்கள் ஆட்களை அனுப்பி வேவு பார்க்கும் முயற்சியில் இருந்தனர். அவர்களில் ஒருவன் மதனுக்கு போன் செய்து பூரணியும், மோகன்குமாரும் பதட்டத்தோடு ஆஸ்பத்திரிக்குள் செல்வதை சொல்லி முடித்தான்.

உள்ளே படுக்கையில் சாதாரணமாக இருந்தாள் ஸ்ரீதேவி. பெரிய காயமெல்லாம் இல்லை. சுமதி பூரணி அருகில் தயக்கத்தோடு வந்து நின்றாள்.

ஸ்ரீதேவி அம்மாவையும் அண்ணனையும் பார்க்கவும் பரவசமானாள்.

'அம்மா அண்ணே...' என்று எழுந்து அமர்ந்தாள். "சாரிம்மா... இப்படி எல்லாம் ஆகும்னு நாங்க கொஞ்சம் கூட நினைக்கல. உங்களுக்கு தெரியாம ஸ்ரீதேவியை நான் கூட்டிகிட்டு வந்தது தப்பு தான் என்னை மன்னிச்சிடுங்க" என்று சுமதி சற்று கண் கலங்கினாள்.

"விடும்மா... இனி நடந்ததை பத்தி என்ன பேச்சு. நடக்கப் போறத பேசுவோம்" என்று பூரணி சாதாரணமாக பேசவும் சுமதிக்கு அப்பாடா என்று இருந்தது. அதற்குள் அவள் அம்மா அப்பா அண்ணன் என்று ஒவ்வொருவராக வந்துவிட்டனர்.

"யாருக்கும் பெரிய காயமில்லை. ஆனா அந்த விபத்தை இப்ப நினைச்சாலும் நெஞ்சு நடுங்குது" என்றாள் சுமதியின் அம்மா.

"அது விபத்து தானா? நல்லா தெரியுமா?" என்று மோகன்குமார் இடையிட்டான்.

"இல்லை.... விபத்தில்லை அந்த ஜீவானந்தம் ஆளுங்க வேலை, நிச்சயம் நின்னு போனதை அவங்களால தாங்கிக்க முடியில, நான் இங்க வரவும் தான் அந்த குடும்பம் முரட்டு குடும்பங்கற விஷயமே எங்களுக்கு தெரியும். நல்லவேளை தப்பிட்டோம். அதுக்காக ஸ்ரீதேவிக்கு எவ்வளவு நன்றி வேணாலும் சொல்லலாம். ஸ்ரீதேவி வராட்டி எல்லாம் கெட்டு குட்டிச்சுவராயிருக்கும்."

என்ற சுமதி அண்ணனை எல்லோருமே அதிர்ச்சியும் வியப்புமாக பார்த்தனர். சுச்சிதமாய் அப்போது சப் இன்ஸ்பெக்டர் அமுரதேஸ்வரின் வருகை!

அமுரதேஸ்வரைப் பார்க்கவும் ஸ்ரீதேவியிடமும் ஒரு இனம் புரியாத பரவசம்.

"வாங்க சார்...."

"என்ன.... எல்லாரும் ஒரு மாதிரி செட் ஆயிட்டிங்களா?"

"ஆயிட்டோம் சார்.... இவங்க ஸ்ரீதேவியோட அம்மா அண்ணன்."

"அப்படியா சந்தோஷம்?" என்ற அமுரதேஷ்வர் மோகன்குமார் கைகளை குலுக்கினான். அப்படியே "ஆக்சிடெண்ட் பண்ண நபர்களை பிடிச்சிட்டேன் எவ்வளவு அடிச்சாலும் உண்மையை சொல்ல மாட்டேங்கறாங்க. ஆனா உண்மையை வரவழைச்சு அதையே வாக்கு மூலமா வெச்சு அந்த மதனை அரெஸ்ட் பண்ணாம விடமாட்டேன்."

என்ற அமுரதேஸ்வர் "உங்களுக்கும் போலீஸ் புரொடக்ஷன் போட்ருக்கேன். அதே சமயம் நீங்க இன்னிக்கே கிளம்பாம இங்க இரண்டு நாள் இருந்தா இந்த கேஸ்ல எனக்கு ரொம்ப உதவியா இருக்கும் மதனை அரெஸ்ட் பண்ண உங்க கம்ப்ளைண்ட் ரொம்ப முக்கியம். அதை வெச்சுதான் எ.ப்.ஐ.ஆர் போட்டு தான் ஆக்ஷன் எடுக்க முடியும்" என்று அமுரதேஷ்வர் சொன்ன நொடி புகார் கடிதத்தை தயாராக வைத்திருந்து நீட்டினான் சுமதி அண்ணன் குமார்!

## 32

அன்று

அமுதன் அப்பா ராமலிங்கம் வேலைக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தார். காக்கிபேண்ட் சட்டை என்கிற யூனிஃபார்மில அவரைப் பார்த்த அமுதனுக்கு அதிர்ச்சி.

"என்னப்பா இது புது கோலம்?"

"யூனிஃபார்ம்ப்பா... எஜமானியம்மா இனி யூனிஃபார்மோட தான் இருக்கணும்னு சொல்லிட்டாங்க... அவங்களே வாங்கியும் தந்துட்டாங்க.

"மண்ணாங்கட்டி.... அப்பா இப்ப நீங்க அவங்க சம்மந்தி. வீட்டு வேலைக்கார டிரைவர் இல்லை...."

"சம்மந்தியா... நானா? அதெல்லாம் கனவுப்பா... இது தான் நமக்கு சாஸ்வதம்."

"கனவா? அப்பா எனக்கு கல்யாணம் ஆகி நாங்க வாழத் தொடங்கிட்டோம். நடந்திருக்கிறது நிஜம். கனவல்ல. முதல்ல இந்த உடுப்பை கழட்டிட்டு இங்க வேற வேலை பாருங்க நீங்க இனி டிரைவர் கிடையாது. என்னோட அப்பா.

அமுதன் சொன்னது காதிலேயே விழாதவர் போல அவர் புறப்படத் தொடங்க அமுதன் அவர் முன் சென்று கோபமாக கத்தத் தொடங்கினான்.

"உங்களுக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி கொஞ்சம் கூட சுயமரியாதை இல்லாம முட்டாள்தனமா நடந்துக்கிறீங்க?. நான் காதலிச்சது, உங்க முதலாளி உங்ககிட்ட வந்து என்ன மாப்ளையா கேட்டு கெஞ்சினது எல்லாம் உங்களுக்கு மறந்து போச்சா? நான் இப்ப பாளையக்கார வீட்டு மாப்ளை. அவங்க கௌரவச் சொத்தை பாதுகாக்கற காவல்காரன். கௌரவச் சொத்துங்கற அந்த கிரீடத்தை எடுத்து தலைல வெச்சிகிட்டு நான் வந்தா இந்த ஊர் மாவட்ட கலெக்டர் கூட எனக்கு கட்டுப்பட்டு நடந்து கிட்டாகணும்.

ஜமீன் ஒழிப்பு சட்டத்துல அதிகாரத்தை தான் பறிமுதல் செய்தாங்க. மரியாதையை இல்லை.... இப்பவும் மைசூர் மகா ராஜாவுக்கு கர்நாடகா சட்டசபைல ஒரு தனி மரியாதை உண்டு. அவர் சட்ட சபைக்கு வந்தா எல்லாரும் எழுந்து நிக்கணும். கிட்டதட்ட நானும் அப்படி தான். அப்படிப்பட்ட என்னோட அப்பாவான நீங்க இப்படி காக்கி சட்டையை போட்டுகிட்டு மரியாதையா நடந்தப்பட வேண்டிய இடத்துக்கே வேலைக்கு போனா இந்த ஊர் உலகம் என்ன நினைக்கும்?

"இதுக்கு செத்துடலாமேப்பா?" வெடித்து எழுந்த அமுதனை ராமலிங்கம் கண்கள் கலங்கப் பார்த்தார்.

"அப்பா என்ன சொல்லிட்டேன்னு இப்படி கலங்கி நிக்கிறீங்க?"

"செத்துடலாம்னு சொன்னே பார்... அதாம்பா சரி. நானும் உன் அம்மாவும் அதை பத்தி பல தடவை நினைச்சிட்டோம். ஆனா உன்னை விட்டுட்டு சாக மனசு வரலைப்பா...."

அவர் அப்படி சொல்லவும் இடிந்து போன அமுதன் "ஐயோ அப்பா.... நான் ஒரு பேச்சுக்கு சொன்னேம்பா" என்று அவரை கட்டிக்கொண்டான்.

"அமுதா.... இப்பவும் சொல்றேன், உனக்கு பல விஷயங்கள் தெரியாதுப்பா! நானும் உங்கம்மாவும் அந்த காளியம்மாளை பார்த்து ரொம்பவே பயப்படறோம். அவ சாதாரண பொம்பள இல்லை. ராட்சஸி, புராணங்கள்ள

தான் ராட்சஸி வரணும்னு இல்லை. நம்ப வாழ்க்கையிலையும் அவங்க இருக்கறதுக்கு அவ பெரிய உதாரணம்.

இந்த உலகத்தையே நமக்கு தருவதா சொன்னாலும் நாம் சில கோடுகளை தாண்ட யோசிப்போம். ஆனா அவ அற்பமான விஷயத்துக்கு கூட எதையும் செய்வா. பச்சையா சொல்லணும்னா அம்மணமா நடுத்தெருவுல நடந்தா கோடி ரூபா கிடைக்கும்னா அவ நடப்பாப்பா. அவ அப்படிப்பட்டவ...."

"அப்பா எனக்கும் இதெல்லாம் தெரியும்ப்பா.... அதுக்காக அவளுக்கு பயந்து இப்படியா வாழறது?"

"என்னப்பா பண்ண? நான் இப்படி அவளுக்கு கட்டுப்பட்டு நடக்கறது ஒரு நடிப்புப்பா.... இப்படி நடிக்கறதால தான் அந்த வீட்ல நான் இருக்க முடியுது. அங்க நடக்கறதையும் கவனிக்க முடியுது. குறிப்பா பெரியவரை நான் கவனிக்கறது தெரியாம கவனிச்சுகிட்டு இருக்கேன். எனக்கு தோதா உங்கம்மாவும் நடந்துக்கறா ..."

ராமலிங்கம் சொல்லச் சொல்ல அமுதனிடம் ஒரு மெலலிய பிரமிப்பு

"அப்பா என்னை மன்னிச்சிடுங்க.... நான் உங்களையும் அவ ஏதோ பண்ணிட்டதா நினைச்சிட்டேன்.... ஆனா நீங்க இப்படி ஒரு திட்டத்தோட இருக்கறத நினைச்சா எனக்கு பிரமிப்பா இருக்கு. ஆனாலும் நான் உங்ககிட்ட ஒண்ணு கேட்கணும் என்னதான் அந்த காளியம்மா ராட்சஸியோ இருந்தாலும் அது எப்படிப்பா பெரியவரை இப்படி மடக்கி அடிமைப்படுத்த முடியும்? தேவியும் அப்படியே மாறி இப்ப அவ பேச்சை தானே கேக்கறா?"

"அது தாம்பா பெரிய ரகசியம். அதை கண்டுபிடிக்கற வரை நான் இப்படித்தான் இருக்கணும். நீயும் ஜாக்ரதையா இருக்கணும்."

"அது சம்மந்தமா நான்' அருணாசல சித்தர்கிட்ட கூட பேசினேம்ப்பா... அவர் அதை ஒரு கெட்ட விஷயமா நினைக்கறார். பேய் பிசாசுங்கற விஷயமா இல்லை இது வேற ரகமான்னு தெரியல. காளியம்மாள் பின்னால் ஒரு நம்பூதிரி இருக்கான். அவன் செய்யற வேலை.'

"எனக்கும் தெரியும் அமுதா, காளியம்மாளுக்கு கோவில் பிடிக்காது சுடுகாடு பிடிக்கும். சுத்தம் பிடிக்காது குப்பை பிடிக்கும். அவளே ஒரு அசுர ஜென்மம் தானே?'

"நாம இப்படி பேசிகிட்டிருந்தா ஆச்சா... உறுதியா எதாவது செய்யணும் இல்லையா?"'

"நமக்கு அருணாசல சித்தர்தான் உதவி செய்யணும். அந்த நம்பூதிரியை அவர் அடக்கிட்டா எல்லாம் சரியாயிடும்."

"சரியா சொன்னீங்க.... நான் இப்பவே அவரை பாக்கறேன். அவர் கால்ல விழுந்து கெஞ்சறேன். அவரால் தான் நம்பூதிரிய அடக்க முடியுமனும் சொல்றேன்....'

அமுதன் சொன்ன சூட்டோடு கிளம்பினார் அப்போது பெரிய வீட்டில இருந்து ஒருவன் வாசலில் தென்பட்டான் அமுதன் அவனை நெருங்கவும் "உங்களை வீட்டுக்கு வரச்சொன்னாங்க. தேவிம்மா முழுசாம இருக்காங்களாம்" என்றான். அதைக்கேட்ட நொடி அமுதன், ராமலிங்கம் இருவருக்குமே ஒரு பரவசம்.

அவனோ திரும்பித் திரும்பி பார்த்த படி சென்றான். "அப்பா நான் அப்பாவாக போறேம்பா...." என்றவனை கட்டிக் கொண்டார் ராமலிங்கம். அம்மாவும் ஓடி வந்து "வாப்பா இப்பவே போய் பார்ப்போம். பேரு காலம்

வரை ஜாக்ரதையா பாத்துக்கனும்ப்பா" என்று தாய்மை கொப்பளிக்க பேசினாள். பேச்சோடு மூவரும் புறப்பட்டு விட்டனர்.

காளியம்மாள் முன் நின்றிருந்தான் அந்த வேலைக்காரன். "என்னடா அவனை வரச் சொன்னியா?"

"சொன்னேம்மா .. கூடுதலா சில விஷயங்களும் காதுல விழுந்துச்சு..."

"என்னடா?"

"அந்த ராமலிங்கம் உங்களுக்கு கட்டுப்பட்ட மாதிரி நடிக்கிறாருமமா. அவங்க அருணாசல சித்தரை விட்டு நம்பூதிரியை விரட்டி அடிக்க போறாங்களாமா?"

வேலைக்காரன் ஒட்டு கேட்டு சொன்னது காளியம்மாளை பிரளச் செய்து விட்டது!

இன்று

மோகன்குமார் புகார் கடிதத்தை நீட்டிய நொடி அமுர்தேஷ்வரிடம் ஒரு புன்னகை.

"ரொம்பவே வேகமா இருக்கீங்க குட்" என்று பாராட்டவும் செய்தான். ஸ்ரீதேவியின அம்மா அவளை மிக நெருககமாக பற்றிககொணடிருந்தாள. அதில் பாசம் மட்டுமல்ல ஒரு வித பயமும் தெரிந்தது. அதை அமுர்தேஷவராலும் உணர முடிந்தது.

"பயப்படாம மனதரியமா இருஙக. எனக்கெனனவோ அவஙககிட்ட நிறைய தப்புகள் இருக்கற மாதிரி தெரியுது. எனக்கு முன்னால் இருந்தவங்க அடிமையா இருநதுட்டு போயிருக்கலாம். நான போக மாட்டேன். ரெணடுல ஒண்ணு பாக்கறேன" என்று ஒரு உறுதியோடு அவன சொல்லவும் மோகன்குமாருக்கும் சற்று நிம்மதியாக இருந்தது.

சுமதியும் அவளை சார்ந்தவர்களும் ஒரு மாதிரி பார்த்தனர். அந்த பார்வைக்கு பொருள் புரிந்தது.

"நீங்க தாராளமா ஊருக்கு போகலாம், இவங்க மட்டும் இருக்கட்டும்" என்றான். சுமதி உடனேயே ஸ்ரீதேவியை தான பார்த்தாள.

"நான வேணுமனா உன் கூட இருக்கட்டுமா?" என்றும கேட்டாள.

"அவசியமில்லை.... நீங்க கிளம்புங்க.... இவங்களுக்கு நான் இருக்கேன்" என்றான் அமுர்தேஷவர். நான இருக்கேன என்று அவன் சொன்னதில ஒரு அசாதய அழுத்தம. அதை மோகன குமாரும் கவனித்தான.

சுமதியும அவள் குடும்பத்தவர்களும் காரிலேயே சென்னை செலல தீர்மானித்து புறப்பட்டு விட்டனர். அமுர்தேஸ்வரும் புறப்பட்டான.

போலீஸ் ஸ்டேஷன!

கைது செய்யப்பட்டிருந்த அந்த இரண்டு பேரும் அழிச்சாட்டியம் பண்ணிக் கொண்டிருந்தனர்.

"சார். நடந்தது ஆக்சிடென்ட் சார் நாங்க வேணும்னுல்லாம் பண்ணல. நீங்க சொல்ற அந்த மதனை யாருன்னே எங்களுக்கு தெரியாது..." என்று சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லிக் கொணடிருகக இருவரையும் லாக்அப்பில வைத்து கதவை பூட்டினார் என்கொயரியில் ஈடுபட்டிருந்த கான்ஸ்டபிள்! அப்போது ஒரு முரட்டு மனிதனை அமுர்தேஷ்வர் கையில விலஙகோடு அழைத்து வந்திருநதான். கானஸ்டபிளும் அவனை ஆச்சரியமாக பாத்தவராக "யார் சார் இவன்?" என்று கேட்க "வழில

ரவுடித்தனம் பண்ணிகிட்டிருந்தான். ஒருத்தனை வெட்டவே போயிட்டான். அதான் கை விலங்கு போடும்படி ஆயிடிச்சு. உள்ள தள்ளி பூட்டுய்யா மற்ற விஷயங்களை அப்புறமா பேசிக்கலாம். நான் கொஞ்சம் வெளிய போயிட்டு வரேன்" என்று அமுரதேஷ்வர் வந்த வேகத்தில், கிளம்பினான்.

கான்ஸ்டபிளும் அந்த விலங்கிட்ட ரவுடியை லாக் அப்பில் உள்ளே தள்ளி கதவை பூட்டினார்.

உள்ளே ஆக்சிடெண்ட் என்று அழிச்சாட்டியம் செய்தபடி இருக்கும் அந்த இரண்டு பேரும் இருக்க, புதிதாய் நுழைந்தவன் இருவரையும் உற்றுப் பார்த்தான்.

"என்ன பாக்கறே?"

"நீ மாரி தானே.... நீ மணிதானே?"

"அட.... எங்க பேர் உனக்கு எப்படி தெரியும்?"

"பேர் மட்டுமல்ல.... நீங்க எதுக்காக அரெஸ்ட் ஆகி உள்ள இருக்கீங்கனும் தெரியும். மதன் சார் ஆளுங்க தானே நீங்க?"

"மதன் சாரையும் உனக்கு தெரியுமா"

"மெல்லப் பேசு.... மதன் சார் அனுப்பி தான் நான் வந்துருக்கேன். சொல்லப் போனா நான் வந்துருக்கறதே உங்களோடு பேசத்தான். அதுக்கு தான் இந்த எஸ்.ஐ வர்ற வழியில ரவுடித்தனம் பண்ணேன். அவனும் பிடிச்சு உள்ள போட்டுட்டான். பாவிப்பய கைல விலங்கு போட்டுட்டான். இதான் எனக்கு இப்ப பெரிய இடைஞ்சல்."

"சரி சரி... எதுக்கு வந்தே, அதை சொல..."

"நீங்க மதன் சாரை போட்டுக் கொடுத்துடுவீங்களா..."

"எங்கள என்ன கேடு கெட்ட ராத்தரப் பசங்கன்னு நினைச்சுட்டியா? உசுரே போனாலும் நாங்க யாரையும் காட்டித்தர மாட்டோம்...."

"சபாஷ்... இந்த தைரியமும், விசுவாசமும் தான் வேணும். உங்களுக்கு என்ன நடந்தாலும் சரி... அண்ணன் பாத்துக்குவார் மதன் சார் பத்தியோ, அவங்க அப்பா ஜீவானந்தம் பத்தியோ மூச்சு கூட விடக்கூடாது."

"நாங்க மூச்சு விடமாட்டோம். அதே சமயம் அண்ணன்கிட்ட சொல்லி எங்க குடும்பத்துக்கு எதாவது பண்ணச் சொல்லு"

"நிச்சயம் சொல்றேன்..."

"ஆமா... நீ எப்படி வெளிய போவே...."

"அதுவா.... இப்ப பார்...." அந்த விலங்கு பூட்டின ரவுடி விசில் அடித்தான். அடுத்த நொடி கதவு திறந்தது. கான்ஸ்டபிளும் அமுரதேஷ்வரும் வந்து நின்றனர். அமுரதேஷ்வர் ரவுடியின் கை விலங்கை அவிழ்த்தவராக "சபாஷ் லாரன்ஸ்.... உங்க கடமையை நல்ல படியா செய்துட்டீங்க..." என்று பாராட்டினார். அடுத்த நொடியே அந்த மணியும், மாரியும் பதற ஆரம்பித்தனர்.

"அடிச்சு கேட்டப்ப சொல்லாத உண்மையை எப்படி இவரை அனுப்பி வாங்கினேன் பாத்தீங்களா?" என்று அமுரதேஷ்வர் கேட்டான்.

"இல்ல... இதை நாங்க ஒத்துக்க மாட்டோம். கோர்ட்ல நாங்க நீங்க சித்ரவதை செய்து மதன் சார் பேரை சொல்லச் சொன்னதா சொல்வோம்" என்று எகிறிக் குதித்தான் மணி.

"ஆமாம்... நாங்க அப்படியெல்லாம் உங்கிட்ட சிக்கிட மாட்டோம்" என்றான் மாரி. அமுதேஷ்வர் அந்த லாக் அப்பின் மேல் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி. கேமராவை காட்டவும் இருவரிடமும் பலத்த திகைப்பு!

## 33

அன்று

காளியம்மாள் வேலைக்காரன் சொன்னதைக் கேட்டு கோபத்துடன் யோசிக்கத் தொடங்கிய வேளை ஜீவானந்தமும் வந்து சேர்ந்தான்.

"என்னக்கா யோசனை பலமா இருக்கு?"

"பலமாத் தாண்டா யோசிக்கிறேன். இந்த ராமலிங்கம் நமக்கு கட்டுப்பட்ட மாதிரி நடக்கவும் பயந்து வழிக்கு வந்துட்டான்னு நினைச்சேன். அது பெரிய தப்பா போச்சு."

"எதை வெச்சு சொல்றே?"

"அவன் பயந்த மாதிரி நடிக்கிறாண்டா..." என்று ஆரம்பித்தவள் தன் வேலைக்காரன் ஒட்டு கேட்டுவிட்டு வந்து சொன்னதை அப்படியே ஒப்புவித்தாள். ஜீவா முகமும் சிவந்து போய் நிறம் மாறத்தொடங்கியது.

"அந்த நாய்க்கு ஒரு பாடம் கற்பிக்கணும்டா"

"பாடமாவது கீடமாவது பரலோகத்துக்கே அனுப்பினா தான் நாம நிம்மதியா இருக்க முடியும்."

"என்னடா சொல்றே?"

"விடுக்கா... மூணு பேரையும் போட்டு தள்ளிட்றேன்"

"இரண்டு பேரன்னு சொல்லு."

"இரண்டு பேரா?"

"பின்னே.... அமுதன உயிரோட இருக்கனும். அவனுக்கு நான் பரம்பரை கிரீடம் இருக்கற இடம் தெரியும். அதை நாம் அடையறவரை அவன் உயிரோட இருந்தே தீரணும்."

"அது சரி.... இங்க ஒரு வாரிசு வேற உருவாயிடிச்சே.... என்ன செய்யறது?"

"கருவுலையும் அழிக்கலாம். அவளோடையும் சேர்த்து அழிக்கலாம். ஆனா இப்ப எதையும் செய்யக்கூடாது."

"ஏன்?"

"நம்மை எல்லாரும் வெளிய இருந்து பாக்கறது தெரியாம பாத்துகிட்டு இருக்காங்க. இவர் குடிகாரனா மாறி முடங்கிக் கிடக்கறதை யாரும் நம்ப தயாரா இல்லை. நான் தான் ஏதோ செய்துட்டேன்னு ஒரு பலமான பேச்சு இருக்கு...."

அது உண்மை தானேக்கா...

"என்னடா நீயும் கேலி பன்றியா?"

"ஜாலிக்கு சொன்னேன்கா. அப்ப என்ன செய்யப் போறே?"

"சொல்றேன். நான் சொல்றவரை நீ கொஞ்சம் பொறுமையா இருந்து அடக்கமா நடந்துக்கோ. இப்ப இவ முழுகாம இருக்கறதால அது சம்மந்தமா வளைகாப்பு, சீமந்தம்னு பல விஷயங்கள் இருக்கு. இதை எல்லாம் நடக்க விடணும். நடக்க விட்டாதான் ஊரும் நம்பும், குழந்தையும் நல்ல படியா பொறக்கட்டும். அப்புறம் வெச்சிக்கறேன் என் கச்சேரியை...."

"வாரிசை வளர விடறது சரியாக்கா.... கருவுலயே அழிச்சாதானே அது நமக்கு நல்லது?"

"திரும்பத்திரும்ப அதையே சொல்லாதே. நான் அப்படிதான் நடந்துக்குவேன்னு எல்லாரும் நினைச்சிகிட்டிருக்காங்க. அவங்க கண்ணுல மண்ணைத் தூவணும்."

"நீ இப்படி ஊருக்கு பயப்படறது எனக்கு பெரிய ஆச்சரியமா இருக்குக்கா."

"பயமா? எனக்கா? இதெல்லாம் நடிப்புடா...."

"அது சரிக்கா... இந்த நடிப்பு கூட எதுக்கு.... யாரால நம்மை என்ன செய்ய முடியும்?"

"போடா முட்டாள். இது வெறும் சொத்து இல்லடா.... ஜமீன் சொத்து குறிப்பா அந்த கிரீடம் பல தலைமுறை கண்டது. அதை நாம விக்கறதுக்கும், ஜமீன் வாரிசே விக்கறதுக்கும் நிறைய வித்யாசம் உண்டு. நாம களளத்தனமா தான் எதையும் செய்ய முடியும். ஆனா வாரிசா இருந்தால் நேரா எதையும் செய்யலாம்."

"எல்லாம் சரி.... ஆனா எந்த வாரிசு நம்ப பேச்சு கேட்கும்? அமுதன் நம்மை அடக்க நினைக்கறவன் தானே?"

"அவனை அடக்கி அவன் நமக்கு அடக்கி நடக்க செய்யறது தான் என் திட்டம். அவன் அந்த சித்தன் கூட சேர்ந்து நம்பூதிரியை எதிர்த்தா அது நமக்கு நல்லதில்ல."

"நம்பூதிரியும் சித்தரும் மோதினா அப்ப நம்பூதிரி தோத்துடுவாரா?"

"தெரியாது. சித்தனை சாதாரணமா மட்டும் எடை போட்டுடக் கூடாது...."

"சரி முடிவா என்ன செய்யப்போறே?"

"இப்போதைக்கு நாம் அடக்கி வாசிக்கனும். குழந்தை நல்ல விதமா பொறக்கற வரை நமக்கு எந்த வேலையும் இல்லை அப்புறம் பார் கச்சேரியை..."

காளியம்மாள் தானொரு புத்திசாலியும் கூட என்பது போல் திட்டமிட காரில் ராமலிங்கமும் மனைவியும் அமுதனும் வந்தனர்.

கை கட்டிக்கொண்டு வந்தார ராமலிங்கம். அமுதன் அம்மா கை நிறைய பூ பழம் என்று வாங்கி அதை ஒரு தட்டில வைத்து எடுத்து வந்தாள். அமுதன் கூடவே படு மிடுக்காக வந்தான்.

"வாங்க சம்பந்தி வாங்க..." என்று காளியம்மாள் அவர்களுக்கு முதலிலேயே அதிர்ச்சி அளித்தாள்.

ராமலிங்கம் திணறிவிட்டார்.

"என்ன பாக்கறீங்க... என்ன வாரிசு வரப் போகுதுன்ன உடனேயே ஒரு பூரிப்பா.... கைல பூ பழமெல்லாம் பலமா இருக்கு?"

"ஒரு முறைன்னு ஒண்ணு இருக்குங்களே..."

"ஆமாமா... உக்காருங்க! தேவி.... இங்க பார் யார் வந்துருக்காங்கன்னு..."

காளியம்மாள் குரல தேவியை இழுத்து வந்து நிறுத்தியது. அவளிடம் இனம் புரியாத பயம். அமுதன அம்மாவான அன்னபூரணி தேவியை பார்த்த மாத்திரத்தில ஓடிப்போய கட்டிக்கொண்டாள். அமுதன் காளியம்மாளையே பார்த்தபடி இருந்தான.

அவளும் அவனை கவனித்தவளாக "என்ன மாப்ளை அப்படி பாக்கறீங்க... உக்காருங்க விட்டு மாப்ளை இப்படி நின்னுகிட்டிருந்தா எனக்குல்ல கால் வலிக்கும்?" என்று சிணுங்கினாள்.

காளியம்மாள் புதிதாய் ஒரு நாடகத்தை துவக்கி விட்டதை அந்த நொடியே புரிந்து கொண்டுவிட்டான் அமுதன்.

"அம்மா... அப்பா... நீங்க இருங்க. நான் கொஞ்ச நேரத்துல வந்துடறேன்..." என்று காளியம்மாள் சற்றும் எதிர்பாராத நிலையில வெளியேறியவன் காரைக் கிளப்பிக் கொண்டு அருணாசல சித்தரைப் பார்க்கச் சென்றான்!

இன்று

மாரி, மணி என்கிற அந்த இரண்டு பேரும் கேமராவைப் பார்த்து மிரளத் தொடங்கவும் இரண்டு போலீசார கையில பெரிய லத்தியோடு உள்ளே நுழைந்தனர். கூடவே ஒருவர் சட்டி நிறைய கருப்பாய் ஏதோ எண்ணெய் போல் ஒன்றைக் கொண்டு வந்தார். அந்த எண்ணெயைக் கொண்டு லத்தியை நனைக்க ஆரம்பிக்கவுமே மாரிக்கும் மணிக்கும் புரிந்துவிட்டது. அப்படி எண்ணெயைத் தடவி அடித்தால் அடித்த தடயமே தெரியாது. அதே சமயம் உள்ளே சதை நிர்மூலமாகிப் போகும்.

"சார்... வேண்டாம் சார் நாங்க என்ன நடந்ததுன்னு உண்மைய சொல்லிட்டறோம் சார். மதன் தான் சார் எங்களுக்கு பணம் கொடுத்து அந்த கார் மேல மோதி ஆக்சிடெண்ட் பண்ணச் சொன்னாரு..." என்று சரண்டராகி விட்டனர்.

அமுதேஷ்வர் அதைக் கேட்டபடியே பக்கத்தில் இருந்த கான்ஸ்டபிளைப் பார்க்க அவர் தன் காஸ்ட்லியான செல்போனில் அவர்களை பேசச்சொல்லி அப்படியே பதிவு செய்து கொள்ளத் தொடங்கினார்.

"பாழாப் போன இந்த செல்போன் வந்ததுல இருந்தே இம்சை தான் சார்.... இது இருந்தாலும் தொல்லை இல்லாட்டியும் தொல்லைன்னு ஆயிப்போச்சு. கோர்ட்டுல பல்டி அடிக்கற சோலியே இப்ப யார்கிட்டயும் இல்லை. நாங்களும் வசமா மாட்டுவோம்...." என்றான் மாரி.

அமுதேஷ்வர் முதல் கட்டமாக வெற்றி பெற்றதில் மகிழ்ந்தவனாக கான்ஸ்டபிளிடம் "அதை அப்படியே என் செல்போனுக்கு ஃபார்வர்ட் பண்ணுங்க" என்றிட அவரும் தலையசைத்தார். அடுத்த நிமிடமே அமுதேஷ்வர் ஜீப் மதனை அரெஸ்ட் பண்ண அவன் பங்களா நோக்கித்தான் பறப்பட்டது!

காளியம்மாள் வெற்றிலை போட்டபடி இருக்க, ஜீவானந்தம் யாருடனோ போனில் பேசிக்கொண்டிருக்க புயல் போல வந்த அமுதேஷ்வரைப் பார்த்து எல்லோருமே மிரண்டனர்.

"அடடே சப் இன்ஸ்பெக்டரா.... வாங்க, வாங்க...." என்று காளியம்மாள் யாரோ உறவுக்காரரை அழைப்பது போல் அழைத்தாள் அமுதேஷ்வர் அவளை முறைக்க ஜீவானந்தமும் வாங்க சார்.... எங்க இவ்வளவு தூரம்?" என்று இயல்பாக கேட்டான் துளிகூட பயமோ பதட்டமோ இல்லை.

"நீங்க தான் ஜீவானந்தமா?"

"ஆமாம்"

"எங்க உங்க மகன்?"

"என் மகனா.... எதுக்கு?"

"மத்திய அரசு மகா யோக்யர்களுக்குன்னு விருது கொடுக்கப் போகுதாம். அந்த வகைல முதல் யோக்யன் உங்க மகன் தான் அதான் போலீஸ் பந்தோபஸ்தோட கூட்டிகிட்டு போக வந்துருக்கேன்."

"என்ன சார்.... கிண்டலா?"

"சேச்சே ... உங்கள் கிண்டலடிக்கறதுக்கு நான் யார் சார நான் சீரியசா தான் சொல்றேன்."

"வேண்டாம் சப் இன்ஸ்பெக்டர் சார். நான் ரொம்ப மோசமானவன்."

"பரவாலலியே.... நான் கேக்கறதுக்கே இடமில்லாதபடி உண்மையை ஒத்துகிட்டீங்களே....?"

"திரும்பவும் சொல்றேன், என் வழில ஒண்ணு உள்ளடக்கமா இருங்க இல்லை ஒதுங்கி இருங்க.... மாசம் இரண்டு மூணுன்னு தானா தேடிவரும். என்னை அசைக்க பாக்க ஆசைப்பட்டா அது உங்களை ரொம்பவே பாதிச்சிடும்."

"நீ முதல்ல பாத்து பேசு. என் செல்போன் ஆன்ல இருக்கு. உன் பேச்சு போக்கு எல்லாம் ரிக்கார்ட் ஆனபடியே இப்ப என் டிபார்ட்மெண்ட் கண்ட்ரோல் போர்டுக்கு போயகிட்டிருக்கு."

அமுதேஷ்வர் கண்ட்ரோல் போர்டு எனவும் கதி கலங்கத் தொடங்கியது ஜீவானந்தத்துக்கு.

"அட என்ன சார்.... இப்படி கோவிக்கிறீங்க. நான் இப்ப என்ன செய்யணும்னு மட்டும் சொல்லுங்க.... முதல்ல உக்காருங்க."

"உக்கார வரலை- உன் மகனை அரெஸ்ட் பண்ண வந்துருக்கேன்."

"என்ன தப்பு பண்ணான் அப்படி?"

"உனக்கு எதுவுமே தெரியாதுல்ல.... நான் சொன்னா தான் தெரியும் அப்படி தானே?"

"ஏட்டிக்கு போட்டியாவே பேசினா எப்படி சார். அவன் செஞ்ச தப்பை முதல்ல சொல்லுங்க சார்..."

"சொல்றதென்ன கண்ணாலயே பார்..." என்று தன் செல்போனை ஆன் செய்தார். மணியும் மாரியும் கொடுத்த வாக்கு மூலம் ஓடத்தொடங்கியது. ஜீவானந்தத்திடமும் பலத்த மாற்றம் ஆனால் காளியம்மாள் அசரவில்லை

"ஏய போலீசு... நீ இவங்கள அடிச்சு என் பேரனுக்கு எதிரா வாக்குமூலம் வாங்கிட்டு வந்து எங்கள மிரட்றியா?" என்று ஆரம்பித்தாள். அடுத்த நொடியே அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை காளியம்மாள் கதி கலங்கிப்போனாள்

"ஏய்..." என்று பாய்ந்து வந்த ஜீவானந்தத்தையும் ஒரு குத்து விட ஜீவானந்தம் சுருண்டு விழுந்தான்.

அவ்வளவுத் தான்!

அடியாட்கள் விறுவிறுவென்று சுற்றி வளைக்க ஆரம்பித்து விட்டனர். அமுதேஷ்வர் தன் கைத்துப்பாக்கியை எடுக்கவும் அந்த கை மேலேயே ஒருவன் விழுந்து அதை தட்டிவிட்டான்.

அதே வேகத்தில நாலுபேர பாய்ந்து வந்து கையை பின்னால் வளைத்துப் பிடித்து கட்டதொடங்கினா.

"டேய்... வேண்டாம். தப்பு பண்றீங்கடா..."

"யார இல்லன்னா.... அதான் எங்க தொழிலே அது இப்ப தான் உனக்கு தெரியுதா?" என்ற ஜீவானந்தம் அருகே வந்து அமுதேஷ்வர் கன்னத்தில் மாறி மாறி அறையத் தொடங்கினான்.

"எங்கக்கா மேலய கை வெச்சே.... இப்ப பாத்தியா? ஒரு அறைக்கு பத்து அறை... நான் எல்லா விஷயத்துலயுமே இப்படி தான்... உனக்கென்ன ஹீரோங்கற நினைப்பா...? ஹீரோ சினிமால மட்டும் தான் ஜெயிப்பான்.... ஆனா யதார்த்த வாழ்க்கையில வில்லங்க தான் எப்பவும் டாப்! இது தெரியல்லியே உனக்கு....?

ஜீவானந்தம் டயலாக்கெல்லாம் பேசினான். அப்போது யாரும் எதிர்பாராத விதமாக உள்ளேயே அடக்கி வைக்கப்பட்டிருந்த மாதங்கி என்கிற தேவியின் பெண் அழுது கொண்டே அங்கே வந்தாள். அவள் பின்னாலேயே அவளை பிடிக்க முனைந்தபடி ஒருத்தி

மாதங்கியை பார்க்கவும் அமுதேஷ்வரிடம் ஒரு இனம் புரியாத சிலிர்ப்பு. அவளும் ஓடி வந்த வேகத்தில் அவன் மேல் மோதி தான் நின்றாள். மாதங்கிக்கு அவனைப் பார்த்த உடன் அழுகை நின்று போனது.

"ஏய்... இவ எங்க வந்தா இழுத்துகிட்டு போ இத..." என்று ஜீவானந்தமும் கத்த மாதங்கியை இழுத்துச் சென்றனர். அமுதேஷ்வருக்குள்ளோ தன் தோளிலிருக்கும் ஒரு குழந்தையை ஒருவர் வலுக்கட்டாயமாக பிடுங்கிச் செல்வது போல ஒரு உணர்வு!

## 34

அன்று

திருப்பரங்குன்ற மலை தென்றல் வீசிக் கிடந்தது.

உச்சியில் காசி விசுவநாதர் கோவில். கோவிலை ஒட்டி ஒரு நீர்ச்சுனை! மச்சமுனி என்னும் சித்தர் அதில் வாசம் செய்வதாக ஒரு நம்பிக்கை.... மீன்

வடிவில் அக்குளத்தில் வாசம் செய்யும் அவரை தரிசனம் செய்வதே ஒரு பெரிய விஷயமாக எல்லோரும் சொல்வார்கள்.

அப்படி தரிசனம் செய்யும் போது என்ன நினைக்கிறோமோ அது அப்படியே நடந்து விடும் என்பதும் நம்பிக்கை. அருணாசல சித்தர் கூட அந்த சுனையை ஒட்டித் தான் உட்கார்ந்திருந்தார். அங்கே தான் அவர் இருக்கக் கூடும் என்கிற நம்பிக்கையோடு வந்த அமுதனுக்கு அவரைப் பார்க்கவும் அப்பாடா என்று இருந்தது.

"வாடா தம்பி..." என்று அருணாசல சித்தரும் வரவேற்றார்.

"சாமி.... எங்க உங்களை பாக்காம போயிடுவேனோன்னு பயந்துகிட்டே வந்தேன் சாமி...."

"கழுத கெட்டா குட்டிச்சுவரு.... எனக்கு இந்த மலை... அதுல இந்த இடம். நா எங்க போயிடப் போறேன்?"

"எங்கயும் போக வேண்டாம். நீங்க பாட்டும் உங்கள் மறந்து நிஷ்டைல உக்காந்துட்டா என்ன பண்றது?

"என்னன்னு தெரியலடா..... என்னால இந்த மலைல முன்ன மாதிரி நிஷ்டைல நாள் கணக்குல வாரக்கணக்குல உட்கார முடியறது இல்லை. மலையை சுத்தி நிறைய கெட்ட சக்திங்க நடமாட ஆரம்பிச்சிடிச்சு."

"மலையை சுத்தி மட்டுமல்ல சாமி... இப்பல்லாம் கெட்ட சக்தி தான் அதிகமிருக்கு. நல்ல சக்திங்க ஏதோ பேருக்கு தான் இருக்கு."

"கலியுகமாச்சே...? அப்படித்தான் இருக்கும்... நீ வந்த விஷயத்தை சொல்..."

அமுதனும் காளியம்மாளின் புதிய நாடகத்தை விளக்கமாய் சொல்லி முடித்தான்.

"அப்ப அவ பயப்படறான்னு நல்லா தெரியுது." என்றார் அருணாசல சித்தர்.

"பயப்படறாளா... நடிக்கறா சாமி."

"அடுத்து என்ன செய்வா.... எதைச் செய்வான்னு தெரியலியே சாமி. இந்த லட்சணத்துல தேவி வேற கர்ப்பமாயிட்டா..."

"அப்படிப் போடு அருவாள... நீ அப்பனாகப் போறத நினைச்சு சந்தோஷப்படு. எனக்கெல்லாம் கிடைக்காதது உனக்கு கிடைக்கப் போகுதுடா."

"என்ன சாமி சொல்றீங்க?"

"ஆமாண்டா... இந்த உலகத்துல சன்யாசியாகறது சுலபம். குடும்பஸ்தனா பிள்ள குட்டிகளோட வாழறது தான் கஷ்டம்."

"தலைகீழா சொல்றீங்களே சாமி"

"அதெல்லாம் இல்லை. எங்க சித்தர் பரம்பரைல எங்களுக்கெல்லாம் மூத்தவர் அகத்தியர்! அவரைத் தெரியும் தானே?"

"அகத்திய முனிவரைக சொல்றீங்களா சாமி...?"

"அவர் முனிவருக்கு முனிவர் சித்தருக்கு சித்தர்."

"அவருக்கென்ன சாமி?"

"அவருக்கென்ன வா.... சரிதான்! அவர் சித்தரா முனிவரா இருந்து ஒரு புண்ணியமுமில்ல. கடைசில லோபமுத்ரான்னு ஒரு பொண்ணை உருவாக்கி கல்யாணம் பண்ணி பிள்ளையும் பெத்துகிட்ட பிறகு தான் அவருக்கு நிம்மதியே வந்தது."

"நிஜமாவா.... இது என்ன சாமி புது கதை?"

"புது கதை எல்லாம் இல்லை. இருக்கற கதை தான்! அந்த லோபமுத்ரா தான் அடுத்த ஜென்மத்துல காவேரியா பிறந்து அகத்தியர் கமண்டலத்துக்குள்ளயே இருந்து, பிறகு பிள்ளையார் சாமியால் காவேரியா தரைல ஓட ஆரம்பிச்சா... இதெல்லாம் புராணம்! இந்த புராண செய்திப்படி சன்யாசியவிட குடும்பஸ்தன் தான் மேலானவன். குடும்பஸ்தனா இருந்தா தான் பெற்றோர்களுக்கு திதி கொடுத்து தர்ப்பணம் செய்ய முடியும். அப்படி செஞ்சாதான் பித்ருக்கள் ஆவியா அலையாம நல்ல கதிக்கும் போவாங்க."

"இப்ப எதுக்கு சாமி இந்த கதை?"

"நீ குடும்பஸ்தனாயிட்டதால, பிள்ளையும் பிறக்க போறதால உன் வரைல ஆவியா அலைய வேண்டாம். நீ உன் பெற்றோருக்கு திதி கொடுப்பே. உன் பிள்ளை உனக்கு கொடுப்பான்.... உன் முன்னோர்கள் ஆத்மா அலையாம சந்தோஷப்படும்."

"இது புது விஷயம் சாமி. ஆமா நீங்க உங்க முன்னோர்களுக்கு திதி கொடுத்தா அவங்க ஏத்துக்க மாட்டாங்களா சாமி?"

"கொடுக்க முடியாது. அப்படி கொடுக்கணும்னா பொண்டாட்டி இருக்கணும்... நான் தான் சன்யாசியாச்சே?"

"சன்யாசிங்கறவர் சாமான்ய மனுஷங்கள விட மேலானவர். அப்படிப்பட்டவர் திதி கொடுக்க முடியாதா?"

"சாஸ்தரத்துல அனுமதி இல்லப்பா. அகத்தியரே அதனால தானே கல்யாணம் பண்ணி பிள்ளை பெத்துகிட்டார்."

"அப்ப நீங்க எதனால சாமி சன்யாசியானீங்க?"

"சன்யாசம் பிடிச்சிருந்தது. நாளைங்கறது சன்யாசிக்கு கிடையாது. அன்னைக்கு மட்டும் வாழ்ந்தா போதும். பொழுது விடிஞ்சா திரும்ப அன்னிக்கு.... அவ்வளவு தான்! அதே சமயம் இப்படி திதி கொடுக்க முடியாது, முன்னோர்கள் கஷ்டப்படுவாங்கற விஷயமெல்லாம் தெரியாதுடா தம்பி. தெரிஞ்சிருந்தா சன்யாசியாகியிருக்க மாட்டேன்.

"உங்க பதில் எனக்கு ஆச்சரியமாயிருக்கு... ஆசையை துறந்து வாழற உங்கள விட நாங்க எந்த வகையிலும் பெருசு இல்லையே சாமி...?"

"அப்படின்னு நீ நினைக்கலாம். ஆனா சாஸ்த்ரம் அப்படி சொல்லலயே..."

"அப்ப உங்களுக்கு மோட்சம் கிடைக்காதா?"

"கிடைக்கும். ஆனா எப்பன்னு தெரியாது. ஆனா உன்னை மாதிரி சமசாரி நல்லபடியா வாழ்ந்து செத்தா உடனே மோட்சம் தான்..."

"என்னால இதை நம்ப முடியல சாமி..."

"நீ நம்பாததால அந்த உண்மைக்கு ஒரு குந்தகமும் வந்துடப் போறதில்ல. நம்பறதால, பெருமையும் வந்துடப்போறதில்ல. நம்பறதும் நம்பாததும் உன் சொந்த விஷயம்..."

"சாமி... இப்படி மனுஷ வாழ்க்கைக்கு பின்னால் இன்னும் என்னெல்லாம் இருக்கு சாமி?"

"அப்படிகேள்! உன் வாழ்க்கைங்கறது உன்னோட விதிப்படி நடக்கற ஒரு சமாசாரம். இதுல முக்கியமான விஷயம் என்னன்னா இந்த விதியை கடவுளோ இல்லை யாரோ எழுதலை. நீ தான் இதை எழுதினதே..."

"என்னோட விதியை நான் தான் எழுதினேனா...? நம்ப முடியலியே சாமி... நான் எழுதியிருந்தா இப்படியா கஷ்டப்பட்றபடி எழுதியிருப்பேன்?"

"விதிங்கறது நம்ப விருப்பத்துல உருவாகறதுல்ல தம்பி. உன் செயல்பாடுகளால் தானா உருவாகுது அது. அந்த வகைல பார்த்தா இன்னாருக்கு மகனா, இந்த ஊர்ல, இந்த மொழி பேசி, அமுதன்கற பேரோட வாழணும்கறத, உன் பூர்வ ஜென்மத்துல நீ உன் செயல்களால் தான் தீர்மானிச்சே..."

"அப்ப இப்ப நான் நடக்கறத வெச்சு தான் என் அடுத்த ஜென்மம் இருக்குமா சாமி...?"

"நிச்சயமா?"

"அது எப்படி சாமி?"

"அழியறது எப்பவும் உடம்புதான். ஆத்மா தன்னோட கர்ம வினைக்கு ஏற்ப முக்தியும் அடையும், மறுபிறப்பும் எடுக்கும்..."

"மறு ஜென்மமெல்லாம் பொய்... ஒரு கற்பனைன்னு சொல்றாங்களே?"

"நாக்குக்கு கடவுள் நரம்பை கொடுக்கல. அதனால் அது எப்படி வேணா பேசும், அப்படி பேசற ஒரு பேச்சுதான் பொய், கற்பனைங்கறதெல்லாம்."

"அப்படி பேசறது பொய்னா நீங்க சொல்றதுதான் உண்மைன்னு எதை வெச்சு நம்பறது?"

"உன்னை வெச்சே நீ இது உண்மையா பொய்யான்னு தெரிஞ்சுக்கலாம்."

"என்னை வெச்சா?"

"ஆமாம்... எவ்வளவு பெரிய உண்மையையும் நாம் நம்மை வெச்சே தெரிஞ்சிக்க முடியும்."

"எப்படி சாமி?"

"நீ ஆசைப்பட்ட எல்லாம் உனக்கு கிடைச்சிருக்கா?"

"இல்லையே சாமி...?"

"ஒண்ணு கூடவா உனக்கு கிடைக்கல?"

"சின்னச் சின்னதா ஒண்ணு ரெண்டு இருக்கலாம்?"

"சரி... உன் விருப்பப்படியே எல்லாம் நடந்திருக்கா?"

"அதுக்கும் இல்லை தான் சாமி பதில்... எனக்குன்னு இல்ல சாமி, யாருக்குமே நடக்கறதில்லை. எதிர்பாராததெல்லாம் நடக்கறது தான் வாழ்க்கை உன் கைல உன் கட்டுப்பாட்டுல இல்லை தானே?"

"ஆமாம் சாமி..." அமுதன் பரிதாபமாக சொன்னான். சிரித்தார் அருணாசல சித்தர்!

326-327/384 Go

இனறு

மாதங்கியை ஜீவானந்தத்தின் அடியாட்டகள் ஒருபுறம் இழுத்துச் செல்ல, மறுபுறம் அமுர்தேஷ்வரை ஒரு தூணில் கட்டத் தொடங்கினர்.

"வேண்டாண்டா... நீங்க பண்ற தப்புக்கு பல வருஷம் கம்பி எண்ண வேண்டி வரும் என்னை விடுங்கடா..."

அமுர்தேஷவர் கத்தக் கத்த அவன் வாய் மேல ஒரு பிளாஸ்திரியை ஒட்டி அவன் கத்தலையும் அடக்கினர். ஜீவானந்தமும் ஒரு முறை முறைத்து விட்டு காளியம்மாளிடம் வந்தவனாக

"அக்கா இவன என்ன செய்யலாம்?" என்று கேட்டான்.

"அதைத் தான் நானும் யோசிக்கிறேன்."

"யோசிக்க என்னக்கா இருக்கு? போட்டுத் தள்ளிடுவோம். அவன் நமக்கு சரிப்பட்டு வராதவன் மட்டுமில்ல, வெளிய விட்டா இப்ப இங்க நடந்ததுக்கும் சேர்த்து நம்பள பழி வாங்கிடுவான்"

"எல்லாம் சரிடா.... போலீசாச்சே? அதுலயும் எஸ்.ஐ வேற...அரசாங்கம் சும்மா இருக்குமா?"

"அதுவும் சரிதான..."

"கொஞ்சம் பொறுமையா இரு. இவன் கைல இருக்கற அந்த செலபோனைப் புடுங்கி அந்த நாயுங்க கொடுத்த வாக்குமூலத்தை முதல்ல அழிடா. அப்படியே நம்ப வக்கீல பாத்து உள்ள இருக்கற அந்த இரண்டு பேரையும் வெளிய கொண்டு வர்ற வழியை பார். அப்புறமா இவன என்ன பண்றதுன்னு யோசிப்போம்."

"அவங்க வெளிய வரணும்னாலும் இவன் வேணும்கா. இவன்தான் ஸ்டேஷன் இன்சார்ஜ். அவங்க மேல எஃப்.ஐ.ஆர் போட்டதும் இவன் தான். யார் எஃப்.ஐ.ஆர் போட்றாங்களோ அவங்கதான் கடைசி வரை அந்த கேசுக்கு பொறுப்பு இது உனக்கு தெரியாதா?"

"அட போடா.... எனக்கு தெரியாத போலீசா இல்லை சட்டமா? நீ முதல்ல செல்போனை புடுங்கு. அந்த வாக்கு மூலத்தை எல்லாம் அழி..." என்றாள். ஜீவானந்தமும் அமுர்தேஷ்வரை நெருங்கி செல்போனை எடுத்து அதை அழித்தான். அழித்து விட்டு அமுர்தேஷ்வரை பார்த்தான்! அமுர்தேஷ்வர் அந்த நிலையிலும் சிரித்தான்.

ஜீவானந்தத்தை அந்த சிரிப்பு கலங்கச் செய்தது. "ஏண்டா சிரிக்கறே... இனிமே உன்னால புடுங்கக் கூட முடியாது ..."

அதற்கும் அமுர்தேஷவா சிரித்தான். ஜீவானந்தமும் எரிச்சலுக்கு மாறியவனாக வாயில ஒட்டியிருந்த பிளாஸ்திரியை வெடுக்கென்று பிரித்தவனாக

"இப்ப சொல்லு எதுக்கு சிரிச்சே?" என்று கேட்டான்.

"சிரிக்காம என்ன பண்ணச் சொல்றே? இந்த செலபோன்ல இருக்கறத அழிச்சுட்டா இது அழிஞ்சிடுமா? இது கான்ஸ்டபிள் போன்ல இருந்து எனக்கு ஃபார்வர்ட் ஆன ஒன்னு. அவர் ஸ்டேஷன் கம்ப்யூட்டர்ல இதை ஏத்தி முடிச்சிருப்பாரு. அதே போல நான் உன்னை பாக்க வந்திருக்கறதும் ஸ்டேஷனுக்கு தெரியும்.

நான் இப்ப திரும்பப் போகலன்னா மொத்த போலீஸ் ஸ்டேஷனும் இங்க தான் வரும். நீ என்ன எல்லாரையும் என்னைய கட்டிபோட்ட மாதிரி கட்டிப் போட்டு கொலை பண்ணிடுவியா...?

"நீ அவ்வளவு பெரிய அப்பாடக்கரா?" அமுதேஷ்வர் அப்படி கேட்கவும் தான் ஜீவானந்தத்துக்கு தான் அவசரப்பட்டு விட்டது புரிந்தது. திருதிருவென முழிக்கத் தொடங்கினான். அதைப் பார்த்தபடியே வந்த காளியம்மாள் கூர்மையாகப் பார்த்தாள்.

"என்ன ஓல்ட் லேடி... உன் ஆட்டம் முடியப் போகுது. இவனை விட நீ தான் ரொம்ப மோசம். இவன் அம்பு தான். நீ தான் வேடன். உங்கள் சும்மா விடமாட்டேன்."

அமுதேஷ்வரின் பேச்சு அவள் வயிற்றையும் கலக்க ஆரம்பித்தது. தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தாள். அவள் இப்படி யோசித்தாலே ஆபத்துதான்!

யோசித்து முடித்தவள் முகத்தில் ஒரு மலாச்சி "டேய்... நம்ப நம்பூதிரி சாமியை எவ்வளவு சீக்கிரம் இங்க வர வைக்கணுமோ அவ்வளவு சீக்கிரம் வரவையுடா" என்றாள்.

"நம்பூதிரியவா.... அவர் இப்ப எங்க இருக்காரோ?"

"எங்க இருந்தாலும் இங்க வந்தாகணும்?"

"அவர் வந்து என்னக்கா புண்ணியம்?"

"இவனை பிரமை பிடிச்சவனா மாத்த அவரால மட்டும் தான் முடியும்..."

"பிரமை பிடிச்சவனா...... அட்றா சக்கைன்னானாம். அந்த நாள்ள அந்த அமுதனுக்கு பண்ணோமே... அதே மாதிரியா?"

"ஆமாம்... இவன் செத்தா தானே நமக்கு வில்லங்கம் பண்ண மாட்டாங்க. நாமளும் நிம்மதியா இருக்கலாம் பாரு...."

"அக்கா.... நிஜமா சொல்றேன்கா, உன் மூளை யாருக்கும் வராது..." என்று காளியம்மாளை புகழ்ந்த ஜீவானந்தம் அடுத்த நொடியே நம்பூதிரிக்கு தான் போன் செய்தான்.

அமுதேஷ்வருக்கோ கத்தி போய் வால் வந்த கதையாக விஷயம் தப்பான திசையில் செல்வதாக தோன்றியது.

"நோ.... வேண்டாம்! வேண்டாம்!" என்றான். அமுதேஷ்வரின் பயம் ஜீவானந்தத்துக்கு ஆச்சரியத்தை அளித்தது.

"வேண்டாமா?"

"ஆமா வேண்டாம். நம்பூதிரிகள் பத்தி எனக்கு நல்லா தெரியும். நான் உங்க விருப்பப்படியே நடந்துக்கறேன் மகிழ்ச்சியோடு ஜீவானந்தத்தை பார்த்தான்!

## 35

அருணாசல சித்தர் சிரித்தாலே பெரிதாக பொருள் இருக்கும். அதனால் அமுதன் பொறுமையாக அடுத்து அவர் என்ன சொல்லப் போகிறார் என்று பார்த்தான்.

"யாரோட வாழ்க்கையும் அவங்க கட்டுப்பாட்டுல இருக்கறது கிடையாது. அது விதியோட கைல இருக்கு. அவங்கவங்க விதிப்படிதான வாழ்க்கை நடக்குது. அப்படிப்பட்ட விதியை மாத்தி எழுதறதும் சாதாரண விஷயம் கிடையாது. இதெல்லாம் தான் ஒரு சித்தன் உருவாகவே காரணம்."

அருணாசல சித்தர் விதி பற்றி சொல்லவும் அமுதன் அதைத் தொட்டு அடுத்த கேள்வியைக் கேட்டான்.

"இந்த விதியை நம்ம செயல்களால் நாம் தான் எழுதிக்கறோம்னு சொல்றீங்க. நாம தப்பா எழுதிகிட்டிருந்தா அதை திருத்தி சரியா எழுதிக்க முடியாதா?"

"இப்பதான் நீ சரியான கேள்வியை கேட்டுருக்கே. அப்படி உன் விதியை நீ திருத்தி எழுதணும்னா அதுக்கு உனக்கு உன் விதியை பற்றி நல்லா தெரிஞ்சிருக்கணும்."

"அடுத்த நிமிஷம் என்ன நடக்கும்னு தெரியாதது தானே சாமி நம்ம வாழ்க்கை. அப்படி இருக்க எப்படி சாமி விதிங்கற அந்த ரகசியத்தை தெரிஞ்சுக்க முடியும்?"

"தெரிஞ்சுக்க வழி இருக்குப்பா. அதுக்கு நீ என்னைப் போல் ஆகணும்."

அருணாசல சித்தர் சொன்ன பதில் அமுதனுக்கு திகைப்பைத் தான் தந்தது.

"சாமி.... என்ன சாமி இது? அப்ப எல்லாரும் சாமியாராப் போனா தான் அவங்கவங்க விதியை தெரிஞ்சுக்க முடியுமா?"

"ஒரு கோணத்துல பார்த்தா அது தான் உண்மை."

"என்ன சாமி இது? சாவைப் பத்தி தெரிஞ்சிக்கணும்னா செத்துப் பார்த்து தெரிஞ்சிக்கோன்னு சொல்லற மாதிரில்ல இருக்கு....?"

"கிட்டதட்ட அப்படி தான். சுலபமா தெரிஞ்சிக்க வழி இருந்தா இந்த உலகத்துல இருக்கற மனுஷங்க இப்ப இருக்கற மாதிரியா இருப்பாங்க? எல்லாரும் தங்களோட தலை எழுத்தை தங்களோட விருப்பத்துக்கு மாத்தி எழுதிகிட்டு எல்லாரும் சந்தோஷமா இருக்க மட்டும் தானே பாப்பாங்க?"

"வாஸ்தவம் தான் சாமி, நான் வந்த விஷயம் இப்படி விதி, மதின்னு எங்கெங்கியோ போயிடிச்சு.... சரி இதை விடுங்க! நான் இப்ப என்ன சாமி பண்ணணும்?"

"கவனமா இரு.... அவ ஏதோ திட்டம் போட்டுதான் இப்படி நடிக்கறான்னு நல்லா தெரியுது!"

"அதுல என்ன சந்தேகம் சாமி.... எனக்கு இப்ப நீங்க தான் இருக்கீங்க. உங்களால தான் நான் அந்த காளியம்மா அப்புறம் அந்த நம்பூதிரியை எல்லாம் ஜெயிக்கணும்."

"அமுதா! ஒரு விஷயத்தை நல்லா தெரிஞ்சிக்கோ. எந்த ஒரு நல்ல சன்யாசியும் தன் அருட் சக்தியை துஷ்ட சக்திகளுக்கு எதிரா செலவழிக்க மாட்டான்.... அப்படி செஞ்சா அவன் தன் சக்தியை இழக்கறது மட்டுமில்ல. ஒரு சராசரி மனுஷனா அவன் ஆயிட்டான்னும் அர்த்தம்."

"நீங்க என்ன சொல்றீங்க சாமி?"

"உன் பிரச்சினையை நீயே தீர்த்துக்கப் பார் என் ஆசீர்வாதம் உனக்கு எப்பவும் இருக்கும்."

"சாமி... தப்பானவங்கள் அடக்கத் தானே உங்ககிட்ட உதவி கேட்கறேன். ஆனா அருட் சக்தி செலவாயிடும், சராசரி மனுஷனாயிடுவேன்னு என்னென்னமோ சொல்றீங்களே சாமி. ரொம்ப ஏமாற்றமா இருக்கு சாமி..."

"அதுக்கு நான் என்னப்பா செய்ய முடியும். அது தான் உன் விதி?"

"சாமி... இப்ப உங்க கண் எதிர்ல ஒருத்தன், உங்களை கொல்ல வந்தா விதின்னு அப்படியே நிப்பீங்களா? இல்லை உங்களை காப்பாத்திக்க ஓடுவீங்களா?"

"எனக்கு அப்படி எல்லாம் நடக்காது அமுதா... நான் 120 வருஷ ஆயுசு கொண்டவன். இந்த பூமில இந்த உடம்பை நான் 120 வருஷம் சுமந்து தான் தீரணும். இதுக்கு பங்கமா எனக்கு எதுவும் நடக்காது. அதான் என் தலைவிதி."

"நீங்க ஆயிரம் வருஷம் கூட வாழ்ந்துட்டு போங்க. ஆனா எனக்கு என் தவமும் யோகமும் தான் பெருசு. அதுக்கு கேடு வரக் கூடாதுங்கற உங்க சுயநலம் சரியா சாமி?"

"அமுதா... 60 வருஷ சன்யாசி நான்! எனக்கு இப்ப எண்பது வயசாகுது. இருபது வயசுல சன்யாசத்துக்கு வந்துட்டேன். இந்த 60 வருஷ சன்யாச சக்தியை ஒரு கேடு கெட்ட காளியம்மாளுக்கும் அவள் தம்பிக்கும் எதிரா ஒரு நொடில செலவழிக்கறது புத்திசாலித்தனமா?",

"அது என்ன காசு பணமா சாமி? செலவாயிட்டா திரும்ப சம்பாதிக்கணும்கிறதுக்கு?"

"காசு பணம் மாதிரியே தான்.... என் தவ சக்தி மட்டுமில்ல, மாந்திரீகம்கறதும் காசு பணம் மாதிரி திரட்டப்படற ஒரு மந்திர சக்தி தான்! பூஜிச்சுகிட்டே இருந்தா தான் அந்த சக்தி செயல்படும். உடம்பு சரியில்லன்னு ஒரு வாரம் படுத்துட்டா அதுவும் படுத்துடும். அப்படிப்பட்ட சக்திக்கு எதிரா என் சக்தியை பிரயோகம் பண்ணி அவங்களை நான் அழிச்சா, நான் விருப்பு வெறுப்பு இல்லாத சன்யாசிங்கறது போய், உன்னை போல் ஆசாபாசமுள்ள மனுஷனாயிடுவேன்."

"சாமி... அப்ப ஒரு சன்யாசிங்கறவனுக்கு நியாய தர்மமே கிடையாதா?"

"இதுக்கு நான் ஒரு பதில் சொன்னா' நீ ரொம்பவே வருத்தப்படுவே அமுதா. எங்களுக்கான நியாய தர்மம் ஒண்ணே ஒண்ணுதான். பாவமும் செய்யக்கூடாது. புண்யமும் செய்யக் கூடாது. பாவம் செய்தா அதுக்கு தண்டனையை அனுபவிக்க திரும்ப பிறக்கணும். புண்ணியமும் அப்படியேதான்.

இரண்டுல இருந்தும் விலகி இருந்து, இந்த உடம்புக்கான பூர்வ ஜென்ம கணக்கை வாழ்ந்து முடிச்சிட்டு திரும்பா பிறப்பே எடுக்காத படி முக்தி அடையறது தான் எங்க வாழ்க்கை முறை..."

"அப்ப என்னை மாதிரி வாழ்ந்தா மறுபிறப்பு உண்டா?

"அதுல என்ன சந்தேகம்? மாணிக்கவாசகர் சிவபுராணத்துல என்ன சொல்லியிருக்கார் தெரியுமா?"

"சாமி... நான் என்ன உபதேசம் கேட்கவா வந்துருக்கேன்? உதவி கேட்டு வந்துருக்கேன் சாமி..."

"இந்த உபதேசம் கூட உனக்கு உதவி தான் அமுதா. உன் முன்வினை தான் உனக்கு இப்படி நடக்குது. நீ ஆசாபாசமுள்ள வாழ்க்கை வாழ்ந்தா அடுத்த ஜென்மம் உனக்கு நிச்சயம். புல், பூண்டு, புழு, பூச்சி, பறவை, மிருகம்னு அந்த ஜென்மம் எதுவா வேணும்னாலும் இருக்கலாம். ஆறு அறிவுள்ள மனுஷனா பிறக்கறது தான் இதுல உயர்ந்த பட்சம். அப்படி மனுஷனா பிறந்தும் கடைத்தேறாம ஆசாபாசத்தோட வாழ்ந்தா திரும்பத் திரும்ப பிறந்துகிட்டேதான் இருப்போம்..."

"போதும் சாமி. இனி நான் உங்ககிட்ட பேசறதுல ஒரு புண்ணியமுமில்லை. ஆனா ஒண்ணு சாமி. இப்படி வாழ பயந்துகிட்டு எதுவும் செய்யாம இருக்கறதுக்கு திரும்பத் திரும்ப பிறக்கறது எவ்வளவோ மேல் சாமி! நான் வரேன்... என் பிரச்சினையையும் நானே தீர்த்துக்கறேன்..."

அமுதன் சற்று கோபமாகவே பேசிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான். அவன் புறப்படவும் அருணாச்சலசித்தா ஒரு பெருமூச்சு விட்டார், மனதுக்குள்!

"என்னை மன்னிச்சிருப்பா... மோசமான ஒரு கால கட்டத்துல நீ இருக்கே! மகாபாரதத்துல கர்ணன் இருந்த மாதிரி... அவனையே படைச்ச கிருஷ்ணன் கூடவே இருந்தும் அதனால கர்ணன் நல்லவிதமா வாழ முடியல. போர்க்களத்தில அடிபட்டு செத்தான். அந்த கிருஷ்ணன் மாதிரி நான் உன் கூட இருந்தும் உனக்கு என்னால் உதவ முடியல. நான் உதவினாலும் எதுவும் மாறப்போறதில்லை..."

என்று அவர் தனக்குள் சொல்லிக் கொண்டார்.

பங்களாவுக்கு வந்தவன் பட்டுச்சேலை தாழம்பூ தலைப் பின்னல், நெத்திச் சுட்டி என்று தேவியை பார்த்தான். எல்லாம் அவன் அம்மாவின் கைவண்ணம்,

அவன் தான் தங்கள் வாரிசை வயிற்றில சுமக்கும் தங்கள் மருமகளுக்கு அந்த அலங்காரத்தை செய்துவிட்டவள்.

காளியம்மாள் ஒரு ஓரமாய் சாய்வு நாற்காலியில் அமர்ந்து வெற்றிலை போட்டபடியே நடப்பதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அமுதன் அழகிய அந்த கோலத்தில் தேவியை கூட்டிக் கொண்டான். தேவியும் சற்று உணர்ச்சி வயப்பட்டாள். இருவருமாக எப்போதும் போதையில் இருக்கும் ராஜரத்னம் முன் சென்றனர். அவர் ஓரளவு தெளிந்த நிலையில் அப்போது இருந்தது தான் ஆச்சரியம்.

தன் கண் எதிரில் கர்ப வயிற்றோடு கணவனோடு வந்து நின்ற தேவியை "யாரது?' என்று முதலில் மப்பு தெரியாமல் அவர் கேட்கவும் கலங்கிப் போனான் அமுதன்.

"மாமா.... தேவி மாமா! உங்க ஒரே மக தேவி.... நீங்க தாத்தா ஆகப்போறீங்க மாமா" என்றான் உடைந்த குரலில்.

"தேவியா.... என் மக தேவியா....?" என்று அவரும் வேகமாக அடையாளம் கண்டு கொண்டார். அதே வேகத்தில் கண்களில் கலக்கம் அதை தூர இருந்து பார்த்தபடி இருந்த காளியம்மாளுக்கு சற்று அதிரத் தொடங்கியது மனது!

இன்று

அமுதேஷ்வர் இப்படி பயப்படுவான என்றோ, வழிக்கு வருவான் என்றோ ஜீவானந்தம் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. அதே சமயம் அவன் பயந்து விட்டதற்காக நம்பிவிடவும் அவன் தயாராயில்லை.

தனியே காளியம்மாளோடு ஒதுங்கியவன்

"என்னக்கா இப்ப பண்ணலாம்?" என்று கேட்டான.

"இவன் நம்பகிட்ட இருந்து தப்பிச்சுக்க நடிக்கற மாதிரியும தெரியுதுடா...."

"ஆமாங்க்கா.... இவன எமகாதகன்...."

"நீ நம்பூதிரிய கூட்டிகிட்டுவா.... அவர் என்ன சொல்றார்னு கேட்டு முடிவு பண்ணுவோம்...."

"அதுக்கெல்லாம் நேரமில்லலையேக்கா. இப்பவே கூட போலீஸ் ஸ்டேஷன்ல எங்க ஆளைக் காணோம்னு தேட ஆரமபிச்சிருப்பாங்க. அவங்க பாட்டும் ஒரு கூட்டமா தேடிகிட்டு நேரா இங்க வந்துட்டா?",

"அப்ப முதல்ல இவனை விட்டே ஸ்டேஷனுக்கு போனல பேசச் சொல்லு நான் நாளைக்கு தான் வருவேன் எனக்கு முக்கியமான வேலை இருககுன்னு சொல்லச் சொலலு...."

ஜீவானந்தம் அடுத்த நொடி கையை சொடுக்கிக் கொண்டு "சபாஷக்கா...." என்றபடியே அமுதேஷ்வர் முன சென்றான. அவன போனை கொடுதது "உன் ஸ்டேஷனுக்கு போன் பணணி ஏட்டு, கான்ஸ்டபின்னு உன்னோட திரியற உன பரிவாரங்ககிட்ட நான் முக்கியமான வேலைல இருககேன். நாளைக்குதான ஸ்டேஷனுக்கே வருவேன்னு ஒரு போன் பணணு. அபபடியே நடுவுல எனககு போன எதுவும் பணணக கூடாதுன்னும சொல்லு...."

என்று போனை நீட்டினான். அமுதேஷ்வரும் சிரித்தபடியே போனை வாங்கி அப்படியே செய்து முடித்தான். அப்படி பேசும் போது நடுவில் மூன்று முறை இருமினான். அப்படி இருமினால் பேசப்படும் விஷயம் பொய் என்றும் தான் ஆபத்தில் இருந்து கொண்டு எதிரியின் பேச்சைக் கேட்டு பேசுகிறேன் என்று அர்த்தம்.

இதெல்லாம் போலீஸ்காரர்கள் தங்களுக்குள் வைத்துக் கொண்டிருக்கும் கோட்வேர்ட்ஸ் சிக்னல்கள்!

அடுத்த ஜீவானந்தம் பேசியது நம்பூதிரியிடம் தான்!

"நம்பூதிரி ஒரு இககட்டான சூழ்நிலை. கொஞசம் உடனே வரமுடியுமா?"

"நான் முக்கியமான பூஜைல இருக்கேன். வர கொஞ்சம் நேரமாகுமே....?"

"சீக்கிரம் வாங்க நம்பூதிரி.... இது போலீஸ் மேட்டர். நம்ம தப்பை எல்லாம் புதுசா வந்துருக்கற சப் இன்ஸ்பெகடர் மோப்பம் பிடிச்சிட்டான். அவனை நான் இப்ப கட்டிப் போட்டுருக்கேன். அவனை வெளியவிடவும் முடியாது. விட்டா நம்ம மொத்த கூட்டமும் காலி. அவன்கிட்ட எல்லாத்துக்கும் ஆதாரம் இருக்கு."

"எவ்வளவு சொன்னாலும் நீ எதாவது தப்பு பண்ணிட்டு வந்து நிப்பே. உன்னை திருத்தவே முடியாது. உனக்கு இப்ப கெட்ட நேரம் ஜாக்ரதையா இருககணும்னு சொல்லியிருககேன்ல?"

"ஜாக்ரதையா இருக்கறதால தான நம்பூதிரி, சப இன்ஸ்பெகடரையே பிடிசசி வெச்சிருக்கேன்."

"நீ இருந்து என்ன புண்ணியம்? உன் மகன் ஒரு சத்ரு! அவன் பிறந்தப்பவே சொன்னேன்! இவனால தான் உனக்கு அழிவு! கொன்னுடுன்னு நீ கேட்கல இப்ப பார்த்தியா?"

"நம்பூதிரி இதை எல்லாம் பேச இதுவா நேரம்? நாம் இப்ப வேகமா ஏதாவது பண்ணி இந்த ஆபத்துல இருந்து வெளியவரணும். இதை விட மோசமான ஆபத்துல இருந்தெல்லாம் நாம் வந்துருக்கோமே..."

"அப்ப உனக்கு அனுபவிக்கற விதி இருந்தது. அதனால நீ விரும்பின மாதிரி நடந்துச்சு. இப்ப உன் விதி முடிஞ்சு போச்சு."

"அது எப்படி முடியும் நம்பூதிரி... நீயும் உன் மந்திர சக்தியும் உள்ளவரை எங்களை யாரும் எதுவும் பண்ண முடியாது. இப்பகூட உன் பேரைச் சொன்ன உடனேயே சப் இன்ஸ்பெக்டர் நடுங்கிட்டான். நமக்கு சாதகமா நடந்துக்கறேன் நம்பூதிரி என்னை எதுவும் செய்துட வேண்டாம்னு பதறிட்டான்..."

"அப்படியா.... அவன் அப்படியா சொன்னான்?"

"ஆமா.... மாந்திரீகம்னா கொஞ்சம் தெரியும் போல் இருக்கு. அவனை கொல்றதவிட பைத்தியகாரனா அலையவிட்டா அது தான் நமக்கு இப்ப நல்லதுன்னு அக்கா சொன்னாங்க. அதாவது முந்தி அந்த அமுதனை கொஞ்ச நாள் அலைய விட்டோமே? அதே மாதிரி...."

"சரி சரி... நான் புறப்பட்டு வரேன்! எல்லாத்தையும் நேர்ல பேசி முடிவு செய்யலாம். போலீஸ்காரங்க நல்லா நடிப்பாங்க நாம தான் ஜாக்ரதையா இருக்கணும்."

என்று நம்பூதிரி பேசி முடிக்கவும் ஜீவானந்தம் காளியம்மாளிடம் வந்து 'நம்பூதிரி புறப்பட்டுட்டாருக்கா...." என்றான்.

"இவனை அதுவரை எதாச்சும் ஒரு அறைல போட்டு பூட்டி வையுங்க..."

"சரிக்கா...."

அமுதேஷ்வரை ஜீவானந்தமே அழைத்துச் சென்று ஒரு அறைக்குள் நாற்காலியில் அமர வைத்து கட்டிப் போடப் போனான்.

"ப்ளீஸ்... வேண்டாம் என்னை நம்பு. நான் இனி உங்க ஆள்" என்றான் அமுதேஷ்வர்.

"நீ நடிக்கிறியா, இல்லை மனசார சொல்றியான்னு நம்பூதிரி வந்து உன்னை பாத்துட்டு சொல்லட்டும். அதுவரை நீ இப்படிதான் இருக்கணும்"

"சரி.... அப்படியே செய்! எதுக்கு கட்டிப் போட்றே? இந்த அறையை வேணா பூட்டிட்டு போ. என்னை ஃப்ரீயா விடு...."

ஜீவானந்தமும் அறையை நாலாபுறமும் பார்த்தான். தப்பித்து செல்ல ஜன்னலோ, எக்ஸாஸ்ட் ஃபேன் துவாரமோ எதுவுமில்லை. எனவே ஒழிந்து போ என்பது போல் பார்த்தபடியே அறையை பூட்டிக் கொண்டு நகர்ந்தான்.

போலீஸ் ஸ்டேஷனில் ஏட்டு பரமானந்தம் ஏ.சி.பி சந்திரமோகனுக்கு போன் செய்து பேசத் தொடங்கியிருந்தார்.

"சார்... நான் திருப்பரங்குன்றம் ஸ்டேஷன் ஏட்டு பரமானந்தம் பேசறேன். ரொம்ப அவசரமான விஷயம் சார்."

"சொல்லுங்க."

"இங்க பாளையக்கார குடும்பம் ரொம்ப ஃபேமஸ். கேள்விப் பட்டுருப்பீங்கன்னு நினைக்கறேன்."

"அந்த காளியம்மாள், ஜீவானந்தம் குரூப் தானே?"

"அவங்களே தான் சார். ரொம்ப நாளாவே அவங்கமேல ஒரு சந்தேகப் பார்வை நம்ம டிபார்ட்மெண்ட்டுக்கு இருக்கு சார்..."

"அதெல்லாம் எனக்கும் தெரியும். இப்ப என்ன பிரச்சனை?"

"ஒரு கொலை கேஸ் சார். ஆக்சிடெண்ட்டுங்கற போல சென்னைல இருந்து வந்துருக்கற ஸ்ரீதேவிங்கற பொண்ணையும் அவங்க குரூப்பையும் கொல்ல பாத்துருக்காங்க. நல்லவேளை அந்த பொண்ணு தப்பிச்சிடுச்சு. யாருக்கும் உயிர் போகல."

"அப்புறம்?"

"லாரியை ஏத்தி கொல்லப் பார்த்த டிரைவர் கிளீனரை பிடிச்சு விசாரிச்சதுல ஜீவானந்தம் மகன் மதன் தான் செய்யச் சொன்னதா ஸ்டேட்மெண்ட் கொடுத்துட்டாங்க. அதுக்காக மதனைத் தேடி போயிருக்கார் நம்ப எஸ்.ஐ. அமுதேஸ்வர்."

"ஓ.கே"

"போன இடத்துல மாட்டிகிட்டார் சார்! போனல கோட்வேர்டுல பேசினார். நாம உடனடியா ஒரு குரூப்பா போய வளைச்சா தான், சாரை காப்பாத்த முடியும்."

"ரைட்... அதிக பட்சம் எவ்வளவு சீக்கிரம் புறப்படணுமோ புறப்படுவோம். நான் இப்ப நேரா ஸ்டேஷனுக்கு வரேன்..." போனை துண்டித்தார் ஏ.சி.பி சந்திரமோகன்!

# 36

அன்று

அதிர்ந்த மனதோடு காளியம்மாள் கூர்மையாக நடப்பதை கவனிக்கத் தொடங்கினாள். ராஜரத்னம் அருகில் விழியில் பெருகிய கண்ணீரோடு தேவி அமர்ந்து கொள்ள, அவள் கரங்களோடு ராஜரத்னம் கரங்கள் பிணைந்திருந்தன.

"அப்பா.... என்னை அடையாளம் தெரியுதாப்பா....?" என்று தேவி விசும்பலுடன் கேட்டாள். பெற்ற தந்தையிடம் ஒரு பெண் கேட்கக் கூடாத கேள்வி. காலம் கேட்க வைக்கும் போது யாரால் என்ன செய்ய இயலும்?

ராஜரத்னத்துக்கு தான், என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. கலங்கிய கண்களோடு பார்த்தார்.

"மாமா.... நீங்க இப்படி மாறிப்போவீங்கன்னு நாங்க யாரும் எதிர்பார்க்கல மாமா..." என்று அமுதனும் பேச ஆரம்பித்தான்.

காளியம்மாள் கவனித்துக் கொண்டே இருந்தாள். அவள் அப்படி பார்ப்பதை அமுதனின் அப்பா அம்மாவும் கவனித்துக் கொண்டு தானிருந்தனர். ராஜரத்னம் அதற்கு ஏதோ பதில் கூற முன் வந்தார். ஆனால் அவரால் முடியவில்லை. உடம்பு முழுக்க திடீரென்று வியர்க்க வேறு தொடங்கியது.

"அப்பா.... என்னப்பா பண்ணுது? ஏனப்பா இப்படி வியர்க்குது...?" என்று தேவி உடையத் தொடங்க, ராஜரத்னத்துக்கு கண்களும் செருக ஆரம்பித்தது.

"அப்பா.... அப்பா...." என்று தேவி கூப்பிடக் கூப்பிட அது அவர் காதுகளில் தேய்ந்து போய் ஒலித்து அவரை அப்படியே மயங்கச் செய்தது! துவண்டு விழுந்தே விட்டார்!

அமுதன் பதறிட அவன் அப்பா அம்மா இருவரும் ஓடி வந்திட, காளியம்மாளும் பாய்ந்து வந்து தேவிக்கு மறுபுறத்தில் அவரை இழுத்து தன் மடிமேல் போட்டு "என்னங்க.... என்னங்க....?" என்று கூப்பிட்டுப் பார்த்தாள். பலனில்லை.

அந்த பங்களாவே அடுத்த சில நொடிகளில் ஸ்தம்பித்துப் போய் விட, மிகச் சரியாக பதினைந்து நிமிடங்களில் டாக்டர் தன் தனிக்காரில் வந்து சேர்ந்தார். ஜீவாதான் கூட்டி வந்திருந்தான்.

பரிசோதித்துப் பார்த்தவர் "அய்யா நம்மை எல்லாம் விட்டுட்டு போய்ட்டார். ஹார்ட் அட்டாக்" என்றார்.

"ஐயோ என்னை விட்டு போய்ட்டீங்களா?" என்று உச்ச ஸ்தாயியில் கதற ஆரம்பித்தாள் காளியம்மாள்!

தேவிக்கு மயக்கமே வந்து விட்டது.

அமுதனும் எதிர்பாராத அந்த திருப்பத்தில் அடுத்து என்ன செய்வது என்று தெரியாதவனாக நின்ற போது, அந்த நிலையிலும் காளியம்மாள் ஜீவாவுக்கு கொடுத்த சிக்னலை புரிந்து கொண்டான்.

"அமுதா... கொஞ்சம் என் கூட வா...." என்றான்.

"எதுக்கு?"

"வா சொல்றேன். மாமா காரியத்தை எல்லாம் நீ தான் செய்யணும். அது சம்மந்தமாதான்...."

"அதை நீ இங்கேயே சொல்லு... தனியா போய் பேச என்ன இருக்கு?"

"நிறைய இருக்குப்பா.... கொஞ்சம் வாப்பா...."

"முதலல நியும உன் அககாவும வெளிய போஙக, மற்ற விஷயத்த நான் பாத்துககறேன...."

"வேண்டாம் அமுதா.... நீ மலையோட மோதறே?"

"நீ எல்லாம் மலைன்னா, உண்மையான மலையை என்னன்னு சொல்றது?"

இருவருக்கும் வாக்கு வாதம் தடித்தது. அமுதனின் அப்பா ராமலிங்கம் அமுதன் அருகே வந்தவராக "அமுதா மெல்லப்பேசு....

இது சணடை போடற நேரமிலலை, ஒரு பெரிய இழப்பு ஏறபட்டுருககு. ரொமப கவனமாகவும், பககுவமாவும் நடநதுக்கணும்" எனும் போதே அவனுக்கு தொடையில் ஊசி குத்தியது போல ஒரு உணர்வு. வலி எடுத்த இடததில கையால தேயதது விட்டுக் கொள்ளும் போதே அவனுக்கும மயக்கம் வரத் தொடங்கி விட்டது.

அவனைத் தாங்கிப் பிடித்தவராக ராமலிஙகம பககத்து சோபா நோக்கி சென்றார். சோபாவில் விழுநதவன் அப்படியே சுருண்டு விட ராமலிங்கம் ஜீவானநதததைததான அடுதது பாரத்தார்.

"என்ன பாக்கறே? கூட்டிகிட்டு போ.... இங்க இவன் இருந்தா பாக்கறவங்க தான் சிரிப்பாங்க...." என்றான்.

"என்னடா பண்ணே?" என்று ராமலிங்கம் முதல் தடவையாக ஜீவானந்தத்தை 'டா' போட்டு அழைக்க, ஜீவா முகத்தில் ஆத்திரம்!

"வேணாம் ஜீவானந்தம்.... நீ பெரிய பாவம் பண்றே? இந்த பாவமெல்லாம் உன்னை சும்மா விடாது...."

"போய்யா புண்ணாக்கு... பாவம் புண்ணியம்னுகிட்டு! எங்கயும் எப்பவும் புத்தியும அதை கொண்டு காட்ற தைரியமும தான் பெரிய விசயம். இரண்டும் எங்ககிட்ட நிறைய இருக்கு.

அமைதியா இருந்தா அய்யாவை காட்டுல போய் எரிக்கற வரை கூட இருககலாம். இலலை கொஞ்ச நேரத்துல உன்ன எல்லாரும் கல்லால அடிபபாஙக. அதுக்கு என்ன உண்டோ அதை செய்துடுவேன்...."

மிரட்டலாய் பேசி விட்டு விலகிய ஜீவா காளியம்மாளிடம் போய் காதில ஏதோ குசுகுசுத்தான். அதற்குள் விஷயம் பரவி திபுதிபுவென்று கூட்டம் வரத் தொடங்கி விட்டது. வருகின்றவர்கள் எதிரில் ஹாலிலேயே அமுதன் படுத்திருந்ததை எலலோரும் பார்த்தனர்.

"அய்யாவுக்கு போட்டியா, மாப்ளையும் தன்னிய போட்டுட்டு அளப்பற பண்ணதுல அய்யாவுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்துடுச்சி, கார் டிரைவர் மகன்னு பேதம் பாக்காதவரை அநியாயமா கொன்னுட்டான்...."

ஒருவர் பற்றவைக்க ஆரம்பித்தார். ராமலிங்கத்துக்கு ஆத்திரமும் துக்கமும் நெஞ்சை அடைக்க ஆரம்பித்தது.

தேவியும் அமுதன கிடநத கோலத்தை பாரதது அதிரநதவளாக "என்ன மாமா.... இந்த நேரததுல இவர் இபபடி கிடககறாரு. நான் இபப என்ன

மாமா பண்ணுவேன்?" என்று வெடித்தவளை காளியம்மாள் தாங்கிக் கொண்டாள்.

"என் கண்ணு... நீ கலங்காத! இந்த குடிக்கு உன் அப்பா தான் அடிமைன்னா உன் புருஷனும் அடிமைங்கறது இப்பல்ல தெரியுது. பாழாப் போன குடியை விட்டாதான் ஆண் வர்க்கமே நல்லா இருக்கும்..." என்று இது தான் சமயம் என்பது போல அவள் பேசவும் அமுதனின் தாய்க்கு நெஞ்சு வலி வந்து விட்டது. –

"என்னங்க இது அநியாயம்? பணக்கார சதின்னு கேள்விப்பட்டிருக்கேன். அது இவ்வளவு பயங்கரமானதுங்களா?" என்று கேட்டவள் ராமலிங்கம் மேல் விழுந்து அப்படியே மயங்கத் தொடங்கினாள்!

இன்று

மறுபுறம் ஏ.சி.பி சந்திரமோகன் தான் வருவதாக கூறி போனைக் கட் செய்யவும் ஏட்டு பரமானந்தம் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் ராஜகுருவுக்கும் போன் செய்தார்.

"சார் எங்க இருக்கீங்க?"

"ஏன்யா.... எதுக்கு கேக்கறே?"

"முக்கியமான விஷயம் சார். உங்களுக்கு நான் ரொம்ப நேரம் ட்ரை பண்ணேன். லைன் கிடைக்கல! அதனால் சாருக்கு அடிச்சேன். அவர் கிளம்பி வந்துகிட்டு இருக்கார் நீங்களும் வாங்க சார்...."

"விஷயத்த சொல்லு... யாருக்கு என்ன பிரச்னை எங்கயாவது எதாவது கலவரமா?"

"இல்ல சார். நம்ம புது எஸ்.ஐ. அமுதேஷ்வர் சார் இப்ப எதிரிங்ககிட்ட சிக்கிகிட்டு இருக்கார் சார். அவரை ரெஸ்கியூ பண்ணியாகணும் சார்."

"யார் அந்த எதிரிங்க?"

"திருமங்கலம் பாளையகார குடும்பம் தான் சார்..."

"அவங்க போலீசையே மடக்கற அளவுக்கு துணிஞ்சிட்டாங்களா?"

"சீக்கிரம் வாங்க சார்... அமுதேஷ்வர் சார் கோட்வோடுல தான் பேசினார். அவர் நிலை ரொம்ப சீரியஸ் சார்."

"இதோ வரேன்... எதுக்கும் நம்ம ஸ்டேஷன்ல இருக்கறவன்'னுங்கள செக் பண்ணி தோட்டா ஃபில் பண்ணிடுங்க."

"நான் பண்ணிட்றேன் சார்." ஏட்டு பரமானந்தம் பம்பரமாய் செயல்படத் தொடங்கினார். செல்லுக்குள் கிடந்த அந்த லாரி டிரைவரும் கிளீனரும் வெறித்துப் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

"கொஞ்ச நேரத்துல உங்களுக்கு துணையா எல்லாம் வரப்போறாங்க பாரு. பதினஞ்சு வருஷத்துக்கு வேலூர் ஜெயில்லயும், சேலம் ஜெயில்லயும் கிடந்து களி திண்ணப் போறீங்கடா...."

என்ற பரமானந்தத்தை மலங்க மலங்கப் பார்த்தனர்!

நம்பூதிரியின் கார் பங்களா முகப்பில் நின்றது. ஓடிப்போய் கதவைத் திறந்து நம்பூதிரியை அழைத்துச் செல்லத் தொடங்கினர் சிலர்

நம்பூதிரியால் முன்பு போல் வேகமாக நடக்க முடியவில்லை. எண்பது வயது முதுமை மூச்சுவாங்க விட்டது. கண் பார்வையிலும் ஒரு பெரிய தெளிவில்லை. கீழே படி ஒன்றை பார்க்காமல் கால் தட்டியதில் உயிர்

போனது. நம்பூதிரிக்கு கால்தட்டவுமே அது கெட்ட சகுனம் போல தோன்றிவிட்டது. அப்படியே பக்கமாய் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்த நம்பூதிரி நாலாபுறமும் கூர்மையாக பார்வையை விட்டார்.

"என்ன சாமி உக்காந்துட்டீங்க?" என்று ஜீவானந்தம் ஆட்களில் ஒருவன் கேட்டிட நம்பூதிரி முறைத்தார்.

எதிரே சுவற்றில் கெடிகாரம் ஒன்று ஓடாமல் நின்றிருந்தது. அதை பார்க்கவும் நம்பூதிரி முகம் மேலும் கோணலாக மாறத் தொடங்கியது

"நம்பூதிரி சாமி... என்னாச்சு?"

"சகுனம் சரியில்லை. ஜீவாவையும், காளியையும் இங்க வரச சொல்லு..."

"கிட்ட தான சாமி... அதோ அங்க போய் திரும்பினா ரூம். அதுக்குள்ள தான அந்த போலீஸ் எஸ்.ஐயும் இருக்கான."

"நான் சொன்னத நீ கேள்... ஜீவாவை இங்க வரச் சொல்..."

நம்பூதிரி கட்டளைக் குரலில் சொல்லும் போதே யதார்த்தமாக ஜீவா வந்துவிட்டான.

"நம்பூதிரி.... வாங்க வாங்க...." என்று ஓடி வந்தான். அருகே வரவும் நம்பூதிரி வெறித்துப் பார்த்தார.

"என்ன நம்பூதிரி.... என்னாச்சு?"

"சகுனம் சரியில்ல... முதல்ல இங்க இருந்து எல்லாரும் வெளிய போங்க."

"இப்படி திடீர்னு சொன்னா எப்படி நம்பூதிரி? அந்த எஸ்.ஐ இப்ப நான் சொல்ற மாதிரி எல்லாம் கேட்கறேன்னு சொல்றான்."

"அவ்வளவும் பொய்...."

"பொய்யா.... அது எப்படி அவனை பாக்காமலே சொல்றீங்க?"

"இதோ பார்.... பேச நேரமில்லை. பத்து நிமிஷத்துக்குள் நீ இங்க இருந்து வெளியேறலைன்னா காலத்துக்கும் உனக்கு கஷ்டம். உனக்கு உதவிக்கு வந்த எனக்கும் கஷ்டம். நான் வரேன்...."

நம்பூதிரி சொன்ன வேகத்தோடு திரும்பி நடந்திட

ஜீவாவுக்கு குழப்பமாக இருந்தது

"நம்பூதிரி.... இந்த எஸ்.ஐ.ய என்ன செய்ய?" என்று நடக்கும் நம்பூதிரியிடம கேட்டான.

"அவனை விட்டுட்டு ஓடிப்போ.... நல்ல வக்கீல் வெச்சு ஜாமீன் வாங்கு முதல்ல. இல்ல நீ அரெஸ்டாவே!

அரெஸ்ட் ஆனா அவ்வளவு தான்! நான் உள்ள நுழையும் போதே உன் எதிர்காலம் தெரிஞ்சி போச்சு."

என்ற படியே நம்பூதிரி தான வந்த காரில் ஏற கார் புறப்பட்டது. ஜீவானந்தத்துக்கு இதயம் துடிக்கத் தொடங்கியது. காளியம்மாளும் வேகமாய் வந்து சேர்ந்தவளாக 'எங்க நம்பூதிரி... இன்னுமா வரலை?" என்று கேட்டாள்.

"அக்கா... நம்பூதிரி மிரட்டிட்டு போறாரு.... இந்த எஸ்.ஐ நடிக்கிறானாம். பத்து நிமிசத்துல இந்த வீட்டை விட்டு ஓடாட்டி மாட்டிப்போமாம்...."

என்றிட காளியம்மாளுக்கு பதைக்க தொடங்கியது.

"இருக்கா வரேன்.... நீ கால தயாரா இரு... நான் போய் எஸ்.ஐ. அமுதேஷ்வரை ரிலீஸ் பண்ணிட்டு வரேன்." என்று ஓடிய ஜீவானந்தம், அமுதேஷ்வர் அறை கதவை திறந்தான். உள்ளே அமுதேஷ்வர் ஏதோ ஒரு யோகி போல தியானத்தில் இருக்க உற்று ஒரு பார்வை மட்டும் பார்த்து விட்டு விறுவிறுவென்று பக்கத்து அறைக்கு சென்று அங்கு இருந்த மாதங்கியை இழுத்துக் கொண்டு வாசல் நோக்கி நடக்கத் தொடங்கினான்.

வெளியே காளியம்மாள் காரில் காத்திருக்க மாதங்கியோடு வந்த ஜீவா தான் முன்பக்கம் ஏறிக் கொண்டு பின்னால் மாதங்கியை ஏறச் சொன்ன போது போலீஸ் ஜீப் ஒன்று வேகமாக வந்து நின்றது!!

# 37

அன்று

மயங்கிய மனைவிக்கு மயக்கம் தெளிய வைக்க முயன்றார் ராமலிங்கம். சற்று தள்ளி ஒரு பாத்திரத்தில் தண்ணீர் இருந்தது. அதை எடுக்கப் போனவரை ஜீவானந்தம் தடுத்தான்.

''என்ன வேணும். தண்ணியா?'' என்று எகத்தாளமாக கேட்டவன்' இவ்வளவு சொத்தையான உடம்பை வெச்சிகிட்டு நீ எல்லாம் என்னை வாடா போடாங்கறியா?" என்று கண்களை அகட்டி உருட்டினான்.

''வேண்டாம் ஜீவானந்தம். இது நாம், சண்டை போட்டுக்கற நேரம் இல்லை. கடவுள் மாதிரி இருந்த ஐயா போய்ட்டாரு. அவரை நல்லபடியா அடக்கம் பண்ணனும். நான் அவர் உப்பைத் தின்னு வளர்ந்தவன். உன்ன கெஞ்சிக் கேட்டுக்கறேன்."

ராமலிங்கம் நிஜமாலுமே தளைந்து போய் பேசினார்.''

''என்ன? சண்டைக் களமாக்காதேன்னு சாதாரணமா சொல்றே? என் மாமா சாகவே நீங்க தான் காரணம். உங்களை விட்டா அவ்வளவு தான் - அதுலயும் உன் மகள் கொஞ்ச நாளா போட்ட ஆட்டதத பாத்தவன் தானே நான்....?"

"டேய் ஆட்டமா ஆடனது நாஙக இலலடா... நீங்கடா! எங்கிருநதோ வநத எச்சிலைடா நீயும உன் அககாவும... ஐயாவோட பலவீனத்தை தெரிஞ்சி உறவை உருவாக்கி இபப அவரை கொன்னதும் நீங்கடா... என் மகள் இல்ல..."

352-353/384 Go

"என்னை சவுண்டு விட்றே? இப்படி சத்தமா பேசிட்டா நீ பேசினது நின்னுடுமா? நிக்கத் தான் நானும் விடுவேனா....?"

"என்னடா பண்ண முடியும் உன்னால? இந்த குடும்பத்துக்குன்னு ஒரு வாரிசு என் மருமக வயித்துல உருவாயிடிச்சுடா. ஐயா அனாதையா விட்டுட்டு போகலை... நீ வேணா பார்... அவரே திரும்ப வந்து பிறப்பாரு. இது அவர் சொத்து... என் மகன் இந்த வீட்டு மருமகன்... நான் மாப்பிள்ளை வீட்டுக்காரன், மதிப்பான சம்பந்தி! உன்ன மாதிரி ஒண்ட வந்த பிடாரி இல்ல."

ராமலிங்கம் உச்சபட்சமாக பேசிட அந்த பங்களாவே திகைத்து நின்று கேட்டது. கணக்கு பிள்ளை மாணிக்கம் ஓடி வந்து நின்றவராக பதைப்பைக் காட்டினார். ஜீவானந்தத்துக்கு அவர் விழித்துக் கொண்டு விட்டதும் புரிந்தது. இதற்கு மேல் பேசிப் பயனில்லை என்பது போல் உணர்ந்தவன் வெறித்து பார்த்தான். அடுத்த சில நொடிகளில் அவனது அடியாட்களில் சிலர் அவரை குண்டுக்கட்டாக தூக்கி மாடி அறைக்கு கொண்டு சென்றனர். பின்னாலேயே அமுதனின் தாயையும் தூக்கிச் சென்றனர்!

அமுதன் ஹாலில் எல்லோரும் பார்த்திட அரை போதையில இருந்தான்...

"இவன் இப்படியே இருக்கட்டும். எல்லாரும் போகட்டும்" என்ற ஜீவானந்தம் மாணிக்கத்தை அழைத்து எல்லோருக்கும் தகவல் தரச் சொன்னான். அப்படியே 'இங்க நடந்த எதுவும் வெளிய போகக் கூடாது... போனா என்னைப்பத்தி உனக்கு நல்லா தெரியும். உன் வேலை மட்டுமில்ல உன் உசிரும் போயிடும்...'' - என்றான்.

இத்தனை களேபரத்தின் போதும் காளியம்மாள் இல்லாதது தான் ஆச்சரியம். அவள் தேவியை தனியே அழைத்துச் சென்றவளாக தன் கைப்பட ஆரஞ்சு பழத்தை பிழிந்து ஜூஸ் போட்டுக் கொடுத்தபடி இருந்தாள்.

"குடி கண்ணு... பிள்ளைதாச்சிப் பொண்ணு! வயிறு காலியாவே இருக்க கூடாது. உனக்காக இல்லாட்டியும் உன் வயித்துல வளர்ற ஜீவனுக்காகவாவது குடி...'' என்று கரிசனம் காட்டியவள் அந்த ஜீசில் தேவி பார்க்காதபடி, பொடி போல் ஒன்றை கலந்து கலக்கித்தான் கொடுத்தாள்.

அந்த அறைக்குள் ஆவேசமாக வந்த ஜீவானந்தம் "அக்கா எல்லாருக்கும் தகவல் தரச் சொல்லிட்டேன். பேப்பரிலயும் முழு பக்கத்துக்கு விளம்பரம் கொடுக்க வெச்சிட்டேன் மாப்ள தான் இப்ப பாத்து ஊசிய போட்டுகிட்டு போதைல கிடக்கறாரு..." என்று வருத்தப்படுவது போல தேவியை பார்த்தான்.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் தானாக வந்தபடி இருக்க எந்தவித பதில் பேச்சும் இல்லை.

"தேவி... அப்பாக்கான காரியத்தை எல்லாம் இப்ப இருக்கற நிலையில் உன் புருஷன், தான் செய்யணும். ஆனா அவன் சுய நினைவுல இல்ல. என்னம்மா பண்ணட்டும்?'' - என்றும் கேட்டான்.

அவள் கலங்கி கசங்கி குழம்பிப் போயிருந்தாள். என்ன சொலவதென்றே தெரியாமல் அவனை மிகப் பரிதாபமாக பார்த்தாள்...

"டேய்... இவள கேட்டா இவளுக்கு என்னடா தெரியும் நாம் தான்டா எல்லாம் செய்யணும். நீ தான் இருக்கியே....?'' என்று. சொன்னபடியே தேவியை பார்த்தாள். தேவியிடம் எந்த மறுப்பும் இல்லை எதிர்ப்பும் இல்லை!

அப்படியே அவளை ஒரு ஓரமாக உட்காரவைத்து விட்டு இருவரும் ராஜரத்னம் உடல் கிடந்த படுக்கைக்கு வந்தனர். ஹாலில் அவருக்காக மேடையை சிலர் உருவாக்கி முடித்திருக்க "மாமா...." என்கிற போலியான கண்ணீரோடு ராஜரத்னத்தின் கால்களை ஜீவானந்தம் பிடிக்க, இன்னும் சிலர் வந்து உடம்பைத் தொட்டுத் தூக்கினர்.

உடம்பு ஹாலில மேடை மேல் கிடத்தப்பட்டது. பட்டு வேட்டி கொண்டு வரப்பட்டு அவருக்கான சுசங்கிய வேட்டி சட்டை என்று சகலமும் மாற்றப்பட்டது. அதற்குள்ளாகவே ஒரு ஐம்பது பேர் புலம்பியபடியே வந்து விட்டனர். கொட்டு மேளக்காரனும், சாவுக்கு ஆடும் கூத்தாளர்களும் கூட வந்திட தப்பட்டை சப்தம் ஒலிகக ஆரம்பித்தது.

வருகின்ற அவ்வளவு பேரும போதையில் கிடந்த அமுதனைத் தான முதலில் பார்த்தனர். அதிர்ந்தனர். அதன் பின் ராஜரத்னத்துக்கு மாலை போட்டனர்.

ராமலிங்கமும், அவர் மனைவியும ஓடி விட்டதாக ஒரு கதையை தன ஆட்கள் மூலம பேச வைத்தான் ஜீவானந்தம்! -

திருப்பரங்குன்ற மலைத்தளம் அருணாசல சித்தர் தியானததில இருக்க ஒருவர் ஓடி வந்தார். அவருக்கு மூச்சிரைத்தது. அந்த இரைப்பு சப்தமே அருணாசல சித்தர் கண் திறக்க போதுமானதாயிருந்தது.

"சாமி.... நடக்க கூடாததெல்லாம் நடக்க தொடங்கிடிச்சு சாமி." என்ற வந்த மனிதரும் புலமப ஆரமபித்தார். சித்தரிடம் பேரமைதி. அந்த உச்சியிலும் சாவு விட்டு கொட்டு சப்தம் நன்றாக கேட்டது.

"கேட்டீங்களா சாமி கொட்டு சப்தத்தை.... பாளையக்கார குடும்பத்து பெரியவர் ராஜரத்னம் செத்துட்டார். அவர் மாப்ளையான உங்களுக்கு நல்லா தெரிஞ்ச அமுதனுக்கு ஏதோ போதை ஊசி போட்டு அவனை போதக்காரனாக ஆக்கிட்டாங்க.... அந்த பொண்ணோ வயித்துல ஒரு குழந்தையோட வாய திறக்காம அழுதுகிட்டிருக்குது.

நடக்கறதெல்லாம் ஒரே மாயமாலமா இருக்கு. நீங்கள்ளாம் எதுக்கு சாமி இருக்கீங்க?"

என்று அந்த மனிதர் கேட்ட கேள்விகள் அருணாசல சித்தரை ஆகாசத்தை நோக்கி பார்க்க வைத்தன. பார்த்தபடியே பேசவும் செய்தார்.

"முன் ஏர் எவ் வழியோ அந்த வழில தான் பின் ஏர் போகும்? ராஜரத்னம் தப்பு பண்ணிட்டான். அது தான் இப்ப பலவிதமா பத்தி எரியுது. இது யாக நெருப்பு இல்ல. சுடுகாட்டு நெருப்பு! காலத்தால் தான் சரியாகும் யாராலையும் எதுவும் செய்ய முடியாது. அதே சமயம் இப்ப தப்பு பண்ற யாரும் தப்பிக்கவும் முடியாது! காலம் தான பதில் சொல்லும்...."

"அப்ப இதை சொல்லவா நீங்க இருக்கீங்க?"

"அப்படித்தானனு வெச்சுக்கயேன்...."

அருணாசல சித்தர் பதில் அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது!

இன்று

போலீஸ் ஜீப்பை பார்க்கவும் ஜீவா தன் காரை வேகமாய் எடுக்கச சொன்னான். டிரைவரும் காரைக் கிளப்பியவனாக தப்பிக்கப் பார்த்தான. ஆனால் பின தொடர்ந்து வந்த போலீஸ் வேன் ஜீவா நினைப்பில் மண்ணள்ளிப் போட்டது.

356-357/384

காருக்குள் ஜீவாவும் காளியம்மாளும் தங்கள் கதை முடியப் போவதை அந்த நொடியே புரிந்து கொண்டனர். ஜீவா தேங்கி நின்ற காரில் இருந்து, ஓடத் தொடங்கினான்.

அவனைச் சுடுவதற்காக ஒரு போலீஸ்காரர் துப்பாக்கியைத் தூக்கினார்.

'சுட்றாதீங்க... அவனை உயிரோட பிடிக்கணும்' என்கிற குரல் அவரைத் தடுத்தது. குரல் கொடுத்தது உள்ளிருந்து வெளிவந்திருந்த அமுதேஷ்வா.

குரல் கொடுத்தது மட்டுமல்லாமல் அவனைப் பிடிக்க தானே ஓடத் தொடங்கினான். கல்லூரியில் ஓட்டப்பந்தயங்களில் பரிசு வாங்கியதெல்லாம் அப்போது கை கொடுத்தது.

ஜீவா கண்மண் தெரியாமல் ஓடினான். குட்டிக் குட்டி சந்துகள், இடைப்படும் மதில் சுவர்கள் என்று எதைப் பற்றியும் கவலைப்படவில்லை.

அமுதனும் விடுவதாயில்லை!

காருக்குள் இருந்த காளியம்மாளை ஜீப்பில் வந்த போலீஸ்காரர்கள் வளைத்துப் பிடித்து தங்கள் வேனில் ஏற்றினர்.

ஏ.சி.பி சந்திரமோகனும் தன் தனி வாகனத்தில் வந்திருந்தார். அவர் முன் மாதங்கியை நிறுத்தினர்.

"யார் இந்த பொண்ணு?"

"பாளையக்காரர் ராஜரத்னத்தோட பேத்தி சார். இந்த சொத்துக்கெல்லாம் ஒரே வாரிசு..."

"ஐ.சீ... உன் பேர் என்னம்மா?"

அவர் மாதங்கியிடம் கேட்டதற்கு அவள் மலங்க மலங்க பார்த்தாள். கண்களில் மருட்சி ஒரு வித பயம்....

"உன்னைத்தாம்மா... உன் பேர் என்ன?"

"மா... மா... மாதங்கி..."

"பயப்படாதே, உன்னை எதுவும் செய்ய மாட்டோம்..."

"சார்... இந்த பொண்ணுக்கு வெளி உலகமே தெரியாது சார். இதோ இந்த காளியம்மாள் சொத்துக்காக இவளை தன் கண்ட்ரோல்லயே வெச்சு வளத்திருக்கா. படிப்புக்காக பள்ளிக்கூடம் பக்கம் கூட அனுப்பலன்னா பாத்துக்குங்களேன்...."

"இவ்வளவு விபரம் தெரிஞ்சிருக்கு இவளை ஏன் முன்னாலயே அரெஸ்ட் பண்ணலை?"

"இவ விடலை சார். யார் வந்தாலும் கவனிச்சிடுவா சார். விட்டா உங்களுக்கே ஒரு விலை வைப்பா சார்

ஏட்டு பரமானந்தம் சொன்னதைக் கேட்டு முகம் சுளித்த காளியம்மாள்'

"பாத்து பேசுய்யா... நான் பாதாளத்துல விழுந்தாலும் என்னை வெளிய தூக்க ஆள் இருக்கு. ஜாக்ரதை..." என்றாள்.

அடுத்த நொடி அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விழுந்தது. அறைந்தது ஏ.சி.பி சந்திரமோகன்!

காளியம்மாள் வெறித்துப் போய் பார்த்தாள்.

"வாயத் திறந்தே கிழிச்சிடுவேன். போலீஸ் டிபார்ட்மெண்ட் என்ன சாக்லேட்டா இல்லை, பிஸ்கட்டா நீ விலைக்கு வாங்கறதுக்கு...? வரும் போதே உன் குடும்பம் பத்திய எல்லா தகவல்களையும் தெரிஞ்சிகிட்டு தான் வந்துருக்கோம்.

நீ அசாதாரணமான ஒரு கிரிமினல். உனக்கெல்லாமும் பக்தி இருக்கறது தான் ஒரு ஆச்சரியம். எந்த நம்பூதிரியை வெச்சு இவ்வளவு நாள் தப்பிச்சியோ அந்த நம்பூதிரி இப்ப உயிரோட இல்லைங்கறது தெரியுமா உனக்கு?"

ஏ.சி.பி.யின் கேள்வி காளியம்மாள் கண்களை ஆந்தை விழிகளாகவே மாற்றி விட்டது.

"போற வழியில ரயில்வே ட்ராக்கை இறங்கி தாண்டும் போது தடுக்கி விழுந்து ரயில்ல அடிபட்டு துண்டு துண்டா ஆயிட்டான். அந்த பக்கமா வந்த நான் அந்த கண்றாவியை பாத்துட்டு தான் வரேன்." என்று அவர் விளக்கம் தரவும் காளியம்மாளுக்கு சர்வ நாடியும் ஒடுங்கி விட்டது.

"ஆமா எங்க அமிர்தேஷ்வர்?"

"சார் இவளோட தம்பி தான் சார் எல்லா விஷயத்துக்கும் இவளுக்கு ரைட் ஹேண்ட். ஜீவாங்கற அவனை துரத்திகிட்டு போயிருக்காரு சார்..."

"இங்க வேற யாரும் எஸ்.ஐக்கு சப்போர்ட்டா போகலியா?"

"போயிருக்காங்க சார்... அவன் மலை மேல ஏறி எங்கயாவது ஒளிஞ்சிக்கப் பார்ப்பான் சார். இரவுண்டுல அவன் எங்க போனாலும் சிக்கிடுவோம்கறது அவனுக்கும் தெரியும் சார்."

"கமான் நாமளும் போவோம். இவளை ஸ்டேஷனுக்கு இழுத்துகிட்டு போய் லாக் அப்ல வைங்க. அவனையும் பிடிச்சுகிட்டு வர்றோம்."

ஏ.சி.பி சந்திரமோகன் கட்டளைகளை பிறப்பித்தபடியே வேகமானார். அவர் வந்திருந்த இன்னோவா தன் தலைக்கு மேலான சைரன் சிகனலோடு வேகமாக அங்கிருந்து திருப்பரங்குன்றம் மலை அடிவாரப் பரப்பு நோக்கி புறப்பட்டது.

ஏட்டு பரமானந்தம் சொன்னது சரிக்கச்சரி என்பது போல் ஜீவா மலைமேல் தான் ஏறியிருந்தான். அமிர்தேஷ்வரும் விடவில்லை. ஒரு போலீஸே ஓடுவதைப் பார்த்து ஓட முடிந்த பொது ஜனம் எல்லாம் கூட பின்னால ஓடியதில் அடிவாரத்தில் அப்படி ஒரு கூட்டம்! சிலர் அமிர்தேஷ்வருக்கு இணையாக அவன் பின்னால் ஓடினர். ஜீவா ஒரு பாறை பின்னால் மறைந்து மூச்சு வாங்கத் தொடங்கினான். அவன் எதிரில் மதுரையின் ஒரு பக்க விரிவு காட்சிகளாய் தெரிய முன்னால் பெரும் சரிவு. விழுந்தால் எலும்பு கூட மிஞ்சாது என்பது போல...

## 38

அருணாசல சித்தரைப பாரகக வந்த மனிதா சிததரின் பொதுப்படையான பதிலால சோரந்து போய அந்த நபா திரும்பத் தொடஙகினாா. காதுகளில அந்த கொட்டு சபதம் கேட்டபடி இருந்தது. சித்தா முகத்திலும் ஒரு வறண்ட புன்னகை தோன்றி மறைந்தது!

ராஜரதனததின இறுதி யாத்திரை தொடங்கியது. உள்ஞா ஸடேஷன இனஸபெகடரில இருந்து பஞ்சாயத்து தலைவாகள், தொகுதி எம்.எல்.ஏ. என்று எல்லோரும் வந்திருந்தனா. எல்லோா முன்னாலும் ஒரு சிலை போல அமாந்திருந்தாள தேவி. எலலோருடைய பாாவையும் எங்கே அமுதன் என்று தேடியபோது அவனை எல்லோரும் பாா்க்க வேண்டும் என்பதற்காகவே அவன் கையில் ஒரு மாலையை தந்து தள்ளாடியபடியே அவனை அழைத்து வந்தனா. அவனுக்கு தெளிவே ஏற்படக் கூடாது என்பதற்காக மேலும் ஒரு ஊசியைப் போட்டிருந்தனா. அவனைப் பாா்த்தவாகளுக்கெலலாம் அதிாச்சி. அவன இறுதி மாலை போடவும் யாத்திரை தொடங்கியது. அப்போது,

"அவருக்கு ஊத்திக் கொடுக்கும்போது அவனும் கொஞ்சம் ஊத்திக்கிட்டான். அவா போய் சோ்ந்துட்டாா. இவனும் இப்படியே இருந்தா போய் சோ்ந்துடுவான்." எந்று அவாகள காதுபட ஒருவன் பேசினான்.

"இல்லை... அமுதன் நல்ல பையன் இப்படி மாறிப்போற ஆளே கிடையாது" என்றும் ஒரு குரல. அந்த குரலுக்குரியவரை அப்படியே தள்ளிச் சென்று, தனியறையில் நிறகவைத்து ஒரு ஆயிரம் ரூபாயை காட்டினா. அடித்தால பயம் தான் வரும். பணமோ பற்றை உருவாக்கும். அந்த மனிதனும் பேசாமல பணத்தை வாங்கிக் கொண்டான். அதன் பின "உங்களுக்கு சாதகமாவே இனி பேசறேன் அப்பப்ப கவனிச்சுக்குங்க" என்றான்.

காளியம்மாளின் ஆட்கள் பதிலுக்கு சிரித்தனா.

கடுகாட்டில் ராஜரத்னத்துக்கு ஜீவாதான் நெருப்பு வைத்தான். அதை புகைப்பட மெல்லாம் கூட எடுத்தனா. பலா மனதில பலவிதமான கேளவிகள் இருககத்தான் செயதது. அவாகளில இனஸபெகடரும் ஒருவா. வீடு திரும்பிய நிலையில் அவா காத்திருந்தாா. கொள்ளிவைத்து மொட்டை போட்டிருந்த நிலையில் நெற்றியில பட்டையோடு பக்திப் பழமாக அவரை நெருங்கி வந்து நின்றான் ஜீவா.

காளியம்மாள் தன் அறையில இருந்தபடி ஜன்னல் கதவை திறந்து வைத்துக் கொண்டு பாா்ப்பது தெரியாமல் பாா்த்தபடி இருந்தாா. அவளுக்கு பின்னால் கட்டிலில் கல் சிலை போல உட்காா்ந்திருந்தாள தேவி.

இனஸபெக்டா ஜீவாவை ஒரு மாதிரி பாா்த்தாா.

"என்ன சாா பாாவையே ஒரு மாதிரி இருக்கு..."

"நடக்கறதெல்லாமும் ஒரு மாதிரியல்ல இருக்கு..."

"என்ன சாா சொல்றீங்க?"

"நிறைய கம்ப்ளைண்ட் வந்திருக்கு ஜீவா."

"என்னன்னு?"

"ஐயாவை நீங்க தான குடிக்க வெச்சு" கொலை செயதீங்களாம. அமுதனை ஊசி போட்டு போதைக்காரன் ஆக்கியிருக்கீங்களாம்."

இன்ஸ்பெக்டர் கொஞ்சம் இடைவெளி விடவும் ஜீவா முகத்தில் லேசான பதட்டம்.

"உன் பதட்டமே எல்லாம் உண்மைன்னு காட்டிக் கொடுக்குது பார். கில்லாடிய்யா நீ... என்ன ஜாதியோ? எந்த ஊரோ? ஆனா அக்காவும் தம்பியும் எப்படியோ, பாளையக்கார அய்யாவை பிடிச்சு உறவுக்காரங்களாவும் ஆயிட்டீங்க... இதுக்கெல்லாம் ஒரு கழி வேணும்..."

"பாராட்டறீங்களா... இல்லை பொறாமைபட்றீங்களா?"

"நீ எப்படி வேணா எடுத்துக்கோ... நான் இன்னும் கொஞ்ச நாள்ல ரிடையர் ஆகப் போறேன்... இந்த வேலை எனக்கு ராசியே இல்லை... நான் எங்க போனாலும் சில்லரை வருமானம் தான். பல்கா இப்பதான் ஒண்ணு மாட்டியிருக்கு."

"புரியுது சார்... என்களத்தான் சொல்றீங்கன்னு. எனக்கு நல்லா தெரியுது சார். நான் என்ன செய்யணும்?"

"என்னய்யா நீ... நான் இன்னும் மிரட்டவே இல்லை, அதுக்குள்ற சரண்டராயிட்டே?"

"உங்கள மாதிரி எந்த பெரிய மனுஷனையும் நாங்க பகைச்சுக்க தயாரில்ல."

"கெட்டிக்காரன்யா... ஆமா பையனை போதக்காரன ஆக்கிட்டே... பொண்ணை எதை வெச்சு கட்டிப் போட்டிருக்கீங்க?"

"அதெல்லாமே அக்கா சமாச்சாரம் சார்... எனக்கு தெரியாது. அக்கா சொல்லும், நான் செய்வேன்"

"அப்ப மெயின் வில்லன்... சாரி வில்லச்சி உங்க அக்காதானா?"

"நான் நீ தான்னு நினைச்சிட்டேன் பாரு."

"தெரியாத மாதிரி பேசாதீங்க... விஷயத்துக்கு வாங்க."

"வர்றேன். எனக்கு வந்துருக்கற சந்தேகம் கலெக்டரால இருந்து எல்லாருக்கும் இருக்கு. அவங்களை எல்லாம் நான் சமாளிச்சிக்கறேன். ஆனா நீ என்னை மாசா மாசம் கவனிக்கணும்."

"மாசா மாசமா?"

"ஆமா... மாசா மாசம் ஒண்ணாம் தேதி எனக்கு கவர்மெண்ட் கூட சம்பளம் போட மறந்துடலாம். நீ போட மறந்துடக் கூடாது."

"சரிங்க சார்... அப்புறம்?"

"ஆமா இந்த பாளையக்கார குடும்ப சொத்து எவ்வளவு இருக்கும்?"

"சொத்தா?" - திடுக்கிட்டான் ஜீவா.

"என்ன வாய பொளந்துட்டே. உங்க தில்லாலங்கடி வேலை எல்லாமே சொத்தை ஆட்டைய போடதானே?"

"சார் நீங்க அதிகம் பேசறீங்க..."

"பேசினா தானே அதிகமா கறக்க முடியும்..."

"வேண்டாம் சார் - நல்லால்ல... நாங்க ஒண்ணும் தெருவுல போறவங்க இல்ல. இப்போதைக்கு என் அக்கா தான் வாரிசு. நான் அதோட வலது கை!"

"என்ன பெரிய வாரிசு? வைப்பாட்டி தானே உன் அக்கா.... கல்யாணமாகி பதிவா பண்ணியிருக்கு? இல்ல உங்கக்காக்கு வாரிசுதான் இருக்குதா?"

இன்ஸ்பெக்டர் மிரட்டலில விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கினார்!

இன்று

திருப்பரங்குன்ற மலையின்மேல் ஆபத்தான பெரும்பள்ளத்தை ஒட்டிய பாறை மேல எதிரில் நிற்கும் அமுதேஷ்வரை பார்த்தபடியே நின்றிருந்தான் ஜீவா என்கிற ஜீவானந்தம். இதே இடத்தில் தான் அந்த நாளில அமுதனும் தேவியும் நின்றிருந்தனர். அப்போது அமுதேஷ்வர் இடத்தில் இருந்தது ஜீவா!

காலம் இப்போது தலைகீழாக மாறிவிட்டது. புள்ளி வைத்து கோலம் போட்டது போல எல்லாம் நடக்கிறது. ஜீவாவுக்கே பிரமிப்பு தட்டியது. அன்று தேவியும், அமுதனும் நின்றபோது பின்னால் பெரிய சரிவும் பள்ளமும் இருப்பது அவர்களுக்கு தெரியாது. ஆனால் இன்று ஜீவானந்தத்துக்கு தெரியும்.

அவர்கள் தெரியாமலே கால் தடுமாறி கீழே விழுந்து சிதைந்து போயினர். ஜீவா வரையில் எல்லாமே தெரிந்தே நடக்கும் போல இருந்தது. ஜீவாவுக்கு போலீஸ் வசம் சிக்கினால் என்ன நடக்கும் என்று தெரியும்.

எவ்வளவோ பித்தலாட்டங்கள்! அதில் உச்சம் ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டரையே கட்டிப் போட்டு பிளாக் மெயில் செய்ததுதான். இதற்கு கோர்ட் என்ன தண்டனை தருமோ தெரியாது - ஆனால் போலீஸ்காரர்கள் தங்கள் பங்குக்கு நிச்சயம் அதேபோல கட்டிப் போட்டு தராமல் விடமாட்டார்கள். அதை நினைக்க நினைக்க வயிற்றில் அமிலம் சுரக்கத் தொடங்கியது.

அமுதேஷ்வர் துப்பாக்கியை நீட்டியபடி வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜீவானந்தத்துக்கு ஒரு வழிதான்... ஒன்று சரண்டர். இல்லாவிட்டால் தற்கொலை! இவ்வேளையில சற்றும் எதிர்பாராதபடி அருணாசல சித்தரும் அங்கு வந்ததுதான் ஆச்சரியம்!

அவர் வரையில அந்த காட்சி ஒரு அசாதாரண காட்சி. அவரை பார்க்கணும் அமுதேஷ்வரிடம ஒரு சலனம்! அவரும் அவனை மிகக் கூர்மையாகப பார்த்தார். தன் பார்வையாலேயே அவனுக்குள் பெரிய சலனத்தை ஏற்படுத்தினார்.... நேத்ர தீட்சை என்பதுபோல ஒருவகை தீட்சைப் பார்வை அது... அவனுக்குள்ளும் உணர்வுகளில ஒருவித கொந்தளிப்பான போக்கு ஏற்பட ஆரம்பித்தது.

எதிரில் நிற்கும் ஜீவானந்தம் மிரளமிரள பார்த்ததோடு "வேண்டாம் சார்.... என்ன விட்றுங்க.... உங்களுக்கு லட்சத்துல இல்லை - கோடில பணம் தரேன் - விட்றுங்க சார்." என்று புலம்ப ஆரம்பித்தான்.

பதிலுக்கு இன்னொரு புலம்பல் அமுதேஷ்வரிடம் உள்ளுக்குள் உருவாக தொடங்கியது.

"வேண்டாம ஜீவா.... எங்களை எதுவும் செய்துடாதே - தயவு செய்து வாழ விடு - வேணும்னா சொத்தை எல்லாம் எடுத்துக்கோ எங்கள விட்டுடு...." என்ற அந்த குரல் அமுதேஷ்வரைக் குழப்பியது.

இவனிடம் எப்போது நாம் கெஞ்சினோம் என்கிற கேள்வியும் எழுந்தது. அதை கவனித்த சித்தர் "என்னப்பா... பழைய சப்தமெல்லாம் திரும்ப கேட்குதா?" என்றார்.

"பழைய சப்தமா?"

"ஆமா... பழைய சப்தம் நீ போட்ட சப்தம். அது உன் பேச்சு தான். அப்ப நீ அங்க இருந்தே - இவன் உன் இடத்துல இருந்தான். காலம் இப்ப அப்படியே தலைகீழா மாறியிருக்கு. இந்த நாளுக்கு தான் காத்திருந்தேன். அன்னிக்கும் நான் இருந்தேன் - இன்னிக்கும் நான் இருக்கேன். செய்யற பாவம் சும்மா விடாதுங்கறதுக்கும், மறு ஜென்மம் உண்டுங்கறதுக்கும் நீ தான் எனக்கு சாட்சி."

"மறுஜென்மமா?"

"ஆமாப்பா... மறுஜென்மம்தான்... உனக்குள்ள வந்த சபதம் - நீ கேட்ட அந்த குரல் உன் போன ஜென்மக் கூக்குரல்: படுபாவி... இந்த சண்டாளன் அப்ப உன்னையும் உன் மனைவியையும் இந்த இடத்துல இருந்து நீங்களா விழும்படி செய்து கொலையை தற்கொலையாக்கினான். இப்ப நீயும் அதையே செய்... விடாதே! இவனை கைது செய்து கோர்ட் மூலம் தண்டிக்க நினைக்காதே! இவன் கோர்ட்டை கூட முடிஞ்சா விலைக்கு வாங்கிடுவான்..."

சித்தரின் விளக்கம் ஜீவானந்தம் முகத்தில் இருளைப் பூசியது. தப்பித்து ஓடவழி இருக்கிறது என்று நாலா புறமும் பார்த்தான். அப்போது எங்கிருந்தோ ஒரு குரங்கு ஒன்று வந்து பாறை மேல அமர்ந்து அவன் மேல பாயத் தயாரானது.

"ஏய்.... போ.... போ...."- அவன் விரட்டிப் பார்த்தான்.

அது விடவில்லை. ஒரே பாய்ச்சல்! அவன் தோள்மேல் அமர்ந்து காதைப் கடிக்க முனைய அவன் அதை தூக்கி எரிய முனைகையில் கால் தடுமாறி அப்படியே பின்னால் சரியத் தொடங்கினான். குரங்கு உதிர்ந்து ஒரு பாறையை பிடித்துக் கொண்டது. அவனோ 'ஹோ....' என்கிற பெரும் குரலோடு விழுந்து சில்லு சில்லாக சிதறிப் போனான்.

எட்டிப் பார்த்து அமுதேஷ்வருக்குள்ளும் அதே காட்சி... தனக்கும் அதேபோல் நிகழ்ந்து தான் சில்லு சில்லாக சிதறுவது போல.... சித்தர் மட்டும் பார்த்தபடியே இருந்தார்! அப்போது மற்ற போலீஸ்காரர்களும் அங்கே கூட்டமாய் நுழைந்தபடி இருந்தனர்!

# 39

அருணாசசல சித்தரின் அழுத்தமான கருத்தைக் கேட்டு கேள்வி கேட்ட மனிதா விசுகித்துப் போனார.

சொல்பவர் காலஞானியான ஒரு சித்தர்! அதில கறபனை இருப்பதாக கருத அவரால முடியவில்லை. இருந்தாலும் அவருக்குள் இன்னமும் சநதேகங்கள....

சாமி... சாகும்போது என்ன நினைக்கறோம்கறத வெச்சு தான் உயிரோட போக்கு இருக்கும்னு சொன்னீங்க. நான புரிஞ்சிக்கறதுக்காக கேக்கறேன். காலம் பூரா ஆட்டம் போட்டுட்டு சாகற சமயம் கிருஷ்ணா ராமான்னா எல்லா பாவமும் போய் சாமிகிட்ட போயிடுவாங்களே சாமி... அப்ப அவங்க தப்புக்கு தண்டனையே இல்லாம போயிடாதாசாமி?

"நல்ல கேள்விய தான் கேட்டுருக்கே... காலம் பூரா ஒருத்தன் எல்லா பாவங்களையும் பண்ணிட்டு சாகும போது கிருஷ்ணா ராமான்னுல்லாம சொல்லிட முடியாதுப்பா... உயிர் போற நேரம் வந்துட்டா உடம்பு அடங்க ஆரம்பிச்சிடும். உணர்வும் சுருங்கும்... ஞாபக சக்தியும் வேலை செய்யாது அப்ப செஞ்ச பாவம்தான் ஞாபகத்துக்கு வரும்..."

"ஒரு வேளை பக்கத்துல யாராவது இருந்து ஞாபகப்படுத்தினா?"

"அப்படி ஞாபகப்படுததறது நமககு ஒண்ணும் புதுசு இலலப்பா காதுல காண மந்திரம் சொலறதுன்னு ஒரு பழககம நம்ம மதத்துல கால காலமாவே இருக்கு. நீ என்ன தான் சாகக்கிடக்கறவன் காதுகிட்ட கிருஷணா ராமான்னாலும் அவன காதுல அது விழணும். விழறதுக்கு புண்ணியம பண்ணியிருககணும்."

"அப்ப காலம் பூரா பகதியோட இருந்தா மட்டும்தான சாகும் போதும் சாமி நினைப்பு இருக்குமா?"

"சத்தியமா அதுதான் உண்மை."

"ஒரு பேசசுக்கு கேககறேன்.... சாகும்போது நான் அடுத்த பிறப்புல ராஜாவா பிறககணும்னு ஆசைப்பட்டுகிட்டே செத்தா ராஜாவா பிறப்பேனா?"

"நிச்சயமா பிறப்பே... அதுதான் மனோ சக்தி! மனோ சக்தி ஒருத்தருக்கு சாகும போது எப்படி இருக்குஙகறதுல தான் அவரோட மறுஜென்மமும், முக்தியும் இருக்கு..."

"நீங்க இப்படி சொலறீங்க.... ஆனா நம்ப ஒரு மதத்தை தவிர மற்ற எந்த மதமும் மறு பிறப்பை பற்றி பேசலியே? பாவ மன்னிப்பு கேட்டுட்டா சொர்ககம் தானனு கிறித்தவ மதம் சொல்லுது. தப்போ சரியோ அதுக்கு தகுந்ததை அனுபவிச்சே தீரணும்னு இஸ்லாமும் சொல்லுது. இந்த உலகத்துல நம்ப மதத்தை விடவே இந்த மதங்கள்ளாம் தான் பெரிய மதங்கள். மக்கள் தொகையிலயும் சரி, நிலப் பிரபபுலயும் சரி.... அந்த மதவழி நடப்பவங்க அப்ப என்ன ஆவாங்க?"

"நீ இப்ப இருக்கற எண்ணிககையை சொலறே? நம்ப மதமோ யுகங்கள கடந்த மதம். அப்படி பாத்தா முதல் மதம், மூத்த மதம் பெரிய மதம் நம்ப மதம்தான். துவாபரயுகம், சதுர்யுகம், திரேதாயுகம், கலியுகம்னு.... நம்ப காலக் கணக்கு லட்சக் கணக்கான வருஷங்களப்பா...."

"அதெல்லாம் பொய் கற்பனைன்னு சொல்றாங்களே....?"

"அப்படிச சொலறவனை நினைசசு கோபபபடாதே, பரிதாபப்படு."

"ஏன் அப்படி சொலறீங்க?"

"ஒரு உண்மையை பொய்யின்னும் கற்பனைன்னும் நினைக்கறவனை வேற எப்படி நினைக்க?"

"நாம நினைக்கறத விடுங்க... அதுக்கு என்ன ஆதாரம்?"

"ராமாயண காலம் ஒரு உண்மைங்கறதுக்கு ஒரு சேது பாலம் போதும். இப்பவும் கடலுக்குள் அழியாத சாட்சியா அப்படியே இருக்கு. இதை உலகத்தோட பெரிய விஞ்ஞானிங்கற நாசாங்கற விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமே ஒதுக்கிட்டு போட்டோ படமெல்லாமும் வெளியிட்டுருக்காங்களே?"

"அப்ப மறுபிறப்பு பொய்னு நினைக்கறவங்க நிலை?"

"மறுபிறப்பை எடுத்து அவங்களே தெரிஞ்சிருக்கு வாங்கப்பா."

"சாமி கடைசியா ஒரு கேள்வி... மறுபிறப்பு உண்டு, கர்மவினை சும்மா விடாததுங்கறதுக்கு ஏதாவது ஆதாரம் இருக்கா சாமி!"

"நாம எல்லாருமே கூட ஆதாரங்கள் தான். முன் ஜென்மத்துல நம்ப பாவங்கள் மன்னிக்கப்பட்டுருந்தா நாம பிறந்துருக்கவே மாட்டோம். பிறந்திருந்தாலும் ஏழையா பணக்காரனா வெள்ளையாக கருப்பான்னு ஏற்றத் தாழ்வோடையா பிறந்திருப்போம்?

கடவுள் மன்னிக்கறவர்னா அவர் படைப்புல ஏற்றத்தாழ்வே இருக்கக் கூடாதே...? ஆனா இங்க குழந்தையா பிறக்கும் போதே எவ்வளவு ஏற்ற தாழ்வுகள்...?"

"பளிச்னு சொன்னீங்க.... இப்ப எனக்கு நல்லாவும் புரிஞ்சிடிச்சி. அப்ப நம்ப மறு ஜென்மத்துக்கும், நம்ப நல்லது கெட்டதுக்கும் கடவுளுக்கும் ஒரு சம்மந்தமும் இல்லையா நம்ப வாழ்க்கைல கடவுளோட பங்குதான் என்ன?"

"கடவுள் வேதத்தை கொடுத்துருக்கார்.... இப்படித்தான் ஒரு மனுஷன் வாழணும்னு வழிமுறைகளை கொடுத்துருக்கார். பாவம் செய்தா தண்டனை, புண்ணியம் செய்தா அதற்குரிய பயன்னு வழிமுறைகளை உருவாக்கியிருக்கார்.

பாவமோ புண்ணியமோ எல்லாமே உன்னைச் சேர்ந்ததுன்னு ஒருத்தன் எந்த ஆசையுமில்லாம என்னை போல சன்யாசியா வாழும்போது தான் அவனோட சொர்கத்துல இடம் கிடைக்குது. இல்லைன்னா செய்த நல்லது கெட்டதுக்கேற்ப புல்லாவோ பூண்டாவோ இல்லை மனுஷனாவோ பிறந்து அனுபவிச்சே தீரணும். இதுல யாருக்குமே விதி விலக்கில்லை."

ஒரு பெரும் கால ரகசியத்தை அருணாசல சித்தர் சொல்லி முடித்தார். அவரிடம் வந்து தேவி பற்றியும் அமுதன் பற்றியும் சொன்னவருக்கு ஒரு புறம் பிரமிப்பு மறுபுறம் வருத்தம்...!

அமுதனுக்கு எந்த உதவியையும் தன்னாலோ தங்களாலோ செய்ய முடியவில்லையே என்கிற வருத்தம்! சமூகம் என்பது எல்லா காலங்களிலும் இப்படித்தான் இருக்கிறது. அது ஒரு ரொட்டித்துண்டு கூட கிடைக்காத போது தான் புரட்சியில ஒன்று பட்டு இறங்கும். மற்ற நேரங்களில் நமக்கெதற்கு ஊர்வம்பு என்று தான் இருக்கும்.

இதுதான் எப்போதுமே சமூக தர்மம்! இதில் எப்போதாவது காந்தி போல சிலர் வரும்போது சில நல்ல மாற்றங்களும் ஏற்படும். ஆனால் எப்போதாவதுதான்...! பெரும்பாலும் சமூகம் என்பது சுயநலத்தோடும் பயத்தோடும் இருந்திருக்கிறது. இனியும் இருக்கும்.

இப்படி ஒரு சமூகத்தில் நல்லவர்களை விட தீயவர்கள் எண்ணிக்கை தான் அதிகமிருக்கும். அப்படித்தான் இப்போதும் இருக்கிறது. அப்படி இருப்பதன் காரணமும் அவருக்கு தெரிந்தது… அதை நினைத்து பிரமித்தபடியும் வருந்திய படியும் அவர் அங்கிருந்து விலகிப் போனார்…. போகும் வழியில் ஒரு குப்பை மேட்டில் பல நாள் தாடியோடு அமுதன் கிடப்பதையும் பார்த்தார்.

அமுதனின் உறவினர்கள் கூட அவனை அழைத்துப் போய் ஆஸ்பத்திரியில் சேர்த்து அவனை குணப்படுத்த நினைக்கவில்லை.

ஒரு பாளையக்காரனின் பாவம், தவறான ஒரு பெண்ணைத் தொட்ட பாவம் முதலில் அவன் மகளை பாதித்து, மகள் மூலமாக மருமகனையும் பாதித்து அவன் குடும்பத்தையே அழித்து விட்டது.

பாவத்துக்கு துணைபோனால இதுதான நிலை என்பது போல தான் அமுதன் குப்பை மேட்டில கிடந்தான்….

ஒரு நாளல்ல…. இரு நாளல்ல…. பல மாதங்கள்!

ஒரு சந்தர்ப்பத்தில் அவனைக் கொண்டு போய் வடநாட்டில் ஏதோ ஒரு ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி விட்டு வந்து விட்டார்கள்.

இங்கே தேவிக்கும் மாதங்கி பிறந்தாள்!

தேவிக்கு குழந்தை பிறக்கவுமே வசியம் லேசாக கலைந்து அமுதன் ஞாபகம் வந்தது. தன்னைச் சுற்றி நடக்கக் கூடாததெல்லாம் நடந்து விட்டதும் தெரிந்தது. இதனால காளியம்மாளுக்கும், ஜீவாவுக்கும தெரியாமல அமுதனைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினாள். அங்கே வேலை பார்ப்பவர்களில ஒருத்தி பரிதாபப்பட்டு வடநாட்டில் ஒரு ரயில் நிலையத்தில அவனை ஒரு பிச்சைக்காரனைப் போல் இறங்கி விட்டு விட்ட செயலைச் சொல்லவும் பதறிவிட்டது!

குழந்தைக்கு ஆறுமாதமாகி தவழத் தொடங்கிவிட்ட நிலையில் அமுதனை தேடிக் கொண்டு தனியாக ஒரு நாள் தேவி வட நாட்டிற்கு புறப்பட்டு விட்டாள். கூடவே அந்த வேலைக்காரியும் சென்றாள். ஒரு மாதத்துக்கும் மேல் எல்லா ரயில் நிலையங்களிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் தேடியதில், இறுதியாக அமுதன் காசியில் கண்ணில் பட்டான். அங்கும் போதைக்கு அடிமையாகவே இருந்தான். பிச்சை எடுத்து அந்த காசில் காசியில் திரியும் அகோரிகளோடு சேர்ந்து கொண்டு கஞ்சா குடித்தபடி இருந்தான். அவனை அங்கிருந்து அழைத்து வருவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது. தேவி இப்படி வீட்டை விட்டு ஓடிப் போகவும் காளியம்மாளும் போலீஸ் ஸ்டேஷனில் காணாமல் போன புகாரை அளித்ததோடு இனி குழந்தைக்கு தான் தான் கார்டியன் என்று தன் வக்கீலை வைத்து கார்டியன் சர்டிபிகேட்டை வாங்கி விட்டாள்.

ஆனால் அவள் எதிர்பாராத விதமாக புருஷனோடு தேவி திரும்பி வந்து நிற்கவும் ஆடிப் போனாள். அமுதன் தாடியும் மீசையுமாக மசமசவென்று நின்றான். தேவி மட்டும் தெளிவாக இருந்தாள்.

"சொத்துக்காக என் வாழ்க்கையோட ரொம்பவே விளையாடிட்டீங்க சித்தி. இனியும் நான் ஏமாறத்தயாரா இல்லை" என்று பேசவும் செய்தாள்…

காளியம்மாளுக்கு அவள் விழிப்பு அதிர்ச்சியைத்தான் அளித்தது. இருந்தும் அவளுக்கு அப்போதும் ஒரு யுக்தி தோன்றியது. குழந்தை அவள் வசம்தான் இருந்தது. அதற்கு விஷம் கொடுக்க தேவியின் கண் எதிரில் ஏற்பாடு செய்தாள்.

தேவி அதை எதிர்பார்க்கவில்லை "ஐயோ வேண்டாம் சித்தி" என்று கதறினாள்.

"இந்த குழந்தை உயிரோட இருக்கணும்னா என் தம்பி சொல்றபடி கேள் - இல்லை நான் கொஞ்சமும் யோசிக்க மாட்டேன் என்று வெறி பிடித்தவள் போல கத்தினாள்.

ஜீவாவும் அவர்கள் இருவரையும் தள்ளிக்கொண்டு போனான். காளியம்மாள் அவன் காதில் ஏதோ சொன்னாள். அதன் பின்னும் தேவியையும் அமுதனையும் ஒரு ஜோடி மாடுகளை ஒரு விவசாயி ஓட்டிச் செல்வதைப்போல ஓட்டிச் சென்றான் வெளியே கார் காத்திருந்தது. அதில் இருவரையும் ஏற்றினான்.

காரும் வேகமாய் புறப்பட்டது. திருப்பரங்குன்ற கிரி வலச்சாலையில் புழுதி பறக்கச் சென்ற அந்த கார் ஆலரவமேயில்லாத இடத்தில் நின்றது. இருவரையும் அங்கே இறங்க வைத்தவன் 'நடங்க மேல...' என்றான். 'எதுக்கு?' என்ற கேட்ட தேவியின் கன்னத்தின்மேல் ஒரு அறை அறைந்தான்.

"இதுக்கெல்லாம் நீ நல்லா அனுபவிப்பே...' என்று பதிலுக்கு வெடித்தாள்.

"ஓடுகாலி நாயே.... சாபமா கொடுக்கறே...?" ஏறுடி மேலே.... நீ இங்க என் பேச்சைக் கேட்கலே அங்க உன் குழந்தைக்கு உசர் போயிடும். இப்ப மணி மூணு... மூணரைக்கு நான் வீட்டுக்கு திரும்பாட்டி உன் குழந்தைக்கு கள்ளிப்பாலை கொடுத்துடுவா தாதி. இப்ப என்ன சொல்றே?"

"ஐயோ... என் குழந்தையை கொடுத்துரு.... இந்த சொத்தெல்லாம் வேண்டவும் வேண்டாம். எங்கள விட்ரு- நாங்க எங்கையாவது போய் பொழச்சுக்கறோம்."

"அதுக்கு தானே உனக்கும் விதியில்லை எங்களுக்கும் விதியில்லை.... உன் அப்பன் அவ்வளவு சொத்தையும் அந்த குழந்தை பேருக்குல்ல எழுதி வெச்சிருக்கான். ஒரு கால்காணி நிலத்தை எங்களுக்கு விட்டு வைக்கலியே. இதுக்கா எங்கக்கா உன் அப்பனுக்கு இரண்டாம் தாரமா வாக்கப்பட்டா?"

"எங்கப்பா உங்கக்காளை தொட்டு தப்பை பண்ணிட்டாலும் சொத்தை காப்பாத்திட்டார். அதை நினைச்சு நான் சந்தோஷப்படறேன். என் குழந்தையை கொன்னுட்டா நீங்களும் நடுத்தெருவுல நிக்கணும். அதனால என் குழந்தையை நீங்க கொல்லமாட்டீங்க... நான் இப்பவே போலீசுக்கு போறேன், எல்லாத்தையும் சொல்றேன்... நீ என்ன செய்யறேன்னு பாக்கறேன்."

என்று அப்படியே அவனுக்கு எதிராக திரும்பியவளைப் பார்த்து ஒரு குரூர சிரிப்பு சிரித்தான் ஜீவா. எங்கிருந்தோ வந்த இரண்டு பேர் அவளை அப்படியே வளைத்துப் பிடித்து தூக்கினார். மலை ஏறவும் செய்தனர். அமுதன் நடப்பதை எல்லாம் ஒரு பச்சைக் குழந்தை போல பார்த்தபடி இருக்க அவனை மலைமேல் அழைத்துச் செல்வது ஒன்றும் சிரமமாக இல்லை.

மலைமேல் யாரும் இல்லை! மனிதர்கள் நடமாடக் கூடிய இடமாகவும் அது இல்லை. ஒரு குறிப்பிட்ட இடத்தில இருவரையும் ஒன்று சேர்த்து நிறுத்தினான் ஜம்பு. தேவி கதறினாள்.

"வேண்டாம ஜம்பு.... எங்கள விட்று - நாங்க எங்கையாவது போயிடறோம்."

"எங்கையாவது எதுக்கு போறே... மேலே போ! எங்கையாவது போனா இவனை குணப்படுத்தி, திரும்பி வந்து என் குழந்தை என் சொத்துன்னு நீ எங்கள நடுத்தெருவுல நிறுத்திடுவே... மேலே போ!

"வேண்டாம் ஜம்பு... இது பெரிய பாவம்... எங்க பாவம் உன்னை சும்மா விடாது..."

"இதை விட பெரிய பாவத்தையே பண்ணிட்டோம். இது என்னடி?"

"என் வரால அப்படி நினைக்காதே... நான் இப்ப ஒரு தாய..."

"தாய் தானே... என்னமோ பேயங்கற மாதிரி பயமுறுத்தறே... அப்படியே பேயா வந்தாலும் நம்பூதிரி இருக்காரு பிடிச்சு குடுவைல அடைச்சிடுவோம்."

"ஜம்பு... எங்கள விட்று நான் திரும்பி எல்லாம் வர மாட்டேன். சத்யம் செய்து தரேன்."

"உன் சத்யத்தை உப்புல போடு... இப்ப மேல போ..." என்றபடி அவளை நெருங்க, அவளும் அமுதனோடு சில அடிகள் பின்செல்ல அங்கே ஒருவன் எண்ணையைக் கொட்டியிருந்தான். அதில் இருவர் கால்களும் பட்ட நிலையில் வழுக்க ஆரம்பித்தது. அப்படியே தடுமாறி ஒருவர் மேல் ஒருவர் விழுந்து பின்பக்க சரிவில் அலறலோடு விழ ஆரம்பித்தனர் சற்று தூரத்தில் ஒரு பறவை சரிவில் தியானத்தில் இருந்த அருணாசல சித்தர் காதுகளில் அலறல் சப்தம் விழவும் கண் விழித்துப் பார்த்தார்!

அமுதனும் தேவியும் விழுந்து முடித்து சிதறிப் போயிருந்தனர். கையை தட்டிக் கொண்டு ஜீவாவும் அவன் சகாக்களும் திரும்பியபடி இருந்தனர். அருணாசல சித்தர் அவர்கள் ஒருவர் பார்வையிலும் படவில்லை.

எந்த உணர்வுக்கும் இடம் கொடுக்கக் கூடாத சித்தரின் விழிகளிலும் கண்ணீரின் திரட்சி. அது கன்னத்தில் உருளும் போது அவர் அண்ணாந்து மேலே பார்த்தார்.

"இறைவா...

இவர்கள் விதியை இப்பிறப்பில் இப்படி முடித்து விட்டாய்... அடுத்த பிறப்பாவது இவர்கள் வாழும் பிறப்பாக இருக்கட்டும் காமவினைகளுக்கும் அதன் காரணமான மென்மப் பிறப்புக்கும் இவர்கள் வாழ்வே கூட ஒரு சாட்சியாகட்டும் மேலான சாட்சியாக நானே இருப்பேன்... அதன் பிறகாவது இந்த ஆசாபாசமுள்ள மாய வாழ்வில் இருந்து எனக்கு விடுதலை கிடைக்கட்டும்... நமச்சிவாயம்"

என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டார். அவரது யோக உடம்புக்கு அமுதனின் ஆத்மாவும், தேவியின் ஆத்மாவும் சுவேத உடம்போடு விண்ணில செல்வதும் தெரிந்தது. துடிதுடித்த இறப்பு... தவித்த எண்ணங்கள்..." என்று எல்லாம் கலந்த அந்த ஆத்மாக்களின் போக்கை வரும் காலத்தில் நாம் தெரிந்து கொள்ள நேருமோ?

இன்று

அருணாசல சித்தர் கிரீடம் குறித்து கேட்கவும் வாயைப் பிளந்தவனை அருகில் அழைத்தவர்.

"தம்பி... நான் இப்ப உன் துரிய சக்தியை தூண்டப் போறேன். அதுக்கு என் ஆத்ம சக்தியை பயன்படுத்தப் போறேன். எனக்கு 99 வயசாகுது! என் 23வது வயசுல நான் வீட்டை விட்டு வெளியேறி சதுரகிரி மலைக்கு போய் அங்க இருக்கற ஒரு சித்தர்கிட்ட சிஷ்யனா சேர்ந்தது காலத்தால் என்னையும் ஒரு சித்தனா ஆக்கிட்டேன் 1988வது வருஷம் என் 69வது

வயசுல உன் முன்பிறப்பை சந்திச்சேன் 30 வருஷம் கழிஞ்சு 99வது வயசுல உன் இப்போதைய பிறப்பையும் சந்திக்கிறேன். சுருக்கமா சொன்னா நான் 66 வருஷமா சன்யாசியா உப்பு புளிகாரம்னு எதையும் சாப்பிடாம பால் பழம் தயிர் அன்னம்னு சாப்பிட்டு உடம்புல உயிரை நிறுத்தி வெச்சிருக்கேன்.

உப்பு புளி காரம் வழியா தான் ஒரு மனுஷனை கிரகங்கள் ஆட்டி படைக்குது. அதை தவிர்த்துட்டா கிரகங்கள் செயலிழந்துடும். ஆத்ம சக்தியையும் பெருக்கிக்க முடியும். அப்படி பெருக்கின ஆத்ம சக்தியால பல அதிசயங்களை செய்ய முடியும். தண்ணி மேலே நடக்கலாம், காத்துல மிதக்கலாம் இப்படி பல அதிசயங்களை செய்ய முடியும். நான் அதை செய்து என் சக்தியை விரயப்படுத்தாம உன் துரியத்தை தூண்டப் போறேன். இது உனக்கு பூர்வஜென்ம ஞாபகங்களை உருவாக்கும் அதுல மிக முக்கியமானது பாளையக்கார குடும்பத்தோட ரத்னக்கல் பதிக்கப்பட்ட கிரீடம், அது புராதனமானது - விலை மதிப்பில்லாதது... பியூசியத்துல வெச்சு பாதுகாக்கப்பட வேண்டியது. அந்த ஞாபகத்துக்கு ஆளான பிறகு நீ பேசு' என்று அவன் நெற்றியின் நடுவில் தன் கட்டை விரலை வைத்தார். அவன் உடல் ஒரு விநாடி மின் தாக்குதலுக்கு ஆளானது போல துடித்தது. கண்கள் செருகிக் கொண்டன. அவனுக்குள் பூர்வஜென்ம நினைவுகளும் அணிவகுக்கத் தொடங்கின....

பாளையககார அரண்மனை வீட்டில ஒரு பாதாள அறை. அந்த அறை ஒரு தண்ணி தொட்டிகுள் இருநதுதான் ஒரு ஆச்சரியம். வீட்டுத் தேவைக்கான தண்ணி தொட்டி அரண்மனை ஈசான்ய பாகத்தில் பூமிக்கு கீழே இருந்தது. அதற்குள் இறங்கி தரைப் பரப்பை உற்றுப் பார்த்தால் அங்கே ஒரு சதுரக் கல் பலகை உள்ளே தண்ணி புக இடமில்லாதபடி அமைக்கப்பட்டிருந்தது. தொட்டி தண்ணீரை வெளியேற்றி விட்டு அதில இறங்கி சென்று பார்த்தபோது தான் அந்த சதுரக்கல் பலகையே தெரிந்தது. அதைத் தொட்டுத் தூக்கவும் உள்ளே இறங்கிச் செல்ல ஏணி அமைக்கப்பட்டிருந்தது.

அமுதேஷ்வர் அதில் இறங்கினான் அவ்வளவு சொத்துக்களுக்கும் வாரிசான மாதங்கியும் கணக்குப் பிள்ளை மாணிக்கமும் மேலே காத்திருந்தனர். உள்ளே பெரிய மரப் பெட்டி அதன் சாவி அங்கேயே பக்கமாய் மாடப்பிறைக்குள் இருந்தது. அதை சற்று நெற்றி சுருங்க யோசித்த நிலையில் தான் எடுத்தான் அமுதேஷ்வர். சாவியை எடுத்து பெட்டியை திறக்கவும் உள்ளே காட்சி தந்தது அந்தத கிரீடம் அதைப் பார்த்த நொடி அதை தலையில் அணிந்து கொண்டு ஒரு மாப்பிள்ளையாக அவன் நடந்து வந்ததெல்லாம் மெல்ல நினைவுக்கு வரத் தொடங்கியது.

அமுதேஷ்வர் அந்த நினைவுகளுடன் மேலே ஏறத் தயாரானான். மேலே வந்தவன் அதை மாணிக்கம் வசம் தரவும் அதை அவர் அவன் தலையில் அணிவித்தார். அடுத்த நொடியே அவனுக்குள் தேவியோடு அன்று நடந்த திருமணச் சம்பவங்கள் அவ்வளவும் நினைவில் ஓடத் தொடங்கியது.

அப்படியே கிரீடத்தோடு மாதங்கியைப் பார்த்தவனுக்குள் பாசம் ஊற்றெடுக்கத் தொடங்கியது. அவனிடமும் பெரும் மாற்றங்கள் அப்போது காரில் இருந்து ஸ்ரீதேவியும் அவள் குடும்பத்தவர்களும கூட இறங்கி வந்தனர்.

ஸ்ரீதேவி மாதங்கியைக் காணவும் பூர்வ நினைவுகள் தூண்டப்பட்டவளாய் ஓடிவந்து அவளைக் கட்டிக் கொண்டாள். மாதங்கிக்கும் அந்த அணைப்பு மிக இதமாக இருந்தது! அப்படியே விலகியவள் அமுதேஷவரைப

பார்த்தாள். அவன் கண்களில் கண்ணீர். அதை வேகமாக துடைத்த ஸ்ரீதேவி திரும்பி தன் தாயையும் அண்ணனையும் பார்த்தாள்.

அவர்கள் பிரமிப்பில் இருந்தனர். குறிப்பாக அம்மா பூரணியும், அண்ணன் மோகன் குமாரும் ஸ்ரீதேவியை நெருங்கி "உன் பிறப்புலேயே நீ ஒரு விசேஷமான பிறப்புன்னு நாங்க நினைச்சது சரியா போச்சு. ஒரு தாய் தன் மகளை மறுபிறப்புல சந்திக்கறதுங்கறது உலக அதிசயங்கள்ல ஒண்ணு தான். அந்த அதிசயம் என் தங்கைன்னும் போது சிலிர்ப்பா இருக்குது" என்றான் அண்ணன் மோகன்குமார்.

அப்போது வக்கீலும் வந்து சேர்ந்தார். அவரோடு இன்னும் சில முக்கியப் புள்ளிகள்! வக்கீல் மாதங்கியிடம் உயிலைக் கொடுத்தவராய் "அம்மாடி.... இன்னிக்கெல்லாம் 500 கோடிக்கு குறையாது இந்த பாளையக்கார குடும்ப சொத்து. உன் தாத்தா விருப்பப்படி நீ தான் வாரிசு. நீ எப்பவோ மேஜர் ஆயிட்டே. ஆனாலும் அப்ப ஒப்படைக்க முடியாத நிலை, இப்ப ஒப்படைக்கறதுல எனக்கும் சந்தோஷம்" என்றார்.

வாங்கி கொண்ட மாதங்கி அதை ஸ்ரீதேவியிடம் கொடுக்க ஸ்ரீதேவி அமுருதேஷ்வரிடம் கொடுக்க, அமுருதேஷ்வர் அதை திரும்ப மாதங்கியிடமே கொடுத்தவனாக "மாதங்கி.... நீ எங்களை உன தாய தந்தையா ஏத்துக்கிட்டதே போதும். இது உன்கிட்டயே இருக்கட்டும். இதை கொண்டு எவ்வளவு நல்லது செய்ய முடியுமோ அவ்வளவு நல்லது செய் - உனக்கு மாணிக்கம் துணையா இருப்பார் நாங்களும் இருப்போம்" என்றான் எங்கிருந்தோ மணியும் ஒலித்தது. அப்படியே கிரீடத்தை மாதங்கிக்கு அணிவிக்க அவள் சுதந்திர தேவதையாக கலகலவென சிரிக்க தொடங்கினாள்.

"வாங்க அருணாசல சித்தரை போய் பார்ப்போம்.... அவர் மட்டும் இல்லேன்னா இப்ப நாம இப்படி ஒண்ணும் சேர்ந்திருக்க முடியாது." என்று மலைக்கு போனபோது அங்கே அமர்ந்த நிலையில் ஜீவ சமாதி நிலையை அடைந்திருந்தார் அருணாசல சித்தர்!

கண்ணீரோடு அவ்வளவு பேரும் கைகளைக் கூப்பினர் அப்போது அங்கே அரக்க பரக்க ஓடிவந்து ஒரு போலீஸ்காரர் அமுருதேஷ்வரிடம் "சார்.... லாக்அப் கஸ்டடில காளியம்மா தற்கொலை பண்ணிகிட்டா சார்" என்றார்.

அவரவர் வினைக்கேற்ப... அவரவர்க்கும் ஒரு முடிவை காலம் வழங்கியே தீரும் என்பது எத்தனை பெரிய உண்மை?

முற்றும்